# பேடகம்

இதழ் - 02



வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி

# பேடகம்


| | | |
|---|---|---|
| மலரின் பெயர் | : | "பேடகம் – 02" |
| உரிமை | : | வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி. |
| பதிப்பு | : | 2024 ஐப்பசி |
| அச்சுப்பதிப்பு | : | நியூ எவகிறீன் அச்சகம் (பிறைவேற்) லிமிட்டெட்)<br>கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 021 221 9893 |
| அட்டை வடிவமைப்பு | : | திரு. அ. கிருபாகரன் |
| இணையாசிரியர்கள் | : | திரு. த. அஜந்தகுமார்<br>(விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)<br>திரு. வே. நந்தகுமார்<br>(விரிவுரையாளர், ஆசிரியர் பயிற்சி கல்லூரி கோப்பாய்) |
| அளவு | : | 7 x 10 |
| பிரதிகளின் எண்ணிக்கை | : | 150 |
| பக்கங்கள் | : | xxii + 244 |

சர்வதேச நூல் நியம இலக்கம்:978 - 624 - 6502 - 01 - 0

| | | |
|---|---|---|
| Title | : | "Pedagam - 02" |
| Copy Rights | : | Vadamaradchi South West Predeshiya Shaba<br>Karaveddy. |
| Edition | : | 2024 October |
| Printing | : | New Evergreen Printer's (Pvt) Ltd,<br>K.K.S.Road, Jaffna. 021 221 9893 |
| Cover Design | : | Mr.A.Kirubakaran |
| Size | : | B5 |
| No.of.copies | : | 150 |
| Pages | : | xxii + 244 |
| ISBN | : | 978 - 624 - 6502 - 01 - 0 |

# பொருளடக்கம்


**01. வாழ்த்தியல்**

1.1. பிரம்மஸ்ரீ பூரண சுதாகரக் குருக்கள் - xv
1.2 அருட்பணி குணம் சுரேந்தர், குருவானவர். - xvi
1.3 வடமாகாண ஆளுநர் கௌரவ நா. வேதநாயகம் - xvii
1.4 பிரதம செயலாளர் திரு. இ. இளங்கோவன். - xviii
1.5 வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திரு. செ. பிரணவநாதன் - xix
1.6 வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி தேவநந்தினி பாபு. - xx
1.7 யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. பொன்னம்பலம் ஸ்ரீவாணன். - xxi

**02. பிரதேசவியல்**

2.1 வடமராட்சி தெற்கு மேறகு பிரதேச சபையின் செயற்கருமம் தொடர்பான ஓர் நோக்கு. – 03

**03. தொல்லியல்**

3.1. வடமராட்சி தொல்லியல் மையங்களும் அவற்றின் எதிர்காலமும் – 19

**04. கிராமவியல்**

4.1. மாயக்கை கிராமம் – 39
4.2 திருவருட் சிறப்போங்கு துன்னாலை எனும் திருவூர் – 51

**05. ஆய்வியல்**

5.1. மண்பொறிமுறை விஞ்ஞானி பேராசிரியர் துரைராசா ஆய்வும் நாட்டபிமானமும். – 59
5.2. தேசவழமைச்சட்டத்தின் குறைநிறைகள் – 68
5.3. வதிரியின் பாதணி உற்பத்தி; எழுச்சியும் வீழ்ச்சியும் தரும் பட்டறிவும் மேம்பாட்டுக்கான மாற்றுச் சிந்தனையும். – 81
5.4. நெருக்கடிகளைத் தாங்கக் கூடிய கல்வி முறைமைகளை உருவாக்குதல். – 92
5.5. அழிவை நோக்கிப் பயணிக்கும் நம் யாழ்ப்பாணத் தமிழர் பாரம்பரியம். – 104

**06. நூலகவியல்**

6.1. கரவெட்டி பிரதேசபை பிரிவின் சனசமூக நிலையங்கள் ஒரு பார்வை. – 115
6.2 வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை நூலகங்கள் ஒரு மீள் பார்வை – 122
6.3 வாசிப்புத்திறன், அறிவு வளர்ச்சி, சமூக முன்னேற்றம்: நூலகங்களின் நிலைபேறான பாரம்பரியம். – 129

6.4 நூலகத்தினை வினைத்திறனுடன் செயற்படுத்துவதற்கு கணினியின் பயன்பாடும் அதன் அனுகூலங்கள், பிரதிகூலங்கள். – 134
6.5 செய்தித்தாள்கள் – 138
6.6 நூலகங்களால் சிறுவர்கள் பெறும் பயன்கள். – 141
6.7 நாமும் நூலகமும் – 145
6.8 நூலகம் – 147

**07. கல்வியியல்**

7.1 யா/நெல்லியடி மத்திய கல்லூரி – 151
7.2 கரவெட்டி மண்ணின் கல்வியலாளர் அமரர் கனகசபை பாஸ்கரன். – 158
7.3 பல்துறை வல்லோன் கலாநிதி தம்பி ஐயா கலாமணி. – 159
7.4 "ஒடுக்கப்பட்டவர்களுக்காய் ஓயாது குரல் எழுப்பிய தெணியான்" – 162
7.5 அழகியல் படைப்புக்களின் அலைவரிசை குப்பிழான் ஐ. சண்முகன் – 163
7.6 தேடலும் ஆய்வுமாய் வாழ்ந்த பேராசிரியர் செல்லையா யோகராசா – 165

**08. கலையியல்**

8.1 மிருதங்க இசைக்கலைஞர் திரு. சரவணமுத்து நாராயணசாமி அவர்களுடனான நேர்காணல். – 169
8.2 இலங்கையில் பரதநாட்டியம்: ஒரு பண்பாட்டுப் பயணம் – 172
8.3 வடம் பிடிக்கப் புறப்பட்டாள் வரலட்சுமி – 176
8.4 வாசித்து அழகுறு – 178
8.5 எழுந்திரு விழித்திரு, ஜெயித்திடு – 180
8.6 என் பார்வையில் கரவெட்டி பிரதேச சபை – 183

**09. மாணவரியல்**

மொழித்திறன் போட்டியில் வெற்றி பெற்றவர்களுடைய ஆக்கம்
9.1 முதியோரைப் போற்றுவோம் – 187
9.2 பசுமைச் சூழலைப் பாதுாப்போம். – 191
9.3 இயற்கை வளங்களைப் பாதுகாப்போம் – 192
9.4 மனித வாழ்வில் சமயம் – 197
9.5 வாசிப்பின் முக்கியத்துவம் – 200
9.6 கல்வியே உலகாளும் – 205

**10. பொதுவியல்**

10.1 சிறுவர் மருத்துவம் – 209
10.2 இருதய நோய்களை ஒழிக்கும் யோகாசனப் பயிற்சிகள் பற்றிய ஆலோசனைகள். – 212
10.3 மனித வளர்ச்சியில் ஆலயங்களின் வகிபங்கும் அதில் இன்று ஆலயங்களின் இருப்பும். – 214
10.4 இராவணன் முதல் யூடியூப், டிக்டக் காலம் வரை உலகின் முதற் சமயமான சைவத்தின் தொன்மையும் வளர்ச்சியும். – 218
10.5 யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் தோற்றமும் அதன் பணிகளும். – 224
10.6 கட்டிட நிர்மாண வரம்புகள். – 229
10.7 செல்லாக் காசுபெற்ற காதை – 231

**11. பதிவியல்** - 233

வடமராட்சி தெற்கு மேற்கு
பிரதேச சபை



செயலாளர்

# திரு கணேசன் கம்ஸநாதன்

## தூரநோக்கு (Mission)

பிரதேச அபிவிருத்தியுடன் அடிப்படை வசதிகளைக் கருவிலிருந்து கல்லறை வரையில் பயனுறுதி பெறப் புதிய நுட்பங்கள் இணைந்த வினைத்திறனுடன் கூடிய சேவை

## இலட்சிய நோக்கு (Vision)

பிரதேச மக்களின் தேவைகளை இனங்கண்டு நிறைவு செய்வதற்கு நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய கல்வி வசதி, தரமான போக்குவரத்து பாதுகாப்பான குடிநீர், சுகாதார மேம்பாட்டுடன் கூடிய சூழலைக் கொண்ட நல்லாட்சியை ஏற்படுத்துதல்.

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதில் சிறந்த திரவிடநல் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையா உன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே

**"மனோன்மணீயம்" பெ. சுந்தரனார்**

# வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை கீதம்

இராகம் - ஹம்சத்வனி தாளம் - ஆதி

**பல்லவி**

வானத்திலே எழுங் கதிரொளி போலவே
வாழ்வினை வளம்பெறச் செய்கின்றதே...
ஞானத்திலே உயர்ந் தோங்கிய மாந்தரின்
நல்லதோர் சபையென்றே மிளிர்கின்றதே... (வானத்திலே......)

**சரணங்கள்**

வடவையின் தென்திசை மேற்றிசை சேர்ந்திட
வளர்கர வெட்டியின் பிரதேச சபையென
தடையில்லாச் சேவைகள் மக்களுக் காகவே
தன்னல மின்றியே தருவத னாலே..... (வானத்திலே......)

பனைவளம் நீர்வளம் பயிர்களின் விளைநிலம்
பலவகைத் தொழில்களும் பயன்பெற லாகுமே
மனைநிறை வீதிகள் முன்பள்ளி சந்தைகள்
மருத்துவம் நூலகம் பேணுவ தாலே.... (வானத்திலே......)

நெல்லியடி உடுப்பிட்டி நேர்கட்டை வேலியாய்
நிர்வகிப் பதனால் நிமிர்வதைப் பாரீர்...
வல்லமை நேர்மையாய் ஆக்கிய சபைதனை
வந்தனை செய்குவோம் வாழ்த்திடுவோமே..... (வானத்திலே......)

---

வரிகள் - திரு. உடுவில் அரவிந்தன்
பாடியவர் - திருமதி ஜெயபாரதி கௌசிகன்
இசை - திரு.மதியூகநாதன் மனுசங்கர்

---

## மலர்க்குழு உறுப்பினர்கள்

- திரு. கணேசன் கம்ஸநாதன்
  (தலைவர்) செயலாளர், வடமாரட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை
- பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரகுராம்
  (கலைப்பீடாதிபதி – யாழ் பல்கலைக்கழகம்)
- பேராசிரியர் சின்னத்துரை விஜயகுமார்
  (பொருளியற்றுறை யாழ் பல்கலைக்கழகம்
- திரு. தருமராஜா அஜந்தகுமார்
  (விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்)
- கலாநிதி சிவலோகசுந்தரம் திருச்செந்தூரன்
  (சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்)
- திரு. செ. ரவீந்திரன்
  (சிரேஷ்ட விரிவுரையாளர் – யாழ் பல்கலைக்கழகம்)
- திரு. வேலும்மயிலும் நந்தகுமார்
  (விரிவுரையாளர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, கோப்பாய்)
- திரு இளையதம்பி ராகவன் (ஓய்வுநிலை அதிபர்)
- திரு. கிருஷ்ணபிள்ளை நடராஜா (ஓய்வு நிலை அதிபர்)

## செயற்பாட்டுக்குழு அங்கத்தவர்கள்

- திரு. சங்கரன் கிருபாகரன் – பொறுப்பதிகாரி, நெல்லியடி உப அலுவலகம்.
- திரு. ஆழ்வாப்பிள்ளை கிருபாகரன்–பொறுப்பதிகாரி கட்டைவேலி உப அலுவலகம்
- திரு. செல்லத்துரை சுதர்சன் – அபிவிருத்தி உத்தியோகத்தர்
- திருமதி கோபிநாத் சர்மிளா – முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்
- திருமதி புலவன் பிறிஷானி – நூலகர், கட்டைவேலி பொது நூலகம்.
- திருமதி கந்தசாமி ஈஸ்வரன் – நூலகர், வதிரி பொது நூலகம்.
- திருமதி சுதர்சன் நளினி – நூலகர், கரவெட்டி பொது நூலகம்.
- திருமதி இராகவன் கார்த்திகா – நூலகர், உடுப்பிட்டி, பொது நூலகம்.




அமர்ந்திருப்போர்(இ.வ): திரு.வே.நந்தகுமார்(விரிவுரையாளர், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை), திரு.இ.ராகவன்(ஓய்வுபெற்ற அதிபர்), திரு.க.கம்ஸநாதன் (செயலாளர், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை), திரு.கி.நடராசா(ஓய்வு பெற்ற அதிபர்), பேராசிரியர் சு.ரகுராம்(கலைப்பீடாதிபதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), பேராசிரியர் சி.விஜயகுமார்(பொருளியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), திரு.த.அஜந்தகுமார்(விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

# வாழ்த்தியல்



**திரு. பிரம்மஸ்ரீ பூரண சுதாகரக் குருக்கள்**
அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

அகர முதல எழுத்தெல்லாம்
ஆதி பகவன் முதற்றே உலகு.

கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேச சபையின் இரண்டாவது மலராக பேடகம் இதழ் வெளிவருவதையிட்டு பெருமகிழ்வு அடைகின்றேன். அந்த வகையில் எமது பிரதேச தொல்லியல், இயற்கை வளங்கள், வரலாறு, சமூகம் கலை கலாசார பண்பாடு போன்ற பல்துறை சார்ந்த அறிஞர்கள் மாணவர்கள் எழுத்தாளர்களின் ஆக்கங்களைத் தாங்கி இந்நூல் வெளிவருவது மிகவும் சிறப்புடையதாக அமைகிறது. மேலும் பலரும் பயன்பெறத்தக்க வகையில் ஆக்கங்கள் வெளிவருவது இந்நூலை வாசிக்கும் அனைவருக்கும் பயனுள்ளதாக அமையும். இந்தப் பேடகம் இதழ் தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் வெளிவரவும் அனைவருடைய கரங்களிலும் கிடைக்கவும் எனது நல்வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



**திரு. அருட்பணி குணம் சுரேந்தர், குருவானவர்**
அவர்களின்

# இறையருள் தொடரும்

**"பின்வரும் சந்ததிக்கு நீங்கள் விபரிப்பதற்காக அதன் அலங்கத்தைக் கவனித்து அதின் அரண்மனைகளை ஊற்றுப்பாருங்கள்" சங்கீதம் 48 : 13**

புத்தக வெளியீடு என்பது ஒரு வரலாற்றுப் பாதிப்பை ஏற்படுத்தும் விழாவாகும். இவ்விழா வாசிப்பின் அவசியத்தை உணர்த்தும் ஒரு விழா. "நீரளவே ஆகுமாம் நீராம்பல் தான் கற்ற நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு" எந்த நிலையிலும் வாசித்தலின் கல்வியறிவை வளர்த்தல் ஒரு மனிதனுக்கு மிக அவசியமாக இருக்கின்றது. "பேடகம்" இதன் மலரானது இந்தப் பிரதேசத்தின் நிபுணத்துவத்தின் ஆக்கங்களைப் பிரசுரித்துள்ளது. கரவெட்டிப் பிரதேசத்தினை மையப்படுத்தி வரலாற்றுத் தகவல்களைத் தந்துள்ளது. இந்த "பேடகம்" மலரானது எதிர்காலத்து சந்ததியினருக்கு இந்தப் பிரதேசத்தின் வளர்ச்சிக்கான ஒரு பதிவை வைக்கின்றது என்றால் மிகையாகாது. வடமாரட்சியின் எதிர்காலம், ஏற்படும் நெருக்கடி நிலை களைக் கடந்து வரவும், பாரம்பரியங்களை நினைவுபடுத்தவும், சிறுவர் வளர்ப்பை உறுதிப்படுத்தவும், உணவை வழங்கும் எமது மண்ணினை வளப்படுத்தவும் எமக்கு வழிகாட்டியாக இந்த மலர் பிறக்கின்றது.

ஆகவே, இப்புத்தகத்தினை இறை இயேசு கிறிஸ்துவின் பெயரிலே ஆசீர்வதிக் கின்றேன். இப்படைப்பினை உருவாக்கிய அனைவருக்கும் நன்றி கூறுகின்றேன். இறையருள் தொடரட்டும்.

தூய திரித்துவ மெதடிஸ்த்த ஆலயம்,
கட்டைவேலி.



**கௌரவ ந.வேதநாயகம்**
வடமாகாண ஆளுநர்
அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

வடமாரட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு "பேடகம்" இதழ் 02 இற்கு வாழ்த்துச் செய்தி வழங்கு வதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

பொதுநூலகத்தின் வாசிப்பு மாத நிகழ்வுகளில் வாசிப்பு மாத முன்னேற்ற அறிக்கைகள், கதைகள், கவிதைகள், மற்றும் ஆக்கங்கள் என்பவற்றினூடு மொழியறிவினை விருத்தி செய்வதும் இவ்வாறான சஞ்சிகை வெளியிடல் மூலம் சமூக ஆர்வலர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பத்திரிகை வாசிப்போர் அனைவரதும் ஒன்றிணைந்த செயற்பாடுகளால் பிரதேச சபையின் நூலக வளர்ச்சியை மேம்படுத்துவது பாராட்டுக்குரியதாகும்.

எனினும் நவீன ஊடகங்களின் வருகையினால் வாசிப்புத்திறனிலிருந்து விலகிச் செல்லும் நிலையினைத் தவிர்க்க வேண்டுமாயின் முறையான நேரிய ஆழமான வாசிப்புக்கு வழிகாட்டும் நூல்களையும் அதன் உறைவிடமான நூலகங் களையும் நோக்கி மாணவர்களை நகர்த்துவது அவசியம் ஆகும். எனவே, இச்செயற்பாடுகளை வலுவூட்டுவதற்காக உள்ளூராட்சி மன்றங்கள் அரச பணி களுக்கு மேலதிகமாக தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகளை நடாத்தி பிரதேச மக்களுடன் நல்லுறவினைப் பேணி வருகின்றமை வரவேற்கத்தக்கதாகும்.

"பேடகம்" மலர் வெளியீட்டு விழா சிறக்கவும், சஞ்சிகை ஆக்கப்பணி களில் சேவையாற்றியோருக்கும் நிகழ்வுகளை ஒழுங்கமைத்தவர்களுக்கும் மேலும் பல சேவைகளாற்றி சமூகப்பணிகளைச் சிறப்பாக நடாத்தி கிராம மக்களுக்குப் பயன்படும் விதமாக வாசிப்பு மாத நிகழ்வுகளை நடாத்து வோருக்கும் இறையாசி களுடன் கூடிய நல்வாழ்த்துக்களை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.



**திரு. இ. இளங்கோவன்**
பிரதம செயலாளர்
அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் முயற்சியால் வெளியிடப்படும் பேடகம் – இதழ் 02 பல புத்திஜீவிகள், துறைசார் நிபுணர்கள் மற்றும் கலாநிதிகள் போன்றோரின் தற்காலத்திற்குப் பொருத்தமான கனதியான ஆக்கங்களை உள்ளடக்கிய ஒரு அறிவுப் பேழையாக வெளிவருவதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

வளர்ந்து வரும் மாணவர் சமூகத்தினரின் அறிவுக்கும் ஆற்றல் மேம்பாட்டுக்கும் ஏற்றவகையில் பயன்தரும் ஆக்கங்களை, தெரிவு செய்து அவற்றினை தொகுத்து ஒரு சிறந்த நூலாக எதிர்கால சந்ததியினரும் பயன்படுத்தக் கூடிய வகையில் தயாரித்து சிறப்புற வெளிவருவதற்கு ஆதாரமாக செயலாற்றிய பிரதேச சபை செயலாளர் அவர்களுக்கும் மலர்க்குழுவினருக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளும் வாழ்த்துக்களும் உரித்தாகுக.

பல்வகையான பிரச்சினைகளுக்கு மத்தியில் சரியான தெரிவின்றி பின்னடைவு களை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிற சமூகமானது இவ் வகையான அறிவு பூர்வமான தகவல்களை, கலை கலாசார விடயங்களை வாசித்தும் அவற்றினை கைக் கொண்டும் வாழும்போது சமூக பாரம்பரிய கலைகளையும் கலாச்சார விழுமியங் களையும் வளர்ந்து வரும் நாகரீகத்திற்கேற்ப புதிய பொலிவோடு பேணிக்கொள்ள முடியும்.

அந்தவகையில், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை "பேடகம்" எனும் பிரதேச மலரினூடாக வெளிக்கொண்டு வருவது மிகவும் பாராட்டுதற்குரியது.

இம் மலர் உருவாக்கத்தில் இன்னும் பல் அரிய அறிவுசார் விடயங்கள், அழியாத கலை பண்பாட்டு கோலங்களோடு ஆவணப் பேடகமாக தொடர்ந்தும் வெளிவர எனது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



**திரு.செ. பிரணவநாதன்,**
செயலாளர்
வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சு
அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையினால் இரண்டாவது இதழாக வெளியிடப்படும் "பேடகம்" எனும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

"பேடகம்" மலரானது சமூகம், பொருளாதாரம், அரசியல், கலை மற்றும் இலக்கியம் போன்ற விடயங்களுடன் கரவெட்டிப் பிரதேசத்தினை மையப்படுத்திய வரலாற்றுத் தகவல்களையும் உள்ளடக்கி வெளிவரும் பெட்டகமாய்த் திகழ்வது சிறப்பிற்குரியது.

இம்மலரில் இடம்பெற்றுள்ள ஆக்கங்கள் வாசிப்பின் முக்கியத்துவத்தினையும் நூலகங்களது நிலைத்திருப்பிற்கான தேவைப்பாட்டினையும் வடமராட்சி பிரதேசத்தின் தொல்லியல் மையங்களையும் மற்றும் காலத்திற்கேற்ற கல்வி முறைமைகளை உருவாக்க வேண்டிய அவசியத்தினையும் எடுத்தியம்புகின்றமை பாராட்டிற்குரியது.

இவ்வகையில் "பேடகம்" உருவாக்கத்திற்கும் வெளியீட்டிற்குமான உழைத்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் தொடர்ந்தும் சிறந்த ஆக்கங்களுடன் பேடகம் வெளிவர எல்லாம் வல்ல இறையருளைப் பிரார்த்திக்கின்றேன்.



**திருமதி தேவந்தினி பாபு**
வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர்
அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையினால் தேசிய வாசிப்பு மாத நிகழ்வினை முன்னிட்டு வெளியிடப்படுகின்ற "பேடகம்" சஞ்சிகைக்கு வாழ்த்துரை வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

மனித நாகரிகங்கள் தோற்றம் பெற்றது முதல் அவற்றின் வளர்ச்சிக்கு கலாசாரமும் பண்பாடும் ஆணிவேராக வலுப்படுத்தி வருகின்றன. பாரெங்கெங்கும் அதிநவீன தொழிநுட்பத் துணையோடு விண்ணேகும் சமகாலத்திலும், யாவரும் தத்தமது கலை, பண்பாட்டு விழுமியங்களையும் முன்னேற்றப் பாதையில் வழிநடத்திச் செல்கின்றனர். இது மனித வாழ்வியலின் செல்நெறிக்கு அவற்றின் முக்கியத்துவத் தினைப் புலப்படுத்தி நிற்கின்றது. இவை மக்களிடையே நலிவடைந்துவிடாதிருக்க அவற்றுக்கான ஊக்குவிப்பும், அவை தொடர்பான விழிப்புணர்வும் மிகவும் அவசிய மாகின்றது. அவ்வாறான விழிப்புணர்வினை மனித வாழ்வின் ஆரம்பம் முதல் முடிவு வரை பிணைப்பையுடைய உள்ளூராட்சி மன்றங்கள் மேற்கொள்வது சாலப் பொருத்தமுடையதும் பெருமகிழ்வுக்குரியதுமாகும்.

அவ்வகையில் வடமாரட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையினால் வெளியீடு செய்யப்படுகின்ற "பேடகம்" என்ற இந்நூலானது தனது நோக்கத்தினை எய்த வாழ்த்துவதுடன் நூல் உருவாக்கித்திற்காக உழைத்த அனைவருக்கும் எனது பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.



திரு. பொ.ஸ்ரீவர்ணன்
உள்ளூராட்சி உதவி ஆணையாளர், (யாழ்ப்பாணம்)
அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் இரண்டாவது மலராக மலர விருக்கும் "பேடகம்" எனும் நூலின் மலர்வு மிகச்சிறப்பாக அமைய எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

தங்களால் மலர்விக்கப்பட்ட முதலாவது பேடகம் எனும் மலர் பிரதேசம் சார் ஓர் தகவல் களஞ்சியமாக துறைசார் பெரியோர்களின் வழிகாட்டலில் மிகச் சிறப்பாக அமைந்துள்ளமையினை அம்மலரை பார்வையிடும்போது உணர்ந்துகொண்டேன்.

அதேபோல் இரண்டாவது மலரும் பிரதேசத்தின் புத்திஜீவிகளைக் கண்டறிந்து அவர்களின் பெறுமதிமிக்க ஆய்வுகளையும் ஆக்கங்களையும் வடமராட்சி மண்ணின் தொல்லியல், பொருளியல், மருத்துவம், கல்வி, சமூகம் என அனைத்துத் துறை களிலும் வரலாற்றைச் சுமந்த ஓர் பிரதேச தகவல் திரட்டுப் பேடகமாக மலரவிருப்பது பெருமகிழ்வளிக்கிறது.

உலகத்தின் மூலதனமே அறிவு. ஆழ்ந்த அறிவிற்கு ஊற்றாகவும், ஆழ்ந்த கருத்துக்களுக்கு விளைநிலமாகவும் விளங்குவதே கல்வி. இந்தக் கல்வியை நம் மக்களுக்கு வழங்குவது புத்தகங்கள்தான். "நீ எத்தகைய நூல்களை விரும்பிப் படிக்கிறாய் என்பதை சொல். உன்னைப் பற்றி நான் அறிந்து கொள்வதற்கு அதுவே போதிய சான்றாகும்" என்றார் சுவாமி விவேகானந்தர்.

அத்தகைய நூல்கள் வெறுமனே வாசிப்பு மாதத்திற்கான படைப்பாக இல்லாது "வடமராட்சி தொல்லியல் மையங்களும் அவற்றின் எதிர்காலமும்", "நெருக்கடிகளை தாங்கக்கூடிய கல்வி முறைகளை உருவாக்கல்", "வாசிப்புத்திறன், அறிவுவளர்ச்சி, சமூக முன்னேற்றம், நூலகங்களின் நிலைபேறான பாரம்பரியம்", "சிறுவர் மருத்துவம்", "மண்பொறிமுறை விஞ்ஞானி – பேராசிரியர் துரைராசா" போன்ற பல்வேறுபட்ட தற்காலத்திற்கு வேண்டிய விடயங்களை துறைசார் நிபுணர்கள் மற்றும் பேராசிரியர்களின் ஆய்வுக் கட்டுரைகளாக உள்ளடக்கி பல்துறைசார் அறிவுப் பேடகமாக இவ்வாறு தொடர்ந்தும் மலர வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

இந்நூல் ஏனைய பிரதேசங்களுக்கும் ஓர் சிறந்த முன்னோடிச் செயற்பாடாக அமையும் என்பதில் பெருமிதம் கொள்கிறேன்.

# பிரதேசவியல்

**திரு. கணேசன் கம்ஸநாதன்,**
செயலாளர்,
வடமராட்சி தெற்கு,மேற்கு
பிரதேச சபை.

# வடமராட்சி தெற்கு மேற்கு
# பிரதேச சபையின் செயற்கருமம்
## தொடர்பான ஓர் நோக்கு

### அறிமுகம்

பிரித்தானிய ஆட்சியின் இறுதிப்பகுதியில் இலங்கைக்கான அரச இயந்திர வடிவமைப்பின் படிநிலைக் கருமங்களாக 1871 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க கிராமக் குழுக்கள் கட்டளைச்சட்டம் நிறைவேற்றப்பட்டதன் பிரகாரம் கிராம சபைகள் நிறுவப் பட்டன. பின்னர் 1892 இல் சிறிய நகரங்களில் சுகாதாரக் சபைகள் (Sanitary Boards) அமைக்கப்பட்டன. இதனிடையே 1928 ஆம் ஆண்டில் டொனமூர் ஆணைக்குழுவின் விதப்புரைக்கு அமைவாக உள்ளூராட்சித் திணைக்களம் தாபிக்கப்பட்டது. தொடர்ந்து 1940, 1946 இலும் முறையே பட்டினசபைகளும், நகர சபைகளும் உருவாகின. இதன் பின்னர் 1987 ஆம் ஆண்டு மாவட்ட அபிவிருத்திச் சபையின் கீழ் உப அலுவலகங்களாகக் காணப்பட்ட பட்டின சபைகளும் கிராம சபைகளும் 1987 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் ஒன்றாக்கப்பட்டு பிரதேச சபைகள் தாபிக்கப்பட்டன. இதற்கமைய நெல்லியடி பட்டின சபை, கட்டைவேலி கிராம சபை, உடுப்பிட்டி கிராம சபை என்பன 1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் ஒன்றாக்கப்பட்டு திக்கம் வீதி வதிரியிலுள்ள பட்டின சபை அலுவலகத்தில் வடமாரட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையாக இயங்கியது.

கருவறை முதல் கல்லறை வரை எனும் தொனிப்பொருளுக்கிணங்க மக்களுக்கு சேவையாற்றி வருகின்றது. பிரதேச சபையானது அதன் பிரதேசத்தில் பகிரங்க சுகாதார பொது நிர்வாக அதிகார சபையாகவும் பிரதான பொது வழிகள் தவிர்ந்த அனைத்து பொது வழிகளினதும் பொது நிர்வாக அதிகார சபையாக செயற்பட்டு வருகின்றது. வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் ஆளுகை பிரதேசம் வடமாகாணத்தின் யாழ்ப்பாண மாவட்டத்தின் வடமராட்சி பகுதியின் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலக நிர்வாக எல்லையை கொண்டதான 35 கிராம சேவையாளர் பிரிவுகளையும் 187 கிராமங்களையும் 19 வட்டாரங்களையும் உள்ளடக்கியதான 88 சதுர கிலோ மீற்றர் விஸ்தீரணத்தையும் கொண்டுள்ளது. இதன் 63.7 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பாகவும் 24.3 சதுர கிலோ மீற்றர் நீர்ப்பரப்பாகவும் காணப்படுகின்றது. 2023 ஆம் ஆண்டு தகவல்களின் அடிப்படையில் எமது சபையின்

ஆளுகைப் பிரதேசம் 46,456 சனத்தொகையுடைய 16023 குடும்பங்கள் உள்ளன. இதில் 48% மானோர் ஆண்களாகவும் 52%மானோர் பெண்களாகவும் உள்ளனர். இதில் 46439 பேர் தமிழர்கள், 9 பேர் முஸ்லீம்கள், 8 பேர் சிங்களவர்கள் ஆகவும் காணப்படுகின்றனர். எமது சபையானது மூன்று நிர்வாக உப அலுவலகப் பிரிவுகளை கொண்டு நிர்வகித்து வருகின்றது .

01. நெல்லியடி உப அலுவலகப் பிரிவு
02. உடுப்பிட்டி உப அலுவலகப் பிரிவு
03. கட்டைவேலி உப அலுவலகப் பிரிவு

**MAP OF VADAMARADCHY SOUTH WEST PRADESHIYA SABHA - KARAVEDDY**



வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச ஆளுகைப் பிரதேச மக்களுக்கான ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகள் சமூக, கல்வி, கலை, கலாச்சார, முன்னேற்ற செயற்பாடுகள், பொருளாதார அபிவிருத்தி, வாழ்வாதார செயற்பாடுகள் ஆகியவை அனைத்தும் சபை நிதியிலிருந்து பாதீடப்பட்டு, சிறந்த நிதி முகாமைத்துவ பொறிமுறையினுடாக சிக்கனமாகவும், வினைத் திறனுடனும் விளைதிறனுடனும் செலவு செய்யப்படுகின்றது. சபையால் நிறைவேற்றப்பட்ட உப விதிககளின் அடிப்படையிலும் பிரதேச சபையின் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாகவும் வரி அறவீடுகள், முத்திரைத் தீர்வை, நீதிமன்ற தண்டப்பண சபையின் சொத்துக்களி லிருந்து அறவீடு செய்யப்படும் வருமானங்கள், சட்ட ஒழுங்குபடுத்தல் சேவைகளுக்காக அறவிடப்படும் கட்டணங்கள், மக்களின் அத்தியாவசிய தேவைகளின் சேவைகளை நிறை வேற்றுவதால் கிடைக்கும் வருமானங்கள், சூரியப்படல் தொகுதிகளின் மூலமாக கிடைக்கும் வருமானம் முதலியன சபையின் குறிப்பிடத்தக்க வருமான மூலங்களாகும்.

## 1.0 பிரதேச சபையின் வருமான மூலங்கள்

### 1.1 ஆதன வரி

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 134 (1) பிரிவின் பிரகாரம் பிரதேச சபையானது ஆதனவரி அறவீடு செய்வதற்கு உரித்தை கொண்டுள்ளது. நெல்லியடி உப அலுவலகத்தின் கீழ் ஆளுகை செய்யும் வட்டாரங்களுக்குரிய ஆதன வரியானது 1967 ம் ஆண்டு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

அதன் பின்னர் 2017 ஆண்டு 7205 ஆதனங்கள் மீள் மதிப்பீடுள்ள போதும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபை சட்டத்தின் 135 பிரிவுக்கு அமைவாக நிரல்படுத்தப் பட்ட 256 ஆதனங்களுக்கு வரி விலக்கு வழங்கப்பட்டுள்ளன. நெல்லியடி உப அலுவலகத்தின் கீழ் ஆளுகை செய்யும் ஆதனங்களுக்குரிய மீள்மதிப்பீட்டின்போது ரூபா 10,228,899.92 வருமானமாக கணிப்பீடு செய்யப்பட்டது. இதனை அமுல்படுத்துவதற்கு 2022.07.01 முதல் ஆரம்பித்தபோதும் கே. படிவங்கள் (ஆதன வரி அறிவித்தற் படிவம்) முழுமையாக விநியோகிக்கப்படாமையால் ரூபா 2,869,313.07 மட்டுமே 2022 இல் ஆதனவரியாகப் பெறப்பட்டது. எனினும் 2023.01.01 முதல் முழுமையாக எல்லா வட்டாரங்களுக்கும் கே.படிவம் விநியோகம் செய்தமையால் 2023ஆம் ஆண்டு ஆதனவரியாக ரூபா 9,527,907.61 கிடைக்கப்பெற்றது. மதிப்பிடப்பட்ட ஆதனவரியின் 93% 2023 ஆம் ஆண்டிலேயே அறவிடப்பட்டுள்ளது. இதில் ரூபா 7,015,528.41 ஜனவரி மாதத்தில் மட்டும் அறவிடப்பட்டுள்ளது. முதல் மாதத்திலேயே 68.5% ஆதன வரியினை மக்கள் செலுத்தியமை பாரியதொரு வெற்றியாக சபை கருதியது. "கே" படிவம் முழுமையாக விநியோகம் செய்யப்பட்டமையால் மக்களும் ஆர்வத்துடன் ஆதன வரியை செலுத்தியுள்ளதுடன் இதன் மூலமாக பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை சபை மக்களுக்கு உகந்தளித்துள்ளது.

2023 ஆம் ஆண்டு கே. படிவங்கள் 09 சன சமூக நிலையங்களின் மூலமாக ஆதனங்கள் மிக விரைவாக இனங்காணப்பட்டு 5025 ஆதனங்களுக்குரிய கே. படிவங்கள் விநியோகிக்கப்பட்டது. கே படிவம் விநியோகித்தமைக்காக ஒரு படிவத்திற்கு ரூபா 30.00 வீதம் 5025 ஆதனங்களுக்கும் ரூபா 150,750.00 சனசமூக நிலையங்களுக்கு வழங்கப் பட்டது.

உடுப்பிட்டி உப அலுவலக ஆளுகைக்குட்பட்ட வட்டாரங்களில் பெரும்பகுதி 1965 ஆம் காலப்பகுதியில் ஆதன மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இவ்வாதனங்களுக்கான மீள் மதிப்பீடு இன்று வரை மேற்கொள்ளப்படவில்லை. அக்காலப்பகுதியில் 5307 ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இம் மதிப்பீட்டின் அடிப்படையில் ரூபா 1 முதல் 128 வரையிலான வீச்சில் ஆதன வரி கணிப்பீடு செய்யப்பட்டிருந்து. 58 வருடங்கள் கடந்த நிலையில் இன்றுவரை மீள் மதிப்பீடு செய்யாதமையால், சபை கே.படிவம் விநியோகிக்க கூடியதான இயல்பான நிலைமைகள் காணப்படாமையால், மக்களும் ஆதனவரி செலுத்தும் செயற்பாடுகளில் அக்கறை செலுத்துவதில்லை. எனினும் இப் பிரிவில் சபைக்கு ஓராண்டில் ரூபா 56,520.32 மட்டுமே உச்ச ஆதனவரியாக் அறவீடு செய்யக் கூடியதாக உள்ளது. ஆனால் தற்போது மதிப்பாய்வு செய்ததில் 12500 மேற்பட்ட ஆதனங்கள் உள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது. கடந்த வருடம் (2023) முதல் மீள்மதிப்பீடு செய்வதற்கான ஆரம்பக்கட்டத் தரவுகளை சேகரிக்கும் பணியினை வட்டார உத்தியோகத்தர்கள் மேற்கொண்டு வந்துள்ளார்கள். எதிர்வரும் வருடங்களில் ஆதன மதிப்பீடு மேற்கொள்வதற்கான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கட்டைவேலி உப அலுவலக ஆளுகைக்கு உட்பட்ட வட்டாரங்கள் கட்டடம் அமைந்த பகுதியாக தற்போது வரை பிரகடனப்படுத்தப்படாமையால், இதற்கான ஆதன மதிப்பாய்வு செயற்பாடுகள் நிறைவேற்றுவதில் இடர்பாடுகள் உள்ளன. அடுத்துவரும் வருடங்களில் இப் பிரதேசமும் ஆதன வரி செலுத்தும் பிரதேசமாக மாற்றியமைக்கும் செயற்திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

## 1.2 வியாபார வரி, உரிமம், உயர் தொழில் உரிமம் ஆகியவற்றை வியாபார நிலையங் களுக்கு வழங்குதல்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 147 ஆம் பிரிவின் கீழ் வியாபார வரி, வியாபார உரிமம், உயர் தொழில் உரிமம் என்பவற்றை சபை அறவீடு செய்யக் கூடிய சட்ட உரித்தை கொண்டுள்ளது. எமது சபையின் கீழ் குறிப்பிட்டவாறான வியாபார நிலையங்கள் காணப்படுகின்றன.

| தொ. இல | காணப்படும் உப அலுவலகம் | வியாபார நிலையங்களின் எண்ணிக்கை | வியாபார வரி | | வியாபார உரிமம் | | உயர் தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை | உயர் தொழில் உரிமம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | செலுத்தியோர் எண்ணிக்கை | சதவீதம் | பெற்றவர்களின் எண்ணிக்கை | சதவீதம் | | பெற்றவர்களின் எண்ணிக்கை | சதவீதம் |
| 1 | நெல்லியடி | 551 | 302 | 100% | 249 | 100% | 166 | 166 | 100% |
| 2 | உடுப்பிட்டி | 574 | 295 | 100% | 279 | 100% | 98 | 97 | 99% |
| 3 | கட்டைவேலி | 141 | 80 | 99% | 61 | 100% | 20 | 20 | 100% |
| | மொத்தம் | 1266 | 677 | | 589 | | 284 | 284 | |
| | மொத்த வருமானம் | | 1,331,600.00 | | | | 692,750.00 | | |

பிரதேசசபை சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக வியாபார நிலையமொன்றிற்கு வருடாந்த வியாபார வரியாக ரூபா 500.00, ரூபா 750.00, ரூபா 1000.00 ஆகிய வகைப் படுத்தல்களின் கீழ் வரி அறவீடு செய்யப்படுகின்றது என்பதுடன் உயர் தொழில் உரிமம் வியாபார புரள்வு அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதுடன் அதி கூடிய தொகை ரூபா 3,000.00 அறவீடு செய்வதற்குரிய ஏற்பாடுகள் உள்ளன. இவ்வாறான வகுதிகளின் அடிப்படையில் எமது சபைக்கு 2023 ஆண்டு மொத்தமாக ரூபா 2,024,350.00 வருமானம் கிடைக்கப் பெற்றது. இவ்வாறான வருமானம் நாளாந்தம் குறித்த வியாபார நிறுவனங்களுக்கு சபையால் சேவைக்காக செலவு செய்யும் செலவீனத்தில் 05 சதவீத தொகையை கூட ஈடுசெய்வதில்லை. வியாபர வரி, வியாபர உரிமம், உயர்தொழில் உரிமம் ஆகியவை சபையிடமிருந்து பெறாத வியாபார நிறுவனங்களுக்கு எதிராக 33 வழக்குகள் 2023 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டன.

## 1.3 களியாட்ட வரி

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 149 ஆம் பிரிவின் கீழ் களியாட்ட வரி சபை அறவீடு செய்யக் கூடிய சட்ட உரித்தை கொண்டுள்ளது. சபையின் ஆளுகைப் பிரதேசத்தினுள் நடைபெறும் களியாட்ட நிகழ்வுகளுக்கு அறவிடப்படும் வரியாகும். விழாக்களுக்காக வழங்கப்படும் ரிக்கட்டுகளின் பெறுமதிக்கு ஏற்ப இவ் வரி கணிப்பிடப்படும். சபைக்கு களியாட்ட வரி வருமானமாக ரூபா 142,750..00 கிடைக்கப் பெற்றுள்ளது.

## 1.4 முத்திரை தீர்வை

முத்திரை தீர்வைககளால் கிடைக்கும் அனைத்து வருமானங்களும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 129 ஆம் பிரிவின் (2) ஆ பகுதியின் பிரகாரமும் 1982 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க முத்திரை தீர்வைகள் சட்ட ஏற்பாடு களுக்கு அமைவாகவும் பிரதேச சபையின் நிதியத்திற்கு செலுத்த வேண்டும் என்பது சட்ட ஏற்பாடாகும்.

| விபரம் | 2022 | 2023 |
|---|---|---|
| முத்திரைத் தீர்வை | 49,729,303.80 | 51,151,237.83 |

## 1.5 நீதி மன்ற தண்டப்பணம்

பிரதேச சபை எல்லைப் பரப்பிற்குள் நீதவான் நீதிமன்றத்தினால் அறவிடப்படும் எல்லாத்தண்டப்பணங்களும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 129 ஆம் பிரிவின் (2) அ பகுதியின் பிரகாரம் நீதவான் நீதிமன்றத்தால் சபையின் நிதியத்திற்கு செலுத்த வேண்டிய கடப்பாட்டை கொண்டுள்ளது.

| விபரம் | 2022 | 2023 |
|---|---|---|
| நீதி மன்ற தண்டம் | 12,887,232.00 | 4,654,169.00 |

## 1.6 சந்தை குத்தகை வருமானங்கள்

சபையின் ஆளுகைப் பிரதேசத்தில் ஒன்பது சந்தைகளும், 12 இறைச்சிக் கடைகளும், இயங்குகின்றன. இதன் மூலமாக 2023 ஆம் ஆண்டு ரூபா 26,442,343.50 வை வருமானமாக கிடைக்கப் பெற்றுள்ளது. இவ்வாறான வருமானங்கள் கடந்த (2022) வருடத்தை விட 53 % சதவீத அதிகரிப்பாகும்.

## 1.7 கடை வடகை வருமானங்கள்

சபையின் ஆளுகைப் பிரதேசத்தில் சபைக்கு உரித்துள்ள 83 கடைகள் இயங்குகின்றன. இதன் மூலமாக ரூபா 3,656,300.00 வை வருமானமாக கிடைக்கப் பெற்றுள்ளன. இவ்வாறான வருமானங்கள் கடந்த (2022) வருடத்தை விட 17.5 % சதவீத அதிகரிப்பாகும்.

## 1.8 நில வாடகை வருமானங்கள்

நில வாடகையாக 2023 ஆண்டு உடுப்பிட்டி உப அலுவலகத்தினால் ரூபா 37,800.00 அறவீடு செய்யப்பட்டுள்ளதுடன், நெல்லியடி உப அலுவலகத்தினால் ரூபா 120,700.00 அறவீடு செய்யப்பட்டது.

## 1.9 திரவக் கழிவகற்றலில் பெறப்பட்ட வருமானங்கள் (செலவீனம் உட்பட)

நகர அபிவிருத்தி அதிகார சபையினால் எமது சபையின் ஆளுகைப் பிரதேசம் அபிவிருத்தி அடைந்த பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதால், கொங்கீரிட் இடப்பட்டு மூடப்பட்ட மல சல கூட குழிக்கான அனுமதியே பரிந்துரைக்கப்படுகின்றது. அதவாது கிணற்றிலிருந்து 18 மீற்றர் உட்பட்டதாக மல சல குழி அமைக்கப்பட்டால், நீர் கசிவற்ற மல சல கூட குழி அமைத்தல் அவசியமானதாகும்.

திரவ கழிவகற்றல் செயற்பாடுகளினால் 2023 ஆம் ஆண்டு ரூபா 6,939,425.00 மொத்த வருவாயாக கிடைக்கப் பெற்றுள்ளது. எனினும் ,தில் ஊழியர்களின் வேதனம், எரிபொருள் போன்ற செலவினங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவ்வாறான வருவாய் கடந்த (2022) வருடத்தை விட 103.8 % சதவீத அதிகரிப்பாகும்.

## 1.10 திண்மக் கழிவகற்றலில் பெறப்பட்ட வருமானங்கள் (செலவினம் உட்பட)

முள்ளிப் பகுதியில் சேதன பசளை உற்பத்தி நிலையம் (Kawasima project) உள்ளது. இத் தொகுதியானது ஒரு நாளில் 50 மெற்றிக் தொன் அளவு திண்மக் கழிவை பரிகரிக்க கூடிய வசதி கொண்டதாக உள்ளது. எனினும் மூலப் பொருட்களின் (திண்மக் கழிவு) பற்றாக் குறையினால், சிறியளவு சேதனப் பசளை உற்பத்தியாக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது. இவ் உற்பத்தி நிலையத்தால் வருட சராசரி வருமானமாக 0.8 மில்லியன் கிடைக்கப்பெறுகின்றபோதும் இதற்காக பயன்படுத்தும் ஆளணி, இயந்திரத் திற்கான பராமரிப்பு செலவுகள் மற்றும் உள்ளீட்டு வளங்கள் என்பவற்றிகான செலவுகள் வருவாயை விடப் பல மடங்காக உள்ளது.

எனினும் வியாபார நிலையங்கள் மற்றும் தனிப்பட்டவர்கள் கழிவகற்றல் சேவை களைப் பெறுகின்றபோது வருமானங்கள் பெறப்படுகின்றது. இவ்வாறான வருமானம் கடந்த (2022) வருடத்தை விட 27 % சதவீதம் அதிகரித்துள்ளது.

## 1.11 சூரியப்படல் தொகுதியால் பெறப்படும் வருவாய்கள்

முள்ளி சேதன பசளை உற்பத்தி நிலையக் கட்டடத்தின் கூரையில் 2023 ஆண்டின் ஆரம்ப பகுதியில் 20 kW வலுவுள்ள சூரியப்படலத் தொகுதி அமைப்பதற்காக ரூபா 5.175 மில்லியன் தொகை செலவு செய்யப்பட்டது. இதன் மூலம் முள்ளி பசளை உற்பத்தி நிலையத்தின் மின்சாரக் கட்டணம் முழுமையாக ஈடுசெய்யப்பட்டு மேலதிக வருமானமாக ரூபா 455,619.17 கிடைக்கப்பெற்றுள்ளது.

2024 ஆம் ஆண்டு முள்ளி சேதன பசளை உற்பத்தி நிலையக் கட்டடத்தில் மேலும் 120 kW வலுக் கொண்ட சூரியபடல் தொகுதி அமைக்கப்பட்டுள்ளதுடன், வதிரி முன்பள்ளி யின் கூரையில் 20 kW வலு கொண்டதும், உடுப்பிட்டி ஆயுர்வேத வைத்தியசாலையின் கூரையில் 18 kW வலு கொண்டதுமான சூரியப்படல் தொகுதிகளைப் பொருத்துவதற்கான செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றது. சூரியப்படல் தொகுதி மூலம் எதிர்காலத்தில் வருட வருமானமாக எட்டு மில்லியன் கிடைக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளன.

## 1.12 சுற்றுச் சூழல் உரிமம் வழங்குவதால் பெறப்பட்ட சேவைக் கட்டணம்

226/18 இலக்க 2022.01.27 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிப் பத்திரிகை (அதிவிசேஷமானது) மூலமாக மத்திய சுற்றாடல் அதிகார சபையானது 25 வகையான சுற்றுச் சூழல் உரிமங்களை வழங்குவதற்கான அதிகார உரித்தை பிரதேச சபைக்கு வழங்கியுள்ளது. இவ்வகை உரிமங்களை வழங்குவதன் மூலம் சேவைக்கட்டணமாக ரூபா 508,666.52 வை 2023 ஆண்டு பிரதேசசபை பெற்றுள்ளது. எமது சபையின் கீழ் 13 வகை கொண்ட 85 நிறுவனங்களே சுற்றுச் சூழல் உரிமங்களைப் பெற்று வருகின்றார்கள். இவ்வருமானம் கடந்த (2022) வருடத்தைவிட 83 % சதவீதம் அதிகரித்துள்ளது

## 1.13 கட்டட அனுமதி வழங்கல் மற்றும் சேவை கட்டணங்கள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 49 ஆம் பிரிவின் கீழ் பிரதேசசபையானது தனது ஆளுகை பிரதேசத்தினுள் கட்டட அனுமதியை வழங்கு வதற்கான சட்ட உரித்தை கொண்டுள்ளது. சபையின் ஆளுகைப் பிரதேசத்தினுள் கட்டட அனுமதியை வழங்குவதன் மூலம் 2023 ஆம் ஆண்டு ரூபா 1,867,562.95 சபைக்கு வருமானமாகக் கிடைத்துள்ளது. இத் தொகை சென்ற (2022) வருடத்தை விட ஒன்பது (9 %) சதவீத அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

## 1.14 ஏனைய ஒழுங்குபடுத்தல் சேவைகளுக்குரிய வருவாய்கள்

| விபரம் | 2022 | 2023 | அதிகரிப்பு வீதம் |
|---|---|---|---|
| எல்லைக் கோட்டு சான்றிதழ் | 100,875.00 | 165,927.55 | 64% |
| ஆதன பெயர்மாற்றம் | 26,000.00 | 171,400.00 | 559% |

### 1.15 விலங்குகள் வீதிக்கு இடையூறாகக் காணப்படுதல்

கட்டாக்காலி விலங்குகளைத் தெருவில் காணப்படின், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் பிரதேச சபை சட்டத்தின் 66 ஆம் பிரிவுக்கு அமைவாக விலங்கை கைபற்றி, தண்டத்தை அறவீடு செய்யலாம் அல்லது உரிமை கோராதவிடத்து, 10 நாட்களின் பின்னர் ஏலமிட்டு அதனால் கிடைக்கும் வருமானத்தை சபை நிதியத்திற்கு வைப்பிலிடுவதற்கு சபைக்கு சட்ட உரித்துள்ளது. இதனடிப்படையில் மாட்டை வீதிக்கு குறுக்கே கட்டி வைத்திருந்த ஒருவர் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. பிறிதொருவர் வீதிக்கு குறுக்கே மாடு ஒன்றை கட்டி வைத்திருந்த போது உடன் மாட்டை கழற்றி அவர் தனது தவறை உணர்ந்தமையால் தண்டம் அறவீடு செய்து மாடு கையளிக்கப்பட்டது.

## 2.0 செலவு விபரம்

2.1 சபை நிதி மூலம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைகள்

| விபரம் | 2023 | |
|---|---|---|
| | எண்ணிக்கை | செலவு (மில்லியன்) |
| வீதி | 68 | 79.865 |
| **மொத்தம்** | **68** | **79.865** |

2.2 ஏனைய நிதி மூலம் மேற்கொள்ளப்பட்ட வேலைகள்

| விபரம் | நிதி மூலம் | 2023 | |
|---|---|---|---|
| | | எண்ணிக்கை | செலவு (மில்லியன்) |
| வீதி | PSDG | 1 | 4.0 |
| தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு | LDSP | | 10.6 |
| **மொத்தம்** | | | **14.6** |

2.3 சபைநிதி மூலம் மக்கள் சேவைக்காகச் செய்யப்பட்ட செலவுகள்

| விபரம் | 2023 |
|---|---|
| | செலவு (மில்லியன்) |
| ஆயுர்வேத வைத்தியசாலை | 0.542 |
| நூலகம் & முன்பள்ளி | 3.654 |
| கழிவகற்றல் | 15.519 |
| குடிநீர் வழங்கல் | 0.653 |
| **மொத்தம்** | **20.368** |

### 3.0 சேவைகள்

3.1 முன்பள்ளி

எமது சபையின் ஆளுகைப் பிரதேசத்தில் 50 முன்பள்ளிகள் இயங்கி வருகின்றது. 2023 ம் ஆண்டு குறித்த 50 முன்பள்ளிகளிலும் 1321 சிறார்கள் உள்ளனர். இவற்றில் 2 பின்வரும் முன்பள்ளிகள் பிரதேசசபையால் நிர்வகிக்கப்படுகின்றது. சபையால் நிர்வகிக்கப் படும் முன்பள்ளிகளில் கடமையாற்றும் நான்கு நிரந்தர ஆசிரியர்களுக்கு அரச மானியத்தி லிருந்து பிரதேசசபையால் சம்பளம் வழங்கப்படுகின்றது.

| முன்பள்ளி | ஆசிரியர் எண்ணிக்கை | | மாணவர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| | நிரந்தரம் | தற்காலிகம் | |
| நெல்லியடி முன்பள்ளி | 2 | 2 | 55 |
| வதிரி முன்பள்ளி | 2 | 3 | 81 |
| **மொத்தம்** | **4** | **5** | **136** |

மேலும் 2023 ஆம் ஆண்டு மாணவர்களின் போசாக்கு மட்டத்தினை உயர்த்தும் நோக்குடன் வேறு திட்டங்களினூடாக காலை உணவு வழங்கப்படாத 4 முன்பள்ளிகளைச் சேர்ந்த சிறார்களுக்கு உலக உணவுத் திட்டத்தின் உதவியுடன் ரூபா 330,900.00 செலவில் மூன்று மாதங்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் (LDSP) கீழ் சபையால் நிர்வகிக்கப்படும் முன்பள்ளிகளின் தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் 3 மில்லியன் ரூபா செலவில் கணினி, திறன் பலகை (Smart Board), அச்சு இயந்திரம் (Printer) மற்றும் தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டது. மேலும் நெல்லியடி முன்பள்ளிக்கு கொடையாளர் ஒருவரால் திறன் பலகை (Smart Board) வழங்கப்பட்டுள்ளது.

சபையால் நிர்வகிக்கப்படும் முன்பள்ளிகளில் கால்கோள்விழா, சிறுவர் தினம், விளையாட்டுப்போட்டி, கலைவிழா போன்ற நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

### 3.2 ஆயுர்வேத வைத்தியசாலை

பொதுமக்களுக்கு வைத்திய சேவையினை வழங்கும் நோக்குடன் எமது சபையினால் 3% மூன்று ஆயுள்வேத வைத்தியசாலைகள் நிர்வகிக்கப்படுகின்றது.

| ஆயுர்வேத வைத்தியசாலை | வைத்திய சேவை பெற்றுக்கொண்டோர் விபரம் (2023) | மருந்து செலவுகள் (ரூபாவில்) |
|---|---|---|
| உடுப்பிட்டி | 4432 | 2,042,903.00 |
| கட்டைவேலி | 5809 | |
| நெல்லியடி | 6600 | |
| மொத்தம் | 16841 | ஒரு நோயாளிக்குரிய சராசரி மருந்து செலவு மட்டும் 121.30 |

### 3.3 நூலகம்

எமது சபையினால் 4 பொது நூலகங்கள் நிர்வகிக்கப்படுகின்றது நூலகங்களின் நூல்களின் எண்ணிக்கையும் மற்றும் நூல் கொள்வனவுக்காக செலவு செய்யப்பட்ட தொகையும் கீழ் குறிப்பிட்ட அட்டவணை மூலம் தரப்பட்டுள்ளன.

| நூலகங்கள் | நூலக அங்கத்தவர் எண்ணிக்கை | நூல்களின் எண்ணிக்கை | நூல் கொள்வனவு தொகை |
|---|---|---|---|
| வதிரி | 653 | 9444 | ரூபா 787, 649. 64 |
| கரவெட்டி | 177 | 4937 | |
| உடுப்பிட்டி | 39 | 4355 | |
| கட்டைவேலி | 227 | 4510 | |
| மொத்தம் | 1, 096 | 23246 | ஒரு அங்கத்தவருக்கு சராசரி நூல் செலவு மட்டும் ரூபா 718 . 65 |

2023 ஆம் ஆண்டு பிரதேச அபிவிவிருத்தி உதவித்திட்டத்தின் (LDSP) கீழ் சபையால் நிர்வகிக்கப்படும் வதிரி பொதுநூலகத்தின் வசதிகளை மேம்படுத்தும் நோக்குடன் 5.6 மில்லியன் ரூபா செலவில் கணினிகள், போட்டோ பிரதி இயந்திரம், திறன் பலகை (Smart Board), அலுமாரிகள் மற்றும் தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது..

### 3.4 சனசமூக நிலையங்கள்

ஒரு குறித்த சமூக மக்கள் ஒன்று கூடி சமூக செயற்பாடுகளை அபிவிருத்தி செய்யும் நோக்கில் சன சமூக நிலையங்கள் தோற்றம் பெற்றன. ஒரு கிராமத்திலேயே குறிப்பிடத் தக்களவு சனசமூக நிலையங்கள் இயங்கி வருகின்றன.

தினப்பத்திரிகைகள் வாசிக்கும் வசதிகளை ஏற்படுத்தல் ஒரு வழமையாக உள்ளதோடு, பல சனசமூக நிலையங்களில் நூலக வசதி பிரதான சேவையாக காணப்படுகின்றது. இவை தவிர பாலர் பாடசாலை, கலாமன்றம், விளையாட்டுக் கழகம் போன்ற அமைப்புக்களை சனசமூக நிலையங்கள் நிர்வகிக்கின்றன.

அனைத்து சனசமூக நிலையங்களின் நிர்வாகக் கண்காணிப்பு பொறுப்பு பிரதேச சபையின் கீழ் உள்ளன. எமது சபையில் 2023 ஆம் ஆண்டு 90 சனசமூக நிலையங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் 63 சனசமூக நிலையங்கள் இயங்கு நிலையில் உள்ளது. இதற்கான மேற்பார்வை செயற்பாடுகளுக்காக சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் நிரந்தரமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

| விபரம் | எண்ணிக்கை | சனசமூக நிலையங்களின் கீழ் இயங்கும் சேவை நிலையங்கள் | | |
|---|---|---|---|---|
| | | முன்பள்ளி | நூலகம் | விளையாட்டு கழகம் |
| சனசமூக நிலையங்கள் | 90 | 28 | 14 | 10 |

### 3.5 மயானங்கள்

எமது பிரதேசசபை ஆளுகைப் பிரதேசத்தில் 13 மயானங்கள் பராமரிப்பில் உள்ளன. அவற்றில் 3 மயானங்கள் மட்டுமே மயான அபிவிருத்தி சபையை தற்போது கொண்டு உள்ளது. இவற்றில் ஒரு மயானத்தில் மட்டுமே உடல் தகனக்கட்டணம் அறவிடப்படுகின்றது. எதிர்வரும் காலங்களில் மயானங்களை நிர்வகிப்பதற்கு மயான சபைகளை ஸ்தாபித்து ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகளை மேற்கொள்ள உள்ளதுடன் இதற்கான நடைமுறை விதிகளைத் தயாரிப்பதற்கும் பிரதேசசபை திட்டமிட்டுள்ளது.

**மயானங்களின் விபரம்**

| இல | மயானம் | கிராம அலுவலர் பரிவு | பரப்பளவு |
|---|---|---|---|
| 1 | கண்டதூமயானம் | கப்பூது J/382 | 0.964 ஹெக்ரேயர் |
| 2 | கரைத்தாழ்வு மயானம் | கப்பூது J/382 | 2.827 ஹெக்ரேயர் |
| 3 | கிரிப்பல்லி | கரணவாய் கிழக்கு J/351 | 0.4064 ஹெக்ரேயர் |
| 4 | வேரக்களி மயானம் | துன்னாலை தெற்கு J/370 | 0.1154 ஹெக்ரேயர் |
| 5 | நாவலடி மயானம் | உடுப்பிட்டி J/352 | 0.167 ஹெக்ரேயர் |
| 6 | எள்ளங்குளம் | இமையாணன் J/358 | 0.608 ஹெக்ரேயர் |
| 7 | வெல்லன் கிராமம் | கரணவாய் தெற்கு J/348 | 1.034 ஹெக்ரேயர் |
| 8 | பிட்டிதூ | துன்னாலை தெற்கு J/370 | 1.1120 ஹெக்ரேயர் |
| 9 | வல்லை முள்ளிமயானம் | கரணவாய் மேற்கு J/349 | 0.576 ஹெக்ரேயர் |
| 10 | ஆலங்கட்டை | நெல்லியடி வடக்கு J/375 | 0.297 ஹெக்ரேயர் |
| 11 | சோனப்பு I | கரவெட்டி மத்தி J/367 | 28 ஹெக்ரேயர் 1றூட் 16பேர்ச் |
| 12 | வேறொண்டை | துன்னாலை மத்தி J/373 | 0.7679 ஹெக்ரேயர் |
| 13 | வெல்லன் கிராய் (கரணவாய்) | கரணவாய் தெற்கு | 1.502 ஹெக்ரேயர் |

### 3.6 மரம் நடுகை

சூழலை பாதுகாத்தல் மற்றும் வெப்பநிலையை குறைத்தல் போன்ற நோக்கங்களை அடைவதற்காக பிரதேசசபையானது மரம் நடுகைதிட்டத்தை 2023 ஆண்டு ஆரம்பித்தது. இத்திட்டத்தின் முதற்கட்டமாக வல்லை – முள்ளி வீதியில் 5 அடி உயரமுள்ள 50 வாகை மரக்கன்றுகள் நடுகைசெய்யப்பட்டது. இவற்றில் 15 மரக்கன்றுகள் விசமிகளால் அழிக்கப் பட்டுள்ளது. மேலும் எதிர்காலத்தில் நடுகைசெய்வதற்காக சுமார் 800 மரக்கன்றுகள் பைகளில் வளர்க்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றது. மரநடுகைத் திட்டங்கள் வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு பொதுமக்கள் மற்றும் சமூக மட்ட அமைப்புகளினதும் ஒத்துழைப்பு அவசியமாகின்றது.

### 3.7 முறைப்பாடுகள்

| விபரம் | முறைப்பாடுகள் | | | | |
|---|---|---|---|---|---|
| | கட்டட அனுமதி | காணி | சுற்றுச்சூழல் | ஏனையவை | மொத்தம் |
| முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 92 | 46 | 59 | 99 | **296** |
| தீர்வு காணப்பட்டவற்றின் எண்ணிக்கை | 49 | 31 | 39 | 66 | **185** |
| நிலுவையிலுள்ள முறைப்பாடுகள் | 43 | 15 | 20 | 33 | **111** |

### 3.8 தெருவிளக்குகள்

பிரதேசசபை ஆளுகைப்பிரதேசத்திலுள்ள வீதிகளில் பொருத்தப்பட்டுள்ள 1152 வீதி விளக்குகளை பராமரிக்கும் பணியை பிரதேசசபை மேற்கொள்கின்றது.

## 4.0 அடைவுகள்

1. சபைக்கான இணையத்தளம் உருவாக்கப்பட்டமை.
2. அலுவலக குறுந்தகவல் சேவை
3. வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை 2023 ஆம் ஆண்டு APFA இனால் சிறந்த செயலாற்றுகை மற்றும் கணக்கறிக்கை (Best Annual Report & Accounts Awards for Public Sector) போட்டியில் பங்குபற்றியமைக்காக கௌரவிக்கப்பட்டது.
4. கட்டைவேலி பொதுநூலக நூலகர் திருமதி. பிறிக்ஷானி புலவர் அவர்கள் வரையறுக்கப்பட்ட காலப்பகுதியில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கைவிட கூடுதலான வாசகர்களை சேர்த்தமையை பாராட்டி கௌரவ ஆளுநர் அவர்களால் கௌரவிக்கப் பட்டார்.
5. வதிரி பொதுநூலகம் 2023 ஆம் ஆண்டு தேசிய வாசிப்பு மாதத்தில் வாசிப்பு ஊக்குவிப்பு திட்டங்களைச் செயற்படுத்தியமையை பாராட்டி தேசிய நூலகம் மற்றும் ஆவணமாக்கல் சபையினால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

## 5.0 எதிர்நோக்கும் சவால்கள்

### 5.1 சிற்றூழியர் பற்றாக்குறை

எமது சபையின் சிற்றூழியர்களுக்கு ஆளணி தட்டுபாடுகள் காணப்படுகின்றன. 5 வேலை வெளிக்கள தொழிலாளிகளுக்கும், 7 சுகாதார தொழிலாளிகளும் ஏனைய ஆளணிகளில் 14 வெற்றிடங்களும் காணப்படுகின்றன. அரசின் ஆளணிக் கொள்கை களினால் இவ் வெற்றிடங்கள் நிரப்புவதில் கால தாமதங்கள் ஏற்பட்டுள்ளன. இதனால் சபை வருமானத்திலிருந்து 20 சுத்திகரிப்பு தொழிலாளர்கள், 3 சாரதிகள், 14 பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஆகியோர் நிறுவனங்களுடனான ஒப்பந்த அடிப்படையில் பணிக்கு

அமர்த்தப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றரர்கள். இவ்வாறான ஆளணிக்கான 12,310,000.00 செலவினம் 2023 ஆண்டு ஏற்பட்டுள்ளன.

### 5.2 திண்மக்கழிவகற்றல்

பொதுமக்களிடமிருந்து போதுமானளவு ஒத்துழைப்பு கிடைக்காமையால் திண்மக் கழிவகற்றலில் பாரிய சவாலை எதிர்நோக்க வேண்டியிருகின்றது. திண்மக்கழிவுகள் பொதுமக்களால் தரம்பிரித்து பிரதேசசபைக்கு வழங்காமை, திண்மக்கழிவுகளை வீதிகளில் வீசுதல் போன்ற செயற்பாடுகளால் திண்மக்கழிவகற்றலை திறம்பட மேற்கொள்ள முடியாதநிலை காணப்படுகின்றது.

## 6.0 எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள்

1. நவீன முறையிலான வாகன சுத்திகரிப்பு நிலையம் ஒன்றினை அமைத்தல்
2. சபை கட்டட கூரைகளில் சூரியப்படல் தொகுதி அமைத்தல்
3. நெல்லியடி பழைய சந்தையில் நிலக்கீழ் வாகனத்தரிப்பிடத்துடன் கூடிய வர்த்தக தொகுதி அமைத்தல்
4. நெல்லியடி உப அலுவலகம் அமைத்தல்.
5. உடுப்பிட்டி உப அலுவலக திருத்தம் அல்லது புதிய கட்டடம் அமைத்தல்
6. நவீன முறையிலான விலங்கு அறுக்கும் மனை நிறுவுதல்.
7. பொது விளையாட்டு மைதானம் ஒன்றை அமைத்தல்
8. நகர மண்டபம் ஒன்றினை அமைத்தல்
9. பிரமாண்டமான பொது நூலகம் ஒன்றை அமைத்தல்

---



“ இந்த உலகத்தில் பிறந்த அனைவருக்கும் வரலாற்றின் பக்கங்களில் ஒரு பக்கம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால், அந்தப் பக்கத்தை இந்த உலகையே படிக்க வைப்பது உங்கள் கைகளில் தான் உள்ளது. ”

# தொல்லியல்



# வடமராட்சியில் தொல்லியல் மையங்களும் அவற்றின் எதிர்காலமும்

வாழ்நாட்பேராசிரியர்
**செல்லையா கிருஷ்ணராசா**
வரலாற்றுத்துறை

**பகுதி – 1**

**அறிமுகம் : தொல்லியல் என்றால் என்ன?**

தொல்லியல் என்பது பண்டைக்காலத்தில் மனிதன் வாழ்ந்த வாழ்க்கையைப் பற்றி ஆராய்ந்தறியும் ஓர் அறிவியற்துறையாகும். இவ்வறிவியற் துறையானது புராதன மனிதனதும், சமூகத்தினதும் வரலாற்றினைப் பற்றிய விளக்கங்களைப் பரிபூரணமாக அறிந்து கொள்வதற்குதவும் நடைமுறையாகக் காணப்படுகின்றது. அத்தகைய அறிவியல் நடைமுறையானது பெருமளவுக்கு வரலாற்றுக்கு முற்பட்ட கால மனித பரிணாமத்தின் பல நிலைகளையும் கட்டி எழுப்புவதற்கு உதவுவதாக அமைந்துள்ளது. அவ்வாறே எழுத்து மூலாதாரங்கள் கிடைக்கப் பெறுகின்ற நதிக் கரையோர நாகரிக வாழ்க்கை முறையிலிருந்து தொடரும் மனித வாழ்வின் பரிணாமம், பண்பாட்டு வளர்ச்சி நிலைகள், பண்பாட்டின் பிராந்திய ரீதியான தொடர்புகள் போன்ற இன்னோரன்ன அம்சங்களைப் பற்றியும் தொல்லியல் என்ற அறிவியல் நடைமுறையானது ஆராய்கின்றது.

அடிப்படையில் தொல்லியல் பற்றிய கோட்பாடுகள் 'அகழ்வு' என்ற மைய நிகழ்வொன்றினை ஆதாரமாகக்கொண்டே உருவாக்கப்பட்டவையாக உள்ளன. அவ்வாறு தொல்லியல் பற்றிய கோட்பாடுகள் உருவாக்கப்படும் பொழுது அதன் நோக்கவிதானமானது பன்முகப்படுத்தப்படும் நிலையைப் பெற்றுக்கொள்வதனைக் காணலாம். குறிப்பாக தொல்லியல் பற்றிய கோட்பாடுகள் தூய விஞ்ஞானத்தைச் சார்ந்ததும், சமூக விஞ்ஞானத்தினைத் தழுவியும் வரையறை செய்யப்பட்டுள்ள தன்மையை இங்கு குறிப்பிடலாம்.

'ஓர் அறிவியல் நடைமுறை' என்ற வகையில் தொல்லியலானது "நவீன தூய விஞ்ஞானத்துறைகளைப்" போல் சமமாக ஒப்பிடக்கூடியளவிற்கு வளர்ச்சி

பெற்றிருக்கவில்லை எனச் சிலர் குறிப்பிட்டாலும், அத்தூய விஞ்ஞானத்துறைகளின் தொடர்புகளின்றி தனித்து இயங்கும் நடைமுறையாகத் தொல்லியல் காணப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. எனவே தற்காலத் தூய விஞ்ஞானத்துறைகள் பெருமளவிற்கு ஆய்வுகூட பரிசோதனை முறைகளை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சியடைவது போன்று தொல்லியல் அமையாவிடினும் பொதுப்பட அதற்கென வரைவிலக்கணம் உண்டு. தொல்லியலின் நோக்கத்தினைப் பொறுத்தவரையில் பல்வேறு கருத்து வேறுபாடுகள் காணப்பட்டாலும்கூட அத்துறை சார்ந்த அறிவியல் நடவடிக்கைகள் அடைந்து கொள்ளும் பயன்பாடு, ஏனைய தூய விஞ்ஞானத்துறைகள் அடைந்துகொள்ளும் பயன்பாட்டினை ஒத்ததாகவே அமைகின்றது. ஆகையால், நவீன விஞ்ஞானத்தின் ஓர் அங்கமாக தொல்லியல் என்ற அறிவியற்துறையானது அமைந்துள்ளது என்ற கருத்தினையும் உணர வேண்டும்.

புராதன மனித சமூகத்தினால் விட்டுச் செல்லப்பட்ட எச்சங்கள் (Remains) செய்பொருட்கள் (Artifacts) போன்றவற்றை மூலாதாரமாகக் கொண்டு உருவாக்கப்படு கின்ற ஓர் அறிவியல் தொகுப்பே தொல்லியலாகும். இவ்வறிவியல் தொகுப்பு நடைமுறைக்குள் தூய விஞ்ஞானமும், சமூக விஞ்ஞானமும் ஒன்றிணைவதைக் காணலாம். எனவேதான் தூய விஞ்ஞானத்தினையும் சமூக விஞ்ஞானத்தினையும் ஒன்றிணைத்த ஒரு தொட்டிலாக தொல்லியல் என்ற அறிவியற் சட்டகம் காணப்படுகின்றது. இங்கு தூய விஞ்ஞானத்தினைச் சாராத அறிவியற் துறைகளான சமூகவியல், மானிடவியல், மொழியியல், வரலாறு, நாட்டாரியல் போன்றவற்றுடன், மண்படை, அடுக்கியல், கனிப்பொருளியல், காலநிலையியல், மக்கட் பரப்பியல், உயிரியல், இரசாயனவியல், உடற்கூற்றியல், தொல்லுயிரியல், போன்ற தூய விஞ்ஞான அறிவியற்துறைகளும் சங்கமமாகின்றன. எனவே நவீன விஞ்ஞானத்தின் உப பிரவுகளுள் ஒன்றாகத் தொல்லியல் என்ற அறிவியற்துறை இன்று வகிக்கும் பங்கானது மானுடத்தின் அறிவியல் வரலாறாகப் பரிணாமம் பெற்றுள்ளது எனலாம்.

தூய விஞ்ஞானத்தினைச் சாராத வரலாறும், மானிடவியலும் மனிதனை மையமாகக் கொண்டு ஆராய்கின்ற பொழுதிலும், அவை ஆராயப்படுவதற்குரிய அடிப்படைகளைத் தொல்லியல் பெற்றுக்கொடுக்கின்றது. வரலாற்று ஆசிரியர்கள் மனிதனால் எழுதி வைக்கப்பட்ட நூல்களையும், சாசனங்களையும், அடிப்படையாகக்கொண்டு புராதன மனித நடவடிக்கைகளைப் பற்றி ஆராய்கின்றனர். இவர்கள் 'வரலாற்றுக் காலப்பகுதியில்' நிகழ்ந்த சமூக - பொருளாதார - சமய வளர்ச்சி நிலைகளையும் மாற்றங்களையும் தொல்லியற் சான்றுகள் தரும் குறிப்புகளின் அடிப்படையில் விளக்குகின்றனர்.

ஒரு தொல்லியலாளனின் பணியானது ஒரு வரலாற்றாசிரியனின் பணியைப் போன்று தோற்றமளித்தாலும்கூட, வரலாற்றாசிரியன் தொழிற்படும் நிலையிலிருந்து தொல்லிய லாளனின் நிலையானது பெருமளவுக்கு மாறுபட்டிருப்பதனைக் காணலாம். புராதன மனிதனைப் பற்றிய 'ஒரு தொகுப்பாகவே' வரலாறும் தொல்லியலும் காணப்பட்டாலும் கூட, வரலாறானது புராதன காலத்தைப் பற்றிய இதிகாசங்கள், புராணங்கள், நாணயங்கள், சாசனங்கள் போன்றவற்றை அடிப்படையாகக்கொண்டு நகர - நாகரிக வாழ்வு முறையி லிருந்து உருவாகி, வளர்ச்சி பெற்றுச்சென்ற மனித வரலாற்றைச் சித்தரிக்கின்றது. ஆனால், தொல்லியலோ மனிதனது நாகரிக வாழ்வுக்கு முன்னுள்ள பல்வேறு பண்பாட்டு வாழ்க்கை முறைகளைப்பற்றி, மனிதன் சிறு குழுக்களாகச் சேர்ந்து வாழ்ந்த வாழ்வு முறை களைப் பற்றி, எந்தவிதமான எழுத்தாவணங்களுமின்றி, கிடைத்த சடப்பொருட்களை

அடிப்படையாகக்கொண்டு விளக்கி நிற்கின்ற அறிவியற்துறையாக பரிணாமம் அடைந்துள்ளது. அவ்வகையில் ஒரு தொல்லியலாளன் பல துறைப்பட்ட தூய விஞ்ஞான அறிவு முறைகளை ஓரளவுக்காவது தெரிந்து வைத்திருக்க வேண்டிய நிலையில் அல்லது அத்துறையில் துறை போனவர்களைத் துணைக்கழைக்க வேண்டிய நிலையில் இருப்பதைக் காணலாம். எனவே தொல்லியல் ரீதியான மனித பரிணாமம் பற்றிய விளக்கமானது வெறும் வரலாற்று விபரணம் போன்றில்லாது விஞ்ஞான நடைமுறைகளைச் சார்ந்ததாக இருப்பத னைக் காணலாம்.

தொல்லியலை 'ஒரு சடப்பொருட் பண்பாடு' பற்றிய ஆய்வுத்துறையாகவும் குறிப்பிடுவர். புராதன மக்களுடைய பல்வேறு நிலைப்பட்ட பண்பாட்டு - சூழ்நிலை வாழ்க்கை முறைகளைப் பற்றியே தொல்லியலாளன் ஆய்வு செய்கின்றான் என்பது வெளிப்படை. அவ்வாறான ஆய்வு நோக்கத்திற்கு அடிப்படையான தகவல்களைப் பெற்றுக்கொடுக்கின்ற மூலங்கள் சடப் பொருட்களாகவே காணப்படுகின்றன. மனித உடலெச்சங்களும், மனித செய்பொருட் களுமே தொல்லியலாளனுக்கு உதவுகின்ற சடப்பொருளாகும். அவ்வகையில் சடப் பொருட்களினூடாக அறியப்படும் ஓர் ஆய்வுத்துறையாக தொல்லியல் காணப்படுகின்ற தன்மையினால் அதனை ஒரு 'சடப்பொருட் பண்பாடு' எனக் குறிப்பிட்டனர். தொல்லியல் நடைமுறைகளில் பெற்றுக்கொள்ளப்படுகின்ற சடப்பொருட்களின் அடியாகக் குறிப்பிட்ட மக்கள் கூட்டத்தினரது ஆன்மீகக் கருத்துக்கள் உள்ளிட்ட வாழ்க்கை முறைகளைக் கட்டி யெழுப்புவதற்கு தொல்லியலாளன் முயல்கின்றான். சடப்பொருட் பண்பாட்டில் ஆன்மீகக் கருத்துக்களை வெளிப்படுத்தும் திறன் தொல்லியலாளனையே சாரும். இவ்விரு கருத்துக் களும் ஒன்றிற்கொன்று நேர் எதிரானவையாக இருந்தும், தொல்லியல் என்ற அறிவியல் நடைமுறையினுள் இவ்விரு அம்சங்களும் இணைவதனைக் காணலாம். அதாவது தொல்லியலாளனது செயற்பாட்டின் அடிப்படையில் பார்த்து - தொட்டு அறியக்கூடிய சடப் பொருட்களைக் கொண்டு, பார்க்க முடியாத, உணர முடியாத புராதன மக்களது ஆன்மீக வாழ்வு, மொழி வாழ்வு முறைகளை ஓரளவுக்கு உருவாக்கிக் கொள்ளலாம் என்பதாகும்.

காலத்தால் மறைந்துபோன பிராந்திய ரீதியான பண்பாட்டுத் தனித்துவத்தினை தொல்லியல் சான்றுகள் வெளிக்கொண்டு வருகின்றன. ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தின் தொடர்ச்சியான மக்கள் குடியிருப்பு, அம்மக்கள் அந்நிலப்பரப்பில் வாழ்ந்திருந்த காலத்தில் பின்பற்றியிருந்த வாழ்வியல் வடிவங்கள், நம்பிக்கைகள், இறந்தவர்கள் தொடர்பாக அவர்கள் பின்பற்றியிருந்த ஈம அடக்க முறைகள், பிற சமூகங்களுடன் கொண்ட வாணிபத் தொடர்புகள் போன்ற புராதன சமூகவியல் பரிமாணங்களைத் தொல்லியல் மையங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் அகழ்வாய்வுகள் வெளிக்கொணர்கின்றன. தமது பாரம்பரிய தொடர்ச்சியான வாழிடத்திலிருந்து முற்றாக மறைந்துபோன சமூகம் ஒன்றின் பண்பாட்டு மானிடவியல் பரிமாணங்களை எந்த இடத்திலிருந்து அக்குறிப்பிட்ட சமூகம் அழிக்கப் பட்டதோ அல்லது இடப்பெயர்வுக்குட்பட்டதோ அதே மையத்திலுள்ள மண் படையடுக்களி லிருந்து தொல்லியல் அகழ்வாய்வுகள் வெளிக்கொணர்கின்றன. மேலும் மறைந்துபோன ஒரு குறிப்பிட்ட சமூகமொன்றின் மொழிவழக்கு, அம்மொழிமரபினைத் தாங்கி பதியப்பட்ட வரி வடிவங்கள் மற்றும் நம்பிக்கைகள் தொடர்பாகப் பின்பற்றப்பட்டுக்கொண்டு வரப்பட்ட சமய - வழிபாட்டுச் சடங்குகளின் வடிவங்கள் போன்றவற்றினை நிகழ்கால உலகிற்குப் பாதுகாத்துத் தருவதில் இத்தொல்லியல் மையங்கள் பெரும்பங்கு வகிக்கின்றன. சுருக்க மாகக் குறிப்பிடுவதாயின் ஓர் இனத்தின் சமூக அடையாளத்தினை பாதுகாத்துத் தருவதில் மண்படைகள் பெரும்பங்கு வகிக்கின்றன எனலாம். அந்தவகையில் இவ்வாய்வுக்

கட்டுரையின் கண் வடமராட்சியிலிருந்து இதுவரையில் அடையாளம் காணப்பட்ட புராதன தொல்லியல் மையங்கள் தொடர்பாகவும் அவை கொண்டிருந்திருக்கக்கூடிய தொல்பொருட் களின் வகையீடுகள் தொடர்பாக விபரிக்கப்படுதலும் பிரதானமான நோக்கமாகக் கொள்ளப்பட்ட நிலையில் அவற்றின் மீதான எதிர்காலம் தொடர்பாகவும் ஆராயப்படுதலை இக்கட்டுரை பிரதானமான நோக்கமாகக் கொண்டுள்ளது.

**பகுதி - 11**

### வடமராட்சியில் தொல்லியல் ஆய்வுகளின் தொடக்கம்

வடமராட்சி மீதான தொல்லியல் வரலாறானாது இலங்கைத் தொல்லியல் வரலாற்றுக் காலப் பரப்பிலிருந்து வேறுபடுவதனைக் காணமுடிகின்றது. ஒல்லாந்தர் காலத்தில் யாழ்ப்பாணத்துக்குப் பொறுப்பாகவிருந்த திசாவையான கிளாஸ் ஐசாக் என்ற சட்ட மேதையால் 30 வருட காலமாக வடமராட்சியுட்பட யாழ்ப்பாணக் கொமாண்டரியிலிருந்து மக்களது வாழ்வியல் வழமைகளைக் குறித்த தோம்புகள் சேகரிக்கப்பட்டு அவற்றினை வடமராட்சியிலுள்ள சமகாலத்தில் கடமையிலிருந்த 12 முதலியார்களூடாக திருத்தம் செய்யப்பெற்று, பின்னர் சைமனால் அங்கீகரிக்கப்பட்ட நிலையில் யாழ்ப்பாணாயன் பட்டினத்திலிருந்த ஒல்லாந்தரது நீதிமன்றங்களில் கடமை புரிந்து கொண்டிருந்த அதிகாரி களுக்கு அறிக்கையாக, ஒப்படைத்த நடைமுறையானது ஒரு வகையான தொல்லியல் (ஆவண) ஆய்வின் தொடக்கத்தினைக் குறிப்பிட்டு நிற்கின்றதெனலாம். இந்த அறிக்கையின் தமிழ்மொழி பெயர்ப்பானது 1862 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்திலுள்ள RIPLEY AND STRONG PRINTERS என்றழைக்கப்பட்ட அச்சகத்தில் அச்சிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. துலுக்கன் கோட்டை எனப்படும் ஓர் அலுவலக மையம் (தம்பசெட்டியிலிருந்து மறைந்து போன ஒரு மையம்) ஒல்லாந்தர் காலத்தில் வடமராட்சியில் இயங்கிய மொழி பெயர்ப்பாளர் (தொலுக்குப் பண்ணுதல் - மொழி பெயர்த்தல்) அலுவலகமாகும். அத்துடன் ஒல்லாந்தர் காலத் தொல்பொருட் சேகரிப்புக்களிலும் இம்மையம் பெரும்பங்காற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. VOC நாணயங்களின் உற்பத்திக்குரிய Mint ஒன்றும் இங்கு அமைந்திருந்ததாகக் குறிப்பிடப்படுகின்றது. பட்டேவியா விலுள்ள ஒல்லாந்தர்களது அரும்பொருளகத்திற்கு வடமராட்சிப் பெண்களது அணிகலன்கள் குறிப்பாக தாலி, அட்டியல், சங்கிலிப்பதக்கம் மற்றும் கால் கொலுசுகள் என்பன சேகரிக்கப்பட்டு அனுப்பப்பட்டிருந் தமைக்கான பதிவுகளும் கிடைத்துள்ளன. ஒல்லாந்தர் களைத் தொடர்ந்து கி.பி. 1796 ஆம் ஆண்டில் இலங்கைத் தீவு ஆங்கிலேயரது குடியேற்ற நாடாக மாற்றம் பெற்ற காலகட்டத்திலிருந்து இலங்கைத் தொல்லியல் ஆய்வுகள் புதிய வடிவம் பெறத் தொடங்கி யிருந்தன. 1890 ஆம் ஆண்டி லிருந்து (1912 வரை) H.C.P. Bell என்பவரை தொல்லியல் ஆணையாளராகப் பிரித்தானிய அரசாங்கம் நியமித்ததிலிருந்து இலங்கைத் தீவு தொடர்பான தொல்லியல் ஆய்வுகள் புதுமலர்ச்சி பெற்றன. வடமத்திய மாகாணங்கள் மீதான தொல்லியல் மேலாய்வுகளில் Bell மிகவும் அக்கறை காட்டியிருந்தார். வடமராட்சியைப் பொறுத்தவரையில் ஆங்கிலேயர் காலத்தில் J.P. Lewis என்பவரே முதன்முதலாக



கிறிஸ்தவச் சவக்குழிகள் தொடர்பாக ஆராய்ந்து, அவற்றைப் பற்றிய விபரணத்தினை Tombs stones and Monuments in Ceylon என்ற நூலில் (1795) இணைத்துக் கொண்டிருந்தார். கடந்த காலங்களில் வடமராட்சியில் எம்மால் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் மேலாய்வுகளின் அடிப்படையில் ஆராயப்பட வேண்டியதும் பாதுகாக்கப்பட வேண்டியதுமான தொல்லியற் பரப்புக்களை பின்வருமாறு தொகுத்துக் குறிப்பிட்டுக் கொள்ள முடியும்.

**வெளிப்படுத்தப்பட்ட தொல்லியல் சான்றுகளும் அடையாளம் காணப்பட்ட புராதன மையங்களும்**

(அ) மாயக்கை - வரலாற்றுக்கு முற்பட்டகாலத் தொல்பொருட் களஞ்சியம்
(ஆ) வல்லிபுரமும் பொற்சாசனப் பண்பாட்டு நிறுவனங்களும்
(இ) நாகர்கோயிலும் வாணிபம் சார்ந்த தொல்பொருட்களும்
(ஈ) தொண்டமானாற்றுப் பள்ளத்தாக்கில் தொல்லியல் மையங்கள்
(உ) உடுப்பிட்டிப் பிராந்தியமும் தொல்பொருட்களும்
(ஊ) சோழர் காலக் குடியிருப்புக்களும் அவற்றின் முக்கியத்துவமும்
(எ) இம்பரூட்டியில் பல்லவர்களது பண்பாட்டு எச்சங்கள்

வடமராட்சியின் வரலாற்று வளர்ச்சியினைத் தெளிவாகக் காண்பதற்குரிய வரலாற்று மூலங்களைப் பெற்றுக்கொள்வதற்குரிய திட்டமிட்ட ஆய்வுகள் இப்பரப்பில் இதுவரையில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. வலிகாமப் பரப்பினை எடுத்துக்கொண்டால் அப் பிராந்தியத்தில் உள்நாட்டு - வெளிநாட்டு ஆய்வாளர்களால் ஓரளவுக்குத் திட்டமிடப்பட்ட தொல்லியல் - பண்பாட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஆனால் வடமராட்சிப் பரப்பில் அவ்வாறான அகழ்வாய்வுகளோ, மேலாய்வுகளோ பரந்தடிப்படையில் நடைபெற வில்லை. இருந்தபோதிலும் இந்நூலாசிரியராலும், பின்னர் பேராசிரியர் பொ. ரகுபதியி னாலும் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் முதனிலை ஆய்வுகளின் தரவுகள் வடமராட்சியின் வரலாற்று வளர்ச்சியை வரைவதற்கு ஓரளவிற்கு உதவியிருக்கின்றன. வடமராட்சி கிழக்கில் சேகரிக்கப்பட்ட தொல்லியல் எச்சங்களை அடிப்படையாகக்கொண்டு தொல்லியல் மாணவர்கள் பல ஆய்வுக்கட்டுரைகளையும் சமர்ப்பித்துள்ளார்கள். வடமராட்சிப் பரப்பின் மீதான தொல்லியல் ஆய்வில் மிக விருப்புக்கொண்டு ஆரம்ப காலத்தில் செயலாற்றிய திரு.ஆ.தேவராசன் அவர்களது எழுத்துக்கள், அவரால் ஆய்வு மாநாடுகளில் சமர்ப்பித் திருந்த ஆய்வுக் கட்டுரைகள் முதலியனவும் வடமராட்சிப் பரப்பின் தொல்லியல் உள்ளீடு களை வெளிக்கொண்டுவருவதற்கு உதவியிருந்தமையைக் காணமுடியும்.

வடமராட்சியின் நிலப்பரப்பு யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குள் ஒரு குடாநாடாகக் காணப்படுவதினால் இப்பரப்பின் வரலாற்று வளர்ச்சி தனித்துவமானதாக அமைந்திருக்க வேண்டும். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே இவ்வியற்கைப் பிரிவானது மக்களது இடப்பெயர்விலும், செறிவிலும், வாழ்க்கை முறைகளிலும் தாக்கத்தினை ஏற்படுத்தி நின்றதில் வியப்பேதும் இருக்க முடியாது. வலிகாமப் பரப்பின் வரலாற்று வளர்ச்சியில் எவ்வாறு அதன் மேற்குக் கரையோரம் காலத்தால் முற்பட்ட வரலாற்று ஆவணங்களைக் கொண்டுள்ளதோ அதேபோன்று வடமராட்சிப் பரப்பின் கிழக்குப் பிராந்தியம் காலத்தால் முற்பட்ட வரலாற்று ஆவணங்களைக்கொண்டு விளங்குகின்றது. யாழ்ப்பாணக் குடா நாட்டிற்குத் தெற்கே பூநகரிப் பிராந்தியத்தில் குறுணிக்கற்கால மக்களது தடயங்கள் கிடைத்தமை போன்ற தடயங்கள், பூநகரியையொத்த மணற்றிடர்ப் பரப்பான வடமராட்சி

கிழக்குப் பரப்பிலும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. மிக அண்மையில் நாகர் கோயிலுக் கண்மையிலுள்ள கருமணற்பிட்டியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மாட்டுச் சாணமும் (Cow Dung) கையினால் வனையப்பெற்ற மட்பாண்டமும் (Hand Made Pottery) இணைந்து இறுகிப்போன சுவடு (Fossil) எமக்குக் கிடைத்திருப்பது குறுணிக்கற்கால அல்லது அதற்கும் முற்பட்டதாகக் கொள்ளப்படும் புதிய கற்கால மக்களது வாழ்வின் இருப்பினை இனங்காட்ட உதவியுள்ளது.

வலிகாமத்தில் மேற்குக் கரையோரப் பிராந்தியத்திலுள்ள இடப்பெயர்வுகளுள் சில பாளி - பௌத்த நூல்களில் இடம்பெற்றிருப்பதினை ஒத்து, வடமராட்சி கிழக்குப் பிராந்தியத்தின் இடப்பெயர்வுகள் சில யாவா - மலாயா மொழிகளிலும், சங்க இலக்கியங் களிலும், குறிப்பாக மணிமேகலை போன்ற தமிழ் இலக்கியங்களிலும் இடம்பெற்றிருப்பதும் நோக்கத்தக்கது. தென்கிழக்காசியத் தொடர்புகளுடன் வடமராட்சி கிழக்குப் பிராந்தியம் இணைந்து கொண்டிருந்த தன்மையை நன்கு கண்டுகொள்ளக்கூடிய சான்றுகளும் கிடைத்த வண்ணமுள்ளன. குறுணிக்கற்கால வாழ்க்கை முறையின் அலையொன்று இந்திய நிலப்பரப்பிலிருந்தல்லாது தென்கிழக்காசிய நெற்செய்கைப் பண்பாட்டுடன் வடமராட்சி கிழக்கில் ஊடுருவியிருந்த தன்மையைக் கண்டுகொள்ளக்கூடிய ஆய்வுக்களத்தின் காலமும் மிக விரைவில் எம்மை வந்தடையும் என எதிர்பார்க்கலாம்.

**பகுதி - 111**

**மாயக்கையும் தொல்லியல் ஆய்வுகளும்**





05-02-1984 அன்று வெளிவந்த வீரகேசரி வார மலரில் **இலங்கையில் ஒரு கற்காலம்: யாழ் குடாநாட்டில் கண்டெடுக் கப்பட்ட கல்லாயுதங்கள்** என்ற தலைப்பில் **மாயக்கை** தொடர்பான எனது தொல்லியல் கட்டுரை வெளிவந்தது. பின்னர் 12-02-1984 அன்று **மாயக்கையிற் கிடைத்தவை கற்காலக் கருவிகளா?** என்ற தலைப்பில் ஒரு தொல்லியல் விவகாரம் என விளிக்கப்பட்ட நிலையில் பொ. இரகுபதி அவர்களால் மாயக்கை தொடர்பான இன்னொரு கட்டுரை வெளிவந்தது. மீண்டும் எனது கட்டுரை ஒன்று வடமராட்சியின் மாயக்கை என்ற தலைப்பில் 22-10-1989 அன்று வீரகேசரி வாரமலரில் வெளிவந்தது. இதன் பின்னர் 2011ஆம் ஆண்டில் கந்தரோடையில் அகழ்வாய்வு செய்வதற்காக வருகை தந்திருந்த இலங்கைத் தொல்லியற் திணைக்கள ஆய்வாளர்கள் கற்கால கருவிகள் தொடர்பான எனது சேகரிப்புக்களை அடையாளம் கண்டுகொண்டமையின் பின்னணியில் மாயக்கைப் பிராந்தியம் ஒரு கற்காலத் தொல்லியல் மையமாகத் தொல்லியல் திணைக்களத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டது. இலங்கையின் புகழ்பூத்த தொல்லியல் ஆய்வாளரான கலாநிதி சிரான் தெரணியாகல அவர்கள் மாயக்கை குகைக்கு வருகைதந்து இப் பிரகடனத்தினை 2011 இல் பதிவு செய்திருந்தார்.

வடமராட்சியின் வரலாற்றிற்கு முற்பட்டகாலத் தொல்லியல் மையங்களை இரண்டு அடிப்படைகளில் அடையாளப்படுத்தி, வெளிப்படுத்திக்கொள்ள முடியும். அவையாவன: (1) தொண்டைமானாற்றின் வடிகாலமைப்பிற்குட்பட்ட கண்டல் காட்டுப் பரப்பு - முள்ளி என

அழைக்கப்படும் மையத்திற்கு மேலுள்ள பள்ளத்தாக்குப் பரப்பு. (2) மாயக்கை - சக்கோட்டை - காக்கைத்திடல் பிராந்தியம். இந்த இரண்டாவது பிரிவில் மாயக்கை - சாக்கோட்டை மையங்கள் ஏற்கனவே பழங்கற்கால வாழ்வுக்குரிய கற்கருவிகளைக் கொண்டிருந்தமை யினை இக்கட்டுரையாசிரியரும் இவருடன் இணைந்து இலங்கைத் தொல்லியல் திணைக் களமும் கடந்த காலங்களில் மேற்கொண்ட ஆய்வுகளினூடாக உறுதிப்படுத்தியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

வடமராட்சியிலும் வன்னிப் பிராந்தியத்திலும் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் மேலாய்வுகள் மற்றும் அகழ்வாய்வுகள் வரலாற்றிற்கு முற்பட்டகாலப் பண்பாட்டு வாழ்விடங்களை இனங்காட்டியுள்ளன. இரணைமடுப் பண்பாடு (Iranaimadu Culture) தொடர்பாக ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலிருந்து தொல்லியலாளர்கள் ஆய்வுகளை மேற்கொண்டு வந்துள்ளமையை அடிப்படையாகக்கொண்டு, இலங்கைத் தொல்லியலாளர் களும் இரணைமடுப் பண்பாட்டின் பரவல் தடங்களை ஆராய்ந்து வரலாற்றிற்கு முற்பட்ட காலப் பண்பாட்டிற்குரிய அதாவது, கற்காலப் பண்பாட்டின் பல நிலைகளுடன் தொடர்பு படுத்திய நிலையில் புதிய வரலாற்று முடிபுகளை எட்டியுள்ளமையைக் காணலாம். வரலாற்றிற்கு முற்பட்ட கால இப்பண்பாட்டுப் பரவலுக்குரிய வழித்தடங்கள் இரணைமடு நீரேந்து பரப்புடன் இணைக்கப்பட்ட வகையில் பல்வேறு திசைகளிலும் காணப்படுகின்றன. ஆனால், வடமராட்சி கிழக்குப் பரப்புடன் இரணைமடுவினை இணைத்து வைத்த பண்பாட்டு வழித்தடம் இன்னும் மிகத் தெளிவாக அடையாளம் காணப்படாதபோதிலும் வரலாற்றுக்கு முற்பட்டகால வாழ்வியல் தொடர்புகள் இவ்விரு பிரதேசங்களுக்கிடையே காணப்பட்டிருந்த மையினை மறுக்க முடியாதுள்ளது. எமது தொல்லியலாளர்கள் இரணைமடுப் பண்பாட்டின் பரவலை தெற்கே கிளிநொச்சியிலிருந்து மாங்குளம் வரைக்கும், மேற்கே கிளிநொச்சியி லிருந்து மாந்தை வரைக்கும் பரவியிருந்தமையை தொல்லியலாதாரங்களுடன் எடுத்துக் காட்டியுள்ளனர். யாழ்ப்பாணக் குடாநாட்டுடனான இரணைமடுப் பண்பாட்டுத் தொடர்பு களை எவருமே இதுவரையில் தெளிவாக எடுத்துக்காட்டவில்லை. வடஇலங்கையில் காலத்தினால் முற்பட்ட ஒரு பண்பாட்டு வாழ்விடமாக இரணைமடுப் பிராந்தியம் விளங்கி வந்திருந்தது என்பதற்கு அங்கிருந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட கற்காலத்து எச்சங்கள் மாத்திரமல்ல, வரலாற்றின் தொடக்ககால சுடுமண் சிற்பங்கள், வெளிநாட்டு மட்பாண்டங்கள், பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட உள்நாட்டு மட்பாண்டங்கள் என்பன சிறந்த தொல்லியல் சான்றுகளாக உள்ளன.

மாயக்கையுடன் தொடர்புபடுத்திக் கூறப்படும் ஐதீகமானது அப்பெயர்த் தோற்றத்தினை விளக்குவதாகக் காணப்படுகிறது. அவ்வைதீகம் பின்வருமாறு அமைந்துள்ளது. "....முன்னொரு காலத்தில் நெல் விளையும் பூமியாக விளங்கிய இப்பிரதேசமானது அடிக்கடி மாடுகளின் அழிப்பிற்குட்பட்டு வந்தது. இதனால் அவ்வயற்காரன் இரவுக் காவல் செய்து வருகின்ற முறையை ஆரம்பித்தான். ஒரு நாளிரவு பல மாடுகள் அங்கு அமைந்துள்ள கற்பாறைத் தொடரின் அடிப்பாகத்தில் காணப்பட்ட குகை ஒன்றிலிருந்து வெளிவந்து, நெற்பயிரை மேய்வதனை அவன் கண்டான். பின்பு அம்மாடுகளை அவன் துரத்திச் செல்கையில் அவை நீண்டவொரு குகைக்குள் அவனை இட்டுச் சென்றன. அவனையுமறியாது நீண்ட அக்குகைக்குள் சென்றதும், அம்மாடுகள் மாயமாக மறைந்துவிட்டன; ஆனால், அவன் அங்கு விலைமதிப்பற்ற பல பொற்குவியல்களையும், உணவுக் குவியல்களையும் கண்ணாரக் கண்டான். இந்நிலையில் அக்குகையினுள்ளே வாழ்ந்த இயக்கர்கள் அவ்வயற் காரனை "அங்கு கண்ட காட்சிகளை வெளியே யாருக்கும் சொல்லக்கூடாது. அவ்வாறு

கிழக்குப் பரப்பிலும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. மிக அண்மையில் நாகர் கோயிலுக் கண்மையிலுள்ள கருமணற்பிட்டியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மாட்டுச் சாணமும் (Cow Dung) கையினால் வனையப்பெற்ற மட்பாண்டமும் (Hand Made Pottery) இணைந்து இறுகிப்போன சுவடு (Fossil) எமக்குக் கிடைத்திருப்பது குறுணிக்கற்கால அல்லது அதற்கும் முற்பட்டதாகக் கொள்ளப்படும் புதிய கற்கால மக்களது வாழ்வின் இருப்பினை இனங்காட்ட உதவியுள்ளது.

வலிகாமத்தில் மேற்குக் கரையோரப் பிராந்தியத்திலுள்ள இடப்பெயர்வுகளுள் சில பாளி - பௌத்த நூல்களில் இடம்பெற்றிருப்பதினை ஒத்து, வடமராட்சி கிழக்குப் பிராந்தியத்தின் இடப்பெயர்வுகள் சில யாவா - மலாயா மொழிகளிலும், சங்க இலக்கியங் களிலும், குறிப்பாக மணிமேகலை போன்ற தமிழ் இலக்கியங்களிலும் இடம்பெற்றிருப்பதும் நோக்கத்தக்கது. தென்கிழக்காசியத் தொடர்புகளுடன் வடமராட்சி கிழக்குப் பிராந்தியம் இணைந்து கொண்டிருந்த தன்மையை நன்கு கண்டுகொள்ளக்கூடிய சான்றுகளும் கிடைத்த வண்ணமுள்ளன. குறுணிக்கற்கால வாழ்க்கை முறையின் அலையொன்று இந்திய நிலப்பரப்பிலிருந்தல்லாது தென்கிழக்காசிய நெற்செய்கைப் பண்பாட்டுடன் வடமராட்சி கிழக்கில் ஊடுருவியிருந்த தன்மையைக் கண்டுகொள்ளக்கூடிய ஆய்வுக்களத்தின் காலமும் மிக விரைவில் எம்மை வந்தடையும் என எதிர்பார்க்கலாம்.

**பகுதி - 111**

**மாயக்கையும் தொல்லியல் ஆய்வுகளும்**





05-02-1984 அன்று வெளிவந்த வீரகேசரி வார மலரில் **இலங்கையில் ஒரு கற்காலம்: யாழ் குடாநாட்டில் கண்டெடுக் கப்பட்ட கல்லாயுதங்கள்** என்ற தலைப்பில் மாயக்கை தொடர்பான எனது தொல்லியல் கட்டுரை வெளிவந்தது. பின்னர் 12-02-1984 அன்று **மாயக்கையிற் கிடைத்தவை கற்காலக் கருவிகளா?** என்ற தலைப்பில் ஒரு தொல்லியல் விவகாரம் என விளிக்கப்பட்ட நிலையில் பொ. இரகுபதி அவர்களால் மாயக்கை தொடர்பான இன்னொரு கட்டுரை வெளிவந்தது. மீண்டும் எனது கட்டுரை ஒன்று வடமராட்சியின் மாயக்கை என்ற தலைப்பில் 22-10-1989 அன்று வீரகேசரி வாரமலரில் வெளிவந்தது. இதன் பின்னர் 2011ஆம் ஆண்டில் கந்தரோடையில் அகழ்வாய்வு செய்வதற்காக வருகை தந்திருந்த இலங்கைத் தொல்லியற் திணைக்கள ஆய்வாளர்கள் கற்கால கருவிகள் தொடர்பான எனது சேகரிப்புக்களை அடையாளம் கண்டுகொண்டமையின் பின்னணியில் மாயக்கைப் பிராந்தியம் ஒரு கற்காலத் தொல்லியல் மையமாகத் தொல்லியல் திணைக்களத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டது. இலங்கையின் புகழ்பூத்த தொல்லியல் ஆய்வாளரான கலாநிதி சிரான் தெரணியாகல அவர்கள் மாயக்கை குகைக்கு வருகைதந்து இப் பிரகடனத்தினை 2011 இல் பதிவு செய்திருந்தார்.

வடமராட்சியின் வரலாற்றிற்கு முற்பட்டகாலத் தொல்லியல் மையங்களை இரண்டு அடிப்படைகளில் அடையாளப்படுத்தி, வெளிப்படுத்திக்கொள்ள முடியும். அவையாவன: (1) தொண்டைமானாற்றின் வடிகாலமைப்பிற்குட்பட்ட கண்டல் காட்டுப் பரப்பு - முள்ளி என

அழைக்கப்படும் மையத்திற்கு மேலுள்ள பள்ளத்தாக்குப் பரப்பு. (2) மாயக்கை - சக்கோட்டை - காக்கைத்திடல் பிராந்தியம். இந்த இரண்டாவது பிரிவில் மாயக்கை - சாக்கோட்டை மையங்கள் ஏற்கனவே பழங்கற்கால வாழ்வுக்குரிய கற்கருவிகளைக் கொண்டிருந்தமை யினை இக்கட்டுரையாசிரியரும் இவருடன் இணைந்து இலங்கைத் தொல்லியல் திணைக் களமும் கடந்த காலங்களில் மேற்கொண்ட ஆய்வுகளினூடாக உறுதிப்படுத்தியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

வடமராட்சியிலும் வன்னிப் பிராந்தியத்திலும் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் மேலாய்வுகள் மற்றும் அகழ்வாய்வுகள் வரலாற்றிற்கு முற்பட்டகாலப் பண்பாட்டு வாழ்விடங்களை இனங்காட்டியுள்ளன. இரணைமடுப் பண்பாடு (Iranaimadu Culture) தொடர்பாக ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலிருந்து தொல்லியலாளர்கள் ஆய்வுகளை மேற்கொண்டு வந்துள்ளமையை அடிப்படையாகக்கொண்டு, இலங்கைத் தொல்லியலாளர் களும் இரணைமடுப் பண்பாட்டின் பரவல் தடங்களை ஆராய்ந்து வரலாற்றிற்கு முற்பட்ட காலப் பண்பாட்டிற்குரிய அதாவது, கற்காலப் பண்பாட்டின் பல நிலைகளுடன் தொடர்பு படுத்திய நிலையில் புதிய வரலாற்று முடிபுகளை எட்டியுள்ளமையைக் காணலாம். வரலாற்றிற்கு முற்பட்ட கால இப்பண்பாட்டுப் பரவலுக்குரிய வழித்தடங்கள் இரணைமடு நீரேந்து பரப்புடன் இணைக்கப்பட்ட வகையில் பல்வேறு திசைகளிலும் காணப்படுகின்றன. ஆனால், வடமராட்சி கிழக்குப் பரப்புடன் இரணைமடுவினை இணைத்து வைத்த பண்பாட்டு வழித்தடம் இன்னும் மிகத் தெளிவாக அடையாளம் காணப்படாதபோதிலும் வரலாற்றுக்கு முற்பட்டகால வாழ்வியல் தொடர்புகள் இவ்விரு பிரதேசங்களுக்கிடையே காணப்பட்டிருந்த மையினை மறுக்க முடியாதுள்ளது. எமது தொல்லியலாளர்கள் இரணைமடுப் பண்பாட்டின் பரவலை தெற்கே கிளிநொச்சியிலிருந்து மாங்குளம் வரைக்கும், மேற்கே கிளிநொச்சியி லிருந்து மாந்தை வரைக்கும் பரவியிருந்தமையை தொல்லியலாதாரங்களுடன் எடுத்துக் காட்டியுள்ளனர். யாழ்ப்பாணக் குடாநாட்டுடனான இரணைமடுப் பண்பாட்டுத் தொடர்பு களை எவருமே இதுவரையில் தெளிவாக எடுத்துக்காட்டவில்லை. வடஇலங்கையில் காலத்தினால் முற்பட்ட ஒரு பண்பாட்டு வாழ்விடமாக இரணைமடுப் பிராந்தியம் விளங்கி வந்திருந்தது என்பதற்கு அங்கிருந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட கற்காலத்து எச்சங்கள் மாத்திரமல்ல, வரலாற்றின் தொடக்ககால சுடுமண் சிற்பங்கள், வெளிநாட்டு மட்பாண்டங்கள், பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட உள்நாட்டு மட்பாண்டங்கள் என்பன சிறந்த தொல்லியல் சான்றுகளாக உள்ளன.

மாயக்கையுடன் தொடர்புபடுத்திக் கூறப்படும் ஐதீகமானது அப்பெயர்த் தோற்றத்தினை விளக்குவதாகக் காணப்படுகிறது. அவ்வைதீகம் பின்வருமாறு அமைந்துள்ளது. "....முன்னொரு காலத்தில் நெல் விளையும் பூமியாக விளங்கிய இப்பிரதேசமானது அடிக்கடி மாடுகளின் அழிப்பிற்குட்பட்டு வந்தது. இதனால் அவ்வயற்காரன் இரவுக் காவல் செய்து வருகின்ற முறையை ஆரம்பித்தான். ஒரு நாளிரவு பல மாடுகள் அங்கு அமைந்துள்ள கற்பாறைத் தொடரின் அடிப்பாகத்தில் காணப்பட்ட குகை ஒன்றிலிருந்து வெளிவந்து, நெற்பயிரை மேய்வதனை அவன் கண்டான். பின்பு அம்மாடுகளை அவன் துரத்திச் செல்கையில் அவை நீண்டவொரு குகைக்குள் அவனை இட்டுச் சென்றன. அவனையுமறியாது நீண்ட அக்குகைக்குள் சென்றதும், அம்மாடுகள் மாயமாக மறைந்துவிட்டன; ஆனால், அவன் அங்கு விலைமதிப்பற்ற பல பொற்குவியல்களையும், உணவுக் குவியல்களையும் கண்ணாரக் கண்டான். இந்நிலையில் அக்குகையினுள்ளே வாழ்ந்த இயக்கர்கள் அவ்வயற் காரனை "அங்கு கண்ட காட்சிகளை வெளியே யாருக்கும் சொல்லக்கூடாது. அவ்வாறு

சொன்னால் இறந்து விடுவாய் என எச்சரிக்கை செய்து அவனை வெளியே அனுப்பி வைத்தனர்". இதுவே இப் பிரதேசத்துடன் இணைத்துக் கூறப்பட்டுவரும் ஐதீகமாகும். இதன் அடிப்படையாகத் தோன்றியதே "மாயக் குகை" என்ற இரட்டைப் பதமாகும். பின்பு அது மாயக்கை என மருவி வழங்குகின்றதென்பர்.

வரலாற்றுக்கு முற்பட்ட கால இலங்கையின் கற்கால ஆய்வுகள் இன்னும் ஒரு முடிந்த முடிபானவையாகக் காணப்படாதன் காரணமாகவே தொல்லியலில் ஆய்வாளர்கள் மத்தியில் இன்றும் இலங்கையின் கற்காலம் பற்றி முரண்பாடான பல கருத்துக்கள் நிலவிக் கொண்டிருப்பதனைக் காண முடிகிறது. இலங்கையில் முதன்முதலாகக் கற்காலக் கலாச்சாரம் பற்றிய ஆய்வினைத் தொடக்கிய "போல்" என்பவர் தொடங்கி சிரான் - தெரணியாகல வரைக்குமுள்ள தொல்லியல் ஆய்வாளர் மத்தியிலே இலங்கையில் ஒரு "கற்காலம்" இருந்தது என்பதற்கான பொதுமையான ஓர் உடன்பாடு காணப்பட்டபோதும், அது எத்தகைய ஒரு வகையைக் கொண்டிருந்தது என்பதில்கூட முரண்பாடான கருத்துக்களே அதிகம் காணப்பட்டன. இத்தகைய ஒரு நிலையில், தென்னிந்திய வரலாற்றுப் போக்கின் பாதிப்புக்குட்பட்ட ஒரு பாகமாகவே இலங்கை அமைந்தமை காரணமாக, இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட கால வரலாறு பொறுத்து தென்னிந்தியாவில் கையாளப்பட்ட அதே அளவீடுகளையே இங்கும் தொல்லியலாளர் உபயோகித்தனர். இவ்வாறான ஒரு பின்னணியில் இலங்கையின் கற்காலம் பற்றி ஆராய்ந்த ஒரு சிலர், இலங்கையில் "பழைய கற்காலம்" இருந்திருக்கலாம் என்ற கருத்தினை முன்வைத்த போதிலும் அதற்குரிய சான்றுகள் முழுமையாகக் கிடைக்கப் பெறாமையால் பின்வந்த தொல்லியலாளரினால் இக்கருத்து மறுக்கப்பட்டது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இதுவரையில் ஒரு "கற்காலம்" எனக் குறிப்பிடப்படும் காலப் பிரிவு இருந்ததற்கான ஆதாரங்களை எவரும் போதிய சான்றுகளுடன் எடுத்து முன்வைக்கவில்லை என்பதே இங்கு முக்கியமான அம்சமாக அமைகின்றது. அவ்வகையில் மாயக்கையில் இருந்து சேகரிக்கப்பட்ட இக் கற்கருவிகளை அடிப்படையாகக்கொண்டு யாழ்ப்பாணக் குடாநாட்டின் "கற்கால வரலாற்றினை" ஆராய முடியும் என்பது உள்நாட்டு - வெளிநாட்டு ஆய்வாளர்களது நம்பிக்கையாகும்.

**வல்லிபுரமும் தொல்லியல் ஆய்வுகளும்**

வடமராட்சியிலுள்ள மிகப் பிரசித்தம் வாய்ந்த தொல்லியல் மையங்களுள் வல்லிபுரம் முக்கியமானதாகும். கி.பி. 14ஆம் நூற்றாண்டில் சிங்கள மொழியில் எழுதப்பெற்ற நம்பொத்த என்ற நூலில் வல்லிபுரம் குறிப்பிடப் பட்டிருப்பதனைக் காணமுடிகின்றது. கி.பி. 17ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட தக்ஷிணகைலாய புராணத்தில் வல்லிபுர மான்மியச் சருக்கத்தில் வல்லிபுரத்தில் கோயில் கொண்டெழுந்தருளி



யிருக்கும் ஸ்ரீ மகா விஷ்ணுவின் அவதாரக் கதை சொல்லப்பட்டுள்ளது. கிழமை நாட்களில் வரும் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் இவ்விஷ்ணு ஆலயத்தில் விசேட தினங்களாகக் கொள்ளப்பட்டு அலங்காரத் தீப - ஆராதனைகள் நிகழ்த்தப்பட்டு வருகின்ற பின்னணியில் சூரிய வழிபாட்டு மரபொன்றின் தொடர்ச்சியே (Sun Disk Worship) பின்னர் விஷ்ணு சக்கர வழிபாட்டு மரபாக மாற்றமடைந் திருக்க வேண்டும் என பேராசிரியர் வேலுப்பிள்ளளை கருதுகின்றார். கி.பி. 10ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் இம்மையம் மகாயான

பௌத்தத்திற்குரிய ஒரு தளமாகக் காணப்பட்டது என்பதனை இம் மையத்தில் நிகழ்த்தப் பட்ட தொல்லியல் கண்டுபிடிப்புக்கள் உறுதிப் படுத்தியுள்ளன. இங்கு கண்டுபிடிக்கப்பட்ட நிற்கின்ற நிலையிலுள்ள புத்தர் சிலையானது அமராவதிக் கலைமரபில் உருவாக்கப்பட்ட ஒரு கலைப்படைப்பாகும். இப்பொழுது இச் சிலையானது தாய்லாந்து அரும்பொருளத்தில் காணப்படுகின்றது. 1936 ஆம் ஆண்டில் வல்லிபுரம் விஷ்ணு கோவிலின் உட்பிரகாரத்தின் தென்மேற்கு நிலப்பரப்பினைக் கனரக இயந்திரத்தினால் சமதரையாகச் சீர்செய்யும்போது தங்கத்தினால் செய்யப்பட்ட தாமரை மலர்களுடன் ஒரு பொன்னேட்டுச் சாசனமும், பௌத்த வழிபாட்டுப் பொருட்களும் கிடைத்திருந்தமையானது வல்லிபுரத்தின் தொல்லியல் முக்கியத்துவத்தினைக் கோடிட்டுக் காட்டியது. **புலோலி இராசா** என்பவர் இக்கோயிலை நிர்வகித்திருந்த காலத்திலேயே இப் பொன்னேடு கிடைத்திருந்தது. பிராமி வரிவடிவில் **ஆந்திரமாகதி** மொழியில் இப்பொன்னேடு பொறிக்கப்பட்டிருப்பதாக செ. பரணவிதானா அவர்கள் தவிர்ந்த பெரும்பாலான தொல்லியலாளர்கள் கருதுகின்றனர். செ.பரணவிதானாவின் ஆய்வுமுடிவின்படி வல்லிபுரப் பொன்னேட்டுச் சாசனமானது **சிங்களப் பிராகிருத** மொழியில் பிராமி வரி வடிவில் முதலாம் வசபன் என்ற மன்னனின் ஆட்சிக்காலத்தில் நாக தீபத்தினை நிர்வகித்திருந்த **இஸ்சுக்கிரிய** என்பவனின் பரிபாலனத்தில் **திஸ விகாரை** கட்டுவிக்கப்பட்ட செய்தியைத் தருகின்றது என்பதாகும். பிராமி வரி வடிவம் தரும் வாசகம் தொடர்பாக பெரும் சர்ச்சைக்குள்ளான இப் பொன்னேடு இப்பொழுது கொழும்பி லுள்ள தேசிய அரும்பொருளகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காவிரிப் பூம்பட்டினத்திலிருந்து நேர் தெற்கே 236 காதம் தொலைவில் நீண்ட நெடுமணல் குன்றங்களுள் அமைந்த ஒரு மையமே வல்லிபுரமாகும். வல்லிபுரம் என்ற மையத்தின் இடப்பெயர்த் தோற்றம் தொடர்பாக சுவாமி ஞானப்பிரகாசர், பரணவிதான, போல் இ. பீரிஸ் போன்றோர் பாளி மொழி வழிவந்த செல்வாக்கினை எடுத்து முன்வைத்துள்ள போதிலும், தக்ஷகூஷிண கைலாய புராணத்தில் இடம்பெறும் வல்லிபுர மான்மியம் வல்லிபுரம் பற்றித் தனித்துவமான ஐதீகமொன்றினைத் தருவதாக உள்ளது. இப்புராணம் கி.பி. 15 - 17 ஆம் நூற்றாண்டுகளுக்கிடையில் எழுதப்பட்டதாகக் கொள்ளப் படுகின்றது. இருந்தும் இதற்கும் முற்பட்ட ஒரு காலத்தில் கி.பி. 10 - 11 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சோழர் சாசனமொன்றில் வல்லிபுரம் என்ற சொல் கையாளப்பட்டுள்ளமையை சாசனவியல் வரலாற்றில் காண்கின்றோம். அச்சாசனத்தின் பாடப்பிரதி ஒன்று இங்கே தரப்பட்டுள்ளது. அது பின்வருமாறு: ஸ்வஸ்தி ஸ்ரீ அருளிச் - செயல்

வானவநாட்டு பச்சாற்றுப் போக்கு
களக்காடான சொழகுல வல்லிபுரத்து
நயினார் புரவேரி சுவாமி உடைய நயினார்க்கு உச்ச சந்தி பூசை
உடன்கூட்டி அமுதுபடி குறுணி.
ஆக நடக்கக் கற்பித்து தேவதானம் ஆக
விட்டுக் கொடுத்த நிலம் களக்காடு தானப்பற்றில்
ஆண்டான் குளம் ஆளுங் கண்ணாறு...

“காமன் ஐயப்பன் எழுத்து” (வானவநாட்டு வல்லிபுரக் கல்வெட்டு: களக்காடு பெருமாள் கோயில் வடக்குச் சுவரில் உள்ளது.)

சேர நாட்டிலுள்ள வானவநாட்டு களக்காடு ஸ்ரீ விஷ்ணு நாராயண சுவாமி கோவில் அமைந்துள்ள மையம் வல்லிபுரம் நாராயணசுவாமி - கோயில் என அழைக்கப்பட்டு வந்த இச்செய்தியைப் பின்னணியாகக் கொண்டு பார்க்கும்போது எமது வல்லிபுர ஆழ்வார்

சொன்னால் இறந்து விடுவாய் என எச்சரிக்கை செய்து அவனை வெளியே அனுப்பி வைத்தனர்". இதுவே இப் பிரதேசத்துடன் இணைத்துக் கூறப்பட்டுவரும் ஐதீகமாகும். இதன் அடிப்படையாகத் தோன்றியதே "மாயக் குகை" என்ற இரட்டைப் பதமாகும். பின்பு அது மாயக்கை என மருவி வழங்குகின்றதென்பர்.

வரலாற்றுக்கு முற்பட்ட கால இலங்கையின் கற்கால ஆய்வுகள் இன்னும் ஒரு முடிந்த முடிபானவையாகக் காணப்படாதன் காரணமாகவே தொல்லியலில் ஆய்வாளர்கள் மத்தியில் இன்றும் இலங்கையின் கற்காலம் பற்றி முரண்பாடான பல கருத்துக்கள் நிலவிக் கொண்டிருப்பதனைக் காண முடிகிறது. இலங்கையில் முதன்முதலாகக் கற்காலக் கலாச்சாரம் பற்றிய ஆய்வினைத் தொடக்கிய "போல்" என்பவர் தொடங்கி சிரான் - தெரணியாகல வரைக்குமுள்ள தொல்லியல் ஆய்வாளர் மத்தியிலே இலங்கையில் ஒரு "கற்காலம்" இருந்தது என்பதற்கான பொதுமையான ஓர் உடன்பாடு காணப்பட்டபோதும், அது எத்தகைய ஒரு வகையைக் கொண்டிருந்தது என்பதில்கூட முரண்பாடான கருத்துக்களே அதிகம் காணப்பட்டன. இத்தகைய ஒரு நிலையில், தென்னிந்திய வரலாற்றுப் போக்கின் பாதிப்புக்குட்பட்ட ஒரு பாகமாகவே இலங்கை அமைந்தமை காரணமாக, இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட கால வரலாறு பொறுத்து தென்னிந்தியாவில் கையாளப்பட்ட அதே அளவீடுகளையே இங்கும் தொல்லியலாளர் உபயோகித்தனர். இவ்வாறான ஒரு பின்னணியில் இலங்கையின் கற்காலம் பற்றி ஆராய்ந்த ஒரு சிலர், இலங்கையில் "பழைய கற்காலம்" இருந்திருக்கலாம் என்ற கருத்தினை முன்வைத்த போதிலும் அதற்குரிய சான்றுகள் முழுமையாகக் கிடைக்கப் பெறாமையால் பின்வந்த தொல்லியலாளரினால் இக்கருத்து மறுக்கப்பட்டது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இதுவரையில் ஒரு "கற்காலம்" எனக் குறிப்பிடப்படும் காலப் பிரிவு இருந்ததற்கான ஆதாரங்களை எவரும் போதிய சான்றுகளுடன் எடுத்து முன்வைக்கவில்லை என்பதே இங்கு முக்கியமான அம்சமாக அமைகின்றது. அவ்வகையில் மாயக்கையில் இருந்து சேகரிக்கப்பட்ட இக் கற்கருவிகளை அடிப்படையாகக்கொண்டு யாழ்ப்பாணக் குடாநாட்டின் "கற்கால வரலாற்றினை" ஆராய முடியும் என்பது உள்நாட்டு - வெளிநாட்டு ஆய்வாளர்களது நம்பிக்கையாகும்.

**வல்லிபுரமும் தொல்லியல் ஆய்வுகளும்**

வடமராட்சியிலுள்ள மிகப் பிரசித்தம் வாய்ந்த தொல்லியல் மையங்களுள் வல்லிபுரம் முக்கியமானதாகும். கி.பி. 14ஆம் நூற்றாண்டில் சிங்கள மொழியில் எழுதப்பெற்ற



நம்பொத்த என்ற நூலில் வல்லிபுரம் குறிப்பிடப் பட்டிருப்பதனைக் காணமுடிகின்றது. கி.பி. 17ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட தக்ஷெணகைலாய புராணத்தில் வல்லிபுர மான்மியச் சருக்கத்தில் வல்லிபுரத்தில் கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ மகா விஷ்ணுவின் அவதாரக் கதை சொல்லப்பட்டுள்ளது. கிழமை நாட்களில் வரும் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் இவ்விஷ்ணு ஆலயத்தில் விசேட தினங்களாகக் கொள்ளப்பட்டு அலங்காரத் தீப - ஆராதனைகள் நிகழ்த்தப்பட்டு வருகின்ற பின்னணியில் சூரிய வழிபாட்டு மரபொன்றின் தொடர்ச்சியே (Sun Disk Worship) பின்னர் விஷ்ணு சக்கர வழிபாட்டு மரபாக மாற்றமடைந் திருக்க வேண்டும் என பேராசிரியர் வேலுப்பிள்ளை கருதுகின்றார். கி.பி. 10ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் இம்மையம் மகாயான

பௌத்தத்திற்குரிய ஒரு தளமாகக் காணப்பட்டது என்பதனை இம் மையத்தில் நிகழ்த்தப் பட்ட தொல்லியல் கண்டுபிடிப்புக்கள் உறுதிப் படுத்தியுள்ளன. இங்கு கண்டுபிடிக்கப்பட்ட நிற்கின்ற நிலையிலுள்ள புத்தர் சிலையானது அமராவதிக் கலைமரபில் உருவாக்கப்பட்ட ஒரு கலைப்படைப்பாகும். இப்பொழுது இச் சிலையானது தாய்லாந்து அரும்பொருளத்தில் காணப்படுகின்றது. 1936 ஆம் ஆண்டில் வல்லிபுரம் விஷ்ணு கோவிலின் உட்பிரகாரத்தின் தென்மேற்கு நிலப்பரப்பினைக் கனரக இயந்திரத்தினால் சமதரையாகச் சீர்செய்யும்போது தங்கத்தினால் செய்யப்பட்ட தாமரை மலர்களுடன் ஒரு பொன்னேட்டுச் சாசனமும், பௌத்த வழிபாட்டுப் பொருட்களும் கிடைத்திருந்தமையானது வல்லிபுரத்தின் தொல்லியல் முக்கியத்துவத்தினைக் கோடிட்டுக் காட்டியது. புலோலி இராசா என்பவர் இக்கோயிலை நிர்வகித்திருந்த காலத்திலேயே இப் பொன்னேடு கிடைத்திருந்தது. பிராமி வரிவடிவில் **ஆந்திரமாகதி** மொழியில் இப்பொன்னேடு பொறிக்கப்பட்டிருப்பதாக செ. பரணவிதானா அவர்கள் தவிர்ந்த பெரும்பாலான தொல்லியலாளர்கள் கருதுகின்றனர். செ.பரணவிதானாவின் ஆய்வுமுடிவின்படி வல்லிபுரப் பொன்னேட்டுச் சாசனமானது **சிங்களப் பிராகிருத** மொழியில் பிராமி வரி வடிவில் முதலாம் வசபன் என்ற மன்னனின் ஆட்சிக்காலத்தில் நாக தீபத்தினை நிர்வகித்திருந்த **இஸ்சுக்கிரிய** என்பவனின் பரிபாலனத்தில் **திஸ விகாரை** கட்டுவிக்கப்பட்ட செய்தியைத் தருகின்றது என்பதாகும். பிராமி வரி வடிவம் தரும் வாசகம் தொடர்பாக பெரும் சர்ச்சைக்குள்ளான இப் பொன்னேடு இப்பொழுது கொழும்பி லுள்ள தேசிய அரும்பொருளகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காவிரிப் பூம்பட்டினத்திலிருந்து நேர் தெற்கே 236 காதம் தொலைவில் நீண்ட நெடுமணல் குன்றங்களுள் அமைந்த ஒரு மையமே வல்லிபுரமாகும். வல்லிபுரம் என்ற மையத்தின் இடப்பெயர்த் தோற்றம் தொடர்பாக சுவாமி ஞானப்பிரகாசர், பரணவிதான, போல் இ. பீரிஸ் போன்றோர் பாளி மொழி வழிவந்த செல்வாக்கினை எடுத்து முன்வைத்துள்ள போதிலும், தக்ஷிண கைலாய புராணத்தில் இடம்பெறும் வல்லிபுர மான்மியம் வல்லிபுரம் பற்றித் தனித்துவமான ஐதீகமொன்றினைத் தருவதாக உள்ளது. இப்புராணம் கி.பி. 15 - 17 ஆம் நூற்றாண்டுகளுக்கிடையில் எழுதப்பட்டதாகக் கொள்ளப் படுகின்றது. இருந்தும் இதற்கும் முற்பட்ட ஒரு காலத்தில் கி.பி. 10 - 11 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சோழர் சாசனமொன்றில் வல்லிபுரம் என்ற சொல் கையாளப்பட்டுள்ளமையை சாசனவியல் வரலாற்றில் காண்கின்றோம். அச்சாசனத்தின் பாடப்பிரதி ஒன்று இங்கே தரப்பட்டுள்ளது. அது பின்வருமாறு: ஸ்வஸ்தி ஸ்ரீ அருளிச் - செயல்

வானவநாட்டு பச்சாற்றுப் போக்கு
களக்காடான சொழகுல வல்லிபுரத்து
நயினார் புரவேரி சுவாமி உடைய நயினார்க்கு உச்ச சந்தி பூசை
உடன்கூட்டி அமுதுபடி குறுணி.
ஆக நடக்கக் கற்பித்து தேவதானம் ஆக
விட்டுக் கொடுத்த நிலம் களக்காடு தானப்பற்றில்
ஆண்டான் குளம் ஆளுங் கண்ணாறு...

"காமன் ஐயப்பன் எழுத்து" (வானவநாட்டு வல்லிபுரக் கல்வெட்டு: களக்காடு பெருமாள் கோயில் வடக்குச் சுவரில் உள்ளது.)

சேர நாட்டிலுள்ள வானவநாட்டு களக்காடு ஸ்ரீ விஷ்ணு நாராயண சுவாமி கோவில் அமைந்துள்ள மையம் வல்லிபுரம் நாராயணசுவாமி - கோயில் என அழைக்கப்பட்டு வந்த இச்செய்தியைப் பின்னணியாகக் கொண்டு பார்க்கும்போது எமது வல்லிபுர ஆழ்வார்

விஷ்ணு கோவில் அமைந்துள்ள பிரதேசத்தின் பண்பாட்டுச் செல்வாக்கிற்கு **பாளி - பௌத்த பண்பாட்டுப் பாரம்பரியத்தினை அதன் தொடக்கமாகக் கொள்ள வேண்டிய அவசியம்** இல்லை என்பதனை மட்டும் அவதானிக்க முடிகிறது. **களக்காடு / களபூமி / களவோடை / களமேடு / களத்திட்டு** என வட புல இலங்கையிலுள்ள பல கிராமங்களுக்கு இன்றுவரை அவற்றுக்கான பெயர்களாக அழைக்கப்பட்டு வருவதனையொப்ப, **வல்லிபுரம்** என்ற பெயரும் காணிப்பெயராக, குறிச்சிப் பெயராக, இடப்பெயராக நீண்டநெடுங்காலமாக வழங்கப்பபெற்று வருவதனையும் காணமுடிகிறது. **அவ்வகையான ஒரு மையத்தில் வேரூன்றி, வளர்ச்சிபெற்றுக் காணப்பட்டிருந்த திராவிடப் பௌத்தப் பள்ளி வளாகப் பாரம்பரியச் சூழலில் பொறிக்கப்பட்டுக் கிடைத்த இப்பொற்சாசன வாசகம் தரும் மொழி வழி உணர்த்தப்பட வேண்டிய செய்தி பிற்சந்ததியினருக்குச் சரியான முறையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதா என்பதனையிட்டும் எதிர்காலத்தில் ஆராய வேண்டிய பொறுப்பு எமக்கு உள்ளது.**

**யாழ்ப்பாணத் தொல்லியற் கழகமும் வல்லிபுரமும்**

வல்லிபுரத்திலுள்ள தாழிக் காட்டினைத் தேடி யாழ்ப்பாணத் தொல்லியற் கழகம் 1972 ஆம் ஆண்டில் ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டிருந்தமையினைப் **பூர்வகலா** என்ற **யாழ்ப்பாணத் தொல்லியற் கழகச் சஞ்சிகை** குறிப்பிடுவதனைக் காண முடிகின்றது. இக்கழகம் பேராசிரியர் களான வீ. சிவசாமி, கா. இந்திரபாலா, ஆ. வேலுப்பிள்ளை போன்ற கல்விமான்களுடன் ஆ.சிவனேசச்செல்வன், ஆ.தேவராசன் மற்றும் சிங்களத் தொல்லியலாளர்களும் அங்கத்துவம் பெற்றிருந்த வகையில் ஆய்வுகளில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. மறைந்த அமரர் பேராசிரியர் வீ. சிவசாமி வல்லிபுரப் பரப்பிலிருந்து பல்வகையான நாணயங்களைச் சேகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இதுவரையில் 1000 இற்கும் மேற்பட்ட நாணயங்கள் வல்லிபுரப் பரப்பிலிருந்து சேகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. **'சிங்கை நகரைத்தேடி'** என்ற தலைப்பில் தொடர் கட்டுரையாக வல்லிபுரம் பற்றிய தனது ஆராய்ச்சிக் குறிப்புக்களை ஈழநாடு பத்திரிகையில் 1970களில் ஆ. தேவராசன் எழுதி வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. ஒரு சிறிய முதுமக்கட்தாழி விஷ்ணு கோவிலின் வெளிவீதியின் வடமேற்கு மூலையில் காணப்பட்ட மணற்கும்பியின் அடித்தளத்திலிருந்து அகழ்ந்தெடுக்கப்பட்டதாக **பூர்வகலா** என்ற தொல்லியற் சஞ்சிகையில் குறிப்பிடப்பட்டுள்ளமை இம்மையத்தின் தொல்லியல் முக்கியத்துவத்தினை வெளிப்படுத்தியுள்ளது.

1980, 1985, 2000 ஆம் ஆண்டுகளில் பேராசிரியர்களான சி.க.சிற்றம்பலம், பொ. ரகுபதி, செ. கிருஷ்ணராசா ஆகியோர் வல்லிபுரத்தின் மீதான ஆய்வுகளை மேற்கொண்டு பெருங் கற்காலப் பண்பாடு தொடர்பாகவும் வாணிப நடவடிக்கைகளுடாகக் கிடைத்த நாணயங்கள் தொடர்பாகவும் ஆராய்ந்ததோடு, வல்லிபுரத்தின் சடப்பொருட் பண்பாடு தொடர்பான புதிய சான்றுகளையும் பெற்றுக்கொண்டிருந்தமை இங்கே குறிப்பிடத்தக்கதாகும். புலோலி, பல்லப்பை, ஆனைவிழுந்தான் சந்தி ஆகிய பரப்புக்களை உள்ளடக்கி மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் மேலாய்வுகளின்போது சுடுமண் வளையக்கிணறு (பெருங்கற்காலம்), கருங் கல்லினாலான புத்தருடைய தலை (பல்லவர் காலம்) ஆகியன கிடைத்துள்ளன. 01-08-1993 திகதிக்குரிய வீரகேசரி வார வெளியீட்டில் வல்லிபுரம் பற்றிய எனது ஆய்வுக் கட்டுரை ஒன்று **வல்லிபுரத்தில் விஷ்ணு வழிபாடும் தமிழ்ப் பௌத்த மரபும் இணைந்த தனித்துவமான வழிபாடு** என்ற தலைப்பில் வெளியாகியிருக்கின்றது. இக் கட்டுரையில் வல்லிபுரத்தின் பண்பாட்டுப் பின்னணி மிகத் தெளிவாக எடுத்துக்கூறப்பட்டுள்ளது.



2015ஆம் ஆண்டின் பின்னர் வல்லிபுரக் கோயிலின் கட்டடப் புனருத்தாரண வேலைகளின் போது, தற்போது அமைக்கப் பட்டுள்ள நவக்கிரகங்களின் வழிபாட்டு மையத்தின் அடித்தளத்தி லிருந்து வெளிவந்த ஏராளமான புராதனகாலக் கூரையோடுகள் இக்கோவிலின் அடித்தளம் கொண்டிருந்திருக்கக்கூடிய தொல்பொருட்களை இனம் காட்டியுள்ளன. இதனைவிட மிக முக்கியமான தொல்லியற் செய்தி என்னவென்றால் வல்லிபுரக் கோவிலின் முகப்பிலுள்ள இராஜகோபுரம் அமைக்கப்பட்டபொழுது ஆயிரக்கணக்கான பல்வேறுபட்ட வடிவங்களைத் தாங்கியிருந்த நாகக்கற்கள் (கருங்கல்லால் ஆனவை - அவை இதுவரை காலமும் அடியவர்களால் நேர்த்தியின் பொருட்டு செய்விக்கப்பட்டு அங்கு வழிபாட்டில் வைக்கப்பட்டவை ) அதன் மணற்கண்டமான அடித்தளத்திற்கு உரமாக இடப்பட்ட செய்தியையும் இங்கு பதிவு செய்ய வேண்டியுள்ளது. இந்நாகக் கற்கள் சிலவற்றில் பழந்தமிழ் மற்றும் பிராமி எழுத்துக்களும் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவ்வகையில் எதிர்காலத் தொல்லியல் ஆய்வுகள் இத்தலத்தின் பண்பாட்டுப் பரப்பினை இனம் காண்பதற்கு எவ்வாறு அமையவேண்டும் - அங்குள்ள தொல்பொருட்களை வெளிக் கொண்டு வருவதற்கு எவ்வாறு உதவ வேண்டும் என்பதே எதிர்காலத்திற்கான எமது வினாவாக உள்ளது.

**நாகர் கோயில் மீதான தொல்லியல் ஆய்வுகளும் எதிர்காலமும்**

வடமராட்சியின் இரண்டாவது மிக முக்கியமான தொல்லியல் மையமாக விளங்குவது நாகர்கோயிற் பரப்பாகும். கௌத்தன் துறைமுகத்துடன் இணைந்த வகையில் காணப்படும் நாகர் கோயிற் பரப்பானது பண்பாட்டடிப்படையில் மிகவும் தனித்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. கொட்றிங்டன் என்பவர் The Coins and Currency of Ceylon என்ற தனது நூலில் நாகர் கோவிற் பிரதேசத்திலிருந்து கண்டுபிடிக்கப் பெற்ற பல்வேறு வகையான நாணயங்கள் தொடர்பாக விளக்கியுள்ளார். கி. மு. 6ஆம் நூற்றாண்டுக் குரிய அச்சுக் குத்தப்பட்ட நாணய வகையிலிருந்து ஆங்கிலேயர் களது நாணயங்கள் வரைக்கும் இங்கு கண்டெடுக்கப் பட்டவை யாவும் இக்குறிப்பிட்ட நூலில் விபரிக்கப் பட்டுள்ளன. பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை இலங்கைத் தமிழர் வாழ்வும் வளமும் என்ற தனது நூலில் நாகர் கோயில் பண்பாட்டுச் சிறப்புக்களை எல்லாம் விபரித்துள்ளார். குறிப்பாக கப்பற் திருவிழாவின் பண்பாட்டுச் சிறப்பினை நன்கு விபரித்துள்ளார். வட இலங்கையில் நாகர் வம்சமொன்றின் ஆட்சியும் பாளி மொழியில் நகதிவ என்று அழைக்கப்பட்ட நாகதீவும் வரலாற்றில் பதியப்படுவதற்கு நாகர் கோயிற் பண்பாட்டுச் சூழலே காரணமாக அமைந்தது. நாகர் என்ற இன அடையாளத்திற்கும் நாக வழிபாட்டிற்கு மிடையே வேறுபாட்டினைக் காணமுடியாத எமது வரலாற்றாசிரியர்களும் தொல்லியலாளர் களும் பல்வேறு ஆய்வுக்கட்டுரைகளை நாகர் கோயில் தொடர்பாகத் தந்திருப்பதனைக் காண்கின்றோம்.



**அம்பன், குடத்தனை, நாகர் கோயில் உள்ளிட்ட வடமராட்சி – கிழக்குப் பிராந்தியமும் ஆதித் திராவிடர் குடியிருப்புக்களும்**

அண்மைக் காலங்களில் நாகர் கோயிற் பரப்பிலுள்ள கருமணற்பிட்டிப் பரப்பிலிருந்தும் கௌத்தன் துறைமுகப் பரப்பிலிருந்தும் மீட்டெடுக்கப்பட்ட பெருங்கற்கால மட்கலசங்களும், கறுப்பு, சிவப்பு மட்பாண்ட ஓடுகளும், அச்சுக்குத்தப்பட்ட நாணயங்களும், ஓலை ஏடுகளும், புராதன அகல்விளக்குகளும், செம்பினாலான புராதன அகல்விளக்குகளும், இத்தகைய ஒரு தொன்மை வாய்ந்த பிராந்தியத்தின் பண்பாட்டுப் படிமங்களைத் தெளிவாக வெளிப்படுத்துவனவாக உள்ளன. கருமணற்பிட்டிப் பரப்பிலிருந்து வீ. கனகராசாவினால் சேகரிக்கப்பட்ட பல முனையுள்ள (A pot with multi spout) (கேற்றல் முனைகள் கொண்ட மட்பாண்டக் கலசம்) பெருங்கற்கால மட்கலசம் ஒன்று மூடியுடன் கிடைத்திருப்பது மிக முக்கியத்துவம் வாய்ந்த தொல்லியல் சான்றாகவுள்ளது. இப்பல முனை உள்ள கலசமானது பெருங்கற்காலச் சவஅடக்கமுறையின் சடங்காசார முறைகளுக்காக, குறிப்பாக தூபமிடுவதற்கான ஒரு கலசமாகப் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறான ஒரு வழிபாட்டு முறை நாகர் கோயிற் பரப்பில் வாழ்ந்த பெருங்கற் பண்பாட்டு மக்களால் பின்பற்றப்பட்டிருந்தது என்பதனைக் காணும்போது வடமராட்சி கிழக்குப் பிராந்தியம் தனித்துவமான பண்பாட்டுப் பகைப்புலத்தினைக்கொண்டு அமைந்தமையை உறுதிப் படுத்திக்கொள்ள முடிகிறது. (பல முனையுள்ள இதே மாதிரியிலான செம்புக் கலசமொன்று வண்ணார்பண்ணைப் பிரதேசத்திலிருந்து சேகரிக்கப்பட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெள்ளிவிழாக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்ட நிகழ்வினூடாக நாகர் கோயிற் பரப்பில் காணப்பட்ட அப் பண்பாட்டுத் தொடர்ச்சியொன்றின் நீட்சியினைத் தற்காலத்திலும் உறுதிப்படுத்திக்கொள்ளக்கூடியதாக இருந்தது.)

அம்பன், குடத்தனை, குடாரப்பு போன்ற கிராமக் குடியிருப்புகள் தென்கிழக்காசிய வாணிபத் தொடர்புகளினூடே உள்வாங்கிய பண்பாட்டு மூலங்களைத் தம்மகத்தே கொண்டு விளங்குகின்றன. சிறப்பாக அம்பன் என்ற கிராமம் போர்த்துக்கீசரது பொருளாதார பண்பாட்டு நடவடிக்கைகளுக்குட்பட்ட வகையில் கி.பி. 17ஆம் நூற்றாண்டில் மலேசியாவில் உள்ள அம்பன் என்ற குடியேற்றப் பிரதேசத்துடன் இணைப்பு நடவடிக்கைகள் பலவற்றுடன் தொடர்புபடுத்தப்பட்டிருந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. போர்த்துக்கேய - ஒல்லாந்த நாணயங்கள் ஏராளமாக இக்கிராமத்தில் கிடைப்பதும் நோக்கத்தக்கது. இக்கிராமத்திலுள்ள மாட்டு வண்டில்களுக்கெல்லாம் போர்த்துக்கேய - ஒல்லாந்த நாணயங்களைப் பயன்படுத்திப் பல்வேறு அலங்கார வேலைகளை ஏற்படுத்தியிருந்துள்ளமையை மிக அண்மைக்காலம் வரைக்கும் கண்டுகொள்ள முடிந்தது. இவ்வாறான பண்பாட்டு வெளிப்பாட்டுக்குரிய சிறப்பான காரணிகள் தென்கிழக்காசிய நாடுகளுடன் இப்பிராந்தியம் கொண்டிருந்த வாணிபப் பண்பாட்டுத் தொடர்புகளேயாகும். வரலாற்றுப் புகழ்பெற்ற நாகர் கோயிலில் வருடாவருடம் கொண்டாடப்படும் கப்பற் திருவிழாவும் இப்பண்பாட்டு பரிமாற்றத்தினையே வெளிப்படுத்தி நிற்கின்றதெனலாம்.

நாகர் கோயிலிலிருந்து வடக்கேயுள்ள கௌத்தன் துறையானது பலதரப்பட்ட தொல்லியல் மூலங்களை வெளிப்படுத்தியுள்ள ஒரு மையம் என்பதும் குறிப்பிடத்தக்கது. மிகவும் அண்மைக் காலத்தில் அத்துறைப் பரப்பில் கிணறு ஒன்றினை அமைப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டபோது அங்கு சோழர்காலப் பரப்பிற்குரிய புராதன கிணறு ஒன்று புதிதாகக் கிணறு தோண்டும்போது கண்டுபிடிக்கப்பட்டது. கிணற்றுக்குள் வந்த அந்த கிணறு சுட்ட

செங்கட்டிகளினால் அமைக்கப்பட்டிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது (வல்லிபுரத்திற் கண்மையில் ஆனைவிழுந்தான் சந்திக்கு அண்மித்ததாக கிழக்காக உள்ள மணற்பரப்பில் புராதன கிணறு ஒன்றினது சுடுமண் வளையங்களை இக்கட்டுரையாசிரியர் கண்டு பிடித்திருந்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது) எனவே பெருங்கற்காலப் பரப்பில் இங்கு வாழ்ந்த வேளாண் சமூகத்தினர் தமது பயிர்ச்செய்கைத் தொழிலுக்குத் தேவையான நீர்த் தேவையைக் கிணறுகள் வாயிலாகவே பெற்று பூர்த்தி செய்திருந்தனர் என்பதும் தெளிவாகின்றது. இன்றைய நிலையில் வடமராட்சி கிழக்குப் பிராந்திய மக்கள் 'துரவு' களை அமைத்து அவற்றிலிருந்து பாசனத்திற்கான நீர்வளத்தினைப் பெற்றுக்கொள்கின் றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. இப்பிராந்தியத்தில் எங்கும் நன்னீர் ஊற்றுக்களே பரந்திருப்பதனால் புராதன காலக்குடியிருப்புக்கள் மிகவும் நெருக்கமாகக் காணப்பட்டிருக்க வேண்டும்.

இங்கு மண்டலாய் பிள்ளையார், துளாயிற் பிள்ளையார் எனப் புராதன பிள்ளையார் கோயில்கள் பலவுண்டு. மண்டலாய் என்பது இந்தோனேசியாவிலுள்ள பிரதானமானதொரு பௌத்த மையம் என்பது தெளிவு. 'துளாய்' அல்லது 'தளாதாய்' என்ற மையம் வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தை மருவிய வகையில் பருத்தித்துறைக்கு மேற்குப் புறமாகக் காணப்படும் ஒரு பழமையான மையமாகும். இவை நெல்லுற்பத்திப் பண்பாட்டுடன் நெருங்கிய தொடர் புடையவையாகக் காணப்படுகின்றன. தென்கிழக்காசியாவிலேயே காலத்தால் முற்பட்ட நெற்பயிர்ச் செய்கை முறை ஆரம்பிக்கப்பட்டிருந்தது என்பதனை தற்கால அகழ்வாராய்ச்சி முடிபுகள் நிரூபணம் செய்கின்றன. எனவே மண்டலாய் பிள்ளையார், கோவிலின் அமைவு கூட அத்தகைய ஒரு நெல் உற்பத்திப் பண்பாட்டுடன் இணைக்கப்பட்ட வகையில் வடமராட்சி கிழக்குப் பிராந்தியத்திற்கும், தென்கிழக்காசியாவிற்கும் இடையே இருந்த உறவினால் வருகைதந்த ஒரு பண்பாட்டு விழுமியமாக அமைந்திருக்க வேண்டும். கி. பி. நான்காம் நூற்றாண்டு வரைக்கும் பெருங்கற் பண்பாடும் பௌத்தமும் தென்கிழக்காசிய நாடுகளில் வேரூன்றியிருந்தமையை இந்தியத் தொல்லியலாளர் சுட்டிக்காட்டுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. மணிமேகலை என்ற தமிழ்க்காப்பியம் பெருங்கற் பண்பாட்டினையும், பௌத்தத்தினையும் சுமாத்திரா - யாவா ஆகிய தீவுகளை மையமாகக்கொண்டு இணைத்து தனித்துவமான பண்பாட்டுக் காப்பியமாக வளர்ச்சி பெற்றிருந்தமையை நாம் மறந்துவிடக்கூடாது.

### தொண்டமானாற்றுப் பள்ளத்தாக்கில் தொல்லியல் ஆய்வுகள்

தொண்டமானாறு வடிகாற்பரப்பானது யாழ்ப்பாணக் குடாநாட்டின் வரலாற்றுக்கு முற்பட்டகால, மற்றும் வரலாற்றுக்கால வணிக - பண்பாட்டு வழிகளைக் கட்டுப்படுத்தி யிருந்த ஒரு பிரதான பௌதீக நிலவுறுப்பாகும். இப்பிரதான பௌதீக நிலவுறுப்பின் உருவாக்கமும், மக்கள் வாழ்வின் மீதான அதன் செல்வாக்கும் உரியமுறையில் இன்னும் ஆராயப்படாததன் காரணத்தினால், குடாநாட்டின் மீதான அதன் தொல்லியல் மற்றும் அதன் பண்பாட்டுச் செல்வாக்குப் படிமங்கள் தெளிவுபடுத்தப்படவில்லை. எமக்கு மிகக் கிட்டிய அண்மைக் காலத்தில் அதாவது ஒல்லாந்தரது ஆட்சிக்காலத்தில் தொண்டமானாற்று நீர் வழியானது பொருளாதார நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டு வந்திருந்தமை யினையும் இக் கடனீரேரியின் உவர்த்தன்மை மீட்கப்பட்டு, பயிர்ச்செய்கைக்குட்படுத்தப் பட்டது என்பதனை ஒல்லாந்தரது பதிவுகள் உறுதிப்படுத்துகின்றன. தொண்டமானாறு கடல் முகப்பிலிருந்து நாகர் கோவில் - மணற்காடு வரைக்கும் ஒல்லாந்தரது நீர்வழிப்

படகுப் போக்குவரத்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, உள்நாட்டு சந்தை நடவடிக்கைகளுக்கான தொடர்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. டச்சு றோட்டுக்கள் எனத் தற்காலத்தில் அழைக்கப்படும் பிரதான வீதிகளின் புராதன வடிவங்கள் ஒல்லாந்தரால் இங்கு முதன் முதலில் உபயோகிக்கப்பட்டவை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. தென்மராட்சியிலிருந்தும் வடமராட்சியிலிருந்தும் வரும் டச்சு றோட்டுக்கள் தொண்டைமானாறு நீர் வழியுடன் இணைக்கப்பட்டிருப்பதனையும், இவ்வாறு இணைக்கப்பட்ட நீர் - நில வழிகள் முள்ளிக் குளத்தினூடாக பழைய வட்டக்கச்சிப் பிரதேசத்தினை ஊடறுத்துச் சென்று இரணைமடுக் குளத்திற்கும் கிழக்காகவுள்ள இராமநாதபுரத்தினூடாக பழைய முறுகண்டிப் பாதையைச் சென்றடைவதனை இன்றும் காணலாம். மன்னாரிலிருந்தும் ஒட்டுசுட்டானிலிருந்தும் கொண்டுவரப்பட்ட மாடுகள், யானைகள் போன்ற மிருகங்களை வரலாற்றுக்கு முற்பட்ட கால மையங்களுக்கும் துறைமுகங்களுக்கும் எடுத்துச்சென்ற பிரதான பாதையாக இது விளங்கியது என்பதனை தொல்லியல் தடயங்கள் விளக்கி நிற்கின்றன. **மண்டான், சோழங்கன் (சோழகங்கன்), சோனப்பு (சோழ உப்புப்புலம்) ஆகிய கிராமங்கள் தொண்டமானாற்று நீர் வழியுடன் இணைக்கப்பட்ட வகையில் சோழப் பெரும் பேரரசு காலத்தில் பொருளாதார நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டமையைத் தொல்லியல் சான்றுகள் உறுதிப்படுத்தியுள்ளன. உப்பு விளைச்சலினால் ஏற்பட்ட ஒரு பண்பாட்டுத் தளமாக தொண்டமானாற்று பள்ளத்தாக்கு மத்தியகால வடமராட்சியின் வரலாற்றில் விளங்கியிருந்மையை எதிர்கால ஆய்வுகள் மூலம் வெளிக்கொணரப்பட வேண்டிய பொறுப்பு எமக்குக் காத்திருக்கின்றது.**

**உடுப்பிட்டிப் பிராந்தியம் : எள்ளங்குளம் – இமையாணன்**

29-04-2001 திகதியிடப்பட்ட உதயன் பத்திரிகையில் **வடமராட்சி எள்ளன்குளம்: பெருங்கற்காலப் பண்பாட்டுத்தளம்** என்ற தலைப்பில் யாழ் - சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் ஏற்பாட்டில், திருநெல்வேலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் நடாத்தப்பட்ட கருத்தரங்கில் என்னால் ஆற்றப்பட்ட உரை பிரசுரமாயிருந்தது. இதுவரையில் தொல்லியல் அடிப்படையில் ஆராயப்படாத தனித்துவமான ஒரு பெருங்கற்காலப் பண்பாட்டுத் தளமாக விளங்கி வருவதே எள்ளன்குளம் என அழைக்கப்படும் எல்லாளன் குளமாகும். கொல்லன் பனையடி என்றவொரு கிராமம் எல்லாளன் குளத்துடன் இணைந்திருப்பது பெருங்கற் காலத்திலிருந்து இரும்பு உலோகக் கைத்தொழில் இப்பிரதேசத்தின் ஜீவனோபாயத்திற்கு வளம் கொடுத்த தொழிலாக இருந்து வந்ததை உறுதிப்படுத்துவதாக உள்ளது. கொல்லன் பனையடிக் கிராமத்திலிருந்து புராதன தாழி ஒன்றும் கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்களுடன் இணைந்த கீச்சுக்கிட்டங்களும் (கழி விரும்பு) கிடைத்துள்ள தன்மையானது உடுப்பிட்டிப் பிராந்தியத்தித் தொன்மையை உறுதிப்படுத்தும் சான்றுகளாகும். இற்றைவரைக்கும் உடுப்பிட்டியின் தொன்மத்தினை வெளிப்படுத்தும் சான்றுகள் பல எமது ஆராய்ச்சி மாணவர்களால் சேகரிக்கப்பட்டு ஆய்வறிக்கையாக பல்கலைக்கழக வரலாற்றுத்துறைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இவ்வூரைச் சேர்ந்த திரு ஆ.அம்பிகைபாகன் அவர்கள் பிராமி வரி வடிவுடன் கூடிய கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்களைச் சேகரித்து ஆய்வுக்காக என்னிடம் ஒப்படைத்துள்ளார். எள்ளங்குளத்திற்கண்மையிலுள்ள கொல்லன் பனையடியில் ஏராளமான கழிவிரும்புகள் (கீச்சுக்கிட்டம் - Iron Slag) இற்றைவரைக்கும் பரந்து காணப்படுகின்றன. இவை பெருங்கற்காலத்தில் வாழ்ந்த விவசாயிகளது இரும்புக் கைத்தொழிலின் தொன்மையைக் காட்டுகின்ற எச்சங்களாகும். எள்ளங்குளத்திலிருந்து தொன்மையான கறுப்புச் சிவப்பு மட்பாண்டங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. மிகவும் அண்மைக் காலங்களில் தொல்லியல் மாணவன் ஒருவர் பிராமி எழுத்துக்களுடன் கூடிய

கறுப்பு சிவப்பு மட்பாண்டங்களை இங்கிருந்து சேகரித்துள்ளார். இப்பண்பாட்டின் தொடர்ச்சியின் வளர்ச்சியாக இமையாணன் என்ற பெயருக்குரிய மையமானது மத்திய காலப்பரப்பில் அதாவது யாழ்ப்பாண இராச்சியப் பரப்பில் வடமராட்சியின் ஒரு கேந்திர நிர்வாக மையமாக வரலாற்றேடுகளில் பதியப்பட்டிருந்தமையைக் காண முடிகின்றது. யாழ்ப்பாண இராச்சிய காலத்தில் இமையாண மாதாக்கன் என்பவன் இப்பகுதியை நிர்வகித்தான் என யாழ்ப்பாண வைபவமாலை குறிப்பிடுகின்றது. எள்ளங்குளம் என்பது எல்லாளன் குளம் என்ற நிலையில் அனுராதபுரத்தினை 44 வருடங்கள் ஆட்சி புரிந்த எல்லாள மன்னனது குடும்பத்தினர் உற்பத்தியான மையமா என்பது எதிர்காலத்தில் ஆராய்ந்தறிய வேண்டிய ஒரு விடயமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

**வடமராட்சியில் சோழர்கால எச்சங்களைக் கொண்ட குடியிருப்புக்களும் பண்பாடும்**

### (1) கோட்டைத்தெரு புளிய மரத்தினைப் பற்றிய ஐதீகம்:

24-04-1994 அன்று வீரகேசரி வாரமலரில் **நீதி விசாரணை மன்றின் தண்டப்பொருள் களின் அடையாளச் சின்னம் கோட்டைத்தெரு புளிய மரம்** என்ற தலைப்பில் எனது கட்டுரை வெளிவந்தமையைத் தொடர்ந்தே வடமராட்சியில் சோழர்கால கிராமக் குடியிருப்புக்கள் தொடர்பான ஆய்வுகள் ஆரம்பமாகியிருந்தன.

கோட்டைத் தெரு புளியமரத்தின் கதை மிகச் சுவாரசியமானது. முன்பொருகாலத்தில் இப்புளியமரத்தடியைக் கொண்ட மையமானது நீதி விசாரணை மன்றமாக தொழிற் பட்டிருந்தது எனவும், காலத்துக்குக் காலம் அம்மன்றில் சேர்ந்த தண்டப் பொருட்களும், தண்டப் பணமும் ஒரு வயோதிப மாதுவினால் பெரியகுடம் ஒன்றினுள் இடப்பட்டு நிலத்தினுள் புதைக்கப்பட்டது எனவும், அப்புதைக்கப்பட்ட இடத்தின் அடையாளமாகவே அம்மாதுவி னால், அப்புளியமரம் நடப்பட்டது எனவும் அங்கு வழங்கும் ஐதீகம் நீண்டு செல்கிறது. அவ்வகையில் கோட்டடியாகத் தொழிற்பட்டமை காரணமாகவே அத்தெரு (அகன்ற வெள்ளவாய்க்கால்) கோட்டுத்தெரு என வழங்கப்பட்டதாகவும், அது பின்னர் கோட்டைத்தெரு என மருவி இன்றுவரை அவ்வாறே வழங்கி வருவதாகவும் எடுத்துக் காட்டப்படுகின்றது.

அம்மரத்தடியில் இருந்து எமக்குக் கிடைத்த மட்பாண்டங்கள் யாவும் பிற்பட்ட சோழர் காலகட்டத்திற்குரியவை என்பதனை வகை மாதிரியிலான (Typology) காலக்கணிப்பீட்டு முறை வெளிப்படுத்தி நிற்கின்றது. சோழர் காலத்திலிருந்தே ஊரின் நடுவேயுள்ள இப் புளியமரத்தடி ஒரு மன்று ஆகத் தொழிற்பட்டு வந்திருக்க வேண்டும் என்பதை கோட்டைத் தெருவில் கிடைத்த இச் சான்றுகள் நன்கு எடுத்து நிரூபிக்கின்றன. கூடவே கிடைத்த நாணயமும் அக்கருத்தினை மேலும் உறுதி செய்யும் சான்றாக அமைவதோடு, இப் பிராந்தியத்துடன் சோழர் கொண்டிருந்த வாணிபத் தொடர்புகள் பற்றி எதிர்காலங்களில் ஆராய்வதற்கு அடிப்படை மூலமாகவும் அமைந்துள்ளன. அவ்வகையில் கோட்டைத்தெரு புளிய மரத்தடி பாதுகாக்கப்படவேண்டிய ஒரு பிரதான தொல்லியல் மையமாகும்.

### (2) வடமராட்சியில் மறைந்துபோன கங்கை கொண்டான் நகரம்

28-12-1986 அன்று வீரகேசரி வாரமலரில் **வடமராட்சிப் பகுதியின் கங்கை கொண்டான் கிராமம்** என்ற தலைப்பில் சோழர் பண்பாட்டுக் கிராமங்கள் வரிசையில் எனது இரண்டாவது கட்டுரை வெளியானது. இந்நிலையிலே வடமராட்சிப் பகுதியிலே காரணவாய்

வடக்கு கொற்றாவத்தையிலே காணப்படுகின்ற கங்கை கொண்டான் கிராமமானது ஏதோ வகையில் பேரரசச்சோழ மரபினருக்கும் அவ்விடத்துக்குமுரிய தொடர்பினை நன்கு எடுத்துக்காட்டுவதாகவே உள்ளது என்பது இடப்பெயர் ஆய்வின் மூலம் தெளிவாகின்றது. அலை அலையாக அமைந்த மண் மேடுகளின் மேல் முதிர்ந்த பனை மரங்களைக் கொண்டிருக்கும் அப்பிரதேசத்தினை மிக ஆழமான வாணிபத்தெருக்கள் சதுர வடிவில் ஒன்றையொன்று ஊடறுத்துச் செல்கின்றன. அவை வல்வெட்டித்துறை நகரையும் பருத்தித்துறை (பெருந்துறை) நகரையும் இணைப்பவையாகக் காணப்படுகின்றன. இக்கிராமத்தின் அயல் கிராமங்களாக பொலிகண்டி, பாலாவி, ஆதித்தியன் புலம் (அயட்டியப்புலம்) என்பன அமைந்துள்ளன. பொலிகண்டியிலே சோழர் காலத்துக்குரிய நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டிருந்தன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. எனவே கங்கை கொண்டான் என்றழைக்கப்படும் இக்கிராமத்திற்கும், இக் குடாநாட்டின் கண் அமைந்து காணப்பட்டிருக்கக்கூடிய சோழர்களது அரசியல் பண்பாட்டு மையங்களுக்குமிடையே மிகவும் நெருக்கமான தொடர்புகள் இருந்திருக்கின்றன - அவை வாணிபப் பெருந் தெருக்களால் கடலுடன் (துறைமுகத்துடன்) ஒன்றினைக்கப்பட்டிருந்தன என்பதனையும் இவ்விடத்திலே நாம் நினைவு கூரவேண்டும்.

**வீராணன் கல் கிராமமும் பெரிய தோட்டமும்**

சோழர்கால வடமராட்சியில் மிகப் பரந்தளவில் பயிர்ச் செய்கையும் நீர்ப்பாசன நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்ட பிரதேசங்களாக வீரணன்கல், பெரியதோட்டம், ஆரியவளவு, பெரியமாவில், சின்னமாவில் என்பன காணப்பட்டிருந்தன. (திருகோணமலை மாவட்டத்திலுள்ள மாவிலாறு சோழர்கால மிக முக்கியமான பயிர்ச்செய்கைத் தளமாக காணப்பட்டமையை ஒத்து வடமராட்சியில் மேற்குறிப்பிடப்பட்ட கிராமங்கள் விவசாய உற்பத்திப் பொருளாதாரத்தில் உயிர்நாடியாக விளங்கியிருந்தன. சோழர்கால சுடு மண்ணாலான குழாய்கள் மிகவும் நீண்டதூரம் மண்ணுக்குள் பொருத்தப்பட்டிருந்த நிலையில் அவை தற்செயலாக இற்றைக்கு நான்கு தசாப்தங்களுக்கு முன்னர் எம்மால் வெளிக்கொணரப்பட்டிருந்தன. வீரணன் கல் என்ற கிராமத்தின் பெயரானது தமிழகத்தி லுள்ள சோழர்களது வீராணம் ஏரியை எமக்கு ஞாபகமூட்டுகின்றது என்பது குறிப்பிடத் தக்கது.

**வியாபாரிமூலை – இன்பருட்டியில் பல்லவர் மரபுகளும் தொல்லியல் எச்சங்களும்**

12-02-1995 அன்று வீரகேசரி வாரமலரில் வியாபாரிமூலை - **இன்பருட்டியில் போத்துக்கீசரின் கலையழிவுக் கொள்கையின் எச்சங்கள்** என்ற தலைப்பில் வடமராட்சியில் காணப்படும் பல்லவப் பண்பாட்டின் தொல்லியல் எச்சங்கள் தொடர்பான அறிமுகமாக எனது கட்டுரை வெளிவந்திருந்தது. இங்குள்ள இன்பர்சிட்டி விநாயகர் கோவிலிலும் அதனோடு இணைந்திருக்கும் மடங்களிலும் காணப்படும் வெண்கலச் சிற்பங்கள், திருவாசிகள், பாவை விளக்குகள் என்பன பல்லவர் காலக் கலைமுறையை வெளிப்படுத்தி நிற்கின்ற வகையில் வியாபாரிமூலைப் பரப்பானது ஒரு தனித்துவமான பண்பாட்டுக் கிராமச் சூழலைத் தந்துகொண்டிருப்பதனைக் காணமுடிகின்றது. கந்த நயினார் என்பவருடைய மடத்திலேயே பல்லவப் பண்பாட்டுக்குரிய கலைப்பொருட்கள் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்தமையை இவ்வாசிரியர் 30 வருடங்கட்கு முன்னர் பதிவு செய்திருந்தார். பித்தளையிலான உலோகத்தில் வார்க்கப்பட்டுள்ள ஒரு சோடி நாகதீப கலசங்கள் பல்லவப் பண்பாட்டின் மூலங்களாகத் திகழ்கின்றன. இதனைவிட பல்லவக்

கலைமரபில் அமைந்த திருவாசியும் வெள்ளி உலோகத்தாலான நீண்ட வேலும் அம் மரபின் சாட்சியங்களாகத் திகழ்கின்றன. இன்பர்சிட்டி என்ற பெயரே பல்லவ மரபினை வெளிப்படுத்துவதாக உள்ளது. காஞ்சி மாவும் வன்னி மரமும் பொலிகை கந்தவனக் கடவை கோவிலுக்கு அடுத்தநிலையில் இன்பர்சிட்டி விநாயகர் கோவிலில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இங்குள்ள தீர்த்தக்கேணியில் இயற்கையாகவே கற்பூரம் விளைவதனை மக்கள் நேரடியாகக் கண்டு எடுத்துப் பயன்படுத்தியுள்ளார்கள். இப்பின்னணியில் ரோமானியத் தொடர்புகளுக்குட்பட்டிருந்த வியாபாரிமூலைப் பரப்பானது கற்பூர வாணிபத்திலும் பிடவை வாணிபத்திலும் சிறந்து விளங்கியிருந்தது என்பதும் பாவைவிளக்குத் தொடர்பான பண்பாட்டு விடயங்கள் இப்பிராந்தியத்துடன் தொடர்புபடுத்தப்படுவதற்கும் ரோமர்களே காரணமாக இருந்துள்ளார்கள் என்பதும் வரலாற்று வெளிச்சத்திற்கு வந்துள்ளது. இத்தகையதொரு வரலாற்றுப் புகழ்பூத்த வியாபாரிமூலை பண்பாட்டுக் கிராமத்தினைப் பாதுகாப்பதற்குரிய நடவடிக்கைகளை எதிர்காலத்தில் மேற்கொள்ளவேண்டிய பொறுப்பும் எம் எல்லோரிடமும் காணப்படுகின்றது.

**முடிவுரை**

வடமராட்சியின் தொல்லியல் மையங்களும் அவற்றின் எதிர்காலமும் என்ற தலைப்பிலான இச்சிறு ஆய்வுக் கட்டுரையானது ஓரளவிற்கு இப்பிராந்தியத்திலுள்ள தொல்லியல் மையங்களை ஒரு தொடக்க நிலையில் இனங் காண்பதற்கு வாசகர்களுக்கும் மாணவர்களுக்கும் உதவும் அதேவேளையில் இன்னும் பல தொல்லியல் மையங்ளை இனங் காண்பதற்கும் இக்கட்டுரையானது ஒரு தொடக்கநிலையாக அமையும். அவுஸ்திரேலிய சிட்னிப் பல்கலைக்கழக தொல்லியல் ஆய்வாளர்கள் 2019 ஆம் ஆண்டில் தம்பசெட்டி யிலுள்ள மாயக்கையில் அகழ்வாய்வில் ஈடுபட்ட ஒரு நிகழ்வே வடமராட்சியில் முதன் முதலாக நிகழ்த்தப்பட்ட தொல்லியல் ஆய்வாகும். எதிர்காலத்தில் இங்குள்ள மாணவர் சமூகம் இத்துறை ஆய்வில் ஈடுபடும்பொழுது எமது தொல்லியல் மையங்கள் பாதுகாக்கப் படுவதோடு வரலாற்று வெளிச்சத்திற்கு அவை கொண்டுவரப்படும் என எதிர்க்க முடியும்.

**இக்கட்டுரையாக்கத்திற்குப் பயன்படுத்தப்பட்ட சில நூல்கள்**


1. சர்மா, R.S., இந்திய நிலமானியமுறை, NCBH வெளியீடு, 2009,சென்னை, பக். 304
2. Thiagarajah, Siva., **Peoples and Cultures of Early Sri Lanka,** A Tamil Information Centre Publication, Greate Britain, p.49
3. Pathmanathan,S., **Hindu Temples in Sri Lanka,** Kumaran Book House, Colombo, 2006, p.36. RajaRajapperunteru was connecting the capital Anuradhapura with Mantai.
4. Mathanakaran,R., 'Geographical Background of Jaffna',Appendix-I in Early Settlement of Jaffna By Ragupathy,P.,1987, p.189
5. கிருஷ்ணராசா, செ., 'வடமராட்சியில் இனங்காணப்பட்ட தொல்லியல் சான்றுகளும் புராதன மையங்களும்', யா∴ வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம் 110 வது ஆண்டு நிறைவு மலர், 2004, பக். 92 - 113
6. Deraniyagala,S., **Prehistoric basis for the rise of Civilization in Sri Lanka and Southern India,** 2004, Chenni, p.4/ **The Prehistory of Sri Lanka**, Part.I., 1992, pp 10-13

7. Deraniyagala,S., **The Prehistory of Sri Lanka** ,Part.I., Colombo, 1992, p37
8. Anparasi,R., **The Cultural Influences of the Dutch in Northern Sri Lanka – A Study.,** unpublished M.A. Thesis, university of Jaffna, 2010, p.71.
9. Discouvery Channal telecasted on the capsion of **Kangeyan cattle market** in Thinnevely as one hour documentary programme.
10. Krishnarajah,S., History of Sri Lanka, part –II,Pirainila publication,2000,p.5
11. Krishnarajah,S., History of Sri Lanka, part –II, Pirainila publication,2000, p.7
12. **Rasanayagam,S., Ancient Jaffna,New Delhi, 1999, p.184**
13. Krishnarajah,S., History of Sri Lanka, part –II,Pirainila publication,2000,p.174
14. **Aeganayagivalli,S.,** ஈழவரலாற்றுப் பதிவுகள், Arrowweb Publishers, Toronto , Canada, 2003,p.162
15. Phillipus, Baldaeus., Temboral Conquest of Ceylon,1959.
16. **Aeganayagivalli,S.,** ஈழவரலாற்றுப் பதிவுகள், Arrowweb Publishers, Toronto , Canada, 2003,p.161




"ஒரு தலைமுறைக்கு
பள்ளியில் என்ன கற்பிக்கிறோமோ,
அதுவே அடுத்த தலைமுறை
சமூகத்தில் பிரதிபலிக்கும்."

**ஆபிரகாம் லிங்கன்**

# கிராமவியல்

# மாயக்கை கிராமம்



**திரு.க.பரஞ்சோதி**
சமாதான நீதவான்
ஓய்வுநிலை கிராம அலுவலகர்.

**பெயர் :-**

மாயக் குகைகள் நிறைந்த இடம் என்பது அர்த்தமாகும். "மாயக்குகை என்பது நாளடைவில் மாயக்கை என்று உச்சரிக்கப்பட்டு "மாயக்கை" என்ற பெயரோடு இக்கிராமம் அழைக்கப்பட்டு வருகின்றது.

**அமைவிடம் :-**

இக் கிராமமானது பெரும் பகுதி வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் நிர்வாகத்திலும், சிறுபகுதி பருத்தித்துறை பிரதேசசபையின் நிர்வாகத்தின் கீழும் இயங்குகின்றது. இதேபோன்று பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவில் அல்வாய் வடக்கு புலோலி வடமேற்கு ஆகிய இரண்டு கிராம சேவையாளர் பிரிவுகளும், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் அல்வாய் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவும் அடங்கு கின்றன.

இக் கிராமத்தின் எல்லைகளாக மாலிசந்தி என்ற இடத்திலிருந்து அல்வாய் வியாபாரி மூலை வீதியில் அல்வாய் வடக்கு நாவலடிச் சந்தி வரைக்கும் மேற்கு எல்லையாகவும், நாவலடிச் சந்தியிலிருந்து கிழக்கு நோக்கி தம்பசிட்டி சந்தி வரையும், வடக்கு எல்லை யாகவும், தம்பசிட்டி சந்தியி லிருந்து தெற்கு நோக்கி தெருமூடி மடத்தடி சந்தி வரையும் கிழக்கு எல்லை யாகவும், தெருமூடிச் சந்தியிலிருந்து யாழ்ப்பாண வீதியூடாக மாலிசந்தி வரையும் தெற்கு எல்லையாகவும் கொள்ளலாம்.

இவ் எல்லைகளுக்கு உட்பட்டு ஏறத்தாழ நடுப்பகுதியிலேயே மாயக்குகையும், "மாயக்கை குளமும்" அமைந்திருக்கின்றது. இவை இரண்டும் தெற்கு மாயக்கையிலேயே அமைந்திருக்கின்றன. இங்கு புலோலி கிராமத்தையும், அல்வாய் கிராமத்தையும் இணைக்கின்ற பெரிய போக்குவரத்துச் செய்யக்கூடிய வரம்பு பாதை அமைந்துள்ளது. அவ் வரம்பு பாதையில் வடக்கு மாயக்கையிலுள்ள மிதமிஞ்சிய மழை வெள்ளம் தெற்கு மாயக்கைக்குச் செல்வதற்கு மதகு போடப்பட்டுள்ளது. இவ் மதவானது நல்லாட்சி அரசாங்க காலத்தில் "கம்பரலியா" திட்டத்தின் மூலம் அகலமாக்கப்பட்டு புனரமைக்கப்பட்டுள்ளது.

**வழிபாட்டுத் தலங்கள் :-**

இக் கிராமத்தில் வழிபாட்டுத் தலங்கள் பல காணப்படுகின்றன. அவையாவன,

1. மாலிசந்தி பிள்ளையார் ஆலயம்
2. குமிழடி பிள்ளையார் ஆலயம்
3. தேவலவத்தைப் பிள்ளையார் ஆலயம்
4. தில்லையம்பலப் பிள்ளையார் ஆலயம்
5. நாச்சிமார் கோவில்
6. அண்ணமார் ஆலயம்
7. வெள்ளுருவை வைரவர் ஆலயம்
8. பிராமண வைரவர்
9. மாலிசந்தி வைரவர் ஆலயம்
10. சாத்தியாவத்தை வீரபத்திரர் ஆலயம்
11. அழுக்கனட்டி வைரவர் ஆலயம்
12. மாயக்கை பிள்ளையார் கோவில்
13. வத்தனை பிள்ளையார் கோவில்
14. பெரியதம்பிரான் கோவில்
15. வற்றாப்பளை அம்மன்கோவில்

**சன சமூக நிலையங்கள்**

1. பாரதிதாசன் சனசமூக நிலையம்
2. வெள்ளிருவை ஞான வைரவர் சனசமூக நிலையம்
3. பாரதி சனசமூக நிலையம்

**முன்பள்ளிகள் :-**

1. பாரதிதாசன் முன்பள்ளி
2. பாரதி முன்பள்ளி

**பாடசாலைகள் :-**

1. யா / சின்னத்தம்பி வித்தியாலயம்
2. யா / அல்வாய் இ.த.க. பாடசாலை

**கிராமங்கள் :–**

- **வடக்கு மாயக்கை :-**
  1. மாயக்கை
  2. ஐயாவத்தை
  3. வத்தனை
  4. ஒதியக்கலட்டி
  5. தம்பசிட்டி

- **தெற்கு மாயக்கை :-**
  1. மாலிசந்தை
  2. ஈயதை
  3. முக்கலட்டி
  4. பத்தானை
  5. பொதிரானை
  6. மோட்டன்சீமா
  7. குமிழடி
  8. துலாவை
  9. பெரியார் பகுதி
  10. தில்லையம்பலம்
  11. நாச்சிமார் கலட்டி
  12. வட்டுவத்தை
  13. கட்டுக்கம்பரை (நாவலடி)

என்பனவாகும்.

வடக்கு மாயக்கை, தெற்கு மாயக்கை என தற்போது நிர்வாக ரீதியாக இருந்தாலும் முற்காலத்தில் மாயக்கை என்ற பெயரில் ஒன்றாக இருந்ததை நாம் அறியக்கூடியதாக இருக்கின்றது. தெற்கு மாயக்கையிலேயே வரலாற்று ரீதியிலான அதிசயங்களை (அம்சங்கள்) காணக்கூடியதாக உள்ளது.

மாயக்கை என்ற பெயருக்குப் பொருத்தமான மாயக்குகை அழிவடைந்த நிலையில் காணப்படுகின்றது. இக்குகையின் வாசலில் நாச்சிமார் கோவில் மேற்கு வாசலாகக் காவல் தெய்வமாக அமைந்திருக்கின்றது. இக் குகையிலிருந்து கிழக்கு பக்கமாக ஏறத்தாழ 200 மீற்றர் தூரத்தில் முன் ஒரு காலத்தில் இப் பிரதேசத்தை ஆட்சிசெய்த துலக்கன் இராசாவின் துலக்கன் கோட்டை அழிவடைந்த நிலையில் காணக்கூடியதாக இருக்கின்றது. இக் கோட்டைக்கு முற்பக்கத்தில் (கிழக்கு) வெள்ளுருவை வைரவர் ஆலயம், இக் கோட்டைக்கு காவல் தெய்வமாக இருந்ததாக சொல்லப்படுகினிறது. இக் கோட்டைக்கு வடக்குப் பக்கமாக துலுக்கன் இராசாவினால் வணங்கப்பட்ட தில்லையம்பலப் பிள்ளையார் கோவில் அமைந்திருக்கின்றது. முக்கியமாக மாயக்கை குளம் இப் பிரதேசத்தின் நடுப்பகுதியில் அமைந்துள்ளது. இக் குளத்திற்கு கிழக்குப் புறமாக சின்னக்கந்தன் கிணறு அமைந்துள்ளது. இக் கிணற்றுக்கு கிழக்கு புறமாக பட்டியோடை குடியோடைத் திட்டம் (மாயக்கை குடியேற்றம்) அமைந்துள்ளது.

## இப் பகுதி மக்களின் சமூக பொருளாதார நிலைமைகள் பற்றியது

**மாயக்கை குடியேற்றம் :-**

இவ் மாயக்கை பிரதேசத்தில் பல சமூகங்களைச் சேர்ந்த மக்கள் வாழ்ந்தாலும் தாழ்வுற்ற வர்கள் வாழும் சமூகத்தையே மாயக்கை என்ற பெயர் சார்ந்திருக்கின்றது.

இப் பிரதேச மக்கள் (மாயக்கை) பெரும்பாலானவர்கள் முன்னைய காலங்களின் குடியிருப்பதற்கோ, அல்லது விவசாயம் செய்வதற்கோ ஒரு குழி நிலம் கூட இல்லாத நிலையில் ஓலைக் குடிசைகளில் இரவல் காணிகளில் குடியிருந்து வந்துள்ளார்கள். இப் பிரதேசம் கற்கள் நிறைந்த கற்பாறைகள் நிறைந்த இடம். இங்குள்ள மக்கள் மாரி காலங்களில் விவசாயக் கூலி வேலை செய்தும், கோடை காலங்களில் கற்கள் நிறைந்த காணிகளை, கற்களைப் புரட்டியும் சிறிய கற்களை அரித்தும் கல்வீடு கட்டுபவர்களுக்கு விற்றும் தமது நாளாந்த சீவியத்தைப் போக்கினார்கள். வல்லமையுள்ளவர்கள் கற்குவாரிகளை அமைத்து கூலி ஆட்கள் ஊடாக இத் தொழிலை நடத்தினார்கள். கற்கள் அகற்றப்பட்டு அரிக்கப்பட்ட இக் காணிகள் சீர்செய்யப்பட்டு படிப்படியாக விவசாய நிலமாக மாற்றப்பட்டு விவசாயத்தை இன்னுமொரு சமூகத்தினர் மேற்கொண்டு வந்திருக்கின்றார்கள். கற்பாறைகள் நிறைந்த பிரதேசம் 95% மானவை இன்று விவசாய நிலமாகவும் குடியிருப்புக் காணிகளாகவும் இருப்பதைக் காண முடிகின்றது.

இந் நிலங்களை விவசாய காணிகளாக மாற்றிய - வியர்வை சிந்தி உழைத்த இச் சமூக மக்களுக்கு அப்போது கிடைக்கவில்லை. இச் சமூகத்தவர்கள் விவசாயம் செய்ய நிலம் அற்ற நிலையில் விவசாயக் கூலிகளாக வாழ்ந்து வந்துள்ளார்கள். இந் நிலையில் குடியிருப்புக் காணியற்ற நிலையில் வாழும் இம் மக்களுக்கு காணி பெற்றுக்கொடுக்க வேண்டுமென ஓரிரு படித்த இளைஞர்களின் மனதில் ஏற்பட்ட எண்ணக்கரு பலித்திருக் கின்றது. இதன் விளைவுதான் பட்டியோடை குடியேற்றத்திட்டம்.

பட்டியோடை என்பது பொதுப்பெயராக இருந்தாலும் பல பெயர்களில் காணி இருந்தது. இக் காணிகள் யாவும் உயர் வகுப்பு சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கே உரித்துடையது. இக் காணியானது கற்பூமி. பள்ளம் திட்டிகளாகக் காணப்பட்டது. ஏற்கனவே சொன்ன மாதிரி ஓரிரு இளைஞர்களினாலே மாயக்கை கிராமத்தைச் சேர்ந்த நாகன் நல்லையா என்பவரின் கடும் முயற்சி காரணமாக காணி உரிமையாளரின் பூரண சம்மதத்துடன் அரசாங்கத்தினால் சுவீகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன் பிரகாரம் 1970 -1971 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இக் காணி அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டது.

இக் காணியானது 27 துண்டுகளாக (தலா இரண்டு பரப்பு ) பிரிக்கப்பட்டது. இதில் ஒரு துண்டு ஆறு பரப்பு பொதுப்பாவனைக்கும், ஒரு துண்டு பொதுக்கிணறு அமைப்பதற்கும் ஒதுக்கப்பட்டது. ஏனைய காணி கச்சேரி மூலம் பகிர்ந்தளிக்கப்பட்டது. பொதுத் தேவைக்காக ஒதுக்கப்பட்ட இக் காணிக்குள் பாரதி சனசமூக நிலையக் கட்டிடமும், பாரதி முன்பள்ளிக் கட்டிடமும் அமைக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றது. மேலும் குழாய்க் கிணறும், தண்ணீர் தொட்டிலும், சிறுவர்களுக்கான விளையாட்டு முற்றமும், இவைகளைச் சுற்றி முன்பக்கம் நீண்ட மதிலும் மலசலகூடமும் அமைக்கப்பட்டுள்ளது. இவற்றை அமைப்பதற்கு இக் குடியேற்றத்தில் வசிக்கின்ற எந்த ஒரு குடும்பத்தின் நிதிப்பங்களிப்பும் பெறப்படவில்லை. முழுக்க முழுக்க க. பரஞ்சோதி என்பவரின் முயற்சியின் காரணமாக

பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், பொது அமைப்புக்கள், வெளிஇடங்களில் வசிக்கின்ற நன்கொடையாளர்களின் நிதிப்பங்களிப்புடனேயே இவை யாவும் செய்யப்பட்டவை. இவை யாவும் இங்குள்ள மக்களுக்கு நன்கு தெரியும்.

இக் குடியேற்றத் திட்டத்தில் 1980 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அப்போதைய வீடமைப்பு அமைச்சராக இருந்த காலம் சென்ற கௌரவ உறுப்பினர் பிறேமதாசா அவர் களினால் அப்போதைய பருத்தித்துறை பாராளுமன்ற உறுப்பினர் காலம் சென்ற திரு.க.துரைரத்தினம் அவர்களின் சிபார்சின் பெயரில் திரு.க.பரஞ்சோதி அவர்களின் முயற்சியின் காரணமாக பத்து கல் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டது. தற்போது இங்கு அரசாங்கத்தின் வீட்டுத் திட்டங்களின் ஊடாகவும் கல் வீடுகள் அமைத்துக் கொடுக்கப் பட்டுள்ளன. இதன் பிரகாரம் இங்கு தற்போது 90% வீதமான குடும்பங்களுக்கு வீடில்லாப் பிரச்சனைகள் தீர்க்கப்பட்டுள்ளது. ஆனாலும் ஒரு வீட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருவது பிரச்சனைக்குரியதாகும். இங்குள்ள 27 துண்டுக் காணிகளிலும் ஏறத்தாழ 64 குடும்பங்கள் வரை வசித்து வருகின்றார்கள்.

இக் குடியேற்றத்தில் வசிக்கின்ற பிள்ளைகளின் கல்வி வளர்ச்சி மிகவும் மந்தமான நிலையிலேயே காணப்படுகின்றது. இதற்கு பல காரணங்கள் இருந்தாலும் முக்கிய காரணம் பெரும்பாலான பெற்றோர்களின் அக்கறையீனமாகும். அடுத்து இங்குள்ள ஸ்தானத்தின் தலைவர்கள் கல்வி வளர்ச்சியினை முயற்சியினை எடுத்து வருவது போதுமானதாக இல்லை. இவ்விடயத்தில் அக்கறையோடு செயல்பட்டவர்களைக் கடந்த காலத்தில் வெளியேற்றியிருப்பதும் முக்கிய காரணங்களில் ஒன்று என பல மக்களாலும் சொல்லப்படுகின்றது. இதை இப்போதைய ஸ்தாபனத் தலைவர்கள் புரிந்துகொண்டு செயல்பட வேண்டும். நல்லறிவுள்ள பெரியோர்களின் நல்ல கருத்துக்களைச் செவிமடுக்க வேண்டும்.

இங்கு இளம் வயதுத் திருமணங்கள், மதுபாவனைகள், விவகாரத்து, ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட திருமணம் செய்தல் போன்ற பொறுப்பற்ற செயற்பாடுகள் நிறுத்தப்படல் வேண்டும். இக் கிராமத்தில் இதுவரை எந்த ஒரு மாணவராவது ஐந்தாம் ஆண்டிலோ சித்தியடையவில்லை என்பது ஒரு வேதனைக்குரிய விடயமாகும். இங்குள்ள தாபனத் தலைவர்கள் இவற்றைப் புரிந்துகொண்டு செயல்பட வேண்டும். இவற்றைக் கூறுவது யாரையும் புண்படுத்துவதற்காக அல்ல. முன்னேற்றுவதற்காகவே என்பதை எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும்.

இக் கிராமத்தின் பொருளாதார வளத்தைப் பொறுத்தமட்டில் எல்லோரும் உழைக்கி றார்கள். சொந்தக் காணியிலும், குத்தகை காணிகளிலும் விவசாயம் செய்து வருகிறார்கள். ஆனாலும் சேமிப்புப் பழக்கம் கீழ்மட்டத்தில் இருப்பதன் காரணமாக பல குடும்பங்கள் வறுமைக்கோட்டின் கீழ் காணப்படுகின்றனர். இங்குள்ள இளைஞர்கள் பல பேர் சீவல் தொழிலை முக்கிய தொழிலாகக் கொண்டிருந்தார்கள்.

இப் பிரதேசத்தில் வாழுகின்ற மக்களின் கல்வி, பொருளாதாரம் பற்றி ஆராய்ந்து பார்க்கப்பட்டது. ஆனாலும் இப் பிரதேசங்களில் இருக்கின்ற அதிசயங்களையும் இயற்கை வளங்களையும் வெளிக்காட்ட வேண்டிய தேவை இருக்கின்றது.

## 1. மாயக் குகை :-

இக் குகையானது மாயக்கை குளத்திற்கு தெற்குப் புறமாக பாழடைந்த நிலையில் காணப்படுகின்றது. இக் குகையானது U வடிவில் அமைந்துள்ளது. வடக்கு பகுதி வாய்க்கால் போலவும் ஏனைய மூன்று பகுதிகளும் பெரிய பாறைகளினாலும் சூழப்பட்டு காணப்படுகின்றது. மேற்குப் பக்கமாக நாச்சிமார் என்னும் காவல் தெய்வம் கற்பாறைகளினால் சூழப்பட்டுக் காணப்படுகின்றது. இக் காவல் தெய்வ மானது பல அற்புதங்களைச் செய்து வருகின்ற தெய்வமாகும். மேற்கு வாசலாக அமைந்துள்ளது. இக்கோவில் வீதியாக வும் கற்பாறைகள் நிறைந்து காணப்படு கின்றது. வேம்பு, ஆல், அரசு போன்ற மரங்களினால் இவ் ஆலயம் சூழப்பட்டுள்ளது. முற்காலத்தில் பிள்ளைப்பேறு அற்றவர்கள் இளவேனில் காலத்தில் வெள்ளைச்சேலை உடுத்தி மாயக்கை குளத்தில் குளித்து ஈரச்சேலையுடன் இக்கோவிலை வழிபடுவார்களாம். இதன் காரணமாக இப் பெண்களுக்கு பிள்ளைப் பாக்கியம் கிடைத்துச் சிறப்பாக வாழ்ந்து உள்ளார்கள் என முன்னோர்களின் கதைகள் சான்றுபடுத்துகின்றன. இன்றும் அந்த நம்பிக்கை பலரிடமும் இருக்கின்றது.



இக்கதை இவ்வாறிருக்க இம் மாயக்குகையை முன்னொரு காலத்தில் இப் பிரதேசத்தை ஆண்ட "துலுக்கன்" என்றும் இராசாவினால் பூதங்களைக் கொண்டு தோண்டப் பட்டதாக முன்னவர்களின் கூற்றுக்களின் மூலம் அறியக்கூடியதாக உள்ளது. இப் பிரதேசத்தில் இன்றும் பல குகைகள் இருப்பதையும் அறிய முடிகின்றது. இக் குகையானது 'துலுக்கன்' இராசா தன்னுடைய பாதுகாப்புக்காகவும், விலையுயர்ந்த பொருட்களைப் பாதுகாப்பதற்கு இக்குகை தோண்டப்பட்டதாகவும் சொல்லப்படுகின்றது. இக் குகை வாசலிலிருந்து கிழக்கு நோக்கி ஏறத்தாழ 200 மீற்றர் தூரமளவில் "துலுக்கன் கோட்டை" இருந்ததாகச் சொல்லப்படுகின்றது. இக் கோட்டை வரை மாயக்குகை இருந்திருக்கக் கூடும் என முன்னோர்கள் சொல்லிச் சென்றுள்ளார்கள். இக் கோட்டை இருந்த இடம் அழிந்த நிலையில் மேடாகக் காணப்படுகின்றது. இவ்விடங்களில் முற்காலத்தில் கட்டடங் களுக்குப் பயன்படுத்துகின்ற சுட்டமண் கற்களையும் காணக்கூடியதாக இருக்கின்றது. இவ் இடங்கள் காணி உரிமையாளர்களினால் திருத்தப்பட்டு குடியிருப்பு இடங்களாகக் காட்சி யளிக்கப்படுகின்றது. இவ்விடத்தில் மலசலகூடம் அமைப்பதற்கு குழி வெட்டியபோது அகலமான சிறிய செங்கற்களால் கட்டப்பட்ட சிவர் இருந்ததாகக் கூறப்பட்டதாகச் சொல்லப் படுகின்றது. நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் இவ் மாயக்குகைக்குள் இருக்கின்ற பொன், பொற்காசுக்களை எடுக்கச் சென்ற சிலர் திரும்பி வரவில்லை என்றும் அவர் களுக்கு என்ன நடந்தது என்றும் தெரியவில்லை என்பதை எமது முன்னோர்கள் கூறியிருக்கின்றார்கள். சிறிது காலத்திற்கு முன்பு சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு இவ் மாயக்குகையின் முற்பகுதியில் வெளவால் குடியிருப்பதை மக்கள் அறிவார்கள். இவற்றின் எச்சங்களை விவசாயிகள் சிலர் இக் குகைக்குள் நுழைந்து அவற்றை அள்ளி விவசாய உரமாகப் பாவித்திருக்கின்றார்கள்.

துலுக்கன் கோட்டைக்கு வடக்குப் பக்கமாக ஏறத்தாழ ஐம்பது மீற்றர் தூரத்தில் உடையார் வளவு என்ற காணி இருக்கின்றது. இக் காணியிலேயே துலுக்கன் இராசாவின் இராசதந்திரிகள் வசித்து வந்ததாக முன்னோர்களினால் சொல்லப்பட்டிருக்கின்றது. இக் காணியிலேதான் தில்லையம்பலப் பிள்ளையார் ஆலயம் அமைந்துள்ளது. இக் கோவிலை துலுக்கன் இராசா நாளாந்தம் சென்று வழிபட்டு வந்ததாக இக் காணியில் குடியிருந்த ஒரு முன்னோர் கூறியுள்ளார். இவற்றை எல்லாம் உற்று நோக்கும்போது துலுக்கன் கோட்டை, துலுக்கன் இராசா, மாயக்குகை என்பன இருந்திருக்கக்கூடும் என ஊகிக்க முடிகின்றது.

**1. மாயக்கைக் குளம்:-**

இக் குளம் ஏறத்தாழ 1.5 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டது. இக் குளத்தை துலுக்கன் இராசாவினால் பூதங்களைக்கொண்டு தோண்டப்பட்டதாக முன்னோர்களினால் சொல்லப் பட்டது. மாயக்குகையைத் தோண்டுவதற்கு துலக்கன் இராசாவினால் பயன்படுத்தப்பட்ட



பூதங்களின் நீர்த்தேவைக்கு இக் குளத்தில் நீர் பயன்படுத்தப்பட்டதாக முன்னோர்கள் வெளிப் படுத்தியிருக்கின்றார்கள். இக் குளத்தின் அடிப்பகுதி கற்பாறைகள் நிறைந்திருக் கின்ற ஒரு ஊற்றுக்குளமாகும். முன்பு இக்குளத்து நீர் வற்றுவதில்லையெனவும் கோடை காலங் களிலும், மழை குறைந்த காலங்களிலும் நீர் இருந்ததாகவும் கூறப்படுகின்றது. தற்போது பிற மழை வெள்ளம் இக் குளத்திற்கு வருவதி னால் மண் நிறைந்து சேற்றுக் குளமாக இருக் கின்றது. மழை குறைந்த காலங்களில் இக்குளம் வற்றி சேற்று நிலம் வெடித்துக் காணப்படும். இச்சந்தர்ப்பத்தில் இச் சேற்று மண்ணை வெட்டி எடுத்து வயல் நிலங்களுக்குப் பயளையாகப் பயன்படுத்தி வருகின்றார்கள்.

இக் குளத்திற்கு நான்கு பக்கமும் உள்ள காணியில் மாரி காலத்தில் நெல் பயிரும் கோடைகாலத்தில் காய்கறிப் பயிர்களும் செய்யப்பட்டதாகக் கூறப்படுகின்றது. முக்கியமாக கோடைகாலத்தில் நீற்றுப் பூசணிக்காய் பயிரிடப்பட்டு நல்ல விளைச்சளைப் பெற்றுக் கொண்டதாகவும் சொல்லப்பட்டது. இக் காணிகள் யாவும் "யப்பான்" உறுதி மூலம் பல பேர் தங்கள் சொந்தக்காணியாக மாற்றியுள்ளார்கள். சிறிது காலத்திற்கு முன்பு இக்காணி களில் நெல் விதைக்கப்பட்டு கடும் வெள்ளப் பெருக்கினால் அழிவுற்றதன் பயனாக விவசாயிகள் நெல் விதைப்பதை நிறுத்திவிட்டார்கள். ஆனாலும் கோடை காலங்களில் வெங்காயப் பயிர் செய்கையும் வெகுவாகக் குறைந்து காணப்படுகின்றது. இருந்தும் கரையோரப் பகுதிகளில் தை மாதமளவில் புகையிலைச் செய்கையை மேற்கொண்டு வருகின்றார்கள். சில விவசாயிகள் கோடை வெங்காயச் செய்கையையும் மேற்கொண்டு வருகின்றார்கள். இப் பயிர்ச்செய்கையானது தேவலவத்தை, இங்கிலியவத்தை, பட்டியோடை, சின்னக்கந்தன் போன்ற காணிகளில் செய்கை பண்ணப்படுகின்றது.

இக்குளத்திற்கு குளத்தின் நாலா பக்கமும் உள்ள பிரதேசங்களிலிருந்து மழைக் காலங்களில் வெள்ள நீர் வந்து இக்குளத்தை நிரப்புகின்றது. இதன் காரணமாக இப் பிரதேசம் பயிர்ச்செய்கைக்கு உகந்த நன்னீர் பிரதேசமாக இருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

## 2. சின்னக்கந்தன் கிணறு :-

இக் கிணறானது மாயக்கை குளத்திற்கு நேர் கிழக்கே கிட்டத்தட்ட 150 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. இக் கிணறானது முன்னொரு காலத்தில் இப் பிரதேசத்தில் வாழ்ந்த விவசாயிகளினால் விவசாயப் பயன்பாட்டிற்காகத் தோண்டப்பட்டது. இக் கிணறு மேலிருந்தே கற்பாறைகளினால் ஆனது. இருந்தும் விவசாயிகளின் கடும் முயற்சியின் காரணமாக 15' அடி வரை தோண்டப்பட்டபோது பாரியகுழி ஒன்று ஏற்பட்டு நீர் பீறிட்டு வரத் தொடங்கியது. அதை அதிசயமாகப் பார்த்த விவசாயிகள் ஆச்சரியப்பட்டு சந்தோச மடைந்து தங்கள் முயற்சிக்கு வெற்றி கிடைத்துள்ளது என ஆதங்கப்பட்டார்கள். அத்துடன் இப் பாரிய குழி துலங்கன் இராசாவினால் தோண்டப்பட்ட மாயக்குகையுடன் தொடர்பு பட்டிருக்கக்கூடுமென விவசாயிகள் சந்தேகப்பட்டார்கள். ஆனாலும் விவசாயிகள் இக் குழியை இப்படியே விடுவதினால் ஆபத்துக்கள் ஏற்படக்கூடுமென நினைத்தார்கள். எனவே விவசாயிகள் எல்லோரும் சேர்ந்து இக்குழிக்கு அளவான பாரிய கல்லினால் இக் குழியை அடைத்துவிட்டார்கள். இருந்தும் நீரை அள்ளி வெளியேற்றினாலும் நீர் வந்த படியே இருந்தது. இன்றும் அதே நிலையில்தான் காணப்படுகின்றது.

தற்போதைய நிலையில் ஒன்றுக்கு மேற்பட்ட நீர் இறைக்கும் இயந்திரங்களின் மூலம் விவசாயிகள் தங்கள் விவசாயப் பயிர்களுக்கு நீர் இறைத்தாலும் கிணற்று நீர் நின்ற மட்டத்திலேயே இருப்பதைக் காணமுடிகின்றது. முக்கிய அதிசம் என்னவெனில் மாரி காலத்தில் மழை வெள்ளத்தினால் மாயக்கைகுளம் நிரம்பி அயல் காணிகளிலும் வெள்ளம் நிரம்பியிருக்கின்றபோது மிதமிஞ்சிய நீர் இக்கிணற்றுக்குள் பெரும் இரைச்சலுடன் பாய்கின்றது. ஆனால் அவ் நீர் எங்கு செல்கின்றது என்பது யாருக்குமே தெரியாது. இவ் வேளையில் முற்காலத்தில் இக் கிணற்றுக்குள் சிலர் எலுமிச்சம்பழத்தைப் போட்டு இப் பழங்கள் எங்கே செல்கின்றது என்பதை அக்கால மக்கள் பரீட்சித்துப் பார்த்ததாகவும் இத் தேசிக்காய் தொண்டைமனாறு கடல் நீரேரியில் மிதந்ததாகவும் மக்களால் கூறப்பட்டு வருகின்றது.

மாரி காலத்தில் இக்குளம் நிரம்பி மிதமிஞ்சிய வெள்ளம் இக்குளத்தின் சுற்றாடல் முழுவதும் தேங்கியிருக்கின்றபோது சமுத்திரம் போலக் காட்சியளிக்கும். இக் காட்சியைப் பார்ப்பதற்கு ஏராளமான மக்கள் சில காலங்களில் கூடுவதும் உண்டு. கட்டு மரங்களில் பிரயாணம் செய்த காலமும் உண்டு. இவ் மழை வெள்ளம் கணிசமான அளவு சின்னக் கந்தன் கிணற்றினூடாகச் செல்லாவிட்டால் பல மாதங்கள் இவ் மழை வெள்ளம் வற்றாது நின்றிருக்கும். சில காலங்களில் மாரி காலத்தில் மழை கூடிய காலங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு இக் குளத்திற்குச் சூழ கிட்ட உள்ள மக்கள் குறிப்பாக மாயக்கை, பட்டியோடை போன்ற இடங்களிலுள்ள மக்கள் தங்கள் வீடுகளிலிருந்து வெளியேறி பொது இடங் களிலும் உறவினர்கள் வீடுகளிலும் ஒரு மாத காலம் வரை இடம்பெயர்ந்து வசித்து வந்த காலங்களும் உண்டு. இக் குடும்பங்களுக்கு உலர் உணவு நிவாரங்களும் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டும் இருக்கின்றது.

மாயக்கை குளத்திலிருந்து மிதமிஞ்சிய நீர் சின்னக்கந்தன் கிணற்றிற்குள் செல்வதற்கு அரசாங்கத்தினால் வாய்க்கால் ஒன்று 1952 ஆம் ஆண்டிற்கு முன்னதாகக் கட்டப்பட்டுள்ளது. தற்போதும் இவ் வாய்க்கால் ஊடாக நீர் கிணற்றுக்குள் சென்றவுடன் ஓரிரு நாட்களில் இக் கிணற்றிற்குள் யப்பான் மீன்கள் பல நூற்றுக்கணக்கில் இறந்து கிடப்பதைக் காணக் கூடியதாக இருந்தது. ஆனால் இது பற்றி யாரும் இது ஏன் இவ்வாறு நடைபெறுகின்றது

என்பதை அறிய முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. இனி வரும் காலங்களில் இவ்வாறு ஏன் நடைபெறுகின்றது என்பதை ஆய்வு செய்ய வேண்டுமென மக்கள் விரும்புகின்றார்கள்.

இச் சின்னக்கந்தன் கிணற்று நீர் வற்றாது இருப்பதினாலும் நன்னீராக இருப்பதினாலும் குடிநீர் விநியோகம் செய்வதற்காக அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டு 1962 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இக் கிணற்று நீர் பரீட்சித்துப் பார்க்கப்பட்டது. இதன் பிரகாரம் பாரிய நீர் இறைக்கும் இயந்திரங்களினால் தொடர்ச்சியாக இக் கிணற்று நீர் வெளியேற்றப் பட்டது. இந் நிகழ்வு ஒரு கிழமை இடைவிடாது நீர் வெளியேற்றப்பட்டது. ஆனால் இந்நீர் வற்றாது நின்றபடியே இருந்தது.. இருந்தும் வெளியேற்றப்பட்ட நீர் ஒரு மணித்தியால யத்திற்கு ஒரு தடைவ சோதனை செய்து பார்த்தபோது உவர்த்தன்மை கூடிக்கொண்டே சென்றதை அவதானிக்க முடிந்தது. இதன் காரணமாக இவ் நீர் விநியோகத்திட்டம் அரசாங்கத்தினால் கைவிடப்பட்டது.

மீண்டும் 2007 ஆம் ஆண்டு கரவெட்டி வாழ் மக்களுக்கு நன்னீர் வழங்கி வந்த கரவெட்டி "அத்துளு" நீர் விநியோகத்திட்டம் தரம் குறைந்து கொண்டு சென்றதினால் மாயக்கையிலிருந்து நன்னீரைப் பெற்றுக்கொள்ள கரவெட்டி பிரதேச செயலகம் நடவடிக்கை மேற்கொண்டது. இத்திட்டத்திற்கு மாயக்கை வாழ் மக்கள் பல சந்தர்ப்பங்களில் எதிர்ப்புக் களைக் காட்டியபோதும் கரவெட்டி பிரதேச செயலகத்தினால் முன்னெடுக்கப்பட்டது. இதன் பிரகாரம் மாயக்கை சின்னக்கந்தன் கிணற்றிற்கு வடகிழக்கு மூலையில் ஒரு குழாய்க்கிணறு தோண்டப்பட்டு இதிலிருந்து அத்துளு நீர்தாங்கிக்கு வீதிகளினூடாக குழாய்கள் நிலத்தில் தாக்கப்பட்டு நீர் செலுத்தப்பட்டது. இவ் நீரானது முன்னரைப்போன்று கரவெட்டி மக்களுக்கு விநியோகிக்கப்பட்டது. சிறிது காலம் இவ் நீர் விநியோகம் நடைபெற்றது. இந் நீர் சவர்த்தன்மை அதிகரிக்கப்பட்டமையால் இரண்டாவது கிணறு சின்னக்கந்தன் கிணற்றிற்கு நேர் தெற்கே கிட்டத்தட்ட 200 மீற்றர் தூரத்தில் உடையார் வீட்டிற்குச் சொந்தமான காணியில் இடிக்கப்பட்டு இக் கிணற்றிலிருந்து நீர் விநியோகம் செய்யப்பட்டது. சில மாதங்களில் இக்கிணற்று நீரும் சவர் நீராக மாறியமையால் நீர் விநியோகம் தடைப்பட்டது. மேலும் மூன்றாவது கிணறு காவல் தெய்வமாகிய நாச்சிமார் கோவிலுக்கு வடமேற்கு மூலையில் நடுப்பாதையில் இடிக்கப்பட்டது. ஆனால் இக் கிணற்றி லிருந்து நீர் விநியோகம் நடைபெறவில்லை. தற்போது மாயக்கை அத்துளு நீர் விநியோகத் திட்டம் நடைமுறையில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### 3. மாயக்கை வரம்புப் பாதை :–

இவ் வரம்புப் பாதை ஆங்கிலேயர்களால் இந்நாடு ஆட்சி செய்த காலத்தில் மண் அணைக்கப்பட்டு ஒரு வரம்பு பாதை அமைக்கப்பட்டது. இப் பாதையினூடாக அல்வாய் மக்களும் புலோலி மக்களும் சென்று வந்தார்கள். மழை காலங்களில் இவ்வரம்புப் பாதை பெரிதும் உதவியது. இவ் வரம்புப்பாதை பருத்தித்துறை பிரதேசத்தையும், கரவெட்டி பிரதேசத்தையும் நிர்வாக ரீதியாகப் பிரிக்கின்ற ஒரு எல்லைக்கோடாக இருந்து வருகின்றது. மாரிகாலத்தில் இவ் வரம்புப் பாதைக்கு வடக்கு, தெற்கு பக்கங்களில் வெள்ளம் நிறைந் திருப்பதை காணக்கூடியதாக இருக்கும். பல காலமாக இவ் வரம்புப் பாதை புனரமைக்கப் படாமல் இருப்பதினால் மாரி காலத்தில் இப் பாதையால் மக்கள் செல்ல முடியாது கஷ்டப்படுகின்றார்கள். வடக்கு மாயக்கை, தெற்கு மாயக்கை என மக்களால் சொல்லப் பட்டு வருகின்றது. வடக்கு மாயக்கை பருத்தித்துறை பிரதேச நிர்வாகத்திற்கும் தெற்கு

மாயக்கை கரவெட்டி பிரதேச நிர்வாகத்திற்கும் உட்பட்டதாகும். கடந்த நல்லாட்சி அரசாங்க காலத்தின் "கம்பரலியா" திட்டத்தின் மூலம் இவ் வரம்புப்பாதையில் இருந்த மதகு புனரமைக்கப்பட்டு அகலமாக்கப்பட்டுள்ளது. ஆனால் இவ் வரம்புப் பாதையின் ஏனைய பகுதி புனரமைக்கப்படாமையினால் போக்குவரத்திற்கு மக்கள் பெரிதும் கஷ்டமடைகின் றார்கள். முக்கியமாக இவ் வரம்புப் பாதையின் அருகில் வடக்குப் பக்கத்தில் பெரிய தம்பிரான் என்ற ஆலயம் அமைந்துள்ளது. தீராத நோய்களினால் கஷ்டப்படுகின்ற மக்கள் இக் கோயிலுக்கு வருகைதந்து வணங்கி தங்கள் நோய்களைக் குணப்படுத்திச் சென்று வருகின்றார்கள். தற்போது இப் பாதையானது பற்றையும் செடியுமாக சிதைவுற்று மக்கள் நடந்து செல்ல முடியாதவாறு அழிவடைந்துள்ளது.

### 4. அல்வாய் இந்து தமிழ் கலவன் பாடசாலை :-

மாயக்கை பிரதேசத்தில் மாலிசந்திப் பிள்ளையார் ஆலயத்திற்கு வடக்குப் பக்கமாக உயர் சாதி மாணவர்கள் படிப்பதற்காக காராளர் பள்ளிக்கூடம் என்ற பாடசாலை இருந்தது. தற்போது இப்பாடசாலை யா / சின்னத்தம்பி வித்தியாலயம் என அழைக்கப்படுகின்றது. 1934 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலத்தில் மாயக்கை கிராமத்தில் வசிக்கின்ற பிள்ளைகள் பாடசாலை இல்லாத காரணத்தினால் பாடசாலை செல்ல முடியாதிருந்தார்கள். இதன் காரணமாக இப் பிள்ளைகளின் பெற்றோர்கள் தங்களுக்குள் பாடசாலை இல்லாத குறை களைப் பற்றி கதைத்துக் கொண்டார்கள். இவ் ஆதங்கங்களைக் கேள்வியுற்ற கறுப்பர் சுப்பிரமணியம் என்பவர் இப் பகுதியில் ஒரு பாடசாலை வேணும் என்பதை உணர்ந்து தனக்கும் தனது சகோதரர்களுக்கும் உள்ள காணியில் கிடுகினால் மேயப்பட்ட இரு பெரிய கொட்டில்களை அமைத்து 1934 ஆம் ஆண்டு விஜயதசமி தினத்தன்று மணியம் பாடசாலை என்ற பெயரில் இப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. அன்று முதல் கறுப்பர் சுப்பிரமணியம் வீடு வீடாகச் சென்று பிள்ளைகளைப் பாடசாலைக்கு அழைத்து வந்து கல்வி புகட்டி கல்விக்காக சேவையாற்றினார். பெற்றோர்கள் இவருக்கு உறுதுணையாக இருந்து வந்தார்கள். இப் பாடசாலையில் ஏற்றத்தாழ்வின்றி சகல பிள்ளைகளும் கல்வி கற்றுக் கொண்டார்கள். பல ஆண்டுகளாக கறுப்பர் சுப்பிரமணியத்தின் முயற்சியின் காரணமாக 1961 ஆம் ஆண்டு யா / சுப்பிரமணிய வித்தியசாலை என்ற பெயரில் அரசினால் பொறுப்பேற்கப்பட்டது. இக் காலகட்டத்தில் இப் பாடசாலையில் ஐந்நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்றுக் கொண்டார்கள். இப் பாடசாலையை இந்து பாடசாலையாகப் பதிவு செய்ய முயற்சி எடுக்கப்பட்டபோது அல்வாய் பிரதேசத்தில் இந்துப் பாடசாலைகள் இருப்பதனால் 1972 ஆம் ஆண்டு யா / அல்வாய் வடக்கு இந்து தமிழ் கலவன் பாடசாலையாகப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

இந்நிலையில் யா / தம்பசிட்டி மெ.மி.பாடசாலை, யா / புலோலி மெ.மி.பாடசாலை ஆகியன கல்வித்துறையில் மேலோங்கி நின்றமையினால் இவ் மணவர்கள் அப் பாடசாலையை நோக்கிச் செல்லத் தொடங்கியதன் காரணமாக இப்பாடசாலையின் மாணவர்களின் தொகையும் குறைந்துவிட்டது. அதுமட்டுமல்லாமல் மாயக்கை சமூகப் பிள்ளைகள் மட்டுமே கல்வி கற்று வந்தார்கள். இவர்களும் நாளடைவில் வேறு பாடசாலை களுக்குச் சென்ற நிலையில் வெறும் பன்னிரண்டு பிள்ளைகளுடன் இப்பாடசாலை 1974 ஆம் ஆண்டு இயங்கியது. இந்நிலையில் இப்பாடசாலையை மூடுவதற்கு கல்வித் திணைக்களத்தினால் முயற்சிகள் மேற்கொண்டபோது அவ்வூர் இளைஞரான கந்தன் பரஞ்சோதி தனித்து நின்று எடுத்த முயற்சியின் பயனாக கல்வியதிகாரியின் அனுமதியுடன் மாயக்கை சமூகத்தைச் சேர்ந்த அயல் பாடசாலைகளில் கல்வி கற்கும் 5 ஆம் வகுப்பிற்கு

உட்பட்ட மாணவர்களை அவர்களின் பெற்றோர்களின் சம்மதத்துடன் இப்பாடசாலைக்கு மாற்றம் செய்யப்பட்டது. இதன் பிரகாரம் மாணவர்களின் தொகை இருபத்தெட்டாக உயர்ந்தது. இதன் காரணமாக இப்பாடசாலை மூடுவதற்கெடுத்த முயற்சிகள் கைவிடப்பட்டது.

தற்போது இப் பாடசாலையானது பெற்றோர்களின் வேண்டுகோளுக்கு இணங்க 2018 ஆம் ஆண்டு கல்வி அமைச்சினால் யா / அல்வாய் இந்து தமிழ் கலவன் பாடசாலை என பெயர் மாற்றம் செய்யப்பட்டு இயங்கி வருகின்றது. தற்போது இப் பாடசாலையில் 5 ஆம் ஆண்டு வரை ஐம்பத்திஏழு பிள்ளைகள் கல்வி கற்று வருகின்றார்கள். ஆறு ஆசிரியர்கள் கல்வி போதிக்கின்றார்கள். தற்போது இப் பாடசாலையின் கல்வித்தரம் உயர்ந்து காணப்படுகின்றது. இதற்கு காரணம் அதிபர் ஆசியர்களின் அர்ப்பணிப்புடனான கல்விச் சேவையாகும். இப் பாடசாலைக் கல்வி மென்மேலும் வளரவேண்டுமென எல்லோரும் விரும்புகின்றார்கள்.

**5. தேவலவத்தை அண்ணமார், பிள்ளையார் கோவில் :-**

இவ்வாலயம் அல்வாய் கிழக்கில் யா / அல்வாய் இந்து தமிழ்க்கலவன் பாடசாலைக்கு வடக்கு பக்கமாக அமைந்துள்ளது. முன்னொரு காலத்தில் தேவலவத்தை என்ற காணியில் காரைமுள் பற்றைகள் நிறைந்து காணப்பட்டதாகவும் இவ் ஊர் மக்களின் வளர்ப்பு ஆடுகள் இப் பற்றைக்குள் சென்று காரை முட்களை கடித்து தின்று வந்ததாகவும் ஒரு பழைய கதை ஒன்று இருக்கின்றது. இதன் பிரகாரம் இப்பகுதியைச் சேர்ந்த ஒருவர் மாலையாகியும் தனது ஆடு திரும்பாத நிலையில் தனது ஆட்டைத்தேடி இக் கரைப்பற்றைக்குப் பக்கமாகச் சென்றுள்ளார். நல்ல நிலவு வெளிச்சத்தில் தனது ஆடு தனது சத்தத்தைக் கேட்டு முறுகிக் கொண்டிருந்தது. அப்போது ஆடு சத்தம் கேட்ட இடத்திற்கு நெருங்கி பார்த்தபோது இரண்டு கடாய்க் குட்டிகளை ஈன்ற களைப்பில் தாய் ஆடு எழும்ப முடியாது இருந்ததையும் கண்டு கவலைப்பட்டு அவற்றைத் தூக்க முற்பட்டபோது இரண்டு கடாய்க்குட்டிகளை ஈன்ற களைப்பில் தாய் ஆடு எழும்ப முடியாது இருந்ததையும், இரண்டு கடாய் குட்டிகளும் இறந்து கிடந்ததையும் கண்டு கவலைப்பட்டு அவற்றைத் தூக்க முற்பட்டபோது ஆகாயத்தில் ஒரு ஓசை கேட்டதாம். அது என்னவெனில் "நான் இப் பிரதேச மக்களைக் காப்பாற்றுவதற்காக சிவபெருமான் என்னை காவல் தெய்வமாக அனுப்பியுள்ளார். எனது பெயர் அண்ணார்மார். எனக்கு இங்குள்ள மக்கள் ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு கடாய் ஆட்டைப் பலியாக்க வேண்டும் என அந்த ஓசை கேட்டது. அடுத்தநாள் இவ் அதிசய சம்பவமானது ஊர் முழுக்கப் பரவியது. எல்லோரும் சேர்ந்து இக் காரைப்பற்றுக்களை அகற்றி அவ்விடத்தில் நின்ற ஒதிய மரம் ஒன்றின் கீழ் பெரிய கல் ஒன்றில் சிறுகுழி அமைத்து தேங்காய் எண்ணெய் ஊற்றி எரித்து வணங்கி வரலாயினர். ஒவ்வொரு வருடமும் ஆனி அல்லது ஆடி மாதங்களில் ஒரு மடை வைத்து நேர்த்திக்காக விடப்பட்ட கடாய்களையும் சாவல் கோழிகளையும் வெட்டி பலி கொடுத்து வந்தார்கள். இதன் காரணமாக இவ் மக்கள் தீராத நோய்களிலிருந்து காப்பாற்றப்பட்டு வந்துள்ளார்கள் என மக்கள் நம்பினார்கள். இதன் பிரகாரம் வெள்ளிக்கிழமைகளில் கற்குழிகளில் தேங்காய் எண்ணெய்யில் விளக்கெரித்து வணங்கி வரலாயினர்.

இந் நிலையில் இவ் அண்ணமார் ஆலயத்திற்கு ஒரு ஓலைக்கொட்டில் அமைத்து வணங்கி வந்தார்கள். 1920 ஆம் ஆண்டளவில் சுண்ணாம்புக் கற்களினால் கட்டிடம் ஒன்று அமைத்து மூலஸ்தானத்தில் பிள்ளையாரையும், இரண்டாம் மண்டபத்தில் அண்ணமாரையும் வைத்து வழிபட்டு வந்தார்கள். வருடா வருடம் கடாய்களையும், சாவல் கோழிகளையும் பலி

கொடுத்து வந்தார்கள். இச் செயலானது பிழையான விடயம் என்பதை உணர்ந்த பல படித்த இளைஞர்கள் ஒன்று சேர்ந்து காலம் சென்ற திரு க. கிருஷ்ணபிள்ளை ஆசிரியர் அவர்களின் தலைமையில் செயல்பட்டு பலி கொடுப்பது நிறுத்தப்பட்டது. கடாய், கோழி களுக்கு மஞ்சள் நீர் தெழித்து நேர்த்திக்கடனை இவ் மக்கள் நிறைவேற்றி வருகின்றார்கள்.

இவ் ஆலயத்தின் படிமுறை வளர்ச்சியின் காரணமாக 1970 ஆம் ஆண்டில் பிள்ளையாருக்கு ஒரு கோவிலும், அண்ணமாருக்கு ஒரு கோவிலும் அமைத்து கும்பாபிஷேகம் செய்யப்பட்டு இக் கோயில் தற்போது சிறப்பான முறையில் முன்னேறி வருகின்றது. வருடம் தோறும் ஆடி, ஆவணி மாதங்களில் திருவிழா நடைபெற்று சுவாமி வெளிவீதி வருவதுண்டு. பத்து நாட்களும் அடியவர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகின்றது. தற்போது நல்ல நிலையில் வளர்ச்சியடைந்து வரும் இக்கோயிலை மேலும் சிப்படை வதற்கான முயற்சிகளில் ஆன்மீகத்தில் நம்பிக்கையுள்ள இளம் சந்ததியினர் முயற்சிகளை மேற்கொண்டு வருவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். வரவேற்கத்தக்கதாகவும் உள்ளது.

இவ்வாறு எல்லாம் இருப்பினும் கல்வித்துறையில் வளர்ச்சியும் காலப்போக்கில் முன்னேற்றமடைதல் வேண்டும். இக் கிராமத்தில் தற்போது பெண் பிள்ளைகளே கூடுதலாக உயர் கல்வியினை மேற்கொண்டு பொருளியலாளராகவும், பொறியியலாளர், கலைப் பட்டதாரி ஆசிரியராகவும், சமூர்த்தி உத்தியோகத்தராகவும், கடமையாற்றி வருவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். கல்வி வளர்ச்சியின் மூலம் சகல வளங்களும் பெருகும் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை.

"
நான் உயிரோடு
இருப்பதற்கு, என்
தந்தைக்குக்
கடமைப்பட்டிருக்கிறேன்.
ஆனால், சிறப்பாக
வாழ்வதற்கு என்
ஆசிரியருக்குக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

**- மாவீரன் அலெக்சலாண்டர்**
"







**திரு. வே. சிவசிதம்பரம்**
ஓய்வுநிலை அதிபர்.
துன்னாலை மத்தி. கரவெட்டி.



# திருவருட் சிறப்போங்கு
# துன்னாலை எனும் திருவூர்

வடமராட்சி பகுதி பார் போற்றும் ஒரு பூமியாக கல்வி, வீரம், விவசாயம் எனப் பல முயற்சிகள் நிறைந்த பிரதேசமாகும். அது வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகம், வடமராட்சி வடக்கு பிரதேச செயலகம், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகங்களைத் தன்னகத்தே கொண்டது. இங்கு வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகம் 33 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கி உள்ளது. கடந்த காலத்தில் ஒன்றாக இருந்த பல கிராம அலுவலர் பிரிவுகள் பிரதேச அபிவிருத்தியைக் கருத்திற்கொண்டு இன்று பிரிக்கப்பட்டு காணப்படுகிறது.

எமது ஊர் துன்னாலை எனும் சிறப்பு பெயர் பெற்றது. இக் கிராமம் இன்று துன்னாலை மேற்கு, துன்னாலை மத்தி - துன்னாலை, துன்னாலை கிழக்கு, துன்னாலை தெற்கு என 05 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடங் கலாக உள்ளது. இக்கிராமத்தின் கிழக்கே அமைந்து புளியங்கையான் பிள்ளையாரும் வடக்கு அமைந்து எல்லையாகக் காரைக்கூடல் வைரவரும் மேற்கு அமைந்து ஞானவைரவரும் தெற்கே தில்லையம்பலப் பிள்ளையாரும் உள்ளனர்.

துன்னாலை என இக்கிராமத்துக்குப் பெயர் வர பல்வேறு காரணங்கள் கூறப்படுகிறது. துன்னாலை என்றால் துன் + ஆலயம் எனப் பொருள்படும். இங்கு துன் என்பது நெருக்கம் எனவும் ஆலயம் என்பது கோவில்கள் எனவும் பொருள்படும். எனவே கோவில்கள் நெருங்கிக் காணப்பட்டமையால் இப் பெயர் மருவி துன்னாலை எனப் பெயர் பெற்றதாகவும் அறியக்கிடக்கிறது.

டச்சுக்காரர் காலத்தில் வடக்கே உள்ள பருத்தித்துறையை மையமாகக் கொண்ட பகுதிகளில் பருத்தி உற்பத்தி, புடைவை கைத்தொழில் அங்கு நடைபெற்று வந்தது எனவும் இதன்போது இங்கு வாழ்ந்த துன்னர் எனப்படும் தையற்காரர் பெரிதும் வாழ்ந்து வந்தனர் எனவும் அவர்கள் தையல் தொழில் சம்பந்தமான ஆலைகளை நடாத்தியமையால் "துன்னர் ஆலை" என அவை அழைக்கப்பட்டு இக்கிராமம் துன்னாலை எனப் பெயர் மருவிப் பெற்றது எனவும் ஒரு சாரார் கூறுகின்றனர். மேலும் இங்கு சுன்னாகத்தில் இருந்து நெசவு தொழில் செய்பவர்கள் இங்கு வந்து வாழ்ந்தார்கள் என்றும் கூறப்படுகிறது. மேலும் இங்கு கரும்புச் சாலைகள் நிறைந்து காணப்பட்டமையால் இப்பெயர் வந்தது எனவும் கூறுவர்.

ஏறக்குறைய 04 சதுரகிலோ மீற்றர் பரப்பு உடையதாக 1349 குடும்பங்கள் இங்கு வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் விவசாயிகளாகவும் ஏறக்குறைய 520 பேர் அரச தொழில் புரிவோராகவும் உள்ளனர். அரச தொழில் எனக் கருதின் வைத்தியர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், வங்கியலாளர்கள், கிராம அலுவலர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பல்வேறு தரப்பினர் அன்னியோன்யமாக ஒற்றுமையுடன் ஊர் கூடி தேர் இழுத்தாற்போல சிறப்புற்று வாழ்கின்றனர்.

**குடித்தொகை பரம்பல்**

| கிராமம் | ஆண் | பெண் | மொத்தம் | அரச தொழில் | குடும்ப எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| துன்னாலை மத்தி | 299 | 319 | 618 | 111 | 232 |
| துன்னாலை | 329 | 345 | 674 | 057 | 263 |
| துன்னாலை கிழக்கு | 606 | 618 | 1224 | 61 | 398 |
| துன்னாலை தெற்கு | 766 | 882 | 1648 | 60 | 456 |

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் எனும் முதுமொழிக்கேற்ப எம் மக்களால் பின்வரும் ஆலயங்கள் பூசை வழிபாடு செய்யப்பட்டு சிறப்புறப் பராமரிக்கப் பட்டு வருகின்றன.

**1) பிள்ளையார் ஆலயங்கள்**

- வல்லியானந்தப்பிள்ளையார் ஆலயம்
- கோவிற்கடவைப் பிள்ளையார் ஆலயம்
- வெல்லிக்கந்தோட்டப் பிள்ளையார் ஆலயம்
- புளியங்கியான் சிதம்பர விநாயகர் ஆலயம்
- குடவத்தைப் பிள்ளையார் ஆலயம்
- கொட்டிக்குளிப்பான் விநாயகர் ஆலயம்
- தில்லையம்பலப் பிள்ளையார் ஆலயம்

**2) முருகன் ஆலயம்**

- அல்லையம்பதி முருகன் ஆலயம்
- கலிகைக்கந்தன் முருகன் ஆலயம்

**3) அம்மன் ஆலயம்**

- இந்திரம்மன் ஆலயம்
- துன்னாலை தட்டாம்பதி மனோன்மணி அம்மன் ஆலயம்
- வீட்டம்மன் ஆலயம்
- மரத்தியங்கிரி காளி அம்மன் ஆலயம்
- பத்தினியம்மன் ஆலயம்

**4) சிவன் ஆலயம்**

- துன்னாலை ஸ்ரீ பூதேஸ்வரர் சிவன் ஆலயம்

**5) வைரவர் ஆலயம்**

- காரைக்குளத்தடி வைரவர் ஆலயம்
- தாமரைக்குளத்தடி ஞானவைரவர் ஆலயம்
- கோவிற்கடவை வைரவர் ஆலயம்
- இலந்தைத் தாழ்வு வைரவர் ஆலயம்

இங்கு வாழும் கத்தோலிக்க சமயத்தவர்கள் தமது வழிபாட்டுக்குள் கத்தோலிக்க தேவாலயம் ஒன்றை சோழியவத்தையில் கட்டியெழுப்பி ஞாயிறு தோறும் சிறப்பு வழிபாடுகளை நடாத்திப் பூசித்து வருகின்றனர்.

மக்களின் கல்விப் பசியைப் பூர்த்தி செய்யும் முகமாக இங்கு பாடசாலைகள் அமைக்கப்பட்டு உள்ளன. குறிப்பாக பின்வரும் பாடசாலைகள் சிறப்பாக செயற்பட்டு வருகின்றன.

- துன்னாலை காசிநாதர் பாடசாலை (1-5)
- துன்னாலை மெதடிஸ்த மிசன் பாடசாலை (1-5)
- துன்னாலை தெற்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை

எமது பிரதேசத்தில் அமைந்துள்ள கீழ் குறிப்பிடும் பகுதியில் அமைந்துள்ள குளங்கள் மழைநீரைச் சேமித்து நீர் வளத்தைக் காப்பாற்றுகின்றன.

- துன்னாலை தெற்கு கிராம அலுவலர் பிரிவு - 08 குளங்கள்
- துன்னாலை கிழக்கு கிராம அலுவலர் பிரிவு - 06 குளங்கள்
- துன்னாலை மேற்கு கிராம அலுவலர் பிரிவு - 01 குளங்கள்

மேற்குறிப்பிட்ட நீர் நிலைகள் நிலத்தடி நீரைப் பெறும் அதேசமயம் கால்நடைகளுக்கும் பயன்படுகின்றன.

முன்பள்ளிப் பிள்ளைகளைப் பயிற்றுவிக்கும் முகமாக இங்கு முன்பள்ளிகள் செயற்பட்டு வருகின்றன. இவர்கள் பிள்ளைகளின் இயல், இசை, இரசனையை வளர்த்துப் பணியாற்றுகின்றன. அந்த வகையில் பின்வரும் முன்பள்ளிகள் அமைந்துள்ளன.

1. கோவிற்கடவை முன்பள்ளி
2. அல்லையம்பதி முன்பள்ளி
3. ஸ்ரீ மித்திரன் முன்பள்ளி
4. கலிகைக்கந்தன் முன்பள்ளி
5. துன்னாலை பூதவராயர் முன்பள்ளி

**விவசாய பீடம்**

துன்னாலை தென்கிழக்கு கமக்காரர் அமைப்பு, துன்னாலை தெற்கு கமக்காரர் அமைப்பு, துன்னாலை மத்தி கமக்காரர் அமைப்புக்களை கொண்டதாக ஏறக்குறைய 570 ஏக்கர் நிலப்பரப்பில் நெற்பயிர்செய்கை 1025 விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ் விவசாயிகளுக்கு வழிகாட்டல் உதவிகளை கரவெட்டி கமநல அபிவிருத்தி நிலையமும், கரவெட்டி பிரதேச செயலகமும் ஊக்குவிக்கின்றன. ஆனைவிழுந்தான், காட்டுவயல், கொடிகாடு என்பவற்றை உள்ளடக்கியதாகவும் துன்னாலை தெற்கு பகுதியில் கிளான், கரண்டாது, இலந்தத்தாழ்வு, வண்ணாகராஞ்சி, அவலப்புலம், தம்பான், தில்லையம்பலம், மாது கிழக்கு விவசாய நிலப்பரப்புக்கள் அமைந்துள்ளன. துன்னாலை மத்தி அதிகளவில் தோட்டப்பயிர்செய்கை மேற்கொள்ளும் பகுதியாக அமைந்து காணப்படுகிறது.

**தென்னை பயிர்ச்செய்கை**

கரவெட்டி கமநல சேவை நிலையத்தின் ஒரு பிரிவாக இயங்கும் தென்னை பயிர்ச் செய்கை நிலத்தின் கீழ் துன்னாலை கிராம அலுவலர் பிரிவிலும், துன்னாலை கிழக்கு கிராம அலுவலர் பிரிவிலும் இரண்டு கப்புறு சங்கங்கள் செயற்பட்டு வருகின்றன. இவர்கள் குறிப்பிட்ட பகுதிகளில் தென்னைப் பயிர்ச்செய்கையினை ஊக்குவிப்பதிலும் தென்னை உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதிலும் முனைப்பாகச் செயற்பட்டு வருகின்றன.

**கிராம முன்னேற்ற கழகங்கள்**

துன்னாலை மத்தி, துன்னாலை, துன்னாலை கிழக்கு, துன்னாலை தெற்கு பகுதியில் இயங்கும் கிராம முன்னேற்ற சங்கங்கள் அப் பிரதேச அபிவிருத்திக்காக சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றன. அப்பகுதியில் உள்ள பெண்களின் முன்னேற்றம் கருதி அவை செயற்பட்டு வருகின்றன.

**சமுர்த்தி சங்கங்கள்**

இப் பகுதியில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களின் அடிப்படைத் தேவைகளை

ஓரளவு பூர்த்தி செய்யுமுகமாக துன்னாலை சமுர்த்தி சங்கம் ஒன்று துன்னாலை கிராம அலுவலர் பகுதியில் இயங்குகிறது. இங்கு சமுர்த்தி வங்கி ஒன்றும் அமைந்துள்ளது. குறிப்பிடத்தக்கது.

**கழிவுகள் மீள்சுழற்சியும்**

வீட்டில் சேரும் உக்கக்கூடிய கழிவுகளைச் சேகரித்து அவற்றைத் தரம் பிரித்து கூட்டுப் பசளையாக்கும் ஒரு தொழில் மையம் துன்னாலை கிழக்குப் பகுதியில் முள்ளி பிரதேசத்தில் அரசின் உதவி பெற்று அமைத்து கரவெட்டி பிரதேச சபையினால் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றது. இவர்கள் உற்பத்தி செய்யப்படும் கூட்டுப் பசளையினை விவசாயிகளுக்கு குறைந்த விலையில் விநியோகித்து வருகின்றன.

**சனசமூக நிலையங்கள்**

மக்களின் ஓய்வு நேரங்களைப் பயனுறுதிமிக்க முறையில் பயன்படுத்தவும், வாசிப்பு ஆற்றல, பொது அறிவை வளர்க்கு முகமாகவும் சனசமூக நிலையங்கள் செயற்படுகின்றன. அந்த வகையில்,

1. கோவிற்கடவை சனசமூக நிலையம்
2. அல்லையம்பதி சனசமூகநிலையம்
3. இந்திரன் அம்மன் சனசமூகநிலையம்
4. வல்லியானந்தம் சனசமூகநிலையம்
5. கொட்டிக்குழப்பான் சனசமூக நிலையம்

என்பன இயங்குகின்றன.

**விளையாட்டுக் கழகங்கள்**

இளைஞர் இடையே விளையாட்டுத் திறனை வளர்க்கவும் உடல், உள வளர்ச்சியைப் பேணவும் விளையாட்டுக் கழகங்கள் அமைந்துள்ளன.

1. வல்லியானந்தம் விளையாட்டுக்கழகம்
2. கோவிற்கடவை விளையாட்டுக் கழகம்
3. கொட்டிக்குழப்பான் விளையாட்டுக்கழகம்

என்பன இதில் பெரும்பங்காற்றுகின்றன.

ஒரு கிராமத்தின் வளர்ச்சி அங்கு வாழ் மக்களின் பொருளாதார அபிவிருத்தியுடன் இணைந்ததே. மக்களின் ஆன்மீக ஈடேற்றம் கருதி ஆலயங்கள் காணப்படுவதும் சிறப்பு அம்சமாகும். அதேபோன்று இளையோர்களின் ஓய்வுநேர பண்பாட்டுக்கு என நூலகங்கள், விளையாட்டு கழகங்கள் காணப்படுவது இக் கிராமத்தின் சிறப்பு. மேலாக துன்னாலை கிராமத்தில் அமைந்து கல்வி கற்கும் மாணவர்களுக்கு கல்லூரிகளால் வழங்கும் கல்விக்கு மேலதிக கல்வியை வழங்கும் முகமாக 'டால்ரன்' கல்வி நிலையம் அரும்பணியாற்றி வருகிறது. 1974 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்கல்வி நிலையம் தரம் 06 முதல் 11 வரையிலான மாணவர்களுக்கு அவர்களின் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்யும் முகமாக 50 ஆண்டுகளுக்கு மேலாகக் கல்விப் பணியாற்றி வருவது யாரும் அறிந்ததே.

மாணவர்களின் ஒழுக்கம் நற்பண்பு, முதியோரை மதித்தல் என்பவற்றைப் பேணுவதில் கற்கும் மாணவர்களை வழிநடத்தி வருவது சிறப்பு அம்சம் ஆகும்.

இவ்வேளை எமது ஊர் துன்னாலை ஆண்டவர்க்குப் பூஜை செய்யும் பிராமணர்கள் சைவக்குருமார்களை ஒரு சிறுதொகையாகக் கொண்டுள்ளது. அந்தவகையில் சாரதா பீடத்தில் வந்து உதித்த பெருமைக்குரிய ராம் தேவலோக சர்மா குருக்களால் வடித்த துன்னாலைக் கிராமம் பற்றிய ஒரு சில வரிகளை இங்கு தருகின்றேன்.

"சீர்மலியும் துன்னாலை சிறப்போங்கு கிராமத்தில்
பன் செழிப்பாற் கனி விருட்சம் பனை தென்னை
என நீராடும் குளத்தினோடு நிமிர் கல்விச்
சாலைகளும் பேர் விளங்கும் பெருமை சேர்
கல்விச் சான்றோரும் பெயர் போற்றும் புத்தி
ஜீவிகளும் நிறை செல்வத் தலங்கள் நிறைந்தது
சிறப்போங்கும் துன்னாலை."

# ஆய்வியல்

**திரு. கிருஷ்ணபிள்ளை நடராசா**
ஓய்வுநிலை அதிபர்.



# மண் பொறிமுறை விஞ்ஞானி

# பேராசிரியர் துரைராசா

## ஆய்வும் நாட்டபிமானமும்

ஒவ்வொரு வருடமும் யூன் மாதம் பதினோராம் திகதியன்று மறைந்த எம் இதயத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் மாமேதையாகிய பேராசிரியர் துரைராசாவை நினைவு கூர்வதில் நாட்டு மக்களாகிய அனைவருமே பெருமையடைகின்றோம். புவிசார் தொழில் நுட்ப பொறியியலாளர்களுக்கும் (Geo Technical Engineers) அத்துறை சார்ந்த ஆய்வாளர்களுக்கும் வழிகாட்டுவதில் சர்வதேச புகழ் வாய்ந்தவர்களாக விளங்கியவர். 1994 ஆம் ஆண்டு யூன் மாதம் பதினோராம் திகதியன்று நவலோகா வைத்தியசாலையில், Cardio Vascular Failure மற்றும் Leukemia வின் தாக்கத்தினால் அத்துன்பகரமான நிகழ்வு ஏற்பட்டதை அறிந்து சர்வதேசமே கலங்கி துன்புற்றது. துரையின் பெருமையை நினைவு கூறும் வகையில் கரவெட்டி பிரதேசசபையும் அவருக்கு முன்னுரிமையளித்து 'பேடகம்" இதழில் இக் கட்டுரையைப் பிரசுரிக்கின்றது.

இலங்கையின் வடபிராந்தியத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் வடமராட்சிப் பகுதியில் கவின் பெறு கம்பர்மலை என்னும் சிறிய விவசாயக் கிராமத்தில் 1934ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பத்தாம் திகதியன்று அழகையா செல்லம்மா தம்பதிகளுக்கு மூன்றாவது குழந்தையாக துரை பிறந்தார். இவரது பேரன் வேலுப்பிள்ளை பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக் காலத்தில் கண்டியில் பிரபல வர்த்தகராக விளங்கியமையால் கம்பர்மலையில் உள்ள முதியவர்கள் இவரைக் கண்டியானின் பேரன் என்றே செல்லமாக அழைப்பர். சிறிது காலத்தின் பின் பிள்ளைகளின் கல்வியைக் கருத்தில் கொண்டு உடுப்பிட்டிக்கு நகர வேண்டியிருந்தது. அக்காலத்தில் வடமராட்சியிலேயே ஆரம்ப இடைநிலைக்கல்விக்கு

பெயர்போன உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியில் அவரது ஆரம்பக் கல்வியும் இடைநிலைக் கல்வியும் இடம்பெற்றது. உயர்தரக் கல்வி கற்பதற்கு தனியுரிமை பெற்று விளங்கிய ஹாட்லிக் கல்லூரிக்குச் செல்ல வேண்டியிருந்தது. அதன் பின்பு 1953ஆம் ஆண்டில் ஆடி மாதம் தனது பட்டப்படிப்பிற்காக கொழும்பு பல்கலைக் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டார்.

கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு பொறியியல் மாணவனாகத் தெரிவு செய்யப்பட்ட போது பல்கலைக்கழக பிரவேசப் பரீட்சையில் எல்லாத்துறைகளுக்குமான மாணவர்களின் அதிகமான புள்ளியைப் பெற்றவர் இவரேயாவர். அதுபோல 1957 ஆம் ஆண்டு குடிசார் பொறியியல் பரீட்சையில் முதலாம் தர சிறப்புச் தேர்ச்சியுடன் சித்தி பெற்றார். இச் சாதனைகள் இதுவரை முறியடிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**பேராசிரியர் துரைராசாவின் ஆய்வுகள் :-**

பேராசிரியர் துரையின் மண் பொறிமுறை தொடர்பான முக்கியத்துவம் பற்றிக் குறிப்பிட வேண்டியது இங்கு அவசியமாகின்றது. தனித்தனியாகக் கட்டப்படும் வீடுகள் முதற்கொண்டு மிகுந்த வானளாவும் நெடுநிலை மாடங்கள் வரையிலான கட்டடங்கள், தொழிற்சாலைகள் போன்ற அனைத்திற்கும் இறுதியான தாங்கும் சக்தி மண்ணிலேயே தங்கியுள்ளது. இது தவிர தரைக்கீழான புகையிரதப் பாதைகள் என அனைத்தும் மண்ணிலேயே தங்கியுள்ளது. இவற்றை நிர்மானிப்பதற்கு மண்ணின் பொறிமுறை தேவைப்படுகின்றது. அந்தந்தப் பகுதிகளுக்குரிய மண்ணின் பொறிமுறையைப் பிரித்து ஆராயாமல் அமைக்கப்படும் கட்டடங்கள் அதிவிரயமுள்ள தேவைக்கதிகமான அளவுப் பரிமானத்தில் அமையாமல் பாவணைக்கு உதவாமல் போய்விடும். ஆபத்துக்கள் ஏற்பட்டு கைவிடப்படும் கட்டடங்களாகவும் அமைந்துவிடும்.

கலிபோனியாவில் இருபத்தேழு மாடியில் அமையும் கட்டடம் ஒன்றின் அத்திவாரமானது கொழும்பில் அதேபோன்ற மாடிக்கட்டடத்தை எழுப்பும் அத்திவாரத்தை ஒத்திருக்காது. மண்ணின் இயல்புகளுக்கேற்பவே அந்தந்த இடத்தில் அத்திவாரமும் அமைய வேண்டும். மிகத் துல்லியமாக மண்ணின் சிறப்பியல்புகளைப் பொறியியலுக்கு ஏற்றாற்போல பகுத்தறியும்போதுதான் மிகவும் குறைந்த செலவில் பாவனைக்கு நிறைவான திட்டங்களைக் கொண்டு வரமுடியும். இதனை தன் வாழ்நாள் முழுவதும் எள்ளளவும் பிசகாமல் செய்து முடித்தவரே பேராசிரியர் துரைராசா. அதனால் அவர் வாழ்வு உலகப் புகழ் பெற்றது.

துரையின் பிரத்தியேகமான திறன்களை இனங்கண்டு கொண்ட கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகத்தின் மண் பொறியியல் துறையில் புகழ்பூத்த பேராசிரியர் KENNETH HARRY ROSCOE அவர்கள் இவரைத் தனது ஆய்வாளனாக இலங்கைப் பல்கலைக்கழகம் வழங்கிய புலமைப்பரிசில் அடிப்படையில் மண்ணின் தன்மைகள் (Shear Properties of Soils) பற்றி ஆராய்வதற்குத் தேர்ந்தெடுத்துக்கொண்டார். மண்ணின் மீது விசையொன்றைப் பிரயோகிக்கும்போது மண் துணிக்கைகள் ஒன்றுடன் ஒன்று உராய்வதற்கு உட்படும். விசை படிப்படியாகக் கூடும்போது ஒரு நிலையில் உள்ள மண் துணிக்கைகள் ஒன்றை விட்டு ஒன்று விலகி விசை தாங்கும் சக்தியை இழக்கும். இது மண்ணுக்கு மண் வேறுபடும். வேவ்வேறு இடங்களில் உள்ள மண்ணுக்குரிய இவ் இயல்புகள் துரை அவர்களால் பொறியியலுக்குத் தேவைப்படும் அளவீடுகளில் கண்டறியப்பட்டது.

1958 ஆம் ஆண்டிலிருந்த 1961ஆம் ஆண்டு வரை மேற்கொண்ட ஆய்வு அவருக்கு கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் கலாநிதிப் பட்டத்தினைப் பெற்றுக்கொடுத்ததோடு சர்வதேச ரீதியான புகழையும் பெற்றுக்கொடுத்தது. கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் சர்வதேச புகழ்பெற்ற பேராசிரியர்களான ANDREW SCHOFIELD, PETER WROTH போன்றவர் களுடன் இணைந்து செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது. பேராசிரியர் Schofield துரையின் ஆய்வு 'Thurairajah Energy Dissipation Function' என்பதை புதிய கண்டுபிடிப்பு என புகழ்ந்துரைத்தார்.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் விரிவான சோதனை மற்றும் ஆராய்ச்சிக்குப் பிறகு துரை அறிமுகப்படுத்திய "துரைராஜா ஆற்றல் சிதறல் செயற்பாடு என்பது" திண்மப் பொருட்களின் மீது சக்தியொன்றைப் பிரயோகிக்கும்போது அது பழைய நிலைக்கு மீளாதிருப்பதும், அதன்போது ஏற்படும் சக்தி விரயம் பற்றியதுமான ஒரு ஆய்வாகும். இது மண்ணின் வெட்டுப் பண்புகள் தொடர்பான சில அழுத்தமான சிக்கல்களைத் தீர்க்கும் ஒரு கண்டுபிடிப்பாகும். திண்மங்களின் முக்கியமாக மண்ணின் சக்தி ஒன்று பிரயோகிப்பதால் ஏற்படும் மாற்றங்கள் தொடர்பான கற்கை நெறிக்கோட்பாடே Cam Clay Models என்பதாகும். இது எதிர்கால மண் பற்றிய ஆய்வுகளுக்கு உந்து விசையாகவும் அமைந்தது மட்டுமன்றி புவிசார் தொழில்நுட்ப பொறியியல் உபகரணமொன்றின் மைற்கல்லாகவும் கருதப்பட்டது.

Cam clay models ஆனது துரையின் ஆற்றல் சிதறல் செயற்பாடு மற்றும் காலடைனின் பிளாஸ்டிக் ஓட்ட வளைவுகளை அடிப்படைப்படையாகக் கொண்டது. துரையின் ஆற்றல் சிதறல் செயற்பாட்டைக் கருப்பொருளாகக் கொண்டு உருவாக்கப்பட்ட மண்ணின் வெட்டுப் பண்புகளை அளவிடும் உபகரணமானது (Simple Shear Apparatus) மண் பற்றிய எதிர்கால ஆய்வுகளுக்கு ஒரு உந்து சக்கியாக அமைந்தது.

இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் துரைராசா முதற் தடவையாக, இறுதி வருட மாணவர்களுக்கு ஓர் கற்கைநெறியாக 1962ஆம் ஆண்டு மண் பொறிமுறை தொடர்பான பாடப்பரப்பொன்றினை அறிமுகப்படுத்தினார். அவரது மாணவர்களின் ஒருவரான முன்னாள் பேராசிரியர் B.L தென்னக்கோன், "Professor Thurairajah can rightly be called father of Soil Mechanics in Sri Lanka. Thurai working alongside with Prof Andrew Schofield and Peter Wroth developed a constitutive model and Granta gravel models for soft clays and gravelly soils. These are now well-known Cam clay model and Granta Gravel model terms after two rivers Cam and Granta flowing through Cambridge". எனக் கூறியமை நினைகூறத்தக்கது.

பேராதனை பல்கலைக்கழகத்தில் சர்வதேச ரீதியிலான ஆய்வுகூடமொன்று 1965ஆம் ஆண்டு இவரால் உருவாக்கப்பட்டது. அவ் ஆய்வுகூடத்தில் தனது பிறந்த ஊரான கம்பர் மலை மண் வகையினை காட்சிப்பொருளாக வைத்துள்ளார். பட்ட மேற்படிப்புக்கு Soil Mechanics and Foundation என்ற பாடத்திற்கான ஓர் கலைத்திட்டத்தையும் (Curriculum) உருவாக்கியுள்ளார். மாணவர்களை ஆய்வாளர்களாக வரவேண்டும் என ஊக்குவித்து வழிகாட்டுவதில் இவருக்கு நிகரானவர்கள் எவருமேயில்லை.

பேராசிரியர் குமார்டேவிற் என்பவர் "Nearer my age, there was brave Alagiah Thurairajah, blue-eyed boy of the academic record-books and founder of the research culture in the faculty of Engineering, Peradeniya who I am proud to call friend, colleague, and comrade". எனக் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பேராசிரியர் துரைராஜாவின் நிபுணத்துவம் சார்ந்த பல ஆலோசனைகள் இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு இன்றியமையாத வகையில் பங்களிப்புச் செய்தன. சில உதாரணங்களாகத் தரப்படுகின்றன.

I. இலங்கையில் அத்திவாரங்கள் சம்பந்தமாக எழுந்த பல்வேறு பிரச்சனைகளுக்காக மண்ணின் தன்மைகளை அறியும் சோதனைகளை நடாத்தி சம்பந்தப்பட்ட இடங்களிலும் ஆய்வு கூடங்களை நிறுவி நிபுணத்துவ அறிக்கைகள் தயாரித்தவர்.

II. மண் அணைகள், மேலதிகமான நீரைச் சீராக வழிந்து ஓடக்கூடிய வெள்ளத் தடுப்புக்கள், நீர்பாசன வாய்க்கால்கள், போன்றவற்றை உள்ளடக்கிய 'கந்தளாய் கீன் கங்கா' திட்டத்தின் (HEEN GANGA PROJECT) கட்டுமானத்துக்கான நிபுணத்துவராக செயலாற்றியமை. பேராசிரியர் துரையின் ஒப்புதல் இல்லாவிடின் இத்திட்டத்திற்கு உதவியளிக்க முடியாது என இத்திட்டத்திலிருந்து உதவிய வெளிநாட்டு நிறுவனம் ஒன்று வற்புறுத்தியிருந்ததிலிருந்து மண் பொறிமுறையில் சர்வதேச ரீதியாக அவர் பெற்ற புகழை எடுத்துக் காட்டியது.

III. சப்புகஸ்கந்தையில் உள்ள உரக் கூட்டுத்தாபனத்தின் யூரியா உரத் தயாரிப்பு தொழிற்சாலையின் அத்திவார வேலைகளுக்கான மண்பொறியியல் ஆலோசகராகப் பணியாற்றியமை.

IV. கண்டியில் உள்ள ஹன்ரோன் மலைச் சாய்வில் கட்டப்பட்ட வீட்டுத் திட்டங்களின் அத்திவார பொறியியல் ஆலோசகராக பணியாற்றியமை.

V. வீட்டுத்திட்ட நிர்மாண வேலைகளுக்கான உள்ளூராட்சி அமைச்சின் தொழில்நுட்பக் குழுவின் தலைவராக இருந்து வானளாவிய கட்டட நிர்மானத்திற்கு ஆலோசனை வழங்கியதோடு அமையாது கண்காணிப்பு வேலையிலும் ஈடுபட்டமை.

VI. மட்டக்குளியாவின் காக்கை தீவில் சதுப்பு நிலத்தில் அமையப்பெற்ற வீட்டுத் திட்டத்திற்கு ஆலோசனை வழங்கியமை.

VII. இலங்கை தேசிய கட்டட ஆய்வு சம்மேளனத்தின் மண் பொறியியல் ஆலோசகராகப் பணியாற்றியமை.

பேராசிரியரது ஆய்வு அனுபவங்கள் பின்வரும் வழிகளிலும் காணப்பட்டது.

I. பொறியியலுக்குத் தேவைப்படும் மண்ணின் தன்மை சார்ந்த இயல்புகளை அலகுகளில் அளவிடல்.

II. களிமண்ணுக்கு உரித்தான தனிப்பட்ட பண்புகளான நீரை வெளிவிட்டு ஒடுங்குதல் மற்றும் வீங்குதல் போன்ற சிறப்பியல்புகளை அலகுகளில் அளவிடல்.

III. பொறியியலில் தேவைப்படும் பாறைகளின் எச்சங்களாக விடப்பட்ட மண்ணின் இயல்புகளை அளவிடல்.

IV. இலங்கைப் பல்கலைக்கழகம், வாட்டர்லூ பல்கலைக்கழகம் (கனடா) இலங்கை திறந்த பல்கலைக்கழகம் போன்றவற்றில் பட்ட மேற்படிப்பிற்கான ஆய்வாளர்களை ஊக்குவித்தமை.

இலங்கை தேசிய கல்விக்கழகம், இலங்கை குடிசார் பொறியியல் நிறுவனம் இவற்றில் காலத்திற்கு காலம் தலைமை தாங்கி நிபுணத்துவத்தின் வழிகாட்டியாகவும் இருந்திருக் கின்றார். இந்த இடத்தில் இவரது மாணவர் கலாநிதி A.P. நிமால் சோமரத்னா யாழ் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற நினைவுப்பேருரையில் (11.11.2019), "Today in many Universities in Sri Lanka. As Well As Around the world his Students occupy important positions – Mainly in Geotechnical Engineering, To my Knowledge There is no other Acadamic in Sri Lanka - At Least in Engineering - Who has Promoted at Many Students for Graduate Studies". எனக் கூறியுள்ளமை இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கது.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் பேராசிரியர் துரைராசாவும் :–**

யாழ் பல்கலைக்கழகம் தன்னை நெறிப்படுத்த, தலை சிறந்த ஒருவரை உள்வாரியாகத் தெரிவு செய்ய முடியாத நிலையில் வெளியிலிருந்து ஒருவரை வரவழைக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது. இதன் விளைவாக யாழ் பல்கலைக்கழகப் பேரவை பேராசிரியர் துரைராசாவைத் துணை வேந்தராக அழைக்க முடிவு செய்தது.

இருள் சூழ்ந்த காலம்; வாகனப் போக்குவரத்து வசதிகளோ, மின்சார வசதிகளோ இல்லாத காலம்; குண்டு வீச்சுக்களுக்கும், செல் தாக்குதல்களுக்கும் குறைவேயில்லாத காலம்; யாழ் குடாநாட்டின் மக்கள் பரம்பல் இடப்பெயர்வுகளினாலும், புலம் பெயர்வுகளி னாலும் நன்றாகக் குறைந்துவிட்ட காலம்; வடக்கு கிழக்கில் இலங்கை அரசின் அனுமதி யுடன் இந்திய அமைதிப்படை ஆக்கிரமிக்கப்பட்ட காலம் இத்தகைய நெருக்கடியிலிருந்த ஒரு காலகட்டத்தில் இவரது வருகை பற்றி முன்னாள் மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் பாலசுப்பிரமணியம், "பலரையும் கவர்ந்த இலண்டன் மாநகரம் பேராசிரியர் துரையைக் கவர முடியவில்லை. அதனால் பெயர், புகழ், பணம் என்பவற்றைவிட ஈழத்து மண்ணும் மக்களும்தான் மேன்மேலும் அவரை ஈர்த்தன. அதன் விளைவுதான் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தராக அவர் பதவி ஏற்றமை" எனக் குறிப்பிடப்பட்டமை இங்கு நினைவு கூரத்தக்கது.

எமது நாடே உள்நாட்டு யுத்தம், இந்திய ஆக்கிரமிப்பு, மக்களின் இடப்பெயர்வு, விலைவாசி உயர்வு போன்ற தாங்க முடியாத நெருக்கடி நிலையில் கதாநாயகன் பாத்திரம் ஏற்று வந்த ஓர் தன்னிகரில்லாத தலைவனாகவே காட்சியளித்தார். ஏனெனில் கொழும்பின் சுகபோக வாழ்வை மறந்து தனது பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிய சிந்தனைகளையும் துறந்துதான் தமிழ் மக்களின் உயர்கல்வியைப் பாதுகாப்பதற்காக யாழ் வந்தார். இதனை அரச போகங்களைத் துறந்து இராமர் வனவாசம் சென்றதுபோல பேராசிரியர் துரையும் சுகபோகங்களையும் துறந்து யாழ் வந்தார் எனக் ஒப்பிட்டு ரீதியில் கூறலாம்.

போர்ப்பிராந்தியத்தில் அமைந்த பல்கலைக்கழக நிர்வாகத்தை ஏற்றமையால் ஏற்பட்ட உடல், உள தாக்கங்கள் அவரது உடல் நலத்தினைப் பாதித்தது உண்மை. ஆனால், அவர் அதனை வெளிக்காட்டவேயில்லை. கடமை வீரர் என்பதனால் ஒரு பல்கலைக்கழக உபவேந்தர் ஐம்பத்தெட்டு வயதில் முப்பது கிலோமீற்றர் தூரம் துவிச்சக்கரவண்டியில் பிரயாணம் செய்வது என்பதை ஏற்றுக்கொள்ளலாமா? அதுவும் உலகப் புகழ்பெற்ற ஒரு மண் பொறியியல் விஞ்ஞானி தான் பிறந்து வளர்ந்த நாட்டுக்காக உழைத்த உழைப்பையே நாட்டபிமானம் என்கின்றோம். தம்மைச் சுற்றி சூழ்ந்திருந்த எல்லாமே பற்றியெரிந்து கொண்டிருக்கின்ற வேளையில் பல்கலைக்கழக நிர்வாகத்தை இயக்குவது என்பது எவராலுமே முடியாது. அது சாதாரண சாதனையன்று இவர் சாதித்த விடயங்கள் வேறு எந்த துணைவேந்தராலும் பாதுகாப்பான சூழல் என்று கருதப்படும் கொழும்பிலும்கூட மேற்கொள்ள முடியாது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடமொன்றினை உருவாக்க வேண்டும் என்பதில் கடுமையாக உழைத்தவர். ஒரு குழுவின் மேற்பார்வையில் அப்பீடம் தொடர்பான திட்டங்களை உள்ளடக்கிய அறிக்கையொன்று 1990 ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டது. அவரது முயற்சிகள் 1998 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக ஆணைக்குழுவினால் ஏற்கப்பட்டு பொறியியற்பீடம் யாழ் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டது. தான் மேற்கொண்ட கடின உழைப்பின் அறுவடையைக் காண அவர் இவ்வுலகில் இல்லாமற் போனது கவலைக்குரியதே.

1990 ஆம் ஆண்டு யாழ் பல்கலையில் நிறுவப்பட்ட விவசாயத்துறை அவரது தூரப் பார்வையில் ஏற்பட்ட முயற்சியாகும். இது பற்றி பேராசிரியர் கு.மிகுந்தன் அவரது நினைவுப் பேருரையின்போது பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். விவசாயபீடம் 1990ஆம் ஆண்டு மார்கழி மாதம் மூன்றாந் திகதி ஊரடங்கியிருந்த வேளையில் பேராசிரியர் துரையினால் நாடா வெட்டி ஆரம்பிக்கப்பட்டபோது உடன் இருந்தவர்களில் நானும் ஒருவன் என்ற வகையில் என்றென்றும் பெருமைப்படுவதோடு, தூரநோக்கும் தீர்க்க தரிசனமும் கொண்ட இப் பெருமகனின் செயற்பாடுகளில் விளைந்த முத்தே விவசாயபீடத்தின் ஜனனம் என்று கூறியுள்ளார். (துரையின் 18 ஆவது நினைவுப் பேருரை வெளியீடு, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, பழைய மாணவர் சங்கம்).

பேராசிரியர் துரையின் மிக முக்கியமானதொரு செயற்பாடு யாதெனில், ஒவ்வொரு வருடமும் இருநூறு வறிய மாணவர் பயன்பெறும் வகையில் துணைவேந்தர் நிதியம் ஒன்றை உருவாக்கியிருந்தார். நிதியத்தைப் பன்மடங்கு அதிகரிப்பதற்கு தனது பொறியிய லாளராகிய மாணவரிடமிருந்தும், நலன்விரும்பிகளிலிருந்தும் பணம் திரட்டி மாணவர் நலனில் அக்கறைகொண்ட பேராசிரியர்கள் இவரைப்போல இருப்பார்கள் என்று என்னால் துணிந்து கூறமுடியாது. அது மாத்திரமன்றி பல்கலைக்கழக ஊழியர்களுக்கும், கல்விசார், சாராத உத்தியோர்களுக்கும், இடர் கொடுப்பனவு வழங்குவதில் பல்கலையின் தன்னாட்சியை துணிவுடன் செயற்படுத்தியவர். பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் ஆய்வுகளை மேற்கொண்டு அவற்றை நூல் வடிவம் பெற நோர்வே நாட்டின் உதவியைப் பெற்று அச்சுக்கூடமொன்றை உருவாக்கியவர்.

பல்கலைக்கழகங்களின் பணி வெறும் பட்டங்களை மட்டும் வழங்குவதாக அமையக் கூடாது. பிரதேச மக்களின் சமூக பொருளாதாரத்திற்குப் பங்களிக்க வேண்டுமென்பதே அவரது குறிக்கோள். இவ்வகையில் உயர் தொழில்நுட்பம் (Bio Technology) தகவல்

தொழில்நுட்பம் ஆய்வு மனப்பாங்கு போன்றவற்றை வளர்ப்பதற்கு யாழ் பல்கலைக் கழகத்தை மேலை நாட்டுப் பல்கலைக்கழகத்துடன் இணைத்துக் கொண்டார். பல்கலைக் கழகத்தின் அறிவுவளம், ஆளணிவளம் என்பவற்றைப் பயன்படுத்தி சமூகம் பயனடைய வேண்டும் என்பதற்காக தொழிலாளர் கல்வி, புறநிலைப் படிப்பு அலகு என்பவற்றைத் தொடக்கி வைத்தார்.

யாழ் பல்கலையில் சைவ சித்தாந்ததுறையொன்று உருவாக்கியமை. விளையாட்டுத் துறையினை விருத்தி செய்வதற்காக விளையாட்டுத்துறை பிரிவொன்றை உருவாக்கி உபவேந்தரின் நேரடிக் கண்காணிப்பில் கொணர்ந்தவர்.

பாடசாலைக் கல்வி மட்டத்தில் உயர்தரப் பெறுபேறுகள் விஞ்ஞானத்துறையில் குறைந்து வருவது கண்டு மாணவர் மத்தியில் விஞ்ஞான கலாசாரம் ஒன்றை வளர்ப்பதற்காக விஞ்ஞானக் கழகம் ஒன்றை உருவாக்கியிருந்தார். அதன் முதல் தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டார். விஞ்ஞான கண்காட்சிகள் ஊடாகவும் விஞ்ஞானம் சார் போட்டியூடாகவும் விஞ்ஞான அறிவையும் செயற்திறனையும் வளர்த்தவர்.

யாழ் பல்கலைக்கழக மாணவரோ, விரிவுரையாளர்களோ, உறவினர்களோ எவராயினும் இலங்கை இராணுவத்தினால் அல்லது இந்திய அமைதிப்படைகளால் கைது செய்யப் பட்டால் அவர்களை விடுவிப்பதற்காக தன் உயிரையும் பொருட்படுத்தாது போராடி மீட்ட பெருமை இவருக்குரியது. தந்திரமாகப் பேசி பகைவரையும் சிரிக்க வைக்கும் அவரது பேச்சுத்திறன் மிகப் பிரசித்தமானது.

**ஊற்று நிறுவனமும் பேராசிரியரும் :–**

தமிழ் ஈழப் பிரதேசத்தின் அபிவிருத்திக்காக 1981ஆம் ஆண்டு ஊற்று நிறுவனத்தை உருவாக்கி அதன் தலைவராகச் செயற்பட்டு அவரது முயற்சியினால் அபிவிருத்தித் திட்டங்கள் செயற்படுத்ததப்பட்டன. ஊற்று நிறுவன இயக்கத்தில் அவரது மாணவர் திரு.பொ.விக்னேஸ்வரன் அவருக்கு உறுதுணையாக இருந்து செயற்பட்டவர். யாழ் குடா நாட்டின் தரைக்கீழ் நீர் சேமிப்பை ஊக்குவிக்கும் வழியாக இருநூறு குளங்களின் வண்டல் மண் அகற்றும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. NORAD நிறுவனத்தின் உதவியுடன் இவை மேற்கொள்ளப்பட்டு வந்தன. ஐக்கிய அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி திட்ட நிதி உதவியோடு பின்தங்கிய கிராமங்களின் வறுமை ஒழிப்புத்திட்டம் மேற்கொள்ளப்பட்டு கெயர் தாபனத்தின் உதவியும் பெறப்பட்டது.

1990ஆம் ஆண்டின் பின் அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கும் நிபுணத்துவ குழுவிற்கும் தலைமை தாங்கி வழிநடத்தியவரும் இவரே.

**பேராசிரியர் துரை வகித்த பதவிகள் :–**

நாட்டபிமானம் கொண்ட பேராசிரியர் துரையின் வாழ்நாட்காலங்கள் பெருமளவு பல்கலைக்கழகத்தோடுதான் தொடர்புபட்டிருந்தன. இந் நாட்டின் அபிவிருத்தியைக் கட்டி யெழுப்புவதில் அவரது பொறியியற்துறை பட்டதாரி மாணவர்களின் பங்கு அளப்பரியது. எனினும் அவரது பதவிகள் தொடர்பான விபரங்களைச் தரவேண்டியது இங்கு பொருத்த மானதாக அமைகின்றது.

- போதனாசிரியர் - இலங்கை பல்கலைக்கழகம், பொறியியற்துறை
- உதவிப் பொறியியலாளர் - பொதுவேலைப் பகுதி திணைக்களம்
- வருகை தரும் பேராசிரியர் - வாட்டர்லூ பல்கலைக்கழகம், கனடா
- பேராசிரியர் - குடிசார் பொறியியற்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.
- பீடாதிபதி - பொறியியற் பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.
- வருகை தரும் பேராசிரியர் - பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகம், கனடா
- உபவேந்தர் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
- Member of the Trusties - Janasaviya Trust Fund. Hember of the Tertiary and Vocational Education Commission.

**முடிவுரை :–**

கற்றறிந்தோர் பலர் தமது வாழ்விற்கும் வசதிக்குமாக வெளிநாடுகளில் புகலிடம் தேடும் நெருக்கடியான காலத்தில்

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்ற வானிலும் நனி சிறந்ததன்றே"

என்ற உயரிய விழுமியத்தோடு நாட்டை நேசித்தவர் எத்தனையோ பிரசித்தி பெற்ற பல்கலைக்கழகங்கள் அவரை வாவென்று அழைத்தபோதும்,

"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே"

என்பதற்கேற்ப அதனை மறுத்து மன மகிழ்வுடன் பிறந்தநாட்டை நேசித்த மாமனிதன்

" உள்ளத்தால் பொய்யாதொழுகின் உலகத்தார்
உள்ளத்து எல்லாம் உளன்"

வேத முனிவர் வள்ளுவர் தனை சிந்தித்து பல நிறுவனங்கள் விருது வழங்கி அவரைக் கௌரவித்த சம்பவங்கள் பல உள்ளன. விரிவஞ்சி ஒரு சிலவற்றை இங்கு குறிப்பிடுகின்றேன்.

- கொழும்பு பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதிப்பட்டத்தினை வழங்கியுள்ளது.
- திறந்த பல்கலைக்கழகம் விஞ்ஞான மாமேதை (Doctor of Science) என்ற பட்டத்தை வழங்கியிருந்தது.
- யாழ்ப்பாண பல்கலைக்கழகமும் விஞ்ஞான மாமேதைப் (Doctor of Science) பட்டத்தை வழங்கியிருந்தது.
- அகில இலங்கை கம்பன்கழகம் மிக உயரிய விருதாகிய 'மகரயாழ்' விருதினை வழங்கி கௌரவித்திருந்தது.

- இவற்றிற்கு மேலாக உயர்திரு.வே. பிரபாகரன் அவரது கல்விச் சேவையைப் பாராட்டி "மண்ணை நேசித்த மாமனிதர்" எனக் கௌரவித்திருந்தார்.

பேராசிரியரிடம் இன, மத, மொழி, குரோதம் இருந்ததில்லை. பிறந்த நாட்டை நேசிக்காது பொருளாதார நெருக்கடிக்கு அஞ்சி இன்றும் பலர் வாழ்வு வசதிக்காக வெளியேறுவதைப் பார்க்கின்றோம். ஆனால் துரையைப் போன்ற மனிதர்கள் உலகில் தோன்றுவது மிக அரிதானது. அது அபூர்வமானது. உலகப் புகழ் பெற்ற கவிஞர் சேக்ஸ்பியரின் நாடக வரிகள் சில நினைவுக்கு வருகின்றன.

"Some are born great; Some attain greatness;Thrust upon them" என்பதை வாசகர்களுக்கு நினைவூட்ட விரும்புகின்றேன்.

'மறைவு ஒரு மனிதனின் வாழ்க்கை முடிவல்ல
அது நினைவின் ஆரம்பம்'



நூல்களைக் கற்கலாம்,
சொற்பொழிவுகளைக் கேட்கலாம்,
பலமணி நேரம் தொடர்ந்து பேசலாம்,
ஆனாலும் அனுபவமே சிறந்த ஆசான்,
அதுவே உண்மையான கல்வி.

*சுவாமி விவேகானந்தர்*

# தேச வழமைச் சட்டத்தின் குறைநிறைகள்

கந்தையா நீலகண்டன்
சட்டத்தரணி.



தேசவழமை, பல நூற்றாண்டுகளாக இலங்கையின் வடபகுதியின் மக்களை வழிநடத்தி வந்துள்ள சட்ட வழமை நெறியாகும். காலாகாலமாக சமூக மாற்றங்களுக் கெல்லாம் ஈடுகொடுத்து நின்றிருக்கும் தேசவழமைச் சட்டம் பழைமையான வழக்காற்று சட்டங்களில் ஒன்று. அன்றைய சமுதாயக் கோட்பாடுகளுக்கு சட்டவலுக் கொடுத்து, தர்க்கரீதியாக வழமையில் இருந்த, தேசவழமை நெறிமுறைகளைக் கோவைப்படுத்தும் முயற்சி முதன்முலாக டச்சு அரசினால் மேற்கொள்ளப்பட்டது. இலங்கையில் டச்சு அரசின் தோசதிபதியாக விருந்த சைமன்ஸ் (1) இட்ட கட்டளையின் பேரில் திரு. கிளாய்ஸ் ஐசாக்ஸ் (2) என்பவர் 1707 ஆம் ஆண்டில் தேசவழமை நெறிகளை டச்சு மொழியில் கோவைப் படுத்தினார். திரு. ஐசாக்ஸின் வேண்டுகோளுக் கமைய திரு. ஜான் பைரஸ் (3) அக்கோவை யைத் தமிழில் மொழி பெயர்த்தார். 1707 முதல் 1796 வரை டச்சு நீதிமன்றங்கள் தேசவழமைச் சட்டத்தின்படி நீதி வழங்கின. 1796ஆம் ஆண்டில் இலங்கையைக் கைப்பற்றிய பிரித்தானியரும் டச்சு அரசில் பின்பற்றப்பட்ட சட்டங்களையும் வழக்காற்று முறைகளையும் தொடர்ந்து பின்பற்றுவது எனத் தீர்மானித் தனர். எனவே, தேசவழமைச் சட்டமும் தொடர்ந்து அமுலில் இருந்தது.

பிரித்தானிய ஆட்சியின் கீழ் பிரதம நீதியரசாக இருந்த சேர். அலெக்சாண்டர் ஜோன்ஸ்ரன் (4) யாழ்ப்பாணத்திற்கு முதன்முறை சென்றபோது யாழ்ப்பாண மக்கள் தேசவழமைச் சட்டத்திற்கு அளிக்கும் மதிப்பைக் கண்டு அதிர்ந்து போனார். தேசவழமைச் சட்டத்தினை யாழ்ப்பாண மக்கள் உண்மையிலேயே போற்றித் துதிக்கிறார்கள் என்பதனை அறிந்துகொண்ட பிரதம நீதியரசர், திரு.ஐசாக்ஸ் தயாரித்த தேசவழமைக் கோவை ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட வேண்டும் எனவும், அம்மொழிபெயர்ப்பின் பிரதிகளை பனை ஓலைச் சுவடிகளில் பதிப்பித்து கிராமத் தலைவர்களுக்கும் விநியோகிக்க வழி செய்ததுடன் அத்தலைவர்கள் சேதவழமை விதிகளைத் தங்களின் கிராமங்களிலுள்ள மக்களுக்கு எடுத்து விளக்க வேண்டும் எனவும் பிரதம நீதியரசர் ஜோன்ஸ்ரன் உத்தரவிட்டார்.

படிப்படியாக எங்கள் நாடு அடிமைத்தளத்திலிருந்து மீளும்போது 1925 ஆம் ஆண்டில் சட்டசபையில் மாண்புமிகு கே.பாலசிங்கம் விடுத்த வேண்டுகோளையடுத்து சேதவழமைச் சட்டத்தினை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க அரசாங்க ஆணைக்குழு ஒன்று அமைக்கப்

பட்டது. அந்த ஆணைக்குழு தனது அறிக்கையினை 1929 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் சமர்ப்பித்தது. 1931 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் மேலும், ஓர் அனுபந்த அறிக்கையினையும் அந்த ஆணைக்குழு சமர்ப்பித்தது.

தேசவழமைச் சட்டத்தின் குறைநிறைகளை ஆராய முற்படும் வேளையில் தேசவழமை ஆணைக்குழு ஐம்பத்தேழு ஆண்டுகளுக்கு முன்பு விதந்துரைத்த சிபார்சுகள் யாவை என்பதனையும் பார்ப்பது பொருத்தமானது மட்டுமல்லாமல் அவசியமானதாகும். அவையாவன:

1) தேசவழமைச் சட்டம், தேடிய தேட்டத்தினைத் தம்பதியினரின் பொதுச்சொத்தாகவே கருதியது. தம்பதியினரில் ஒருவர் இறந்தால் வாழ்கின்ற தம்பதிக்கு அரைவாசியும் இறந்த தம்பதியின் வாரிசுகளுக்கு மிகுதி அரைவாசியும் சேரும். அந்த முறையினை மாற்றி, தேடிய தேட்டம் தம்பதியினரின் மணவாழ்வின்போது பொதுச்சொத்தாகக் கருதத் தேவையில்லை என்றும் அப்படியான சொத்தைத் தேடிக்கொண்ட தம்பதியின் அல்லது எந்தத் தம்பதியின் சொத்துக்களிலிருந்து வந்த வருமானத்திலிருந்து அத்தேடிய தேட்டம் பெறப்பட்டதோ, அத்தம்பதியின், தனிப்பட்ட சொத்தாகவே அது அவரின் வாழ்நாளில் அனுபவிக்கப்பட்டு, அவரின் மரணத்தின் பேரில் மட்டும் அச்சொத்தின் அரைவாசிப்பங்கு வாழ்கின்ற தம்பதிக்கும் மிகுதி அரைவாசிக்கும் (மரண சாசனம் மூலமோ வேறு வழியில் விட்டு வைக்காவிடில்) இறந்த தம்பதியின் வாரிசுரிமையைக்காரருக்கும் சென்றடைய வேண்டும் எனவும் ஆணைக்குழு விதந்துரைந்துள்ளது.

(2) தேசவழமைச் சட்டத்தின் ஆட்சிக்குட்பட்ட எவருக்கும் வடமாகாணத்திற்கு வெளியே சொத்துக்கள் இருந்தால் அவையும் தேசவழமைச் சட்டத்தினால் ஆளப்பட வேண்டியனவையா? என்ற சந்தேகத்தையும் போக்கும் வகையில், அவ்வண்ணம் வெளியே இருக்கும் சொத்துக்களும் திருமண உரிமைகளையும் வாரிசுரிமை களையும் பொறுத்தமட்டில் அவை யாவும் தேசவழமைச் சட்டத்தின் ஆட்சிக்குட்பட்ட வையாக இருக்க வேண்டும் எனவும் ஆணைக்குழு சிபார்சு செய்தது.

(3) ஒரு தம்பதி இறந்துவிட்டால் அவரின் சொத்துக்களை புத்திரிமாருக்கு மட்டும் கொடுக்கும் உரிமை வாழ்கின்ற தம்பதிக்கோ வேறொரு குடும்ப உறுப்பினருக்கோ இருக்க வேண்டுமா - என்ற பிரச்சினைனை ஆராய்ந்த ஆணைக்குழு ஒரு தம்பதியின் மரணத்தின் பேரில் பிள்ளைகளுக்குப் போய்ச்சேரும் பங்குகளை மாற்றும் உரிமை வாழ்கின்ற தம்பதிக்கோ வேறொரு குடும்ப உறுப்பினருக்கோ வழங்கப்படக்கூடாது என்ற முடிவுக்கே ஆணைக்குழு வந்தது.

(4) மற்ற வாரிசுரிமையாளர்கள் இல்லாதவிடத்து தகப்பன் வழி பாட்டனுக்கும் பாட்டிக்கும் உரிமை சேருகின்றபோது, யாரிடமிருந்து அந்தச் சொத்து வந்ததோ அவருக்கே மீண்டும் அது சேரவேண்டும் என்பதே தேசவழமை முறை. ஆனால் 1911 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட திருமண உரிமைகளும் வாரிசுரிமைகளும் (யாழ்ப்பாணம்) கட்டளைச்சட்ட (5) த்தின் 29ஆம் பிரிவு, அந்த மீண்டும் சேரும் உரிமையைப் பறித்துவிட்டது என்ற குறை சுட்டிக்காட்டப்பட்டது. எனினும், அந்த 29ஆம் பிரிவு மாற்றப்பட வேண்டியதில்லை என ஆணைக்குழு முடிவு செய்தது.

(5) சொரியலாய் பங்குகள் உள்ள காணிகளைப் பொறுத்தமட்டுமே கொள்வனவு முன்னுரிமை இருக்க வேண்டும் எனவும் பங்குதாரர்களும் விற்க விரும்புவரின் வாரிசுரிமைக்காரர்களுக்கும் (மூன்று தலைமுறைகளுக்கு மட்டுமே) அந்த உரிமை கொடுக்கப்பட வேண்டும் எனவும் ஆணைக்குழு சிபார்சு செய்தது.

(6) பிள்ளை சுவீகரிப்பு சம்பந்தமாக தேசவழமை சட்டத்திலிருக்கும் அம்சம் நீக்கப்பட வேண்டும்.

(7) ஒற்றி ஈடு சம்பந்தமாக எந்தவித மாற்றமும் செய்யப்படக்கூடாது.

திருமண உரிமைகளும் வாரிசுரிமைகளும் (யாழ்ப்பாணம்) கட்டளைச்சட்டம் 1911 இல் இயற்றப்பட்ட 1947 இல் திருத்தப்பட்டது. 1947 ஆம் ஆண்டில் தேசவழமை கொள்வனவு முன்னுரிமைக் கட்டளைச் சட்டம் இயற்றப்பட்டது. இயற்றப்பட்ட சட்டங்களுக்குக் (6) கட்டுப்பட்டதே வழக்காற்று நெறியான தேசவழமைச் சட்டம். இலங்கை சட்டங்களின் தொகுப்பின் (1980 ஆம் ஆண்டின் மீட்டல்) பின்வரும் அத்தியாயங்களில் தேசவழமைச் சட்டத்தை இயற்றப்பட்ட சட்டவுருவில் காணலாம்.

(1) திருமண உரிமைகளும் வாரிசுரிமையும் (யாழ்ப்பாணம்) கட்டளைச் சட்டம் (5)
(2) தேசவழமை கொள்வனவு முன்னுரிமைக் கட்டளைச் சட்டம் (7)

முதலாவது 70 ஆம் அத்தியாயமாகவும் இரண்டாவது 74 ஆம் அத்தியாயமாகவும் மேற்குறிப்பிட்ட தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளது. தேசவழமை சட்டவிதி (8) அதே தொகுப்பில் 73 ஆம் அத்தியாயமாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றது. இந்த விதி தேசாதிபதி சைமன்ஸ் அவர்களின் பணிப்பின் பேரில் தயாரிக்கப்பட்ட தேசவழமைக் கோவையை உள்ளடக்கியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

வடபகுதி நீதிமன்றங்களும் இந்நாட்டின் மேன்முறையீட்டு மன்றங்களும் தேசவழமை சட்ட நெறிகளுக்கு வியாக்கியானங்கள் தந்து அளித்த பல தீர்ப்புக்களையும் திரட்டி திரு. முத்துக்கிருஷ்ணா வெளியிட்ட தேசவழமை நூலும், இந்நூற்றாண்டின் நடுப்பகுதியில் கலாநிதி எச். டபிள்யூ. தம்பையா எழுதிய "யாழ்ப்பாணத் தமிழர்களின் சட்டங்களும் வழமை நெறிகளும்" என்ற நூலும் தேசவழமைச் சட்டத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைந்தன. காலத்துக்காலம் மேன்முறையீட்டு நீதிமன்றங்கள் அளித்த தீர்ப்புக்கள் மூலம் தேவழமைச் சட்டம், ரோமன் டச்சுச் சட்டத்தினதும் ஆங்கிலச் சட்டத்தினதும் தாக்கங்களுக்கும் உள்ளானது.

தேசவழமை போன்ற வழக்காற்றுச் சட்டம் ஒன்றின் அம்சங்கள் எவையேனும் பின்பற்றப்படாது விடப்பட்டால் காலப்போக்கில் அவை சட்டவலுவிழந்து (9) விட்டவையாகும் என்பது பொதுச்சட்டநியதி. அவ்வண்ணம் தேசவழமையிலும் பல அம்சங்கள் காலப்போக்கில் பின்பற்றப்படாத வழமைகளும் (வழக்காறுகளும்) பழக்க வழக்கங்களும் ஆகிவிட்டதால் அவை சட்டவலுவிழந்துவிட்டன. ஆனால் தேசவழமை போன்ற பரந்த சட்டத்தில் எவை எவை அவ்வாறு சட்டவலுவிழந்துவிட்டன எனக் குறிப்பிட்டுக் கூறுவது கடினமாதலால் தேசவழமை ஆணைக்குழுவோ இலங்கைச் சட்டங்களை 1938 இலும் 19556 இலும் தொகுத்தவர்களோ அந்த முயற்சியில் இறங்கத் துணியவில்லை.

இந்த வரலாற்றுப் பின்னணியில் வளர்ந்து இன்று வடமாகாணத் தமிழர்களையும் அவர்களின் சொத்துக்கள் யாவற்றையும் (அந்த மாகாணத்திலிருந்தாலென்ன அதற்கு வெளியே இருந்தாலென்ன - அசைவுள்ள அசைவற்றவையையும்) ஆளுகின்ற தேசவழமைச் சட்டத்தின் குறை நிறைகளை வெவ்வேறு தலைப்புக்களில் சிறியேன்தன் சிற்றறிவிற்கு எட்டியமட்டில் ஆராய முற்படுகிறேன்.

**தேசவழமைச் சட்டத்தின் ஆட்சிக்குட்பட்ட நபர்கள்**

வடமாகாணத்தில் வசிக்கின்ற தமிழ்க்குடிகள் யாவரும் தேசவழமைச் சட்டத்தின் ஆட்சிக்குட்பட்டவர்கள். வியாபாரம் அல்லது தொழில் நிமித்தம் ஒரு யாழ்ப்பாணத் தமிழர் வடமாகாணத்திற்கு வெளியே நீண்டகாலம் வசித்தாலும் கூட அவர் யாழ்ப்பாணக் குடிமகன் என்ற நிலையை இழக்கமாட்டார். இந்த விடயத்தில் இன்று நீதிமன்றங்களைக் கட்டுப்படுத்தவல்ல (10) தீர்ப்பு 1988 ஆம் ஆண்டு பெப்ரவரித் திங்கள் பதினைந்தாம் நாளன்று உயர்நீதிமன்றம் சிவஞானலிங்கம் - எதிர் - சுந்தரலிங்கம் வழக்கில் வழங்கிய தீர்ப்பாகும். (1988) I - ஸ்ரீ லங்கா சட்ட அறிக்கைகள் 86 ஆம் பக்கத்தில் "தேசவழமை யாரை ஆளுகின்றது" என்ற வினாவிற்கு விடை தந்து பிரதம நீதியரசர் சர்வானந்தா எழுதிய தீர்ப்பில், "ஒரு வடமாகாணத் தமிழ்க்குடி அவன் எங்கிருந்தாலும் அவனின் சொத்துக்கள் இலங்கையின் எப்பகுதியில் இருந்தாலும் தேசவழமைச் சட்டத்தின் ஆட்சிக்குட்பட்டவன் ஆவான்" எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஒரு வடமாகாணத் தமிழ்க் குடிக்கும் அவனின் சொத்துக்களுக்கும் தேசவழமையின் ஆட்சியில்லை என எவரும் வாதிட முற்பட்டால் அக்குடிமகன் அத்தகைய குடிமகன் நிலையைத் துறந்துவிட்டான் என்று நிரூபிப்பது அவ்வாதத்தை வைப்பவரின் பொறுப்பு, என்பதே இத்தீர்ப்பின் அடிப்படைக் கருத்து.

இன்று வடமாகாணத் தமிழர் பலர் இலங்கையின் ஏனைய மாகாணங்களில் மட்டுமல்லாமல் பிறநாடுகளுக்கும் சென்று தொழில் பார்ப்பதுடன் பல ஆண்டுகளாக அங்கு வசிக்கிறார்கள். இந்நிலையில் அவர்கள் தேசவழமையின் ஆட்சிக்குட்பட்டவர்களா? என்ற வினா பல சமயங்களில் எதிர்காலத்தில் எழலாம்.

இன்றைய அதிகாரப் பரவலாக்கல் கொள்கையின் காரணமாக வடகிழக்கு மாகாணங்கள் இரண்டும் ஒரு மாகாணமாக இணைந்துள்ளன. இரு மாகாணங்களிலும் இருக்கும் தமிழ் மக்கள் எதிர்காலத்தில் ஒரே மாகாண மக்களாக வாழக்கூடிய வாய்ப்பே பெரும்பாலும் இருக்கின்றது. "யாழ்ப்பாணப் பட்டணம்" என்று ஆரம்பகாலத்தில் குறிப்பிடப்பட்டதே இன்றைய வடமாகாணம். இந்த மாகாண அமைப்பு மாறுகின்ற நிலையில் மாறிய மாகாணத்தில் வாழும் யாவருக்கும் ஏற்புடையதாக ஒரே சட்டம் இருக்க வேண்டும் என்ற கோரிக்கையும் எழக்கூடிய வாய்ப்பும் உண்டு. எனவே தேசவழமையால் ஆளப்படும் நபர்கள் யாவர் என்பதைத் தெட்டத் தெளிவாக, மாறிவரும் சூழ்நிலைகளுக்கும் அமைப்புக்களுக்கும் ஏற்புடையதாக, வரையறுப்பது அவசியமாகும்.

**தேசவழமையின் ஆட்சிக்குட்பட்ட சொத்துக்கள்**

தேசவழமையின் ஆட்சிக்குட்பட்ட நபர்களின் சொத்துக்கள் யாவும் தேசவழமையின் ஆட்சிக்குட்பட்டவை. அவை வடமாகாணத்திலோ அன்றி அதற்கு வெளியேயோ உள்ளவையாகவும் அசைவானவையாகவோ அசைவற்றவையாகவோ இருக்கலாம். சிவஞானலிங்கம் - எதிர் சுந்தரலிங்கம் வழக்கில் பிரதம நீதியரசர் சர்வானந்தா சுட்டிக்காட்டியவண்ணம், தேசவழமை ஓர் ஆள்சார்பு (11) சட்டமேயன்றி இடச்சார்பு (12) சட்டமல்ல. இது

தேசவழமைச் சட்டத்தின் நிறைகளில் ஒன்று என்றே சொல்ல வேண்டும். தேசவழமைச் சட்டத்தின் ஆளுமைக்கு உட்பட்ட ஒருவருக்கு சொத்துக்கள் சில யாழ்ப்பாணத்திலும் வேறு சில கொழும்பிலும் இருக்கலாம். யாழ்ப்பாணத்திலிருக்கும் சொத்துக்கள் மட்டும் தேசவழமைச் சட்டத்தினால் ஆளப்படும் என்றும் கொழும்பிலிருக்கும் சொத்துக்கள் ரோமன் டச்சுச் சட்டத்தினால் ஆளப்படும் என்ற நிலையிலிருந்தால் அதனால் ஏற்படக் கூடிய குழப்பங்களும் கஷ்டங்களும் சொல்லொணாதவையாக இருந்திருக்கும்.

### திருமணமான ஒரு பெண் பூரண உரிமையற்றிருத்தல்

திருமணமான ஒரு பெண் தேசவழமைச் சட்டத்தின் கீழ் பூரண உரிமையற்றவளாக - பராயமடையாத ஒரு பிள்ளையைப் போன்று - கணிக்கப் பெறுவதும், அவளைக் கணவனின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டவையாகக் கருதுவதும் தேசவழமைச் சட்டத்தின் ஒரு பெரும் குறையாக இருக்கின்றது. தேசவழமைச் சட்டத்தினால் ஆளப்படுகின்ற மனைவி ஒருத்தியின் நிலையினைச் சுருங்கக்கூறின் பின்வரும் விடயங்களை எடுத்துக்காட்டலாம்.-

(அ) தேசவழமைத் தம்பதிகளின் திருமண உரிமைகளை இன்று பாதிக்கும் சட்டம் திருமண உரிமைகளும் வாரிசுரிமைகளையும் (யாழ்ப்பாணம்) கட்டளைச் சட்டம், அச்சட்டத்தின் படி தனது தனிப்பட்ட சொத்துக்களில் அசைவுள்ளவையை மட்டும் கணவரின் சம்மதமின்றி விற்கவோ வேறு விதத்தில் அவற்றை ஈடுபடுத்தவோ முடியும். ஆனால், அசைவற்ற சொத்தானால் கணவனின் சம்மதமின்றி அவள் அதனை விற்கவோ வேறு விதத்தில் ஈடுபடுத்தவோ முடியாது. ஆனால், மரணசாதனம் மூலம் அவள் தான் விரும்பியபடி தன் சொத்துக்கள் எவற்றையும் விட்டுச் செல்லலாம். கணவனின் சம்மதம் தேவையானதைவிட அத்தகைய சம்மதம் பெறுவது அசாத்தியம் என்றால் அச்சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் மாவட்ட நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்று தன் சொத்துக்களை (அசைவுள்ளனவாயினும்) விற்கவோ அல்லது வேறு முறையில் ஈடுபடுத்தவோ முடியும். ஒரு நீதிமன்றத்தின் சட்டபூர்வமான தீர்ப்புக் கட்டளைப்படி கணவன் - மனைவி பிரிந்திருந்தால் திருமணமாகாத பெண் போன்று கணவனின் சம்மதோ நீதிமன்றத்தின் அனுமதியோ இன்றி இந்த மனைவி தன் சொத்துக்களைத் தான் விரும்பிய வண்ணம் என்னவும் செய்யலாம்.

(ஆ) வேறு ஒப்பந்தங்களிற்கும் கணவனின் சம்மதமின்றி சட்ட பூர்வமாகக் கட்டுப்படும் உரிமை ஒரு தேசவழமை மனைவிக்கு இல்லை. அவளின் சுயநன்மைக்காக அல்லது பொது வர்த்தகர் என்ற ரீதியில் அல்லது வீட்ட வசிய தேவைகளுக்காக அந்த ஒப்பந்தங்கள் செய்யப்பட்டால், கணவனின் சம்மதம் பெறப்படாவிட்டாலும், சட்டபூர்வ மானவையாகச் செல்லுபடியாகும். தம்பதிகள் சட்டப்படி பிரிந்திருந்தால் இந்தக் கடப்பாடும் இல்லை.

(இ) ஒரு நீதிமன்றத்தில் வழக்கின் எந்தக் கட்சியாகவும் ஒரு தேசவழமை மனைவி கணவனுடனேயன்றித் தனியே வழக்காட முடியாது. (இக்கட்டுப்பாடு ஒரு விவாகரத்து அல்லது விவாகப் பிரிவு வழக்கிற்குப் பொருந்தாது)

(ஈ) தன் மனைவியைப் பராமரிப்பது கணவனின் பொறுப்பாகும். ஆனால், சுகவீனமான அல்லது தன்னைத்தானே பராமரிக்க முடியாத கணவனைப் பராமரிக்கும் பொறுப்பினைத் தனிப்பட்ட சொத்துள்ள (பொதுச்சட்டத்தினால் ஆளப்படும்) மனைவிக்கு

திருமணமான பெண்களின் சொத்துக் கட்டளைச் சட்டம் (13) சுமத்தியிருக்கின்றது. தேசவழமைச் சட்டத்தினால் ஆளுமைக்குட்பட்ட மனைவிக்கு அப்படியான பொறுப்பில்லை.

இப்படியான வழமைநெறி பிறந்தகால கட்டத்திலே இருந்த சமுதாயநிலை வேறு; இன்றைய நிலை வேறு. அன்றை தேசவழமை மனைவி கல்வியறிவற்ற பேதையாக, உலகறிவு இல்லாத மடந்தையாக இருந்திருப்பாள். இன்று தேசவழமை மனைவிமார் பலர் சட்டத்தரணிகளாகத் தொழில் பாரக்கிறார்கள். அத்தகைய பெண் சட்டத்தரணிகள் மற்றவர்களுக்கு (ஆடவர்களுக்கும் கூட) பின்னவரின் சட்ட உரிமைகளைப் பற்றி ஆலோசனை வழங்குகிறார்கள். ஒப்பந்தங்கள், உறுதிகள் தயாரித்து அத்தாட்சிப்படுத்து கிறார்கள்; ஏனையோருக்காக நீதிமன்றங்களில் வழக்காடுகிறார்கள். அவ்வாறான பெண் சட்டத்தரணிகளில் ஒருவர் இன்று நீதிபதியாகவும் பொறுப்பேற்று இருக்கிறார் எனவும் அறிகிறேன். இந்த நிலையில் தேசவழமை மனைவிமாரை இன்னும் பராயமறியாப் பாலகர் நிலைக்குத் தள்ளி கணவர்களின் ஆதிக்கத்திற்குக் கட்டுப்பட்டவர்களாக்குதல் நியாய மானதாகாது. நம் நாட்டின் அரசியலமைப்பும் சர்வதே மனித உரிமைகள் பிரகடனமும் மட்டுமல்ல. பாட்டுக்கொரு புலவன் பாரதி முதல் இன்றைய தமிழிலக்கியங்கள்கூட பெண்ணை ஆணுக்கு நிகராகக் கணிக்கின்ற இன்றைய காலகட்டத்தில், தேசவழமை இன்னும் ஒரு மணமான பெண்ணை பராயமற்ற பிள்ளை நிலைக்குத் தள்ளுவது எவ்விதத் திலும் நீதியாகாது என்பதை எவரும் ஏற்பர். எனவே தேசவழமைச் சட்டத்தின் இந்த அம்சம் பொருத்தமான முறையில் திருத்தப்பட வேண்டும்.

**முதுசொமும் உரிமையும்**

தனது பெற்றோரின் அல்லது ஏறுவரிசையிலுள்ள முன்னோரிடமிருந்து ஒருவருக்குக் கிடைக்கும் சொத்து, "முதுசொம்" எனவும் அவ்வாறல்லாத உறவினர்களிடமிருந்து அவர் களின் மரணத்தில் வந்து சேரும் சொத்து "உரிமை" எனவும் தேசவழமைச் சட்டம் வகித்திருக்கின்றது. இப்படியாகக் கிடைத்த முதுசொம், உரிமை உட்பட தேடிய தேட்ட மல்லாத சொத்துக்களின் உரிமையாளர், தனது சொந்தப் பிள்ளைகளை விட்டு இறந்தால் அவை அப்பிள்ளைகளைச் சேர்ந்தடையும். ஆனால் அவருக்குப் பிள்ளைகளில்லாமல் இருந்தால், பெற்றோருக்கு அல்லது ஏனைய உறவினர்களுக்கு (அல்லது அவர் தம் வாரிசுக்கு) வந்த வழியே மீண்டும் போய்ச்சேரும். இது தேசவழமையின் நிறைகளில் ஒன்று என்றே கூறுவேன். இலங்கையின் பொதுச்சட்டமான ரோமன் டச்சுச் சட்டத்தின் கீழ் அப்படியான சொத்துக்களின் அரைவாசிப் பங்கு இறந்தவரின் கணவனுக்கோ மனைவிக்கோ சேர்ந்தடைகிறது. அப்படியான ஓர் உதாரணத்தைக் கூறுகிறேன். 1979 ஆம் ஆண்டில் செல்வி பெரரா திரு. சில்வாவைத் திருமணம் செய்தார். செல்வி பெரரா அவரின் தாய் தந்தையரிடமிருந்து ஏராளமான சொத்துக்கள் முதுசொமாகச் சேர்ந்து இருந்தன. அந்த இளம் பெண் மரணசாசனம் எழுதவேண்டும் என்பதைக் கனவிலும் யோசித்திருக்க முடியாது. 1981ம் ஆண்டில் அவள் பிள்ளைச் செல்வம் எதுவுமின்றி திடீரென இறந்து விட்டாள். அவளின் பொருட் செல்வங்களில் அரைவாசி திரு. சில்வாவிற்குச் சென்றடை கிறது. 1983ம் ஆண்டில் திரு. சில்வா செல்வி பண்டாவை மறுமணம் செய்து கொள்கிறார். இந்த இரண்டாம் மனைவி முதலாம் மனைவியின் சொத்துக்களை இன்று அனுபவிக் கிறாள். "இது தான் நீதியா - நியாயமா என பெரரா குடும்பத்தினர் அங்கலாய்க்கின்றனர். அப்படியான ஒரு நிலை தேசவழமைச் சட்டத்தின் கீழ் எழமாட்டாது.

**சீதனம்**

திருமணத்தின்போது ஒரு பெண்ணால் புதிய குடும்பத்திற்குக் கொண்டுவரப்படும் சொத்தே சீதனமாகும். அப்பெண்ணின் திருமணத்தின் போதோ முன்போ பின்போ, பெற்றோர் அல்லது பாதுகாவலர் அல்லது வேறு உறவினர், இப்பெண் புதுக்குடும்ப வாழ்வை ஆரம்பிக்க வழிவகுக்கும் வகையில் அன்பளிக்கும் இச்சொத்து, அப்பெண்ணின் வாரிசுரிமையைப் பாதிக்கும் என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். சீதனம் பெற்ற ஒரு பெண்ணுக்கு தன் பெற்றோரின் சொத்தில் வாரிசு உரிமை கிடையாது. ஆனால் அவள் தான் பெற்ற சீதனத்தையும் இறந்த பெற்றோரின் சொத்துக்களுடன் சேர்த்து மற்றச் சகோதரங்களுடன் பகிர்ந்துகொள்ள முன் வந்தால், அவளும் சீதனம் பெறாத ஒரு பிள்ளை போன்று வாரிசுரிமை பெறலாம். இப்படிச் சீதனத்தையும் சேர்த்து வாரிசு உரிமைபெறும் (14) வசதி போதிய சீதனம் பெறாத பெண்ணுக்கு வாரிசுரிமை வழங்கும் நோக்குடனே உள்ளது என்றே கூறலாம்.

சீதனம் ஒரு சமூகக்கேடு என்பது இன்றைய சமுதாயத்தின் கருத்து. "சீதனம் பெற்றுத் தான் திருமணம் செய்" எனத் தேசவழமை கட்டாயப்படுத்தவில்லை. சீதனம் பெறப் பட்டால், கொடுக்கப்பட்டால், அப்படியான சீதனச் சொத்து என்ன நெறிமுறைகளுக்கு அமைய இருக்கும் என்பதனையே தேசவழமை வரையறுக்கின்றது. சீதனத்திற்கு எதிரான வர்கள் தேசவழமையைக் கண்டிக்கத் தேவையில்லை. சமுதாயம் சீதனமுறையை ஒழித்து விட்டால் தேசவழமைச் சட்டத்திலுள்ள சீதனம் பற்றிய வழக்காறுகள் சட்டவலுவற்றுப் போய்விடும். முதுசொம், உரிமைச் சொத்துக்களுக்கு வாரிசுரிமை பற்றி நான் மேலே எடுத்துக்கூறிய நிறை சீதனச் சொத்துக்கும் பொருந்தும்.

**தேடிய தேட்டம்**

திருமண வாழ்வின்போது பெறுமதியான பிரதிபலனுக்கு (15) கணவனால் அல்லது மனைவியினால் தேடப்பட்ட சொத்துக்களும் திருமண வாழ்வில் உழைத்த இலாபங்களும் நன்மைகளும் தேடிய தேட்டமாகும். ஆனால் அச்சொத்து எந்தவொரு தம்பதியின் தனிப்பட்ட சொத்துரிமையை இழந்து பிரதியாகப் பெறப்பட்டதாக இருக்கக் கூடாது. அப்படி இருந்தால் அது தேடிய தேட்டமாகாது அந்தத் தம்பதியின் தனிப்பட்ட சொத்தாகும். எந்தத் தம்பதி உழைத்துத் தேடிய தேட்டமானாலும் அச்சமயம் திருமணத்தினால் இணைக்கப் பட்டுள்ள மற்றத் தம்பதிக்கும் அச் சொத்தில் சரிசமபங்கு கிடைக்கும்.

தேசவழமையின் தேடிய தேட்டச் சட்டக் கோட்பாடு காலத்திற்குக் காலம் மாறி வந்திருக்கின்றது. ஆரம்பகாலத்தில் தேசவழமைச் சட்டத்தின் கீழ் தேடிய தேட்டம், மணவாழ்வில் கணவன் அல்லது மனைவியின் தனிப் பெயரில் உழைத்த அல்லது தேடிய சொத்தானாலும் கூட, அஃது இருவரினதும் பொதுச் சொத்தாக, இருவருக்கும் சரிசம பங்குள்ள சொத்தாக, ஏற்றுக் கொள்ளப்பட்டது. 1911ம் ஆண்டில் இயற்றப்பட்ட திருமண உரிமைகளும் வாரிசுரிமையும் (யாழ்ப்பாணம்) கட்டளைச் சட்டம் இந்நிலையை மாற்றியது. அந்த மாற்றம் தேசவழமைக்கு ஒவ்வாதது எனச் சுட்டிக்காட்டப்பட்டதன் பேரில் 1947ம் ஆண்டில் அந்தச் சட்டம் திருத்தப்பட்டது.

இந்த மாற்றங்களின் காரணமாக, தேடிய தேட்டச் சொத்தில் தம்பதியினருக்கு உள்ள உரிமை பற்றி நீதிமன்றங்களில் பலமுறை சர்ச்சைகள் எழுந்தன. 1986 கொழும்பு மேன்முறையீட்டுச் சட்டறிக்கை 1ம் தொகுதியில் 458ம் பக்கத்தில் அறிக்கை செய்யப் பட்டுள்ள மாணிக்கவாசகர்-எதிர்-கந்தசாமி வழக்கில் அன்றைய பிரதம நீதியரசர்

சர்வானந்தா இப்பிரச்சினையை அலசி ஆராய்ந்து வழங்கிய தீர்ப்பில் பின்வரும் விடயங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

(1) தேசவழமைச் சட்டத்தின் கீழ் தேடிய தேட்டச் சொத்துக்கு இரு தம்பதியினரும் கூட்டு உரிமையாளர்கள். அவர்களில் ஒருவர் அச்சொத்தின் அரைவாசிக்கு மேலான பங்கெதுவையும் நன்கொடை கொடுக்க முடியாது.

(2) திருமண உரிமைகளும் வாரிசுரிமையும் (யாழ்ப்பாணம்) கட்டளைச் சட்டத்தின் 26ம் பிரிவு, தேடிய தேட்டக் கோட்பாட்டை அகற்றவோ புதிய சட்டத்தை இயற்றவோ இல்லை. ஆனால் வழக்கில் இருந்த வழமை நெறியை மட்டுமே பிரகடனப்படுத்தியது. எனவே அப்பிரிவுக்கு செய்யப்பட்ட எந்த விதமான மாற்றமும் அந்த வழமை நெறியை மாற்றியதாகக் கருத முடியாது.

(3) ஒரு தம்பதியினால் தேடப்பட்ட அல்லது பெறப்பட்ட தேடிய தேட்டச் சொத்தின் அரைவாசிப் பங்குக்கு அவ்வாறு தேடப்பட்ட அல்லது பெறப்பட்ட கணமே, மற்றத் தம்பதி உரிமையாளர் ஆகிவிடுவதுடன், தேடிய தேட்டத்தைத் தேடிய தம்பதி மரண சாசனம் அல்லது வேறுவகையில் மிகுதி அரைவாசிப் பங்கையும் விட்டுச் செல்லாது மரணமானால், அந்த மிகுதி அரைவாசியின் அரைப் பங்குக்கும் வாரிசுரிமையும் பெறுகிறார்.

(4) மணவாழ்வில் பெறுபவை அல்லது தேடப்பட்டவை எல்லாம் தேடிய தேட்டம் என ஆரம்ப காலத்தில் தேசவழமையின் கீழ் இருந்த சட்ட ஊகத்தை (16) த் திருமண உரிமைகளும் வாரிசுரிமையும் (யாழ்ப்பாணம்) கட்டளைச்சட்டம் அகற்றிவிட்டது. எனவே இன்று எவரும் ஒரு சொத்தினைத்தேடிய தேட்டம் எனக் கோரினால் அப்படிக் கோருபவர் அதனை நிரூபிக்க வேண்டும்.

(5) ஒருவரின் மரணத்தின் மீது ஆயுள் காப்புறுதித் திட்டத்தின் கீழ் கிடைக்கும் பணம் தேடிய தேட்டம் அல்ல.

பிரதம நீதியரசரின் தீர்ப்பிலிருந்த மூன்று விடயங்கள் இங்கு கவனத்திற்கு எழுகின்றன.

(அ) ஆரம்ப காலத்திலிருந்து தேசவழமைச் சட்டப்படி தேடிய தேட்டம் தேடியதுமே இரு தம்பதியினருக்கும் சமபங்கான உரிமையாகின்றது. இந்தக் கோட்பாட்டினை, பின்வந்த இயற்றப்பட்ட சட்டங்கள் மாற்றவில்லை. தனக்கென்ற தனிப்பாணியில் தர்க்க ரீதியாகப் பிரதம நீதியரசர் சர்வானந்தா, இக்கூற்றினைச் செவ்வனே எடுத்து விளக்கியிருக்கிறார். அதே சமயம், திருமண உரிமைகளும், வாரிசுரிமையும் (யாழ்ப்பாணம்) கட்டளைச் சட்டத்தின் 20ம் பிரிவின் காரணமாக, தேடிய தேட்டத்தின் அரைவாசிப் பங்கினை வாழ்நாளில் உரியதாகப் பெறும் தம்பதியினரில் ஒருவர் மரணசாசனம் அல்லது வேறுவழியில் அப்பங்கினை விட்டுச் செல்லாது மரணமானால், அந்த அரைப் பங்கில் அரைவாசி வாழ்ந்து கொண்டிருக்கும் தம்பதிக்குச் சென்றடையும் என்ற முடிவுக்குப் பிரதம நீதியரசர் வந்திருக்கிறார். அவரின் சட்டவியாக்கியானம் சரியானது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இந்தச் சட்டவிதி நியாயமானதா? என்ற வினா எழுகின்றது. இவ்விதி திருத்தப்பட்டு ஆரம்ப காலத் தேசவழமையின்படி தேடிய தேட்டத்தின் அரைவாசிப் பங்கு ஒரு தம்பதிக்கும்

மற்றது மற்றத் தம்பதிக்கும் செல்ல வேண்டும். வாரிசுரிமை வழங்கப்படத் தேவையில்லை. 1930ம் ஆண்டில் தேசவழமை ஆணைக்குழு செய்த அறிக்கையில் "தேடிய தேட்டம் இரு தம்பதியினராலும் பொதுச் சொத்தாக உரிமை பாராட்டப்பட்டு அவர்களில் ஒருவர் மரணமான பின் இறந்தவரின் அரைவாசிப்பங்கு அவரின் வாரிசுரிமையாளருக்குச் சென்றடைய வேண்டும் என்பதே தேசவழமை விதி" எனவும் அப்படியான பொதுச் சொத்துக் கோட்பாடு மாற்றப்பட்டு தேடிய தேட்டத்தினைத் தேடியவரின் தனிப்பட்ட சொத்தாகவே அஃது அவரின் வாழ்நாள் முழுவதும் இருந்து அவரின் மரணத்தின் மீது அதன் அரைப் பங்கு வாழ்கின்ற தம்பதிக்கும் மிகுதி வாரிசுரிமையாளருக்கும் சென்றடைய வேண்டும் எனவும், அதன்படி சட்டம் திருத்தப்பட வேண்டும் என்றும் ஆணைக்குழு விதந்துரைத்தது. இந்த சிபாரிசினைச் செய்யும்போது ஆணைக்குழு கூறியிருப்பதாவது "இங்கிலாந்துச் சட்டமும் எங்கள் சட்டமும் மணமான பெண்களின் சொத்து உரிமைகளைப் பெருப்பிக்கும் வழியில் சென்று கொண்டிருப்பதனை இந்த சிபார்சு அங்கீகரிக்கின்றது. கணவனும் மனைவியும் கூட்டாகச் சேர்ந்து செய்த முயற்சிகளின் பயனாகவே வழக்கமாக தேடிய தேட்டம் எழுகின்றது, என்ற நல்லதொரு காரணத்தின் பேரிலேயே இந்த உரிமை வழங்கப்பட்டிருக்கின்றது. அந்த உரிமையையும் இந்த மாற்றம் பேணும்". திருமண உரிமைகளும் வாரிசுரிமையும் (யாழ்ப்பாணம்) கட்டளைச் சட்டத்திற்கு மாற்றங்கள் செய்யப்பட்டபோது அம்மாற்றங்களின் விளைவு, தேடிய தேட்டத்தினைத் தேடும் தம்பதியின் சொத்தாகவே அஃது அவரின் மரணம் வரை இருக்கும் எனவும் அவரின் மரணத்தின் மீது அரைவாசி வாழ்கின்ற தம்பதிக்குப் போய்ச்சேரும் என்ற அடிப்படையில் மாற்றங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. ஆனால் பிரதம நீதியரசர் சர்வானந்தா சமீபத்தில் மேற்குறிப்பிட்ட மாணிக்கவாசகர் எதிர் - கந்தசாமி வழக்கில் இதனைச் சுட்டிக்காட்டும் வரை தேடிய தேட்டம் இன்றும் தம்பதியினரின் பொதுச் சொத்தாகவே கணிக்கப்பட வேண்டும் என்பதே சட்டநிலை என்பதனை ஒருவரும் உணரவில்லை. அப்படியான நிலை தொடரும்போது முதலில் இறக்கும் தம்பதியினரின் வாரிசுரிமைக்காரருக்கு கால்வாசி மட்டும் போய்ச்சேரும். வாழ்நாளில் அரைவாசிக்கு உரிமை பெறும் வாழ்கின்ற தம்பதி மற்றத் தம்பதியின் மரணத்தின் மீது அன்னாரின் அரைவாசியில் அரைப் பாகத்தையும் பெறுகிறார். இது நியாயமானதல்ல - தேசவழமையின் கொள்கைக்கு ஒவ்வாததும் ஆகும். மேலும் தேடிய தேட்டம் ஒரு மகத்தான தனித்துவம் மிக்க - சட்டக் கோட்பாடு என்பதனை எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. எங்கள் நாகரிகம் இன்று மேலைத்தேய நாகரிகத்தின் தாக்கத்திற்குள்ளானாலும் வாழ்க்கைமுறை - சட்ட விதிகளை வழமை நெறிகள் எங்கள் நாகரிகத்தைக் கட்டிக் காப்பவையாக எங்களின் - பேணுபவையாக அமைய வேண்டும். தாலி கட்டியதுமே கணவனும் மனைவியும் உருவத்தால் இருவரானாலும் உள்ளத்தால் ஒருவரே என்ற பண்பைப் பேணும் வகையில் மணவாழ்வில் தம்பதியினர் தேடுகின்ற செல்வம் பொதுச் சொத்தாகவே இருக்க வேண்டும். ஒரு தம்பதியே அதனைத் தேடினாலும் மற்றத் தம்பதிக்கும் சரிசம பங்கு உடன் கிடைக்க வேண்டும். அத்தம்பதியின் மரணத்தின் பின் அந்த அரைவாசி அவரின் வாரிசுரிமையாளருக்குச் சென்றடையலாம். வாழ்கின்ற தம்பதி மிகுதி அரைவாசிக்கும் தொடர்ந்து உரிமையாளராக இருக்கலாம். அந்த முறையிலே சட்டம் திருத்தப்பட வேண்டும். இன்று தேசவழமையில் இருக்கும் குறை ஒன்று அவ்வண்ணம் போக்கப்பட வேண்டும்.

(ஆ) தம்பதியினர் இருவரும் ஒருவரோடு ஒருவர் இணைந்து தேடுகின்ற செல்வமும் தேடிய தேட்டம் சார்பாகவே எந்தச் சட்ட ஊகமும் இருக்க வேண்டும். மணவாழ்வில் தேடிய செல்வம் எதுவும் தேடிய தேட்டமல்ல, தனிப்பட்ட சொத்தே என யாரும் கோரினால் அப்படிக் கோருபவர் அதனை நிரூபிக்க வேண்டிய பொறுப்புக்காளாவார். அது நிரூபிக்கப்படாவிட்டால் அப்படியான சொத்து தேடிய தேட்டமாகவே கருதப்பட வேண்டும். இதற்கமைய சட்டம் திருத்தப்பட்டு, தேடிய தேட்டத்தின் மகிமை பேணப்பட வேண்டும்.

இ) அடுத்ததாக, ஆயுள் காப்புறுதியில் இருந்து வரும் பணம் தேடிய தேட்டமாகப் பிரகடனப்படுத்தப்பட வேண்டும். காப்புறுதியிலிருந்து பணம் மரணத்தின் பின் கிடைத்தாலும் கூட அதற்கான கட்டணங்கள் மணவாழ்வின் போது தேடிய தேட்டப் பொருளிலிருந்து செலுத்தப்பட்டிருக்கலாம். எனவே நியாயமான நீதியான முறையிலே இந்த அம்சமும் திருத்தப்பட வேண்டும்.

**கொள்வனவு முன்னுரிமை**

தேசவழமையின் மகிமைகளை மறைத்து இருக்கும் சில குறைகளைப் பெருப்பிக்க முயலும் சிலர், தேசவழமையின் கொள்வனவு முன்னுரிமை அம்சத்தினையிட்டுத் தவறான பிரசாரம் செய்வதை நாங்கள் கேட்டிருக்கின்றோம். "ஓரக் கண்ணனைப் பழிக்கின்றான் ஒற்றைக் கண்ணன்" என்ற பழமொழிதான் எனக்கு ஈண்டு ஞாபகத்திற்கு வருகின்றது. கொள்வனவு முன்னுரிமை சொரியலாய் ஒருவருக்கு மேற்பட்டவரால் உரிமை பாராட்டக் கூடிய காணிகளுக்கே உண்டு.

**கொள்வனவு முன்னுரிமையை**

இடசார்பான சட்டமாகக் கொள்ளலாம். ஏனெனில் வடமாகாணத்திலுள்ள காணி களையே இச்சட்டம் ஆளுகின்றது. தேசவழமைக் கொள்வனவு முன்னுரிமை பற்றிய இன்றைய சட்டவிதிகளை தேசவழமை கொள்வனவு முன்னுரிமைக் கட்டளைச் சட்டத்தில் காணலாம். ஒன்றுக்கு மேற்பட்ட பங்குதாரர்களுக்கு சொரியலாய் ஒரு காணி உரியதென்றால் அக் காணியை மூன்றாம் பேரின் கைக்கு மாறாமல் வழிவகுக்கும் நோக்குடன் எழுந்ததே இந்தக் கொள்வனவு முன்னுரிமைக் கோட்பாடு. அப்படியான ஒரு சொரியல் காணியின் எந்தப் பங்கையும் கொள்வனவு செய்வதில், மற்றவர்களை விட, ஏனைய பங்குதாரர்களுக்கும் தன்பங்கை விற்க விரும்பும் பங்குதாரரின் வாரிசுரிமைக்காரருக்கும், முன்னுரிமை உண்டு. பழைய தேசவழமைப்படி அயற்காணி உரிமையாளருக்கும் ஒற்றிடு எடுத்தவர்களுக்கும் கூட இந்த உரிமை இருந்தது. ஒற்றி உரிமையாளருக்கும் இருந்த உரிமை தேசவழமைக் கோவையினை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டபோது ஏற்பட்ட தவறினால் அகற்றப் பட்டது. அயற்காணி உரிமையாளருக்கு இருந்த உரிமையினை இயற்றப்பட்ட சட்டம் நீக்கியது. ஏனைய பங்குதாரரும் விற்கவிரும்பும் பங்குதாரரின் (மூன்று தலைமுறைகளுக்குட்பட்ட) வாரிசுரிமை யாளரும் மேற்கூறப்பட்ட சட்டத்தின் விதிகளுக்கமைய தங்களின் கொள்வனவு உரிமையைப் பிரயோகிக்கலாம்.

"அன்பற்ற மாமியாருக்குக் கால் பட்டாலும் குற்றம், பிறிதொரு பழமொழி. அந்தப் பாங்கிலே தேசவழமைக் கொள்வனவு உரிமையைச் சாடுவது இன்று சகஜமான செயலாயிற்று. சொரியலாய் ஒரு காணியின் பங்குதாரர்களுக்கு உரிய ஒரு சொரியல்

பங்கை பங்கை ஒரு பங்குதாரர் ஓர் அன்னியருக்கு விற்றால் அதனால் மேலும் பிரச்சினைகளும் சர்ச்சைகளுமே எழும். எனவேதான் சொரியல் காணியில் அன்னியரும் பங்கு தாரராய் வராது கட்டுப்படுத்தும் இம்முன்னுரிமை நல்லதோர் அம்சம் என்பது என் கருத்து. சொரியலான காணியைப் பிரிவிடுதல் செய்யலாம். பிரிக்கப்பட்டதும் அக்காணிக்கு கொள்வனவு முன்னுரிமைச் சட்டம் செல்லுபடியாகாது. இந்த நிலையில் கொள்வனவு முன்னுரிமைச் சட்டத்தினைத் திருத்த வேண்டிய அவசியமில்லை.

**நிறைவு**

அன்றைய சமுதாய சூழ்நிலையில் பிறந்து காலமாற்றங்களுக்கு ஈடு கொடுத்து இன்றும் வடபகுதி தமிழ் மக்களின் வாழ்வை நெறிப்படுத்தும் தேசவழமைச் சட்டத்தின் மகிமை மேலும் மேலும் சிறக்கும் வகையில் குறைகளைக் களைந்து நிறைகளை மெச்சி அதன் புகழ் பரவ ஆண்டவனை வேண்டி இக்கட்டுரையினை நிறைவு செய்கிறேன்.

கட்டுரையில் பாவிக்கப்பட்ட ஆங்கிலச் சொற்களும் சில தமிழ் சொற்களின் ஆங்கிலக் கருத்துகளும்

(1) Simons
(2) Claasz Isaacsz
(3) Jan Pirus
(4) Sir Alexander Johnstone
(5) Matrimonial rights and Inherifance (Jaffna) ordinance
(6) Statutes
(7) Thesawalamai Pre-emption ordinance (8) Tesawalamai Regulation
(9) Obsolete
(10) Binding
(11) Personal
(12) Local
(13) Married Women's Property Ordinance
(14) Collation
(15) Valuable Consideration
(16) Presumption



கற்காமல் இருப்பதைவிட
பிறக்காமல் இருப்பதே நல்லது....
ஏனெனில் அறியாமைதான்
தீவினையின் மூலவேர்...
**- பிளேட்டோ**




அமர்ந்திருப்போர்(இ.வ): து.சுஜேந்திரமோகன்(அபிவிருத்தி உத்தியோகத்தர்), க.கம்ஸநாதன்(செயலாளர்), ர.கோமதி(பிரதமமுகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்), ந.சுரேஸ்(அபிவிருத்தி உத்தியோகத்தர்)

நிற்போர்(இ.வ): க.ஜெகநாதன், நி.கோபிகா, தே.தனுஜா, சி.குபேந்தினி, க.இராஜேஸ்வரி, கோ.அகல்யா, கா.மாதங்கி, சி.கிருபாகரன்



# வதிரியின் பாதணி உற்பத்தித் தொழில்:

## எழுச்சியும் வீழ்ச்சியும் தரும் பட்டறிவும் மேம்பாட்டுக்கான மாற்றுச் சிந்தனையும்


**இராஜேஸ்வரன் இராஜேஸ்கண்ணன்,**
முதுநிலை விரிவுரையாளர்.
சமூகவியல் துறை.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.


**அறிமுகம்:—**

ஒரு சமுதாயத்தின் அசைவியக்கம் பல்வேறு காரணிகளால் நிகழ்ந் தேறுவது. பொதுவாகவே கல்வி, அரசியல் பங்கேற்பு, சமயம், இடப்பெயர்வுகள், நகரமயமாக்கம், பொருளாதார முன்னெடுப்புகள் என்று தொடரும் பல்வேறு காரணிகள் சமூக மாற்றத்திலும் அசைவியக்கத்திலும் செல்வாக்குச் செலுத்துகின்றன. அத்தகைய காரணிகளில் தொழில்சார்ந்தும் சமூக அசைவியக்கம் நிகழ்வதுண்டு. தொழிலானது சந்ததிகளுக் கிடையில் அசைவியக்கத்தை ஏற்படுத்துவதுடன் சந்ததி ஒன்றின் அகத்தேயும் அசை வியக்கத்தை ஏற்படுத்துவது என்பது அடிப்படையான விடயம். ஒருவர் தனது வாழ்நாளின் ஆரம்ப நிலையில் செய்யும் தொழிலிலிருந்து வேறுபட்ட முன்னேற்றகரமான அந்தஸ்து மிக்க தொழிலைப் பெறுவதால் அவரது வாழ்நாளுக்குள்ளான தொழில்சார் அசை வியக்கம் நிகழுகின்றது. அவ்வாறே பாட்டன், தந்தை மரபுவழியாகச் செய்துவந்த தொழிலை விடுத்து அந்தஸ்து வேறுபாட்டைத் தரவல்ல வேறொரு தொழிலின் வழியே சந்ததிகளுக்கிடையிலான அசைவியக்கத்தையும் பெறமுடிகின்றது. அடுக்கமைக்கப்பட்ட சமூகம் ஒன்றில் இரண்டாவது வகை சமூக அசைவியக்கம் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்திவிடும். தொழில் சார்ந்து ஏற்றத்தாழ்வுகளையும் பாரபட்சங்களையும் சமத்துவ மின்மைகளையும் வரையறுத்து வைத்திருக்கும் சமூகங்களில் இரண்டாவது வகை சமூக அசைவியக்கம் பற்றிப் பேசுவது முக்கியமாகின்றது. தொழில்சார் சமூக அசைவியக்கத்தின் முக்கியமான கூறாக இதனை சமூக வியலாளர்கள் கருதி வருகின்றனர்.

பரம்பரைகளுக்கிடையிலான தொழிசார் சமூக அசைவியக்கம் என்பது நகர சமுதாயங்களை விடவும் கிராம சமுதாயங்களில் முதன்மை மிக்க அம்சமாக உள்ளமைந் துள்ளது. கிராம சமுதாயங்களில் ஒப்பீட்டளவில் சாதி மையமான ஏற்றத்தாழ்வுகள் நிலை பெற்று உள்ளமை அதற்கான அடிப்படையான நியாயப்பாடாக அமைந்துவிடுகின்றது. சாதி யமைப்பில் முன்னோர்



செய்த தொழிலிலிருந்து அடுத்துவரும் சந்ததிகள் பெரியளவில் மாறுதல்களைக் கண்ட பின்னரும்கூட அந்த அசைவியக்கம் பொதுவெளி அனுபவங்களில் நேர்முகமாக ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. உணர்திறன் வாய்ந்த தருணங்களில் முன்னோரின் தொழிலை வைத்து புதிய சந்ததியினரின் அடையாளமும் மீளமீள வலியுறுத்தப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. அதனால் சாதிய அடுக்கமைப்புள்ள சமுதாயங்களில் தொழில்சார் அசைவியக்கம் குறித்து கருத்தாடுவது நுணுக்கமான புரிதலுக்குரிய ஒரு விடயமாகும்.

யாழ்ப்பாணம் சாதி அடுக்கமைப்பின் வழிவந்த அந்தஸ்துக்களை முதன்மைப்படுத்தி வந்த ஒரு சமூகமாகும். அந்தச் சமூகத்தில் நிகழ்ந்து வந்துள்ள சந்ததிகளுக்கிடையிலான தொழில்சார் அசைவியக்கத்தின் போக்குகளை விளங்கிக் கொள்ளுதல் நுணுக்கமான கோட்பாட்டுத் தெளிவுடன் கூடியதாகவே அமைய முடியும். அந்தச் சமூகத்தில் தொழில்களை மையப்படுத்திய ஏற்றத்தாழ்வுகள் சமூக ஏற்றத்தாழ்வுகளாக இனங்காணப்படுவதால் தொழில்களின் பண்புக்கு அமைவாக சமுதாயங்களில் நிகழ்ந்துள்ள அசைவியக்கத்தின் வீச்சும் வேறுபட்டிருப்பதை அறிந்துகொள்ள முடியும். சமூக அடுக்கமைவின் கீழ்நிலையில் வைத்துக் கணிக்கப்படுபவர்களின் தொழில்சார்ந்த சமூக அசைவியக்கம் மிக நுணுக்கமாகப் புரிந்துகொள்ளப்பட வேண்டும்.

**வதிரிக் கிராமத்தின் தொழில்சார்ந்த அசைவியக்கம் :-**

யாழ்ப்பாண மாவட்டத்தில் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட கிராமங்களில் ஒன்றாக விளங்கும் 'வதிரி' எனும் கிராமத்தில் (கிராம அலுவலர் பிரிவு - J/379) நிகழ்ந்தேறியுள்ள தொழிலை மையமாகக்கொண்ட சமூக அசைவியக்கம் ஒப்பீட்டு ரீதியில் ஏனைய சமுதாயங்களிலிருந்து வேறுபட்டது. அந்தக் கிராமத்தை அண்டியுள்ள ஏனைய கிராமங்களில் பனை, தென்னைகளிலிருந்து கள்ளிறக்குதல் (சீவல் தொழில்), பன்னம் இழைத்தல், பனை மரங்கள் வெட்டுதல், விவசாயக் கூலித்தொழில்கள் முதலான பல தொழில்கள் இருந்துவந்துள்ளன. அந்தத் தொழில்கள் யாவும் சாதியால் அடுக்கமைக் கப்பட்ட சமூகத்தில், அடிப்படையில் சாதிய அடுக்கமைப்பில் மேல்நிலையில் வைத்துக் கணிக்கப்படுபவர்களைச் சார்ந்திருந்து செய்யும் தொழில்களாகவே அமைந்திருந்தன. விவசாய நிலங்கள், பனந்தோப்புகள், பண்ணைகள் என்பவற்றுக்கான உரிமையாளர் களைச் சார்ந்து செய்யும் தொழில்களாக அவை அமைந்தன. இதனால், நிலவுடமை யானது யாரிடம் உள்ளதோ அவர்களின் அதிகாரத்துக்கு உட்பட்டதாக அந்தத் தொழில் களைச் செய்பவர்களின் 'தொழில்சார் சுயாதீனம்' தீர்மானிக்கப்பட்டமை தவிர்க்க முடியாது அமைந்திருந்தது.

வதிரி எனும் குறித்த கிராமம் வளநிலங்களைக் கொண்டதல்ல. விவசாய நிலங்களைக் கொண்டதல்ல; நிலம்சார் தொழில்களால் மேம்படத்தக்க புவிசார்ந்த வாய்ப்புக்களைக் கொண்டதல்ல; அதனால், அங்கு வாழ்ந்த முன்னோர்கள் தமக்கென சுயதீனமான ஒரு தொழிலைக் கண்டடைய வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகியிருந்தனர். அதற்கான ஒரே வழியாக தொழிலைத் தேடிய புவிசார் அசைவியக்கமே அமைந்தது. அந்தப் புவிசார்ந்த அசைவியக்கம் உள்நாட்டுக்குள் நிகழ்ந்தன. 18ஆம் நூற்றாண்டிலும் அதன் பின்னரும் தொழில்தேடி கால்நடையாகவும் கடல்வழியாகவும் இலங்கையின் தென்பகுதி களுக்குச் செல்லத் தூண்டப்பட்டனர். எவ்வாறு யாழ்ப்பாணத்தின் தீவுப்பகுதிகளிலிருந்து வெளியேறிவர்கள் இலங்கையின் பல்வேறு பாகங்களுக்கும் சென்று, தங்கள் வியாபார

முயற்சிகளால் முதலாளிகளாக ஏராளமானவர்கள் உருவெடுத்தார்களோ, அவ்வாறே வதிரிக் கிராமத்தின் முன்னோர்கள் காலி துறைமுகத்துக்கு பாய்மரக் கப்பல்களில் 1904இல் சென்று சேர்ந்தனர். தொழில் விருத்தியை நோக்கமாகக்கொண்ட இந்தப் பெயர்வுதான் அவர்களின் 'தொழில்சார் சுயாதீனத்துக்கான' அடிப்படைக் காரணமானது.

இந்தத் தொழில்சார் சுயாதீனம் எப்படிச் சாத்தியமானது என்பதை சமூகவியல் கண் கொண்டு பார்ப்பது அவசியம். கண்டம் கடந்த புலப்பெயர்வுகள், மத்தியகிழக்கு நாடுகளை நோக்கிய தொழிலுக்கான பெயர்வுகள், கல்வி விருத்தியால் எய்தப்பட்ட தொழில் வாய்ப்புகளும் அதனால் விளைந்த முன்னேற்றங்களும், இன்னும் பல சமூக, பொருளாதார, அரசியல் நிலைகளிலான வாய்ப்புகள் என்பவற்றால் வளர்ச்சி ஏற்பட்டுள்ள இன்றைய நாட்களில் அதன் தார்ப்பரியத்தைப் புரிந்துகொள்வது கடினமானது. அன்றைய நிலையில் உள்நாட்டளவில் நிகழ்ந்த பெயர்வாக அமைந்தபோதிலும், அதன் சமூகத் தாக்கம் கனதி மிக்கதாகவே அமைந்தது. இலங்கை ஆங்கிலேயர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்த காலத்தில் காலி நகரம் அவர்களின் படை நடவடிக்கைகளுக்கான முதன்மை மையமாக விளங்கியது. அந்நியப் படைகளில் பறங்கியர்களின் இடம் முக்கியமானது. அவர்களில் பெரும்பாலானோர் இராணுவப் படைகளில் இருந்ததுடன், படை வீரர்களுக்கு நெருக்கமான தொழில்களையும் செய்தனர். அந்தத் தொழில்களில் 'சப்பாத்து தொழில்' ஒன்றானது. கடல் மார்க்கமாகவும் கால்நடையாகவும் தென்பகுதி சென்றவர்கள் காலி நகரத்தை மையமாகக்கொண்டு தங்கள் தொழில்களைச் சிறிது சிறிதாக வளர்த்தெடுக்க முற்பட்டனர். பறங்கியர்களோடு அவர்களுக்குத் தொழில் செய்யக் கிடைத்த வாய்ப்பு அவர்களுக்கான தனித்துவமான தொழிலைக் கண்டறியவைத்தது.

பறங்கியர்களோடு ஏற்பட்ட தொடர்பும், காலியில் வாழ்ந்த சிங்கள மக்களோடு ஏற்பட்ட உறவும் வதிரியிலிருந்து அங்கு சென்ற முன்னோரின் வாழ்வு முறையில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தியிருந்தது. அந்த மாற்றங்களில் பின்வருவன குறிப்பிடத்தக்கவை.

- தமக்கான ஒரு தொழிலை இனங்கண்டு அந்தத் தொழிலின் நுட்பங்களை அறிந்து கொள்வதற்கான பயிற்சிகளை பெறும் வாய்ப்பு உருவானது.
- அந்தத் தொழிலை விருத்திசெய்து வேலைத்தலங்களையும் விற்பனை நிலையங்களையும் அமைத்து தொழிலை ஸ்தாபனப்படுத்தும் முயற்சிகளை மேற்கொள்ள வாய்ப்பு ஏற்பட்டது.
- சொந்த ஊரிலிருந்து புதிய தொழிலைப் பயிற்றுவிக்கும் நோக்கில் புதியவர்களை அழைத்து, அவர்களுக்கு தாங்கள் ஸ்தாபித்த வேலைத்தலங்களில் தொழிலைப் பயிற்றுவிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டமை.
- சிங்கள நுகர்வோர் மத்தியில் செல்வாக்குமிக்க வணிகர்களாக தம்மை நிலை நிறுத்திக் கொண்டு அவர்களுடனான தொடர்புகளையும் உறவுகளையும் வளர்த்துக் கொண்டமை.
- யாழ்ப்பாணப் பிரதேசத்திலிருந்து தென்பகுதிக்கு வருபவர்களின் தொடர்பாடல் மையங்களாக தங்கள் வணிக நிலையங்களை வசதிப்படுத்திக் கொடுத்தமை. (குறிப்பாக அரச உத்தியோக வாய்ப்பு பெற்றுச் சென்றவர்களுக்கு)
- புதிய களமும் புதிய மனிதர்களின் தொடர்புகளும் நடத்தையிலும் புழக்க முறைகளிலும் புதிய மாற்றங்களை ஏற்படுத்தியிருந்தமை.

- பல்பண்பாட்டுச் சூழல் ஒன்றிலிருந்து கற்றுக்கொள்ளவேண்டிய விடயங்களையும் அனுபவங்களையும் உள்வாங்கியதுடன் அந்தப் பல்பண்பாட்டுச் சூழலில் இருந்த சமுதாய மையமான அமைப்புகளில் இணைந்து தலைமைத்துவம் வகித்தமை.
- புதிய உலகப் போக்குகளை உள்வாங்கியதால் சிந்தனையில் விரிவாக்கம் ஏற்பட்டமை.

மேற்குறித்த விடயங்களால் உள்ளூரில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் உள்வாங்கப் பட்டன. அந்த மாற்றங்கள் கல்வி, கலை, தொழில், சமூக உறவு, அரசியல் நாட்டம், நிறுவன அமைப்பாண்மைகள், சமயவாழ்வு குறித்தான பல விடயங்களில் துலக்கமான முன்னேற்றங்களைக் கொண்டுவரக் காரணமாயின. அது தனித்து விரிவாகவும் ஆழமாகவும் நோக்கப்பட வேண்டிய விடயமாகும்.

வதிரியிலிருந்து சென்று காலியில் பாதணி உற்பத்தி தொழிலைப் பயின்றவர்கள் பெருமளவினர். அவர்களுக்கு முன்பே அங்கு சென்று தொழில்சார்ந்து தங்களை நிலை நிறுத்திக்கொண்டவர்கள் சிறுபகுதியினர். அந்தச் சிறுபகுதியினர் பாதணி விற்பனை நிலையங்களின் முதலாளிகளாகப் பிரபலம் பெற்றிருந்தனர். அந்த முதலாளிகள் தங்கள் விற்பனை நிலையங்களோடு பயிற்சி பெற்றவர்களை இணைத்து பாதணி உற்பத்தியைச் செய்வதற்கான தொழிற்கூடங்களையும் ஸ்தாபித்தனர். இது ஒரே ஊரைச் சேர்ந்த உறவுக்காரர்களிடையே முதலாளிகள், தொழிலாளிகள் என்ற இரு பிரிவினரை உருவாக்கி யிருந்தது. எனினும், அவர்களுக்கிடையே பேதமற்ற ஓர் உறவுநிலை இருந்துவந்தது. ஏனெனில், வியாபாரமும், உற்பத்தியும் ஒன்றை இன்னொன்றைச் சார்ந்திருந்த உற்பத்தி உறவுமுறை ஒன்றைக் கொண்டிருந்தது. ஆரம்பகாலங்களில் இந்த உறவு 'கொண்டு கொடுத்து' தொடரும் உறவாக அமைந்திருந்தது. இந்த முதலாளி - தொழிலாளி இணைவு காரணமாக பாதணித் தொழில் இலங்கையின் பல்வேறு பாகங்களுக்கும் வேகமாகப் பரவலடைந்தது. காலியைக் கடந்து கண்டி, பதுளை, மாத்தறை, மாத்தளை, குருநாகல், கொழும்பு, அநுராதபுரம், வியாங்கொடை, நீர்கொழும்பு, கேகாலை முதலான பல இடங் களுக்கு விரிவாக்கம் பெற்றது. நியூ பூட் எம்போறியம், ஜங்சன் பூட் வேர்க்ஸ், கிருஸ்ணா ஸ்ரோர்ஸ், ஜவ்னா ஸ்டோர்ஸ், பாக்கியமலர்ஸ், ஜோதீஸ் என்று பல ஸ்தாபனங்கள் நிறுவப் பட்டன (தரப்பட்ட பட்டியல் முழுமையற்றது). மருதானை, தொமட்டகொட பகுதியில் இருந்த 'சிற்றி தோட்டம்' எனும் பகுதியில் வதிரியைச் சேர்ந்த பலரது பாதணி உற்பத்தி நிலையங்கள் இருந்தன. அந்த நிலையங்களிலிருந்து பிரபலமான வியாபார நிறுவனங் களுக்கு பாதணிகள் விநியோகிக்கப்பட்டுவந்தன. இந்த உற்பத்தி நிலையங்களாலும் வியாபார நிறுவனங்களாலும் வதிரிக் கிராமத்துக்குப் பெரியதொரு பொருளாதாரப் பாய்ச்சல் ஏற்பட்டு, அதன் செழிப்பின் விளைவு உள்ளூரில் அறுவடைசெய்யப்படும் நிலை ஏற்பட்டது. பாதணி உற்பத்தி மற்றும் விற்பனை ஆகிய இரண்டிலும் பேர்பெற்ற பல முதலாளிகள் செல்வந்தர்களாக உருவெடுத்ததால் (பெயர்பட்டியல் மிக நீண்டது என்பதால் தவிர்க்கப் படுகிறது) அவர்களின் ஆதரவோடு உள்ளூரில் பல புதிய முற்போக்கான மாற்றங்கள் ஏற்பட்டதுடன் சமுதாய உறுதிப்பாட்டுக்கு வழிசமைத்தது (இந்த முன்னோடியான மாற்றங்கள் குறித்து விரிவாக பார்க்க அதிகமான விடயங்கள் உள்ளன). மரபுவழியாக நிலத்தை மையப்படுத்திய விவசாயம், பண்ணை, பன்னம் போன்ற தொழில்களில் ஈடுபட்டு இன்னொரு பிரிவினரின் அதிகாரத்துக்குள் அகப்படாத ஒரு 'தற்சார்பு நிலையை' பாதணித்தொழில் வதிரியிலிருந்த அந்தச் சமூக வகுப்பினருக்கு கொடுத்தது.

**உள்ளூரில் பாதணி உற்பத்தித் தொழிலின் நிறுவனமயமாக்கம்:**

19ஆம் நூற்றாண்டின் ஆரம்ப நாட்களில் இந்த முதலாளிகள் கடல்வழிப் பயணங்களை மேற்கொண்டதால் மிகநீண்டகாலம் சொந்த ஊருக்கு வருவதில்லை. எனினும், காலப் போக்கில் தரைவழிப் போக்குவரத்து துறையின் விருத்தியின் பின்னர் பலரும் சொந்த ஊருக்கு வந்துபோனார்கள். இது உள்ளூரில் முக்கியமான மாற்றங்களுக்கு மேலும் வழிவகுத்தது. குறிப்பாக உள்ளூரில் பாதணித் தொழிலுக்கான 'பட்டறைகள்' (industrial workshops) தோன்றத்தொடங்கின. தங்கள் குடும்பங்களோடு தங்கியிருந்து தொழில் செய்ய விரும்பிய பாதணி உற்பத்தி சிறுமுதலாளிகள் தொழிலாளர்கள் பலரை ஒருங்கிணைத்து பட்டறைகளை உருவாக்கி பாதணித் தொழிலை உள்ளூரில் அறிமுகம் செய்து வளர்த்தெடுக்க முற்பட்டனர். அந்தக் காலத்தில்தான் திரு.ஏ.எம். வடிவேலு (சமூகஜோதி ஆ.ம.செல்லத்துரை ஆசிரியர் அவர்களின் சகோதரர்) என்பவர் பாதணி உற்பத்தித் தொழிலின் மகத்துவத்தை உணர்த்தும் 'தங்கச் சுரங்கம்' எனும் நூலை 1955இல் வெளியிட்டு வைத்தார். அந்த நூல் முதலாளிகள் மையமாக வளர்ந்த பாதணி உற்பத்தி தொழிலுக்கு 'தொழிலாளிகள் மையமான' ஒரு கண்ணோட்டத்தைக் கொடுத்தது. வதிரியில் பாதணித் தொழிலாளர்கள் ஒருங்கிணைக்கப்பட்டு ஒரு சங்கமாக தொழிற்படு வதன் அவசியத்தையும் அதன் விளைபயன்களையும் சிந்திக்க வைத்தவர் ஆ.ம.வடிவேலு அவர்களே. பாதணித் தொழிலுக்கு உள்ளூரில் ஒரு 'தொழிற்சாலைக் கலாசாரத்தை' (Industrial Culture) அவரது சிந்தனை ஏற்படுத்திக் கொடுத்தது. 1955இல் வெளியான அந்த நூலில் வதிரியின் பாதணி உற்பத்தி அறுபது ஆண்டு வரலாற்றைக் கொண்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த நூல் வெளிவந்து இப்போது அறுபத்தொன்பது வருடங்கள் கழிந்துபோயின. இந்தக் காலக்கணிப்பு வதிரியின் பாதணி உற்பத்தித் தொழிலின் வரலாற்றை 125 வருடங்களைத் தாண்டி எடுத்துச் செல்கின்றது என்பது உய்த்துணரத் தக்கது.

ஏறத்தாழ 50 பாதணித் தொழிலாளர்களை ஒன்றிணைத்து கூட்டுறவாக 'ஐக்கிய சப்பாத்துக் கூட்டுறவுச் சங்கத்தை' ஆ.ம.வடிவேலு உருவாக்கினார். வாராந்தம் தொழிலாளர் களுக்குச் சம்பளம் வழங்கப்பட்டுவந்தது. காலை ஐந்து மணிக்கு தொழிற்சாலையில் ஒலிக்கப்படும் மணியோடு வதிரிக் கிராமம் செயற்படத் தொடங்கும். பின்னர் காலையில் தொழில் ஆரம்ப மணி, மதியம் உணவுக்கான மணி, பிற்பகல் நிறைவுக்கான மணி என்று ஒலிக்கப்பட்டு ஒரு தொழிற்சாலை நடைமுறை சிறப்புறக் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. முதலாளிகளின் செல்வாக்கு நிறைந்த அந்தத் தொழிலில் தொழிலாளர்களை மையப் படுத்திய 'கூட்டுறவுப் பாணியின்' (Co-op Style) அறிமுகம் ஒரு முன்மாதிரியான செயற் பாடாகவே அமைந்தது. தொழிற்சாலைக்கென ஐ.ஆ.இராசரத்தினம் அவர்களால் வழங்கப் பட்ட நிலத்தில் புதிய தொழில்நிலையக் கட்டடம் ஒன்றை அமைத்து பாதணி உற்பத்தியை மேற்கொள்ளத் தொடங்கினர். பாட்டா, டீஎஸ்ஐ முதலான பாரிய பாதணி தொழிற்சாலைகள் பார்த்து வியக்குமளவுக்கு கைகளால் தயாரிக்கப்பட்ட பாதணிகள் உற்பத்தி செய்யப் பட்டன. அப்போது பாட்டா கம்பனியின் சிரேஸ்ட நிறைவேற்று உத்தியோகத்தரான மொமன்தலா என்பவர் ஐக்கிய சப்பாத்துக் கூட்டுறவுச் சங்கத்தைப் பார்வையிட வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. சிறிதுகாலம் ஐக்கிய சப்பாத்துக் கூட்டுறவுச் சங்கத்தின் தயாரிப்புகளை அந்த நிறுவனம் கொள்வனவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. பாதணி தயாரிப்பில் முதன்மை நிறுவனங்களாக விளங்கிய அந்தக் கம்பனிகளின் தலையீடும் அந்தச் சங்கத்தின் வீழ்ச்சிக்கான முக்கிய காரணங்களில் ஒன்றாகச் சொல்லப்பட்டு

வருகின்றது. அந்தளவுக்கு வதிரியின் பாதணிகளுக்கு இலங்கைச் சந்தையில் அதிக கிராக்கியிருந்தது. இந்தத் தொழில் வதிரிக் கிராமத்துக்கு ஒரு 'கைத்தொழில் கிராமம்' (Industrial Village) எனும் அடையாளத்தை அந்நாளில் ஏற்படுத்திக் கொடுத்தது.

**பாதணி உற்பத்தித் தொழிலில் கூட்டுறவு முறையின் எழுச்சியும் வீழ்ச்சியும்:**

முதலாளிகளின் கிராமத்தில் ஆ.ம.வடிவேலு என்பவரின் தூரநோக்கு ஒரு கூட்டுறவு முறையின் நிலைபேற்றுக்கு அடித்தளமிட்டிருந்தமை வியப்பையே தருவது. எவ்வாறு முதலாளிகளின் மத்தியில் கூட்டுறவு அமைப்பின் உருவாக்கம் சாத்தியமாகும்? என்ற வினா இருந்தே வந்துள்ளது. அதற்குப் பின்புலமாக பல காரணகள் அமைந்தன. அவற்றில் முக்கியமான சில காரணங்கள் பின்வருமாறு:

- முதலாளிகளும் தொழிலாளிகளும் உறவினர்களாக இருந்து வந்ததால் அவர்களுக் கிடையில் நிலவிய நெருக்கம்.
- தொழிலாளர்களின் முயற்சியால் விளையும் உற்பத்திப் பெருக்கம் பெருக்கமடைந்த தென்னிலங்கை மற்றும் உள்ளூர் வியாபார நிறுவனங்களின் வியாபாரத்துக்கு அவசியமாக இருந்தமை.
- வீடுகளை முதன்மைப்படுத்திய சிற்றளவிலான முயற்சியாண்மைகளாக பாதணி உற்பத்தியைத் தொடர்வது தொடர்பில் ஏற்படுகின்ற அதிகளவிலான மூலதனச் செலவினங்கள்.
- வதிரிக் கிராமத்திலிருந்த முன்னோர்களில் சிலரது இடதுசாரி அரசியல் நாட்டமும் அக்கால இலங்கை அரசின் கொள்கைப் போக்குகளில் மேலெழுந்துவந்த இடதுசாரி நோக்குகளும்.
- கிராமங்களின் தொழில் முயற்சியாண்மைகளுக்கு கூட்டுறவே சரியானதொரு மாதிரி என்ற சாதாரண மக்களின் எண்ணப்பாடு.

மேற்குறித்த காரணங்களால் தொழிலாளர்கள் பலர் ஒருங்கிணைந்து 'ஐக்கிய சப்பாத்துக் கூட்டுறவுச் சங்கமாக' தொழிற்பட்டனர். அந்தச் சங்கம் தொடர்ந்து நிலை பெற்றிருக்குமெனின் இலங்கையின் அரசியலில் இடதுசாரிகளின் பேரெழுச்சிக்கான காலம் அதன் வெற்றிகரமான தொழிற்பாட்டுக்கு வழிசமைத்திருக்கும். எவ்வாறு பனை - தென்னை வள உற்பத்தி விற்பனைவுக் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக இடதுசாரிகளின் அரசியல் செயற்பாடுகள் காரணமாக அமைந்ததோ அவ்வாறே பாதணி உற்பத்திக்கான சங்கங்களும் வல்லமை பெற்றிருக்க முடிந்திருக்கும்.

அந்த ஐக்கிய கூட்டுறவுச் சங்கத்தின் வீழ்ச்சிக்குப் பின்புலமாகப் பல காரணங்கள் தொழிற்பட்டன. அவற்றில் பின்வருவன குறிப்பிடத்தக்கவை:

- தென்னிலங்கையின் வியாபார நிறுவனங்களில் உற்பத்தி பொருள்களுக்கு ஏற்படும் கிராக்கிக்கும் யாழ்ப்பாணத்தில் அத்தகைய நிறுவனங்களின் கிராக்கிக்கும் இடையில் நிலவிய மலையும் மடுவுமான வேறுபாடு.
- இதனால் குறைவடையும் தொழிலாளர்களின் வருமானக் குறைவை நிவர்த்திக்கத் தொழிலாளர்கள் தென்னிலங்கையில் அமைந்திருந்த பாதணி உற்பத்தி நிறுவனங் களை நோக்கிச் சென்றமை.
- வீடுகளை மையப்படுத்தி சிற்றளவு முதலாளிகளால் உருவாக்கப்பட்ட தொழிலகங்கள் கூட்டுறவில் தொழில்புரிந்த தொழிலாளர்களை கவர்ந்திழுத்தமை.

- கூட்டுறவு அமைப்பின் நிர்வாக முறை, முடிவுப் பொருள்களைச் சந்தைப்படுத்தும் தந்திரோபாயங்கள், பெறுமதி சேர்ப்புக்கான வழிமுறைகள், விளம்பர உத்திகள் என்பவற்றிலான தளர்வுகளும் பின்னடைவுகளும்
- நடைமுறைக்குவரும் புதிய நுட்பங்களைக் கையாள்வதிலும், அதற்கான பயிற்சிகளை வழங்குவதிலும் நவமான சாதனங்களை பெறுவதிலுமான தடைகள்
- வளர்ச்சி பெற்ற முன்னணியான பாதணி உற்பத்தி நிறுவனங்களின் உற்பத்திகளோடு சந்தையில் போட்டியிடுவதற்கான வசதிகளை உள்வாங்கிக்கொள்வதிலான சிக்கல்கள்.
- வளர்ச்சி பெற்ற முன்னணியான பாதணி உற்பத்தி நிறுவனங்களோடு ஏற்பட்ட சந்தைப் படுத்தல் ஒத்துழைப்புக்களை சந்தேகமின்றி அப்படியே ஏற்றுக்கொண்டதன் விளைவான ஏமாற்றங்கள்.
- தொழிலாளர்களுக்கிடையே ஏற்பட்டுவந்த ஒற்றுமையின்மை.
- முதலாளிகள் மற்றும் சிறுமுதலாளிகளின் சுயநலங்கள்
- உற்பத்தி தொழிலில் ஈடுபட முனைந்த புதிய தலைமுறையினர் மத்தியில் ஏற்பட்ட தென்னிலங்கை பாதணி உற்பத்தி நிறுவனங்கள் மீதான கவர்ச்சி.

இத்தகைய காரணங்களால் தங்கச் சுரங்கெமென வருணிக்கப்பட் பாதணி உற்பத்தித் தொழிலை ஒரு கூட்டுறவு முறைக்குட்பட்ட அமைப்பாண்மையாக வளர்த்தெடுக்க இயல வில்லை. எனினும், வீடுகளை மையப்படுத்திய சிற்றளவு பாதணி உற்பத்திப் பட்டறைகள் தொழிற்பட்டவண்ணம் இருந்தே வந்தன. அவை உள்ளூரில் தோன்றிய பாதணி வியாபார நிலையங்களுக்கு தங்கள் உற்பத்திகளை விநியோகித்துவந்தன. அது மிகவும் கவர்ச்சி கரமானதாக மாறிவந்தது. வதிரியைச் சேர்ந்த பலரும், அயலூர்களிலிருந்து அந்தத் தொழிலைப் பயில விருப்பங்கொண்டு வந்தவர்களும் வீடுகளை மையமாகக்கொண்ட 'சிற்றளவு பாதணி உற்பத்திப் பட்டறைகளில்' தொழில்புரிந்தனர். நாளொன்றுக்கான தொழிலாளர்களின் வருமானம் கவர்ச்சிமிக்கதாக அமைந்திருந்தது.

**பாதணி உற்பத்தித் தொழிலின் வீழ்ச்சிக்கான சமூக, அரசியல், பொருளாதார காரணங்கள்:**

எவ்வாறு ஐக்கிய சப்பாத்துக் கூட்டுறவுச் சங்கத்தின் தொழிற்பாடுகளில் வீழ்ச்சிநிலை ஏற்பட்டதோ அவ்வாறே வதிரிக் கிராமத்தின் வீடுகளில் இயங்கிவந்த உற்பத்திப் பட்டறை களிலும் சமகாலத்தில் தென்னிலங்கையை மையப்படுத்தி இயங்கிவந்த வதிரிக் கிராமத்த வர்களின் தொழில் நிலையங்கள் மற்றும் வியாபாரத் தலங்களிலும் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டது. அதற்கான பிரதான காரணமாக இலங்கையில் ஏற்பட்டிருந்த இனமுரண்பாட்டுச் சூழலும் அதன் விளைவான கலவரங்கள், போர்கள், பொருளாதாரத் தடைகள் என்பன அமைந் திருந்தன. வதிரிக் கிராமத்திலிருந்து சென்று தென்னிலங்கையில் பாதணி விற்பனை நிலையங்கள், பாதணி உற்பத்தி நிலையங்கள் என்பவற்றை நடத்திவந்த முதலாளிகளும் தொழிலாளிகளும் சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களோடு தங்களது அந்நியோன்னியமான உறவு குறித்து பெருமைமிக்கவர்களாகவே இருந்தனர். எனினும், தென்னிலங்கையில் தூண்டிவிடப்பட்ட இனக்கலவரங்களின்போது பலர் கொல்லப்பட்டும் காணாமலாக்க பட்டும் வந்தனர். சில முதன்மைமிக்க வியாபார நிறுவனங்கள் எரியூட்டப்பட்டன. நம்பிக்கை யிழந்த முதலாளிகளும் தொழிலாளிகளும் ஏதிலிகளாக சொந்த ஊருக்கு திரும்பி வந்து சேர்ந்தனர். அவர்களில் சிலர் தங்கள் தொழில்களை மாற்றிக்கெள்ள நிர்ப்பந்திக்கப் பட்டனர். வேறுசிலர் சிறிய முதலீட்டில் உள்ளூரில் பாதணி உற்பத்தி நிறுவனங்களை

புதிதாக உருவாக்கினர். ஆயினும், அவர்களின் முயற்சிகளுக்கான போதுமான பலன்கள் கைகூடவில்லை. 1980களின் பின்னர் தீவிரமடைந்த யுத்த நிலைமைகளால் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளுக்கு விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளால் வெகுவாகப் பாதிக்கப் பட்ட தொழில்களில் பாதணி உற்பத்தி சார்ந்த தொழில் முக்கியமானது. உற்பத்திக்கான மூலப்பொருள்கள் முழுவதுமே தடைசெய்யப்பட்ட பொருள்களில் உள்ளடங்கிப்போயின. இந்நிலையில் வதிரிக் கிராமத்தின் பாதணித் தொழில் முற்றாக ஸ்தம்பித்துப் போகும் நிலை உருவானது. தொழிலை மையமாகக்கொண்டு உருவாக்கப்பட்டுவந்த வதிரிக் கிரமாத்தின் பொருளாதாரச் செழிப்பு மெதுமெதுவாக மங்கிச் சென்றதால் அங்கிருந்த தொழிலாளர்களும் முதலாளிகளும் வெகுவாகப் பாதிக்கப்பட்டனர். அவர்கள் தங்கள் கௌரவத்தைப் பறிகொடுத்ததாகக் கருதினர். சூழவுள்ள கிராமங்களில் உள்ளவர்களால் ஏளனம் செய்யப்பட்டார்கள். அந்தச் சூழலிலிருந்து மீண்டெழுவதற்கான முற்சிகள் பலவற்றை எடுத்தனர். யுத்தகாலத்தில் தொழிலை இழந்த பல்வேறு தரப்பினருக்கும் நிவாரணங்களும், மானியங்களும், நட்ட ஈடுகளும் வழங்கப்பட்டே வந்தன. எனினும், பாதணி உற்பத்தித் தொழிலாளர்களை மீட்டெடுப்பதற்கான வாய்ப்புக்கள் மிகக் குறை வாகவே இருந்தது.

### பாதணி உற்பத்தித் தொழிலை மீட்டெடுப்பதற்கான பிரயத்தனங்கள்:

இந்தத் தொழிலை மீட்டெடுப்பதற்கு பலரது ஆதரவும் கோரப்பட்டிருந்தது. அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களிடம் ஆதரவுப் பொறிமுறைக்கான பல முன்வைப்புக் களையும் கோரிக்கைகளையும் செய்தனர். சமூகப்பணி நிறுவனங்கள், உள்ளூர் சமூக மட்ட நிறுவனங்கள் போன்றவற்றின் வழிகாட்டல்களும் ஆலோசனைகளும் பெறப்பட்டன. கூட்டுறவுச் சங்கங்களின் தலையீடுகள் கோரப்பட்டன. அவற்றின் விளைவாக தொழிலை மீட்டெடுத்து மக்களின் வாழ்வாதாரத்தையும் மேம்பாட்டையும் உறுதிப்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றில் பின்வரும் முயற்சிகள் முக்கியமானவை.

- கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக இருந்து நீண்டநாட்கள் பணியாற்றிய திரு த. சிதம்பரப்பிள்ளை ஆசிரியர் அவர்கள் வதிரியில் பலருடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருந்தார். போர்ச் சூழலால் பெற முடியாதுபோன மூலப்பொருள்களைப் பெற்றுக்கொள்ளவும் உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்த சரியானதொரு வழிமுறையை உருவாக்கிக் கொள்ளவும் கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அனுசரணை வழங்கியது. 'கோப் சூ' (Co-Op Shoe) என்ற பெயரில் நெல்லியடியில் ஓர் உற்பத்தி நிறுவனம் உருவானதுடன் அதற்கான மூலப்பொருள்கள் மலிவு விலையில் பெறப்பட்டது. மலிவான விலையில் முடிவுப் பொருட்களை பெறத்தக்க நிலை ஏற்பட்டது எனினும் நிர்வாக உள்முரண்கள், தொழிலாளர் களின் சிரத்தையின்மை, தொழிலாளர்களின் பலர் மீண்டும் தென்னிலங்கை செல்ல முயன்றமை போன்ற காரணங்களால் சொற்பகாலத்தில் அந்த முயற்சி நின்றுபோனது.
- வதிரியில் அதிபர் எம்.எஸ்.சீனித்தம்பி அவர்களின் பெருமுயற்சியால் வதிரி அபிவிருத்தி நிறுவனம் உருவாக்கப்பட்டது. அது போர்க்காலத்தில் மக்களுக்கு பல முதன்மையான சேவைகளைச் செய்துவந்தது. அந்த நிறுவனம் நலிந்போன பாதணி உற்பத்தியாளர் களின் வாழ்வு குறித்து அதிக கரிசனை கொண்டிருந்தது. அதிபர் எம்.எஸ்.எஸ். அவர் களின் முயற்சியால் கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அப்போதைய தலைவர் கே. இராசரத்தினம், பிரதேச திட்டமிடல் பணிப்பாளர், கூட்டுறவு

உத்தியோகத்தர்களான எஸ்.எம். சிவமயம், எஸ்.கனகசபாபதி ஆகியோரின் முன்னிலையில் 1991ஆம் ஆண்டில் வதிரி பாதணி உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் எனும் அமைப்பு உருவாக்கப்பட்டது. அதற்காக பலரை ஒன்றிணைத்துச் செய்த நீண்ட ஆய்வின் பின்னர், வதிரி அபிவிருத்தி நிறுவனம் அன்றைய அரசாங்க அதிபரை நேரில் சந்தித்து முன்மொழிவு ஒன்றை சமர்ப்பித்திருந்தமை குறிப்பிடத் தக்கது. அந்த முன்மொழிவு பாதணி உற்பத்தி எதிர்கொண்ட பிரச்சினைகள், அவற்றைத் தீர்ப்பதற்கான அவசியம் என்பவற்றை புள்ளிவிபரத் தகவல்களுடன் வெளிப்படுத்தியிருந்தது. பாதணிக்கான மூலப்பொருள்கள் மீது விதிக்கப்பட்ட கடுமையான தடை அந்த முயற்சிகளின் பயனைச் சரியாகப் பெறுவதிலும் சவாலையே உருவாக்கியது.

- ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவனத்தின் நிதியுதவியுடன் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆதரவுடனும் அன்றைய யாழ்மாவட்ட செஞ்சிலுவைச் சங்கத்தின் தலை வராக இருந்த பேராசிரியர் வீ.கே.கணேசலிங்கத்தின் பிரயத்தனத்தில் 1998இல் புலோலியில் 'வதிரி கிறாப்ற்' (Vathiry craft) எனும் பாதணி உற்பத்தி நிறுவனம் உருவாக்கப்பட்டு, வதிரியின் பாதணித் தொழில் வல்லுனர்களால் தொழிலில் நாட்ட முள்ள புதிய இளைஞர்களுக்கு முறையான பயிற்சிகள் வழங்கப்பட்டன. அதன் மூலமாக நலிந்துபோன பாதணி தொழிலுக்கு உயிர்ப்பளிக்கலாம் என்று கருதப் பட்டது. பயிற்சி பெற்ற இளைஞர்களின் தொடர்ச்சியான ஆர்வமின்மை, அவர்களின் கொழும்பு, நீர்கொழும்பு நோக்கிய பெயர்வு, பயிற்சியை தொழிலாக மாற்றிக் கொள்வதிலான ஒருங்கமைப்பு முயற்சிகளிலான தேக்கநிலை, கொழும்பு மற்றும் நீர்கொழும்பு போன்ற நகரங்களில் இயங்கிவந்த தனியார் பாதணி உற்பத்தி நிறுவனங்கள் ஏற்படுத்திய இழுவிசை முதலிய காரணங்களால் அந்த முயற்சியும் நின்றுபோனது.

- பாதணி உற்பத்தியை மீட்டெடுக்கும் படிப்படியான நீண்டகால முயற்சிகளில் 2005ஆம் ஆண்டில் கரவெட்டி பிரதேச செயலராக திரு சி. சத்தியசீலன் அவர்கள் பணியாற்றிய காலத்தில் தற்போதுள்ள 'வதிரி தோல்பொருள் அபிவிருத்திச் சங்கத்துக்கான' கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டப்பட்டது. கடும் சவால்களை எதிர் கொண்ட அந்தக் கட்டட நிர்மணப் பணியானது 2009இல்தான் முனைப்புடன் ஆரம்பிக் கப்பட்டது. அந்தக் கட்டடத்தை வதிரி தமிழ்மன்றம் ஏலத்தில் எடுத்துக்கொள்வதென தீர்மானிக்கப்பட்டது. கட்டட நிர்மாணத்தின் பின்னான காலத்தில் ஏற்பட்ட நிர்வாக மாற்றங்களின் பின்னர், கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் அனுசரணை நாடப்பட்டபோது கருவிகள், பொறிகளின் உள்ளீட்டம், பயிற்சிக்கான வசதியளித்தல் என்பவற்றில் அதிகாரசபையின் அனுசரணை பெறப்பட்டதால் அப்போது துறை சார்ந்த அமைச்சராக இருந்த கௌரவ கே. என். டக்ளஸ் தேவானந்தா அவர்களால் அந்தக் கட்டடம் 2010ஆம் ஆண்டில் திறந்து வைக்கப்பட்டது. அப்போது 'லக்பா' நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் சந்திர கன்னங்கர அமைச்சரின் வேண்டுகோளை ஏற்று இயந்திரங்களையும் தொழினுட்ப வசதிகளையும் வழங்கி வைத்தார். அந்த நிகழ்வில் சந்திர கன்னங்கர குறிப்பிட்ட கருத்தென சண்டே ஒப்சேவர்(27.02.2011) 'Chandra Kannangara, the Managing Director of "Lakpa" Organization said that honouring the request made by the Minister, that he was looking forward to extend his assistance to the best of his capacity for serving the people of

Jaffna. He also said that the monthly sale of footwear in the entire peninsula exceeded well over 300,000 pairs, and the Vathiry Market share should be in the region of 30,000 pairs' என்று செய்தி வெளியிட்டிருந்தது. எண்ணிக்கையில் மிகக்குறைந்த நடுத்தர வயதுக்காரர்கள் தங்கள் குடும்ப வாழ்வாதாரத்துக்கான தொழிலைச் செய்வதற்கான வசதியளிக்கும் ஓர் இடமாகவே அந்தக் கட்டடம் இயங்கி வருகின்றது. கொடுக்கப்பட்ட பொறிகளின் பயனுறுதி உற்பத்தியை அதிகரிக்கப் போதுமானதாக அமையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எனினும், வதிரியின் பாதணிகள் என்ற வகையில் அங்கு தயாரிக்கப்படும் பாதணிகளின் தரம் இன்றும் கணிப்பு பெறும் நிலையில்தான் உள்ளது. அங்கு இன்று தொழிலில் ஈடுபடுபவர்கள் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தலில் பாரிய சவால்களைச் சந்திக்கின்ற நிலையிலும் தமக்குள் ஒருங்கிணைப்பொன்றை உருவாக்கித் தொழிலைச் செய்து வருகின்றனர். வதிரி தோல்பொருள் அபிவிருத்திச் சங்கத்தின் செயற்பாடுகள் வலுவூட்டப்பட வேண்டிய நிலையில் உள்ளன. குறிப்பாக உபகரணங்கள், கருவிகள், இயந்திரங்கள் முதலான அடிக்கட்டுமான உள்ளீடுகளில் நவீனத்துவமானதும், திறன்வாய்ந்ததுமான வசதிகள் அதிகரிக்கப்பட வேண்டியுள்ளது. நல்லதொரு பொதுநோக்குள்ள முகாமைத்துவ சபையும் அதன் பயனுறுதி வாய்ந்த பங்களிப்பும் இன்றியமையாதது. திறன்வாய்ந்த உற்பத்திக்கான தேர்ச்சி பெற்ற தொழிலாளர் மற்றும் புதிய பயிற்சி நிலையிலுள்ள தொழிலாளர்களுக்கான ஒத்துழைப்புடன்கூடிய செயலாற்றுகையின் தேவை உள்ளது. பெறுமதி சேர்க்கைக்கும் சந்தைப்படுத்தலுக்குமான பயனுறுதி வாய்ந்த தந்திரோபாயங்கள் மற்றும் பொறி முறைகளை வகுத்துக்கொள்ள வேண்டும். இவற்றின் வழியாக நுண்நிலை உற்பத்திப் பொறிமுறைகளை பருநிலை உற்பத்தியை நோக்கி மாற்றிக்கொள்ளும் வேணவாவும் வழிமுறைகளும் கண்டடையப்படலாம். இதுவே இந்தத் தொழில் தொடர்பான தற்போதைய அவசியத் தேவையாக முன்னிற்கின்றது. இதற்கான சமூக மட்ட பங்கேற்பும், சமூக மட்ட நிறுவனங்களின் அர்ப்பணிப்பான பணியும், நிதியீட்டத் தேடலும், தகுதிவாய்ந்த நிறுவனங்களுடனான கூட்டிணைவும் (Collaboration) அவசியமாகின்றது.

மேற்குறிப்பிட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட நிலையிலும் இந்தத் தொழிலை அதற்கான மகத்துவத்துடன் வளர்த்தெடுக்க முடியாமல் தடுமாறுவதற்கு பல காரணங்கள் உள்ளன. அந்தக் காரணங்கள் தனித்து மிக விரிவாக ஆராயப்பட வேண்டியவை. ஒன்று இன்னொன்றோடு தொடர்புறும் பல்வேறு காரணங்கள் என்பதால் அதுபற்றிய ஊகங்களை வெளிப்படுத்தும் அளவுக்கு ஆழமான பகுப்பாய்வுகள் இதுவரை செய்யப்படவில்லை. இதுவரை எடுத்த முயற்சிகளின் தோல்வி தொடர்பில் எந்தவொரு பகுப்பாய்வோ அறிக்கைப் படுத்தல்களோ பூரணமாகச் செய்யப்படவில்லை. இந்த அசமந்தப்போக்கினால் பல குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளமை வெளிப்படையானது.

**முடிவுரை : தற்போதைய தேவை என்ன?**

குறிப்பாக இந்தத் தொழில் முடங்கிப்போய் உள்ளமைக்கு முதன்மையான காரணம் இனரீதியன முரண்பாடும் அதன் விளைவான கலவரங்களை எதிர்கொண்டதும் ஆகும். ஆயினும், அதன் விளைவுகளை இரட்டிப்பாக்கி கையறுநிலைக்குக் கொண்டு சென்ற காரணியாக அமைவது யுத்தகாலத்தில் அரசாங்கத்தால் முடுக்கிவிடப்பட்ட பொருளா தாரத் தடைகளும் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு நட்டஈடுகள் மற்றும் மானியங்கள்

கொடுப்பதிலான பாராமுகங்களும். இவை எல்லாவற்றுக்கும் அப்பால் தொழில் தொடர்ச்சியொன்றை பேணத்தக்க சூழலை உருவாக்குவதில் பாரிய சிக்கல் நிலைகள் ஏற்பட்டுள்ளது. யுத்தம் முனைப்பாக நடைபெற்ற காலங்களில் தொழில் இழந்த இளைஞர்கள் விரக்தியுற்றிருந்தனர். தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களான அவர்களில் சிறுதொகையினர் தொழில் தேடி நாட்டைவிட்டு வெளியேறி மத்தியகிழக்கு நாடுகளிலும், ஐரோப்பிய நாடுகளிலும் குடியேறினர். அதனால் அடுத்துவந்த இளைஞர் சந்ததியை நோக்கிய தொழில் தொடர்ச்சியும் கையளிப்பும் பாதிக்கப்பட்டது. அதே நேரத்தில் அதிக நாளாந்த வருவாயைத் தரும் இந்தத் தொழிலால் இளையோரின் கல்வி மீதான நாட்டம் குறைவடைந்து செல்கிறது எனும் எதிர்மறை விமர்சனமும் பெற்றோரிடம் உருவாகியது. இந்த விமர்சனம் பிள்ளைகளின் கல்வி மீதான நேர்முகமான கரிசனையை உருவாக்கியிருந்தது. கல்வி வழியான உத்தியோக வாய்ப்புகள் அதிகரித்திருந்த அதேவேளையில் கல்வியிலிருந்து விலகிய கணிசமான தொகை இளைஞர்கள் கல்வியினால் விளையும் எனக் காத்திருந்த பயனுமின்றி, மரபுத் தொடர்ச்சியோடு வந்த விசேட திறன்மிக்க தொழிலுமின்றி குடும்பங்களுக்குச் சுமையாகவும் சில சமயங்களில் பிரச்சினைகளாகவும் மாறும் நிலைக்கு தள்ளப்பட்டனர். இந்தத் தொழில் தொடர்ச்சி அறுந்துபோன நிலை இன்றுவரை வதிரிக் கிராமத்தின் பொருளாதார நிலையில் பெரும்தாக்கத்தினை ஏற்படுத்தியே வருகின்றது.

'தங்கச் சுரங்கமான' இந்த தொழிலை வளர்த்தெடுத்த இந்த ஊரின் முன்னோர்களின் சிந்தனையின் செழுமை தொடரப்பட வேண்டும் என்ற உறுதியான விருப்பு இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த ஊரின் சிரேஸ்ட பிரஜைகளிடம் உள்ளது. மரபார்ந்த தொழிலொன்றின் நவீனமயமாக்கமே இன்றைய இளைஞர்களை அந்தத் தொழிலின்பால் ஈர்ப்பதற்கான தகுந்த வழியென்பதை மூத்தவர்கள் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். ஒரு விசேட திறன்வாய்ந்த தொழிலை அதற்கேயுரிய சமுதாயம் முற்றாக இழந்துபோவது, பிராந்திய அபிவிருத்திச் செயன்முறையில் பங்களிகளாகவுள்ள அனைவரினதும் தோல்வியே என்பதை புரிந்துகொள்ளவேண்டும். உள்ளூர் ஆற்றலை ஒருங்கிணைப்பதிலான குறைபாடுகளைக் கண்டறிதல், கடந்தகால தவறுகளின் மீதான திறந்த நோக்குடன் கூடிய மீள்பார்வை, பிரச்சினைகளை வெற்றிகொள்ளத் தகுந்த புதிய உத்திகள் பற்றிய ஆய்வுகள், பொருத்தமான நிபுணத்துவ ஆலோசனைகள், வெற்றிபெற்ற மாதிரிகளின் (succeeded models) முன்னுதாரணங்களைத் தரிசித்தலும் ஏற்றுக்கொள்ளலும், பழம் பெருமைகளில் மூழ்கிக் கிடக்காத சாத்தியப்பாடான வழிமுறைகளை ஒன்றுபடுத்தல் என்பவை கிராம மேம்பாட்டுக்கான தொழிலொன்றை மீட்டெடுப்பதற்கான உபாயங்களாகின்றன. இதனை வதிரிக் கிராமத்தின் சமுதாய மட்ட அமைப்புகள் சரிவரப் விளங்கிக் கொள்ளும் நிலையில்தான் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தமக்கு வாய்ப்பான நடைமுறைச் சாத்தியமான கருத்திட்டத்துக்கான முன்மொழிவை கறுப்பு - வெள்ளை ஆவணமாகக் கையில் வைத்திருக்க முடியும்.

குறிப்பு: இந்தக் கட்டுரைக்கான அடிப்படையான தகவல்கள் சிலவற்றைப் பெற்றுக்கொள்ள உதவிய வதிரியைச் சேர்ந்த திரு.ச.இரத்தினசேகரன், திரு.ஆ.ம.செ.சபாநாயகம் ஆகியோருக்கு நன்றி.

# நெருக்கடிகளைத் தாங்கக்கூடிய கல்வி முறைமைகளை உருவாக்குதல்




## (Buld Crisis - Resilient System)



**கலாநிதி. ஆனந்தமயில் நித்திலவர்ணம்,**
BSc with Education (Hons), BED in Natural Science (OUSL),
MED, MPhill in Education (UoC)
PhD in Education (UoC)
துறைத்தலைவர். கல்வியியல்துறை.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**அறிமுகம்**

கொவிட் - 19 பெருந்தொற்று, பொருளாதார நெருக்கடி, மற்றும் அரசியல் நெருக்கடிகளால் கல்விச் செயற்பாடுகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன. பொருளாதார நெருக்கடி. கல்விச் செயற்பாடுகளை நேரடியாகப் பாதித்துள்ளது. பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள். மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

பாடசாலைக் கல்வியைப் பொறுத்தவரை, 2023 ஆம் ஆண்டு எதிர்பார்க்கப் பட்ட புதிய கல்விச் சீர்திருத்த அமுலாக்கம் தாமதமடைந்து செல்கிறது. பொதுப்பரீட்சைகள் பிந்திக் கொண்டு செல்கின்றன. பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதில் காலதாமதம் ஏற்படுகின்றது. பாடசாலைக் கல்வியாண்டு பிந்திக்கொண்டு செல்கிறது.

மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களின் செலவீனம் அதிகரித்துச் செல்கின்றது. தனியார் வகுப்புக்களிற்கான (Private Tuitions) கட்டணங்கள் உயர்வாகக் காணப்படுகிறது.

பல மாணவர்கள், காலை உணவு உண்ணாமல் பாடசாலைகளுக்கு வருகிறார்கள். வாழ்க்கைச் செலவு மூன்று அல்லது நான்கு மடங்கு அதிகரித்த போதும், மக்களின் வருமானம் அதிகரிக்கப்படவில்லை.

வெளிமாவட்டங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களின் வேதனத்தின் பெரும்பகுதி, அவர்களது போக்குவரத்திற்கே செலவாகி விடுகிறது. தற்காலத்தில், ஆசிரியர் பணி என்பது. பல்வேறு சவால்கள் நிறைந்ததாகக் காணப்படுகிறது.

இந்தப் பின்னணியில் கல்வி நெருக்கடி, கல்வி நெருக்கடியின் உலகளாவிய போக்கு, இலங்கையின் பொருளாதார நெருக்கடி. கல்வியில் ஏற்படுத்திய தாக்கங்கள் மற்றும்

நெருக்கடிகளைத் தாங்கக்கூடிய கல்வி முறைமைகளை உருவாக்குதல் ஆகிய விடயங்களை இந்த கட்டுரை ஆராய்கின்றது.

**கல்வியில் நெருக்கடி (Crisis in Education)**

உலகளாவிய கற்றல் நெருக்கடி என்பது, பாடசாலைக் கல்விக்கான அணுகலில் பாரிய அதிகரிப்பு காணப்பட்டபோதிலும், கற்றல் வெளியீடுகள் (Learning Outcomes) தாழ்ந்த மட்டத்தில் காணப்படுதலாகும். குறிப்பாக வளர்ச்சியடைந்துவரும் நாடுகளில் இந் நிலைமை உயர்வாகக் காணப்படுகின்றது.

தற்காலத்தில் கல்வித்துறைக்கான நிதி ஒதுக்கீடுகள் கணிசமாகக் குறைவடைந்துள்ளது. குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களிலுள்ள பிள்ளைகள் தங்கள் குடும்பத்தை பொருளாதார ரீதியாக ஆதரிப்பதற்காக, பாடசாலைகளில் இருந்து இடை விலகுகின்றனர். பொருளாதார நெருக்கடியானது சமூக மற்றும் பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய அல்லது ஒதுக்கப்பட்ட பின்னணிகளைக்கொண்ட பிள்ளைகளை அதிகளவில் பாதிக்கிறது, ஏழை மாணவர்கள் பணக்கார மாணவர்களைவிட 57 சதவீதம் அதிகமான கற்றல் இழப்பை (Learning loss) சந்திப்பதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

**உலகளாவிய ரீதியில் அச்சுறுத்தலிற்குளளாகியுள்ள கல்வி**

உலகளாவிய ரீதியில் கல்வியானது பாரிய அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளது. அகதிகள் இடப்பெயர்வு, சுகாதாரம் மற்றும் காலநிலையால் ஏற்படும் பேரழிவுகளால் பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை உயர்வாகக் காணப்படுகின்றது. 222 மில்லியன் பாடசாலை மாணவர்கள் மற்றும் இளையோர்களின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளது.

அங்கவீனமான குழந்தைகள் மற்றும் பெண்கள், பழங்குடி சமூகங்கள், இன மற்றும் மத ரீதியான சிறுபான்மையினர் ஆகியோர் நெருக்கடியான சூழல்களினால் அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர்.

2022 ஆம் ஆண்டில் மட்டும், கட்டாய இடப்பெயர்வினால், 100 மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டனர். அவர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் தரமான கல்வி தேவைப் படும் பாடசாலை மாணவர்கள் மற்றும் இளையோராவர்.

**இலங்கையின் பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட பாதிப்புக்கள்:**

இலங்கையின் வடமாகாணத்தில் வாழும் மக்கள், பல்வேறு சவால்கள் மற்றும் பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். காணாமலாக்கப்பட்டோர் பிரச்சினைகள், காணி அபகரிப்பு, யுத்தப் பாதிப்புக்கள். யுத்தத்திற்குப் பின்னரான மனவடு, சமூகச்சீர்கேடுகள். அதிகரித்த மது மற்றும் போதைப்பாருள் பாவனை, அதிகரித்த வீதி விபத்துக்கள் மற்றும் மதரீதியான முரண்பாடுகள் என்பவை அவற்றுள் முக்கியமானவையாகும்.

கொவிட் - 19 பெருந்தொற்று மற்றும் தொடர்ந்துவந்த பொருளாதார நெருக்கடி காரணமாக பல சவால்களை சமகாலத்தில் நாம் எதிர்கொள்கிறோம். எரிபொருட்களுக்கான நெருக்கடியைத் தொடர்ச்சியாக எதிர்கொண்டுள்ளோம். இதன் விளைவாக பல பொருளாதார பிரச்சனைகள் ஏற்பட்டுள்ளன.

பொருளாதார நெருக்கடியின் காரணமாக மக்கள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சனை விலைவாசி உயர்வு ஆகும். ஆனால் பலரின் வருமானம் மாறாமல் உள்ளது. இதன் விளைவாக, 2021ஆம் ஆண்டு 13% ஆக இருந்த வறுமை வீதம் 25% ஆக (இரு மடங்காக) அதிகரித்துள்ளதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.

பொருட்களின் விலைகள் நாள்தோறும் கிடுகிடுவென உயர்கின்றன. உணவுப் பணவீக்கம் 80 சதவீதமாகக் காணப்படுகின்றது. இலங்கையில் ஒரு சாதாரண குடும்பத்தின் ஒரு மாத வாழ்க்கைச் செலவீனம் ஒரு இலட்சத்துப் பத்தாயிரம் என பேராதனைப் பல்கலைக்கழகப் பொருளியல் துறையினர் தமது ஆய்வின் மூலம் கண்டறிந்துள்ளனர்.

அரிசி, மா, சீனி, பருப்பு, பால்மா போன்ற அத்தியாவசிய உணவுப்பொருட்களின் விலைகள் என்றும் கண்டிராதவாறு உயர்வடைந்துள்ளன. மரக்கறிகளின் விலைகள் சடுதியாக உயர்வடைந்துள்ளன.

கடலுணவுகள், முட்டை மற்றும் இறைச்சி என்பனவற்றின் விலைகளின் அதிகரிப்பால், சாமானிய மக்களால் அவற்றை வாங்கி உண்ண முடியாதுள்ளது. பெரும்பாலான இலங்கை மக்கள், தமது உணவை சுருக்கிக் கொண்டுள்ளதாக ஆய்வுகள் கூறுகின்றன.

பொருளாதார நெருக்கடியால் பெரும் எண்ணிக்கையானவர்கள் தமது தொழில்களை இழந்துள்ளனர். அரசாங்க உத்தியோகத்தர்களின் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளது. ஆனால், அவர்களின் சம்பளம் அதிகரிக்கப்படவில்லை. போக்குவரத்துச் செலவுகளைச் சமாளிக்க முடியாமல் திண்டாடுகின்றனர்.

பொருளாதார நெருக்கடியால் வைத்தியசாலைகளில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. புற்றுநோய்க்கான மருந்துகளைக்கூட நோயாளிகள் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய துர்ப்பாக்கியநிலை காணப்படுகின்றது.

பாடசாலை மாணவர்கள் மற்றும் பிள்ளைகள் போசாக்கின்மையால் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றனர். போக்குவரத்துக் கட்டணங்களும் சடுதியாக உயர்ந்துள்ளன. ஆடைகளின் விலைகள் அதிகரித்துள்ளன. ஒட்டுமொத்தமாக நோக்கின் ஒவ்வொரு பொருளின் விலையும் சராசரியாக மூன்று அல்லது நான்கு மடங்கு அதிகரித்துள்ளது.

பொருளாதார நெருக்கடி மக்களின் அன்றாட வாழ்க்கையை அதிகளவில் பாதித் துள்ளது. மக்களில் ஒரு பகுதியினருக்கு உணவை வாங்க முடியாததாக ஆக்கியுள்ளது, குறிப்பாக பிள்ளைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களின் போசாக்கின்மை அதிகரித்துச் செல்கின்றது.

சமூக குற்றச்செயல்கள் அதிகரித்துச் செல்கின்றன. குடும்ப வன்முறைகள் அதிகரித்துச் செல்கின்றன. பலர் நெருக்கடியின் விளைவுகளிலிருந்து தப்பிக்க ஏற்கனவே இந்தியா, கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்குப் புலம்பெயரத் தொடங்கியுள்ளனர். மேலும் சிலர் கடல்மார்க்கமான ஆபத்தான பிரயாணங்களை மேற்கொண்டு வெளிநாடுகள் செல்கின்றனர். கைதாகி திருப்பி அனுப்பப்படுகின்றனர்.

இலங்கையில் பல்பரிமாண வறுமையில் (Multidimensional poverty) வாழும் பல குழந்தைகள் தரமான கல்வியைப் பெறுவதில் தடைகளை எதிர்கொள்கின்றனர்.

**பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட கல்விக்கான அச்சுறுத்தல்**

கல்விக்கான மில்லினியம் அபிவிருத்தி இலக்குகளை (Millennium Development Goals) அடைந்ததாகக் கருதப்பட்டு, சுதந்திரத்திற்குப் பிந்தைய வெற்றிக் கதையாகக் கருதப்படும் இலங்கையின் இலவசக் கல்வி முறை, தற்போது நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது.

தாளின் விலை (Paper Cost) வேகமாக அதிகரித்து வருவதால், மாணவர்கள், குறிப்புகள் எடுக்கவும் வகுப்புப் பயிற்சிகளைச் செய்யவும் பயன்படுத்தும் பயிற்சிப் புத்தகங்களைப் பணம் கொடுத்து வாங்க முடியாது இடர்படுகின்றனர்.

பிள்ளைகள், பாடசாலைக்குச் செல்லும்போது சுத்தமாகவும் நேர்த்தியாகவும் உடை அணிந்து செல்ல வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. கணிசமான இலங்கைப் பிள்ளைகள் காலணி பழுதடைந்ததால் தினமும் அழுது கொண்டே பாடசாலைக்குச் சென்று வருகின்றனர்.

பாடசாலை எழுதுபொருட்களின் விலை அதிகரிப்பால் பெற்றோர்கள் தவிக்கின்றனர், இலங்கையின் தொலைதூரக் கிராமங்களில் வசிக்கும் ஏழைப் பெற்றோர்களுக்கு பெருமளவு பணத்தைப் பிள்ளைகளின் கல்விக்காக ஒதுக்குவது என்பது பெரும் சவாலாக உள்ளது. பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பலாமா? வேண்டாமா? என்று வேதனை யுடன் சிந்திக்கின்றனர்.

சமகாலத்தில் இலங்கையின் பொதுக்கல்வியில் மேலும் பல கல்விசார் பிரச்சினைகள் எதிர்நோக்கப்படுகின்றன. பொதுப்பரீட்சைகள் தொடர்பாக, மாணவர்கள் மற்றும் பெற்றோர் களிடையே காணப்படும் தேவையற்ற போட்டி மனப்பாங்குகளால், அவர்கள், அதிகளவில் மனவுளைச்சல்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் விழுமியக் குறைபாடுகளும் வன்முறைக் கலாச்சாரமும் அதிகரித்துச் செல்கின்றது. பிள்ளைகளின் ஆன்மீக நாட்டம், விளையாட்டு மற்றும் அழகியல் செயற்பாடுகளில் ஈடுபாடு என்பன குறைவடைந்து செல்கின்றன.

வடமாகாணத்தின் கல்வி நிர்வாகக் கட்டமைப்பில் பதின்மூன்று கல்வி வலயங்களும் முப்பத்தைந்து கல்விக்கோட்டங்களும் அமைந்துள்ளன. யுத்தம் நிறைவடைந்து பதின்நான்கு ஆண்டுகள் சென்றபோதும் 87 பாடசாலைகள் இன்னும் மீளத்திறக்கவில்லை.

அதேநேரம், மாணவர் எண்ணிக்கை குறைவு காரணமாக பல சிறிய பாடசாலைகள் மூடப்படும் ஆபத்தினை எதிர்நோக்கியுள்ளன. வலிகாமம் மற்றும் வவுனியா தெற்கு ஆகிய கல்வி வலயங்கள் அதிக பாடசாலைகளைக் கொண்டு இயங்குவதன் காரணமாக அவற்றினை நிர்வகிப்பது மற்றும் பாடசாலைகளின் வெளியக மேற்பார்வை என்பன கடினமாக உள்ளது.

பாடசாலைகளுக்கிடையில் மாணவர் பரம்பல் என்பது முக்கிய கல்விப் பிரச்சினையாகக் காணப்படுகின்றது. பிரபல பாடசாலைகளில் அளவுக்கதிகமாக மாணவர்கள் அனுமதிக்கப் படுகின்றார்கள். இது தொடர்பான விரிவான ஆய்வு தேவைப்படுகின்றது.

ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் ஆசிரியர் - மாணவர் விகிதம் திருப்தி கரமாகக் காணப்படுகின்றபோதும் பாட ரீதியான ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படு கின்றன. தொடர்ச்சியாக கற்பிப்பதற்கான கல்விசார் மற்றும் தொழில்சார் தகைமையற்ற தொண்டர் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரிய உதவியாளர்கள் நியமனம் செய்யப்படுகின்றனர்.

**அதிகரித்துச் செல்லும் வேலை வாய்ப்பின்மை**

தொழில் கல்வியானது, தொழில் வாய்ப்பு, சுயதொழில், மற்றும் பொருளாதார உற்பத்தியை வளப்படுத்துகின்றது. வறுமையை ஒழிப்பதற்கான முக்கியமான கருவியாக வுள்ளதுடன் தனியாள் உற்பத்தியையும் அதிகரிககச் செய்கின்றது.

வேலை உலகின் தேவைகளுடன் பாடசாலைக்கல்வி கலைத்திட்டத்தின் பொருத்தப்பாடு குறைவாகக் காணப்படுகிறது. பெரும்பாலான மாணவர்களும் பெற்றோரும் தொழில் வாய்ப்புக்கள் தொடர்பான விபரங்களை அறிந்திருக்கவில்லை. சுயதொழில், மாற்றீடான திறன்விருத்தி, பயிற்சி வாய்ப்புக்கள், மற்றும் வேலை உலகில் உள்ள பல்வேறுபட்ட தொழில்களின் விபரங்களை அறிந்திருக்கவில்லை.

இலங்கையின் வடபுலத்திலுள்ள திருமண கட்டமைப்பு மற்றும் சீதனம் வழங்கும் முறைமை என்பன அரசாங்க உத்தியோகத்தில் அதிக நாட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. தற்கால இளைஞர்கள் மற்றும் யுவதிகள், முப்படைகள் மற்றும் தாதியியல் போன்ற தொழில் களில் குறைவான ஆர்வத்தை வெளிப்படுத்துகின்றனர் அல்லது முற்றாக புறக்கணிக்கின்றனர். இவை போன்ற காரணிகளால் வேலை வாய்ப்பின்மை அதிகரித்துச் செல்கின்றது.

**வாழ்க்கைத் தேர்ச்சிக் கல்வியின் போதாமை**

வாழ்க்கைத்தேர்ச்சிக்கல்வி மற்றும் குடியுரிமைக்கல்வி ஆகிய பெயர்களால் பாடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இப்பாடங்கள் அன்றாட வாழ்க்கையின் தேவை களையும் சவால்களையும் திறம்படச் சமாளிக்க உதவுவதுடன் தகவமைப்பு, நேரான நடத்தைக்கான திறன்கள். சுயபிரதிபலிப்பு, திறனாய்வுச் சிந்தனை, பிரச்சனை விடுவித்தல் ஆளிடைத் தொடர்புகள், நம்பிக்கையைக் கட்டியெழுப்புதல், தொடர்பாடல் மற்றும் ஒத்துழைப்பு ஆகிய திறன்களை விருத்திசெய்யவும் உதவி புரியும்.

**உயர்கல்வியில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள்**

வைத்தியர்கள், பொறியியலாளர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் புலமையாளர்கள் தொடர்ச்சியாக நாட்டைவிட்டு வெளியேறிவருகின்றனர். நீதியற்ற வரி அறவீடுகளால் பாதிக்கப்பட்டுள்ளனர். தரமான உயர்கல்வியை வழங்குவதற்கான நிதி வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் குறைவாகக் காணப்படுகின்றது.

**மாணவர்களிடம் ஏற்பட்டுள்ள கற்றல் இழப்பு (Learning Loss)**

மாணவர்கள் நீண்டகாலம் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டுடன் தொடர்பில்லாமல் இருந்தமையால், அவர்கள் பாடசாலையில் இருந்து இடைவிலகும் ஆபத்து அதிகமாகக் காணப்படுகின்றது. நிகழ்நிலை கல்வி மூலம் தேர்ச்சி அடைந்த மாணவர்கள், விடுபட்ட மாணவர்கள், கிராம வாழ்க்கைக்கு மீண்ட மாணவர்கள் மற்றும் நெறிபிறழ்வான மாணவர்கள் ஆகிய நான்கு வகையான மாணவர்களை கொவிட் -19 பெருந்தொற்று உருவாக்கியுள்ளது.

**கொவிட் – 19 பெருந்தொற்றால், கல்வியில் நாம் இழந்தவை**

ஆரம்பபிள்ளைக் கல்வி (Early Childhood Education) மற்றும் ஆரம்பக்கல்வி (Primary Education) மாணவர்களின் படிமுறையான எழுத்து மற்றும் வாசிப்புத் திறன்கள் குறைவடைந்து காணப்படுகின்றன. மாணவர்களின் கணிதத் திறன்களும் (Mathematical Skills) குறைவடைந்து காணப்படுகின்றன.

மாணவர்களின் ஒழுக்கம் வீழ்ச்சிக்கு உட்படுகிறது. மாணவர்களின் கற்றல் திறன்கள் (Learning skills) குறைவடைந்து காணப்படுகின்றது. மாணவர்களின், நீண்டநேரம் பாடசாலைகளில் மற்றும் தனியார் கல்வி நிறுவனங்களில் இருந்து கற்கும் ஆற்றல் குறைவடைந்து கொண்டு செல்கிறது.

பரீட்சைகளில் மாணவர்களின் அடைவு மட்டம் குறைவடைந்து கொண்டு செல்கிறது. மாணவர்களின் சமூகத்திறன்கள் (Social skills) வீழ்ச்சி அடைந்தது செல்கிறது. இணைப்பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபடாமையால், உடல் மற்றும் உள பாதிப்புகள் ஏற்படுகிறது.

**வடமாகாண பொதுப் பரீட்சைப் பெறுபேறுகளில் காணப்படும் தளம்பல்நிலை**

பொதுப் பரீட்சைகளின் பெறுபேறுகளில் தளம்பல் நிலை அல்லது வீழ்ச்சிநிலையில் பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன.

- **நீண்டகால யுத்தம் ஏற்படுத்திய பாதிப்புக்களும் யுத்தத்திற்கு பின்னரான சூழல் ஏற்படுத்திய பாதிப்புக்களும்** - உடல் மற்றும் உளப் பாதிப்புக்கள், பாடசாலைகள் மற்றும் பௌதீக வளங்களின் அழிவு, இடப்பெயர்வு.
- **வடமாகாண முன்பள்ளிக்கல்வி வழங்கலில் காணப்படும் குறைபாடுகள்** - முறையான முன்பள்ளிக்கொள்கை மற்றும் கலைத்திட்டமின்மை, பயிற்சியற்ற ஆசிரியர்கள், ஆசிரியர்களுக்குப் போதிய வேதனம் வழங்கப்படுவதில்லை மற்றும் முன்பள்ளிகளின் மேற்பார்வையிலுள்ள குறைபாடுகள்.
- **மாணவர்கள் தொடர்பான காரணிகள்** - விழுமியக்குறைவு, அதிகர்த்த சமூக ஊடகப் பாவனை மற்றும் வன்முறைக் கலாசாரம் .
- **ஆசிரியர்கள் தொடர்பான காரணிகள்** - அர்ப்பணிப்புக் குறைவு, தூரப் பணியிடங்களில் பணியாற்றத் தயங்குதல், பாடஅறிவு மற்றும் கற்பித்தல் அறிவுக்குறைவு மற்றும் இற்றைப்படுத்தல் குறைவு.
- **பாடசாலை தொடர்பான காரணிகள்** - மனித மற்றும் பௌதீக வளப்பற்றாக்குறை.
- **கல்வி நிர்வாகம் தொடர்பான காரணிகள்** - நிர்வாகத்திறன் குறைவு மற்றும் தொடர்வாண்மைத்துவமின்மை.
- **குடும்பம் தொடர்பான காரணிகள்** - பிள்ளைகளின் கல்வியில் அக்கறையற்ற பெற்றோர்கள், அதிகரித்த பொழுது போக்குகள் மற்றும் தென்னிந்திய சினிமா மற்றும் தொடர் நாடகங்கள்.
- **சமூகம் தொடர்பான காரணிகள்** - மதுபாவனை, போதைப்பொருள் பாவனை மற்றும் வன்முறைக் கலாசாரம்.
- **அரசியல் மற்றும் திட்டமிட்ட புறக்கணிப்புக்கள்** - கல்வியில் இன ரீதியான, மத ரீதியான, மொழில் ரீதியான மற்றும் அரசியல் ரீதியான புறக்கணிப்புக்கள்.

## கொவிட் – 19 பெருந்தொற்று, முன்பள்ளிச் சிறார்களிடத்தில் ஏற்படுத்திய தாக்கங்கள்

முன்பள்ளிச் சிறார்களிடத்தில், கற்றல் இழப்பு (Learning loss) ஏற்பட்டுள்ளது. அண்ணளவாக இரண்டு வருடங்கள் முன்பள்ளிகள் எதுவும் நடைபெறவில்லை. முன்பள்ளிப் பிள்ளைகளின் கணிதத்திறன் மற்றும் மொழித்திறன் விருத்தி அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

இக்காலப்பகுதியில் சக மாணவர்கள் மற்றும் ஆசிரியருடனான இடைத்தொடர்புகள் குறைவாகக் காணப்பட்டது. வீட்டில் அதிகளவிலான தொலைக்காட்சிப் பாவனை மற்றும் கைத்தொலைபேசிப் பாவனை காரணமாக பிள்ளைகள் பல்வேறுவிதமான பாதிப்பு களுக்கு உட்பட்டனர். வாசிப்பு மற்றும் எழுத்துத்திறன்கள் குறைவடைந்து சென்றன. பிள்ளைகள் பல்வேறுவிதமான உடல் மற்றும் உளப்பாதிப்புகளுக்கு உள்ளாகினர்.

கொவிட் - 19 பெருந்தொற்றுக் காரணமாக, உலகளாவிய அளவில் மக்களின் உளநலம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. இதன் வெளிப்பாடாக, குடும்பம் மற்றும் சமூக வன்முறைகள் அதிகரித்துச் செல்கின்றன. மதுபாவனை மற்றும் போதைப்பொருள் பாவனை அதிகரித்துச் செல்கின்றது. இணையவழி குற்றங்கள் அதிகரித்து செல்கின்றன.

## பாடசாலைகளில் இருந்து மாணவர் இடைவிலகல்

பல காரணங்களால் மாணவர்கள் பாடசாலையை விட்டு இடைவிலகுகின்றனர். தாழ்கல்வி அடைவுகள், நிதிசார் பிரச்சினைகள், வீட்டில் சகோதரர்களைப் பராமரித்தல் மற்றும் வீட்டு வேலைகளைச் செய்தல், கொவிட் பெருந்தொற்று, பொருளாதார நெருக்கடி, வறுமை மற்றும் கல்வியின் அணுகலும் கிடைப்பனவும், தொழில்களில் ஈடுபடுதல், பாடசாலைகளில் கேலி மற்றும் கிண்டலுக்கு உட்படுதல், மன அழுத்தத்திற்கு உட்படுதல், எதிர்பாராத வகையில் கருவுறுதல், சுதந்திரமின்மை மற்றும் பாடசாலை வரவின்மை ஆகியவற்றை மாணவர்கள் பாடசாலையைவிட்டு இடைவிலகுவதற்கான முக்கியமாக காரணங்களாகக் குறிப்பிட முடியும்.

தரம் ஒன்றிலிருந்து தரம் ஒன்பது வரை வகுப்புகளைக்கொண்ட பாடசாலைகள் இயங்குகின்றன. இவற்றிலிருந்து தரம் ஆறுக்காக ஒரு பகுதி மாணவர்கள், பிற பாடசாலை களில் தம்மை இணைத்துக் கொள்கின்றபோதும் எஞ்சியவர்களில் ஐம்பது சதவீதமான மாணவர்கள், எந்தவொரு பாடசாலையிலும் தம்மை இணைத்துக்கொள்ளாத நிலைமைகள் காணப்படுகின்றன.

ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையிலான இடைவினையுறவு குறைவடைந் துள்ளமையால், மாணவர்களுடன் அதிபர், ஆசிரியர்கள் நெருக்கமற்ற நிலையில் இருக்கின்றனர். இதனால் தொடர்ச்சியாக தாழ் அடைவுகளைப் பெற்றுக்கொண்டு கல்வி மீதான வெறுப்பில் உள்ள மாணவர்களைத் தொடர்ந்தும் கற்றல் செயற்பாடுகளில் உள்ளீர்க்க முடியாத கையறு நிலைமை காணப்படுகின்றது.

மாணவர்களாக இருக்கும்போதே வருமானமீட்டுவதற்கு கிராமங்களில் பல்வேறு தொழில்கள் காணப்படுகின்றன. இவ்வாறான தொழில்களில் மாணவர்கள் ஈடுபடுகின்ற போது பெற்றோரும் அதற்கு ஆதரவளிக்கின்றமை கல்வி மீதான நாட்டத்தைக் குறைப்ப தற்கு காரணமாகின்றது. க.பொ.த சாதாரணதரத்தில் மூன்றிலொரு சதவீதமானவர்கள் சித்தியடையாவிட்டாலும், அவர்கள் தொழில்வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதற்கு

சந்தர்ப்பங்கள் காணப்படுவதால் மாணவர் இடைவிலகலைச் சாதகமாகப் பார்க்கின்ற தரப்பினரும் உள்ளனர்.

இவ்வாறு பாடசாலையை விட்டு இடைவிலகுபவர்கள், சமூகக் குற்றவாளிகளாக மாறக்கூடிய ஏதுநிலையும் காணப்படுகின்றது. பாடசாலை இடைவிலகல்களினால் வேலை வாய்ப்பின்மை சதவீதம் அதிகரிக்கிறது. தாழ் வருமானமட்டநிலை ஏற்படும். உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படும்.

பாடசாலை மாணவர்களின் இடைவிலகலைத் தடுப்பதற்காகக் காணப்படுகின்ற அரச பொறிமுறைகள் நடைமுறையில் தோல்விகண்டுவிட்டன. பாடசாலைகளில் இருந்து மாணவர்கள் இடைவிலகினால் அவர்களை மீளிணைப்பதற்காக வலயக்கல்வி அலுவலகத்தி லும் பிரதேச செயலகத்திலும் தலா ஒவ்வொரு அலுவலர்கள் உள்ளனர். ஆனால் இந்த அலுவலர்களின் செயற்பாடுகள் வெறுமனே சம்பிரதாயபூர்வமாக இருக்கிறது.

கட்டாயக்கல்விக்குழு உள்ளிட்ட கட்டமைப்புக்கள் காணப்பட்டாலும், கொவிட் - 19 இன் பின்னரான காலத்தில் ஏற்பட்டுள்ள சடுதியான மாணவர் இடைவிலகல் நிலைமைகளை அவதானித்து, அதற்கான விசேட நிலைமைகளின் கீழான செயற்பாடுகள் முன்னெடுக்கப் படவில்லை.

இடை விலகும் மாணவர்கள் தொடர்பில் பாராமுகமான நிலைமைகள் நீடிக்குமாக இருந்தால் சட்ட விரோதச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற சமூக விரோதச் சக்திகள் இடை விலகிய மாணவர்களைக் கருவியாகப் பயன்படுத்துவதற்கான அதிகளவிலான சந்தர்ப் பங்கள் காணப்படுகின்றன. குறிப்பாக இவ்வாறானவர்களை வன்முறைக் குழுக்கள், போதைப்பொருள் விற்பனையாளர்கள் மற்றும் முகவர்கள் இலகுவாகக் கையாள்வதால் அவர்கள் நாளடைவில் சமூகத்திற்கு பேராபத்தானவர்களாக மாறிவிடுவார்கள்.

**அதிகரித்து வருகின்ற போதைப்பழக்கம்**

தற்கால ஆய்வுகளின்படி இலங்கையில் 2.7 சதவீதமான கட்டிளமைப் பருவத்தினர் போதைக்கு அடிமையானவர்களாகக் காணப்படுகின்றனர். இதற்கான காரணிகளாகப் புகைப்பிடித்தல், மதுபாவனை மற்றும் போதைப்பொருள் பாவனை, தாழ்வான பாடசாலை அடைவுகள், பெற்றோரின் புறக்கணிப்பு, குடும்பத்தின் தொழிற்பாடற்றநிலை, துஸ்பிரயோகத் திற்கு உட்படல், பெற்றோரின் குறைவான அல்லது அளவுக்கு அதிகமான கட்டுப்பாடு மற்றும் பெற்றோரின் விவாகரத்து என்பன காணப்படுகின்றன.

**சவால்களுக்கு முகங்கொடுக்க முடியாதநிலை**

இளைஞர்கள் மற்றும் யுவதிகள் தமது எதிர்காலத் தொழில் மற்றும் கல்விக்கான தயார்படுத்தல்களிலும் தமது வாழ்க்கையை அனுபவிப்பதிலும் ஈடுபட்டுள்ளனர். சமூகப் பிரச்சனைகள் மற்றும் குடும்ப விவகாரங்களில் குறைந்த கவனம் செலுத்துகின்றனர். முதியோர்கள் பெரும்பாலும் புறக்கணிக்கப்படுகின்றனர்.

கணிசமான அளவிலான இளையோர், தமது வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினை களுக்கு முகங்கொடுக்க முடியாதநிலையில் உள்ளனர். உளத்தாக்கங்கள் அல்லது நெருக்கீடுகளுக்கு இலகுவில் உள்ளாகின்றனர். தற்கொலை மற்றும் தொடர்பாடல் குறைபாடுகள் போன்ற சவால்களை எதிர்கொள்கின்றனர்.

## நெருக்கடியான சூழலில் சுய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வழிமுறைகள்

நாம் இந்தக்கஷ்டமான சூழலில் இருப்பதைக்கொண்டு மாற்றீட்டுப் பொருட்களைத் தயாரித்து வாழ வேண்டும். வருமானம் தரக்கூடிய மாற்று வழிமுறைகளை நாம் கண்டறிய வேண்டும். கடந்த யுத்த காலத்தில் வெற்றிகரமாக வாழ்ந்த அனுபவம் எமக்கு உண்டு. ஆனால் எமது பிள்ளைகள் அந்த வாழ்க்கை முறைக்குத் தயாராக இல்லை. எமது மாற்ற மடைந்த நுகர்வு கலாசாரம், பொருளாதாரத் தடைகளை வெற்றிகொள்ளத் தடையாக உள்ளது.

வீடுகள் தோறும் வீட்டுத்தோட்டங்களை அமைப்பதை ஒரு சம்பிரதாயமாக அல்லாமல் ஒரு புரட்சியாகவே முன்னெடுக்க வேண்டும். தரிசு நிலங்கள் அனைத்திலும் விதைக்க வேண்டும். பயிரிட வேண்டும். கோழி வளர்ப்பு மற்றும் கால்நடை வளர்ப்பில் அனைவரும் ஆர்வம்காட்ட வேண்டும். எமது பிரதேச வளங்களைப் பயன்படுத்தி உள்ளூர் உற்பத்திகளைப் பெருக்க வேண்டும்.

கடற்கரையில் கொட்டப்படும் கடல் உணவுக்கழிவுகளைப் பயன்படுத்தி விலங்குணவு (மாஸ்) உற்பத்திகள் மேற்கொள்ள முடியும். திண்மக்கழிவுகளைத் திறம்பட முகாமை செய்து சேதன உரங்களைத் தயாரித்து வீட்டுத்தோட்டங்களுக்குப் பயன்படுத்த முடியும். பெருமளவிலான உணவுப்பொருட்கள் வீடுகளிலும் விழாக்களிலும் வீணடிக்கப்படு கின்றது. அவற்றினைச் சிறந்த முறையில் முகாமை செய்ய வேண்டும். பனம் உற்பத்தி பொருட்களை அதிகளவில் உற்பத்தி செய்ய வேண்டும்.

## நெருக்கடியைத் தாங்கக்கூடிய கல்வி முறைகளை உருவாக்குதல்

(Build crisis-resilient education systems)

பிள்ளைகள் மற்றும் இளையோரின் உரிமைகளின் பாதுகாப்பை உறுதிசெய்யும் நெருக்கடியைத் தாங்கக்கூடிய கல்வி முறைகளை நாம் உருவாக்க வேண்டும். அவர் களுக்குப் போதிய ஊட்டச்சத்து, நல்வாழ்வு, போசணை, சுத்தமான குடிநீர், மற்றும் சுகாதாரம் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்.

வன்முறை, பாலியல் சுரண்டல் மற்றும் துஷ்பிரயோகம் ஆகியவற்றிலிருந்து பிள்ளைகள் மற்றும் இளையோர் பாதுகாப்பு உள்ளிட்ட முழுமையான வழியில் கற்பவர்களின் தேவைகளை நிவர்த்தி செய்ய வேண்டும்.

## இலங்கையில் காலத்தின் தேவையாகவுள்ள பெற்றோருக்கான கல்வி

சமகால சவால்கள் நிறைந்த சூழலில், பிள்ளைகளைப் பூரண வளர்ச்சியுடன் மற்றும் சமநிலை ஆளுமையுடன் வளர்த்தெடுப்பதில் பெற்றோர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக ஆங்காங்கே தமக்குள் கதைத்துக் கொண்டிருந்தாலும், பொது வெளியில் ஆரோக்கியமான உரையாடல்கள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. கல்வியில் முன்னேறிய நாடுகளில் பெற்றோருக்கான கல்விக்கு அதிக முக்கியத்துவமளிக்கப்படு கின்றது. இலங்கையிலும் சில பாடசாலைகள் இதனைச் சிறப்பாக முன்னெடுக்கின்றன.

### பெற்றோருக்கான கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கமைக்கும் வழிமுறைகள்

பாடசாலைகளில் வாரத்தில் ஒருநாள், மாலை வேளையில் பெற்றோர் மற்றும் அவர்களின் பிள்ளைகள் இணைந்த கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை வகுப்பாசிரியர் முன்னெடுத்தல் வேண்டும். தமது பிள்ளைகளின் வளர்ப்புத் தொடர்பாக ஒரே வகையான சவால்களை எதிர்கொள்கின்ற பெற்றோர்களை ஒன்றாக வைத்து வழிகாட்டல் வழங்கப் படலாம்.

பிள்ளைகளின் வளர்ப்புத் தொடர்பாக பிரச்சனைகளை எதிர்கொள்ளும் பெற்றோருக்கு சீர்மியம் வழங்க வேண்டும். மேலும் பெற்றோர் மற்றும் அவர்களின் பிள்ளைகள் இணைந்த வழிகாட்டல் மற்றும் சீர்மியம் வழங்க வேண்டும். பெற்றோர் மற்றும் அவர்களின் பிள்ளைகள் இணைந்து இலக்கு நிர்ணயம் (Goal setting) செய்ய வேண்டும்.

சிறார்கள் மற்றும் கட்டிளமைப் பிள்ளைகளுக்கான விளையாட்டு, அழகியல் மற்றும் ஆன்மீகச் செயற்பாடுகளைப் பாடசாலையில் மட்டுமல்லாது சமூக மட்டத்திலும் முன்னெடுக்க வேண்டும். பிள்ளை வளர்ச்சி மற்றும் கட்டிளைமைப்பருவ விருத்தி தொடர்பான துறைசார் நிபுணர்களுடனான கலந்துரையாடல்களைப் பாடசாலைகளிலும் சமூக மட்டத்திலும் ஒழுங்கமைக்க வேண்டும்.

மேலும், பெற்றோருக்கான கல்வியை ஒழுங்கமைத்து வழங்கக்கூடிய ஆற்றலுள்ள நிறுவனங்களாக பாடசாலைகள், பழைய மாணவர் சங்கங்கள், பல்கலைக்கழகங்கள், ஆசிரியர்கல்வி நிறுவனங்கள், சமய நிறுவனங்கள், சனசமூக நிலையங்கள், மாதர் சங்கங்கள் மற்றும் விளையாட்டுக்கழகங்கள் என்பன காணப்படுகின்றன.

பெற்றோருக்கான கல்வியை ஒழுங்கமைத்து வழங்குவதிலும் பல சவால்கள் காணப்படு கின்றன. ஆரம்பத்தில் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின்பால் பெற்றோர்களை ஈர்ப்பதிலுள்ள சிரமங்கள், பெற்றோர்கல்வி தொடர்பான விழிப்புணர்வின்மை, பங்குதாரர்களிடையே ஒற்றுமையுணர்வின்மை, எல்லாப் பெற்றோருக்கும் இதில் பங்குகொள்ள நேரமின்மை, பிள்ளைகள் மற்றும் பெற்றோர்களை இணைத்துப் பணியாற்றுவதிலுள்ள சவால்கள் என்பன காணப்படுகின்றன.

எமது கல்விசார் பிரச்சினைகளை நாமே தீர்த்துக்கொள்ள வேண்டும். இதில் பெற்றோர்கள் முக்கியமான பங்குதாரர்களாவர். பெற்றோர்களை வளப்படுத்துவதனூடாக அவர்களின் பிள்ளைகளை வளப்படுத்தலாம். இதன்மூலம் ஒட்டுமொத்த சமூகமும் நன்மையடையும்.

### பிள்ளைகளின் உளநல மேம்பாட்டுக்கான வழிமுறைகள்

பிள்ளைகளின் மனவெழுச்சி ஆரோக்கியநிலை, அவர்களின் உடல்நலத்தைப் பேணு வதற்கும் அவசியமாகும். பிள்ளைகள் தெளிவாகச் சிந்திக்கவும், சமூகத்திறன்களை விருத்தி செய்யவும் மற்றும் புதிய திறன்களைக் கற்றுக்கொள்ளவும் பிள்ளைகளுக்குச் சிறந்த உளநலம் அவசியமானதாகும். பெரும்பாலான பிள்ளைகள், சிறந்த உளநலத்தைக் கொண்டிருக்கின்றனர்.

பரிகார நடவடிக்கைகளை நாம் துரிதமாக முன்னெடுக்க வேண்டும். உளவள ஆற்றுப் படுத்தும் செயற்பாடுகளைப் பரவலாக முன்னெடுக்க வேண்டும். ஆன்மீகச் செயற்பாடுகள், தியானம் மற்றும் பஜனை செயற்பாடுகள் அதிகமாகத் தேவைப்படுகின்றன. உள்ளக மற்றும் வெளியக விளையாட்டில் மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் ஈடுபடுவதன் மூலம் உள ஆரோக்கியத்தை வலுப்படுத்திக் கொள்ளலாம். இசை, நடனம், நாடகம் மற்றும் ஓவியம் போன்ற அழகியல் செயற்பாடுகள் உள ஆரோக்கியத்தை மேம்படுத்தும் சக்தி கொண்டவை. வீட்டுத்தோட்டம் அமைத்தல் , வாசிப்பு மற்றும் எழுத்தாக முயற்சிகள் போன்றவை எமது உளநலனை மேம்படுத்தும்.

நல்ல நண்பர்கள், வளர்ந்தோரிடமிருந்து கிடைக்கக்கூடிய ஊக்கப்படுத்தும் வார்த்தைகள் என்பன பிள்ளைகளிடம் தன்னம்பிக்கை, உயர்ந்த சுயகணிப்பு மற்றும் ஆரோக்கியமான மனவெழுச்சிநிலை என்பவற்றை ஏற்படுத்துகின்றன. உளஆரோக்கியமான பிள்ளையின் வாழ்க்கை நேர்மயமானதாகவும் தரமானதாகவும் அமையும். மேலும் அவர்கள் வீட்டில், பாடசாலையில் மற்றும் சமூகத்தில் சிறப்பாகத் தொழிற்படுவர்.

அன்பு, நல்லிணக்கம் மற்றும் தேர்ச்சிகளைப் பிள்ளைகளிடையே விருத்தி செய்தல் வேண்டும். நேர்மயமான மற்றும் பாதுகாப்பான பாடசாலைச் சூழலை உறுதிசெய்ய வேண்டும். பிள்ளைகளுக்கு நேர்மயமான நடத்தைகளையும் தீர்மானமெடுத்தலையும் கற்பிக்க வேண்டும்.

பிள்ளைகளிடையே மற்றையவர்களுக்கு உதவும் பண்பை ஊக்கப்படுத்த வேண்டும். நல்ல உடல் ஆரோக்கியத்தை ஊக்கப்படுத்த வேண்டும். பிள்ளைகளுக்கு ஏற்படும் உள சுகாதாரப் பிரச்சனைகள் மற்றும் அதன் அறிகுறிகள் தொடர்பாக ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் விழிப்புணர்வூட்ட வேண்டும்.

**கிராமப்புறப் பாடசாலைகளை வளப்படுத்தல்**

நாம் மற்றயவர்களைப் பார்த்து போட்டி, பொறாமை கொள்ளக்கூடாது. எமது கிராமங்களில் இருக்கும் பாடசாலைகள் மிகவும் முக்கியமானவை. தமது வீட்டிற்கு அருகே இருக்கும் பாடசாலைகளில் மாணவர்களை இணைப்பதன் மூலம், உடல் அசதி உள்ளிட்ட வற்றைத் தவிர்த்து கற்றலில் ஈடுபாடு கொள்ள முடியும். அத்துடன் தற்காலத்தில் நிலவும் எரிபொருள் நெருக்கடி மற்றும் பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்கவும் முடியும்.

ஒவ்வொரு பாடசாலைகளும் சிட்டுக்குருவிகள் வாழுகின்ற அருமையான கூடுகளே. ஒவ்வோர் பிரதேச மக்களும் தனித்துவமான பண்பாட்டை மற்றும் சமய விழுமியங்களைக் கொண்டிருக்கின்றார்கள். இவற்றைக் கட்டிக்காத்து கல்வியை மேம்பாடடையச் செய்வதில், பிரதேச பாடசாலைகள் அதிகளவில் பங்காற்ற முடியும்.

**வடமாகாணப் பொதுக்கல்வி மேம்பாட்டுக்கான சிபார்சுகள்**

பாடசாலைகளுக்கிடையில் மாணவர் பரம்பல் சீர்செய்யப்படல் வேண்டும். பரீட்சை அடைவுகளுக்கு அப்பால், மாணவரின் அறிவு, திறன் மனப்பாங்கு மற்றும் ஆளுமை விருத்திக்கு பங்களிக்கும் செயற்பாடுகளுக்கு பாடசாலைகளும் பெற்றோர்களும் முக்கி யத்துவமளிக்க வேண்டும்.

பெற்றோர்களும் சமூகமும் 'பிரபல பாடசாலை' (Popular School) என்ற போலி மாஜையிலிருந்து விடுபட வேண்டும். தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளுக் கிடையில் ஆசிரியர் பரம்பலைச் சீராக்க வேண்டும். அதேபோன்று கல்வி வலயங்களுக் கிடையில் ஆசிரியவளம் சமமாகப் பகிரப்பட வேண்டும்.

திறமைமிக்க கல்வி நிருவாகிகள், அதிபர்களைப் பொருத்தமாக இடப்படுத்தல் செய்ய வேண்டும். பெற்றோர்கள், பாடசாலைகள் மற்றும் சமூகம் மாணவர்களின் ஒழுக்கம் மற்றும் ஆன்மீக கல்விக்கு முக்கியத்துவமளிக்க வேண்டும்.

### அனைத்து மாணவர்களுக்கும் தரமான கல்வி கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும்

இந்த இடர்காலத்தில், கிராமப்புற மாணவர்களுக்கு கல்வி கிடைப்பதை உறுதிப் படுத்தும் கடப்பாடு எம் அனைவருக்கும் உள்ளது. இதில் கல்வி அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் சமூகம் கூடிய அக்கறை எடுக்க வேண்டும். தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் புலம்பெயர் உறவுகள் தமது கிராம மாணவர்களின் கல்விக்கு, இச்சந்தர்ப்பத்தில் அதிகளவில் உதவ வேண்டுமென வினயமாகக் கேட்டுக் கொள்கிறேன். பின்வரும் சவால்கள் வெற்றி கொள்ளப்பட வேண்டும்.

- பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்ட பிள்ளைக்கும் கல்வியில் சமவாய்ப்பு உறுதிப் படுத்தப்பட வேண்டும்.
- கிராமப்புற மாணவர்களையும் அவர்களது பெற்றோர்களையும் கல்வியில் ஈர்ப்பதற்கான வழிவகைகளைக் கண்டறிய வேண்டும்.

### மாற்ற முகவர்களின் வகிபாகம் (Role of Change Agents)

இந்த கல்விக்கான போராட்டத்தில், ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள்தான் முன்களப் பணியாளர்கள். அவர்கள் மதிக்கப்பட வேண்டும். அவர்களது உடல் மற்றும் உள ஆரோக்கியம் பாதுகாக்கப்பட வேண்டும். கல்வி அதிகாரிகளும் சமூகமும் வழிகாட்ட வேண்டும். ஊக்கப்படுத்த வேண்டும். சில வகுப்புக்களைப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் அதிபர்கள் முன்மாதிரியாக, எடுத்துக்காட்ட வேண்டும். அப்போது, ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர் தாமாக முன்வந்து செயல்படுவார்கள். நெருக்கடியான சூழ்நிலைகளில் கற்றல் - கற்பித்தலை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லல் தொடர்பாக அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோருக்கு முறையான வழிகாட்டல் மற்றும் பயிற்சி வழங்க வேண்டும்.

### எதிர்காலத்தில் முன்னெடுக்க வேண்டிய விடயங்கள்

தற்போதைய இடர்கால நெருக்கடியில் எங்களிடம், உள்ள விடைகளைக் காட்டிலும் அதிகமான வினாக்கள் உள்ளன. "இங்கே கண்டுபிடிக்கப்படவில்லை" என்ற வார்த்தைக்கு இடமில்லை. நெருக்கடியில் நாங்கள் அனைவரும் கற்போராக இருக்க வேண்டும். எமது வரலாற்றை எடுத்துப் பார்த்தால், நாம் எதிர்நோக்கிய சவால்கள் அதிகம். நெருக்கடிகள் அதிகம். அத்தனையையும் வெற்றிகரமாக எதிர்கொண்டவர்கள் நாம். பீனிக்ஸ் பறவை களாக மீண்டவர்கள் நாம். நாளை நமதே, வெற்றியும் நமதே.






# அழிவை நோக்கிப் பயணிக்கும்



## நம் யாழ்ப்பாணத்

# தமிழர் பாரம்பரியம்



**திருமதி. கண்ணதாசன் இராஜேஸ்வரி,**
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
வடமராட்சி தெற்கு மேற்குபிரதேசசபை,
கரவெட்டி.



- **முன்னுரை**
- **யாழ்ப்பாணத் தமிழர் பாரம்பரியம் அன்றும், இன்றும்**
  - விருந்தோம்பல்
  - உணவு
  - உடை
  - மொழி
  - பாவணைப்பொருட்கள்
  - குடும்ப அமைப்பு
  - விளையாட்டுக்களும், கலைகளும்
  - நோய்த்தடுப்பு நடைமுறைகளும், மருத்துவமும்
  - ஆன்மீகம்
  - கருவிலிருந்து கல்லறை வரையான சடங்குகளும், சம்பிரதாயங்களும்
  - பாரம்பரிய மரபுகள் அழிவடையக் காரணங்கள்
  - அழிவிலிருந்து தடுக்கும் வழிவகைகள்
  - முடிவுரை

**முன்னுரை**

உலகில் காணப்படும் ஒவ்வொரு நாடுகளிலும் பல இன, மத, மொழி வேறுபாடுள்ள மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். ஒவ்வொரு இனங் களும் தத்தமக்குரித்தான பண்பாடுகள், கலாசார விழுமியங்கள் என்பவற்றை தம் இனங்களுக்கான அடையாளங்களாக, தனித்துவம்மிக்க பெறுமதியான சொத்துக்களாகப் பேணிக் காத்து

வருகின்றனர். இன்று வேகமாகச் சுற்றிக் கொண்டிருக்கும் புவியின் ஓட்டத்திற்கேற்ப மனிதன் பொருளீட்டம் நோக்கி நாகரீகப் பாதையில் நகர்ந்து கொண்டிருக்க நம் அடையாளங்கள் கொஞ்சம் கொஞ்சமாகத் தொலைந்து கொண்டிருக் கின்றன. தமிழர் விழுமியங்கள் என நோக்கும்போது நம் யாழ்ப்பாணக் கலாசார மரபுதான் முன்னணி வகிக்கின்றது. அவர்கள் கடைப்பிடித்துவந்த பாரம்பரிய மரபுகள் மிக உன்னத மானவையாக விளங்குகின்றன. இன்றைய நவநாகரிக வளர்ச்சியில் மனிதன் காலடி பதித்துள்ள நிலையில் நம் மூதாதையோர் பன்னெடுங்காலமாக கட்டிக்காத்து வந்த பாரம்பரிய மரபுகள் புறக்கணிக்கப்பட்டு மேலைத்தேய கலாசாரத்தின்பால் மனிதன் ஈர்க்கப்பட்டு அழிவுப்பாதை நோக்கி வீறுநடை போட்டுக்கொண்டிருக்கின்றான். இந் நிலையில் இன்று மறக்கப்பட்ட நம் முன்னோர் கடைப்பிடித்து வந்த மரபுகளை எதிர்கால சந்ததியினருக்கு கடத்திச் செல்ல வேண்டிய பெரும் கடமைப்பாட்டில் நாம் தள்ளப் பட்டுள்ளோம். இந் நிலையில் நம் யாழ்ப்பாணத் தமிழரின் பாரம்பரிய அம்சங்களான விருந்தோம்பல், உணவு, உடை, மொழி, குடும்ப அமைப்பு, விளையாட்டுக்கள், கலைகள், பாவணைப் பொருட்கள் போன்ற பல அம்சங்கள் பற்றியும் நோக்கி ஆராய்வோம்.

**விருந்தோம்பல்**

தமிழனின் மிக உன்னதமான பண்பாடு விருந்தோம்பல். அறிந்தவரோ அறியாதவரோ வீட்டிற்கு வரும் யாவரையும் உபசரிக்கும் மிகச் சிறந்த பண்பு நம் யாழ்ப்பாணத்தில் உண்டு. அன்று எதுவித வசதிகளுமற்ற நிலையில் மனிதன் தனது தேவைகளை நிறைவேற்ற கால்நடையாகவும், மாட்டுவண்டி, மற்றும் குதிரை வண்டி களிலும் பயணம் செய்த நிலைமை காணப்பட்டது. அவ்வாறான நீண்ட பயணத்தின்போது மனிதர்களும் சரி, விலங்குகளும் சரி களைப்படையும் இந்நிலையில் அவர்கள் தங்கி இளைப்பாறவும், உணவுக்கும் பயணிக்கும் வழியிலுள்ள ஊர்களையே நம்பியிருந்தனர். இதற்கென அன்றைய வீடுகளில் திண்ணைகள் அமைத்துள்ளனர். விலங்குகளின் தாகம் தீர்க்க தண்ணீர்த் தொட்டிகளும் அமைத்துள்ளனர். மற்றும் போகுமிடங்களிலெல்லாம் ஆவுரஞ்சிக் கற்களும், சுமைதாங்கிகளும் அமைக்கப்பட்டிருந்தன. சமைக்கும்போதுகூட அதிகமாகவே சமைக்கும் பண்பு அன்றைய பெண்களிடம் காணப்பட்டது. ஏனெனில் திடீரென வரும் விருந்தாளிக்கு விருந்தோம்பல் செய்வதற்காக எனக் கூறுவார்கள். கம்பர், தனது காவியமான கம்பராமாயணத்தில்கூட விருந்தோம்பலின் சிறப்பு பற்றிக் கூறியுள்ளார்.



ஆனால் இன்று பெண்கள் வேலைக்குப் போவதாலும், தொலைக்காட்சி சீரியல்களில் மூழ்கி விடுவதாலும், கையடக்கத் தொலைபேசியில் முழு உலகையும் கொண்டுவரப் பழகி விட்டதாலும் பூமி வெறும் உள்ளங்கையளவுக்கு சுருங்கியதுபோல விருந்தோம்பல் பண்பும் சுருங்கிவிட்டது. தனக்கில்லாவிட்டாலும் வீட்டிற்கு வந்த விருந்தாளிக்கு உண்டி கொடுத்த நிலை இன்று மாறிவிட்டது. வீட்டிற்கொரு திண்ணை அமைத்த நிலை மாறி ஓர் அடி நிலத்திற்காக சண்டையிட்டுக் கொள்கின்றனர். இதனால் உறவுகளும் ஒடுங்கிப்போய் விட்டன. இன்றுள்ளவர்களுக்கு விருந்தாளிகள் தேவையற்ற சுமை என நினைக்கத் தோன்றி விட்டது. அன்றைய காலங்களில் கனவன், மனைவிக்கிடையில் ஊடல் ஏற்பட்டால் அதனைத் தீர்க்கும் மருந்தாக விருந்தினர் வரவு அமையுமாம். ஆனால் இன்று அது ஊடலுக்கான காரணமாக அமைந்துவிடுகின்ற நிலை வந்துவிட்டது.

**உணவு**

அன்று நம் முன்னோர் உணவு வகைகளை தம் கைகளை நம்பியே செய்தனர். நெல்லை உரலில் குற்றி அரிசியாக்கி சோறாக்கினர். அரிசியை இடித்து மாவாக்கி பலகாரங்கள், இடியப்பம், பிட்டு செய்தனர். உழுந்தை ஆட்டுக்கல்லில் அரைத்து தோசை, இட்லி, வடை செய்தனர். அம்மியில் சம்பல் அரைத்தனர். திணை, சாமை, வரகு, குரக்கன், ஒடியல் போன்றவற்றை அதிகம் உணவில் சேர்த்துக்கொண்டனர். இவை மட்டுமன்றி வேப்பம் பூ, இலுப்பைப் பூ, தூதுவளை, கற்பூரவள்ளி, மொசுமொசுக்கை என்பவற்றையும் உணவுக்காக பயன்படுத்திக்கொண்டனர். யாழ்ப்பாணத் தமிழரின் பாரம்பரிய உணவுகளாக ஆடிக்கூழ், ஒடியற்கூழ், அரிசிமாக்கூழ், ஊதுமாக்கூழ், பனங்காய்பணியாரம், பனங்காய்ப் பிட்டு, ஆலங்காய்ப்பட்டு, பனாட்டு, கொழுக்கட்டை, முட்டைமா, தட்டை வடை, குரக்கன் பிட்டு, ஒடியற்பிட்டு போன்ற பல வகை உணவுகள் காணப்படுகின்றன. வாழையிலையில் உணவு பரிமாறும் தன்மை காணப்பட்டது. உண்மையில் வாழையிலையில் சூடான உணவு போட்டு சாப்பிடும்போது குளோரபிள் எனப்படும் பதார்த்தம் நம் உடலுடன் சேர்ந்து ஊட்டச்சத்து தருகின்றது என்பது ஒரு விஞ்ஞான ரீதியான உண்மையாகும். அன்றைய விவசாயத்தில்கூட இயற்கை உரப்பாவணைகள் மட்டுமே பயன்படுத்தினர். இலைச்சருகுகள், விலங்குகளின், பறவைகளின் எருக்கள் பிரதான இடம் வகித்தன. அந்தக்கால மக்கள் விலங்கு வளர்ப்பு மற்றும் வேளாண்மையில் அதிகம் ஈடுபட்டமையால் தமக்குத் தேவையானதை தாமே பெற்று தன்னிறைவான வாழ்க்கையையே வாழ்ந்தனர்.





இன்று, சுவை சொட்டும் இத்தகைய உணவுகளை விடுத்து குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரை பீட்சா, சிக்கின் பிரைட் ரைஸ், பிரியாணி, கொத்து ரொட்டி என ஈர்க்கப்பட்டு விட்டனர். இயற்கைப் பானங்களான நுங்கு, இளநீர், பதநீர், மோர் என்பவற்றை விடுத்து இரசாயண சுவையூட்டப்பட்ட குளிர்பானங்களையே நாடிச் செல்கின்றனர். இதனால் மனிதனுக்கு கிடைத்த பரிசு நீரிழிவு, இதயநோய், புற்று நோய் என்பனவாகும். வாய்க்கு ருசி தேடாது ஆரோக்கியத்துக்கு உகந்தததைக் கடைப்பிடிக்க பழகிக்கொள்ள வேண்டும். நாம் உண்ணும் உணவு நம் ஆயுட்காலத்தை நிர்ணயிக்கும் படிக்கல் என்பதை நினைவிற்கொள்ள வேண்டும்.

**உடை**

யாழ்ப்பாணத் தமிழன் என்றாலே உடையில் பெரும் மரியாதை கொடுக்கத் தூண்டும். ஆள்பாதி ஆடை பாதி என்பதற்கிணங்க உடை அவர்களது கௌரவச் சின்னம். ஆண்கள் வேட்டி, சால்வையும், பெண்கள் கைத்தறிச் சேலைகளையும் அணிந்து கொண்டனர். பெண்கள் தலையைக் கொண்டையிட்டு, பூச்சூடி, நெற்றியில் பெரிய பொட்டு வைத்து அம்மன் அவதாரங்களாகவே காணப்பட்டனர். உடல் ஆரோக்கியத்துக்கும், எமது கால நிலைக்குமேற்பவும் பருத்தி ஆடைகளையே அணிந்துள்ளனர்.

இன்று பெண்கள் நவநாகரிக மங்கைகளாகத் தொடை தெரியும் குட்டைப் பாவாடைகளும், உடலை இறுக்கும் கவுன்களையும் அணிந்து தலைவிரி கோலத்துடன், கலர் கலராக சாயம் பூசி, குதி உயர் பாதணிகள் அணிந்து "டக் டக்" என நடந்து ஆண்கள் மனதில் "பக் பக்" என புகுந்து, கவர்சிக் கன்னிகளாக வலம் வரும்போது சமுதாயம் சீரழியாமல் என்ன செய்யும்? ஆண்களும் பெண்களுக்கு தாம் குறைந்தவர்கள் அல்ல என தலைக்கு பல வர்ண சாயங்களடித்து, விதவிதமான தலைவெட்டுக்களுடன், போதை தரும் சுகத்திற்கு தூண்டப்பட்டு மனிதனா? விலங்கா? என வேறுபடுத்த முடியாதவாறு வேட்டை நாய்களாகத் தெருத்தெருவாக அலைகின்றனர். தமிழன் பேணி வந்த கலாசார உடை என்பது தேவைக்கு மட்டுமே என்று இன்றைய பிள்ளைகளின் எண்ணம் வலுவோங்கி விட்டது. அவர்கள் அணியும் உடை அவர்களது கௌரவத்தையே கீழே தள்ளிவிட்டது என்பதை அவர்கள் உணரத்தவறிவிட்டனர்.



## மொழி

தமிழ்ப் பாரம்பரியத்தில் தமிழ் மொழி என்பது மிக இனிமையான ஒரு மொழி. தேன் போல காதினில் ஒலிக்கும் பெருமை நம் மொழிக்குண்டு. சங்க காலத்துப் புலவர்கள் பலரும் தமிழ் மொழியில் புனைந்த சுவை சொட்டும் கவிகள் பல சொல்லும் கருத்துக்கள் மிக மிக பெறுமதி வாய்ந்த சொத்துக்கள்.

இன்றைய தமிழன் முதலில் மாற்ற நினைப்பது மொழியைத்தான். தினம் தினம் புதிதாக முளைக்கின்ற ஆங்கிலப் பள்ளிகளில் தமது பிள்ளைகளைக் கல்வி கற்க அனுப்புவதை பெருமையும், கௌரவமும் எனக் கருதுகின்றனர். ஆனால் எதிர்காலத்தில் தம் பிள்ளைகள் தமிழை எழுதப் பேச சிரமப்படப் போகின்றனர் என்பதை சிந்திக்கத் தவறி விட்டனர். வெள்ளைக்காரன் ஆங்கிலத்துக்கு அடிமைப்பட்டுப் போய்விட்டனர். தமிழனும் தமிழைப் பேசாது போனால் காலப்போக்கில் தமிழ் என்ற மொழி இருந்த அடையாளம் கூட அற்றுப் போய்விடும்.

## பாவனைப் பொருட்கள்

அன்றைய காலத்தில் மண் பாத்திரங்கள் மற்றும் வெண்கலப் பாத்திரங்கள்தான் பயன்படுத்தப்பட்டது. பொங்கல் நாளன்று புதிய மண் பானையில் பொங்கலிடும் வழக்கம் அன்றைய மக்களிடம் இருந்தது. மண் பாத்திரத்தில் சமைக்கின்றபோது அதிலுள்ள சத்துக்கள் வீணாகாமல் அப்படியே நமக்கு கிடைக்கும். வீட்டிற்கு வரும் விருந்தினருக்கு தேநீர் கொடுப்பதற்கு மூக்குப் பேணி பயன்படுத்தினர். ஏனெனில் அண்ணாந்து குடிப்பதற் காக. இதனைவிட அம்மி, உரல், உலக்கை, ஆட்டக்கல், கூசா, திருகை, அரிவாள், அரிவாள்மனை, அரிக்கன் விளக்கு, குடலை, ஓலைச்சுவடி, கலப்பை, கள்ளிப்பெட்டி, நெல்லுப்பெட்டி, பட்டை, துலா, பெட்டகம் போன்ற பல பொருட்கள் இன்று இருந்த இடம் தெரியாமலே போய்விட்டன.

இன்று மிக்ஸி, கிரைன்டர்,சில்வர், கிளாஸ் பாத்திரங்களும், மின்னடுப்புக்களும் எனப் பாவனை அதிகரித்த நிலையில் இதன் காரணமாக பல கொடிய நோய்களின் தாக்கத் திற்கும் உள்ளாகிவிட்டோம். மாட்டுவண்டிப் பயணத்தின் சுகம் இன்றைய சமுகத்தினருக்குத் தெரியுமா? அம்மி, ஆட்டக்கல், உரலில் அரைத்து சமைத்த உணவின் ருசி, மண்பானைத் தண்ணீரின் குளிர்மை, மண்பானை சோறின் சுவை யாவும் இன்றைய சமுகத்தினருக்குத் தெரியுமா? செக்கு மாட்டில் வடித்த எண்ணெயின் நறுமணத்தை இவர்கள் உணர்ந்திருக் கின்றார்களா?







### குடும்ப அமைப்பு

நம் இனத்தவர் எல்லோரும் இணைந்து ஒரு கூட்டுக்குடும்பமாகவே வாழ்க்கை வட்டத்தினை அமைத்துக்கொண்டனர். உறவுக்குள்ளேயே திருமணங்கள் செய்தமையால் ஒற்றுமை பாதுகாக்கப்பட்டது. ஒருவருக்கு ஒருவர் உடல், உள உழைப்புக்களை பகிர்ந்து கொண்டனர். விழாக்களில் ஒன்றுபட்டு செயற்பட்டனர். மனிதனுக்கு மனிதன் உதவி புரிந்தான். போட்டி, பொறாமை இல்லை. ஆனால் இன்று நீயா? நானா? என்கின்ற பங்காளிச் சண்டைகள் எத்தனை எத்தனையோ. குடும்பத்தில் ஆண் தலைவன். பெண் மரியாதைக் குரியவளாகப் போற்றப்பட்டாள். குடும்பத்திற்காகத் தன்னை அர்ப்பணித்து தனது கடமை களைச் செய்தாள். ஆண்கள் வேளாண்மை செய்து குடும்ப வாழ்வுக்கு உழைத்தனர். ஓலையால் பின்னப்பட்ட குடலையில் பூ பறிக்கும் பெண்களின் தெய்வத் தன்மை பொருந்திய அழகு இன்றைய சமுகத்தினருக்குத் தெரியுமா? அன்று வாழ்ந்தோர் உடலை வருத்திச் செய்த வேலைகளின் புழுவும், களைப்பு நீங்கப் பாடும் கிராமியப் பாடல்களும், சுறுசுறுப்பும், அதிகாலை வேளையில் பறவையினங்களின் இன்னிசைக் கானமும், வண்டி மாடுகளின் சலங்கை ஒலியும், வயலுக்குச் செல்லும் உழவர்களின் சலசலப்பும் உணர்ந்து அனுபவித்தவர்களுக்கு மட்டுமே அதன் தாற்பரியம் புரியும். இன்றுள்ளவர்களுக்கு அதனைக் கேட்க நேரமும் இல்லை. போதிய பொறுமையும் இல்லை என்பது வேதனையான ஒன்று. அன்று துயில் எழுப்புவதே பறவைகளின் இன்னிசைக் கானம்தான். இன்றைய யுகத்தில் அதிகாலை வேளையில் கேட்கும் பறவைகளின் ஒலி கூட இல்லாது போயிவிட்டது என்றே சொல்ல வேண்டும். இது காலத்தின் மாற்றமா? இன்றேல் விஞ்ஞானத்தின் விந்தையா?



### விளையாட்டுக்களும், கலைகளும்

அன்று பிள்ளைகளுக்கான சிறந்த பொழுபோக்கு விளையாட்டு. கொக்கான், தாயம், பல்லாங்குழி, ஏணியும், பாம்பும், கிளித்தட்டு, கள்ளன் பொலீஸ், குலைகுலையா முந்திரிக்காய், கீச்சு மாச்சு தம்பளம், கிட்டிப்புல், பம்பரம் விடுதல் என பல விளையாட்டுக்களில் ஈடுபட்டனர். இவர்களுக்கு கல்வி திணிக்கப்படவில்லை. விளையாட்டு பிள்ளைகளிடையே ஒற்றுமையை வளர்த்ததுடன், சிறந்த உடற்பயிற்சியாகவும், உடலுக்குச் சிறந்த புத்துணர்ச்சி கொடுப்பனவாகவும் அமைந்தது. திருவிழாக்காலங்களில் மாட்டுவண்டிச் சவாரி, காளையை அடக்குதல், சிலம்படி, முட்டி உடைத்தல் போன்ற விளையாட்டுக்களில் பெரியவர்கள் ஈடுபட்டனர். விளையாட்டு மட்டுமன்றி நாட்டுப்புறக் கலைகளையும் வளர்த் தெடுத்தனர். கரகாட்டம், கும்மி, வில்லுப்பாட்டு, காத்தவராயன்கூத்து, கோவலன் கூத்து, மயிலாட்டம், வசந்தன் கூத்து, தெருக்கூத்து, உழவர் நடனம் போன்ற நாட்டுப்புறக் கலைகள் மூலம் நம் முன்னோர்களின் சிந்தனை திறனை மதிப்பிட முடியும்.

இன்று இவையெல்லாம் சினிமா, சீரியல் என்ற வட்டத்திற்குள் ஒடுங்கிவிட்டது. விளையாட்டுக்களில் ஆர்வம் குறைந்து கைத்தொலைபேசிப் பாவனையில் ஊறிவிட்டனர். இருந்தபோதிலும் கலாசார விழாவின் மூலம் ஓரளவேனும் இவை பின்பற்றப்பட்டுவருவது மனதுக்குச் சிறிதளவான ஒரு ஆறுதலைத் தருகின்றது.






**நோய்த்தடுப்பு மற்றும் மருத்துவ வழிமுறைகள்**

அன்று வாழ்ந்த நம் முன்னோர் அன்றாட செயற்பாடுகள் யாவற்றிலுமே ஒரு ஆரோக்கியமான சிந்தனையுடன் செயற்பட்டனர். சித்திரைப் புத்தாண்டு மருத்துநீர் துளசி, அறுகு, தாழம்பூ, வில்வம், திப்பிலி, மிளகு, பீர்க்கு, கோரோசனை கோமயம் உட்பட பல பொருட்கள் கொண்டு தயாரிக்கப்படுவது உடலுக்கு குளிர்ச்சி கொடுத்து, வெப்பத்தைப் போக்கி, நோயிலிருந்து பாதுகாக்கும் ஒரு வழிமுறை. கோலிக்குண்டு விளையாட்டை எடுத்துக்கொண்டால் கண் பார்வையைக் கூர்மையாக்கி, கை, கால்களை வலுவடையச் செய்து, மனதை ஒருநிலைப்படுத்தி, உடலுக்கு பயிற்சியளிக்கின்றது. பல் துலக்கப் பயன் படுத்தப்பட்ட வேப்பம் குச்சி கிருமிகளை அழிக்கும் மருத்துவ குணமுள்ளது. பெண்கள் முகத்துக்கு பூசும் மஞ்கள் குளிர்ச்சியையும், கிருமிகளை அழிப்பதையும் நோக்காகக் கொண்டது. வாழையிலையில் உணவுண்பதுகூட நோய்த்தடுப்பு முறைதான். அதிலுள்ள ஆன்டி ஆக்சிடன்ட் உடலிலுள்ள செல்களை சிதைவுறாது பாதுகாத்து, உணவை இலகுவில் ஜீரணமாக்குவதுடன் இதய நோய், புற்று நோய் என்பவற்றிலிருந்தும் பாதுகாக்கின்றது.






பாட்டி வைத்தியம் சிறப்புற்று விளங்கிய காலம். இயற்கை மூலிகைகள் கொண்டு மருந்து தயாரித்தனர். இதனால் பக்கவிளைவுகள் இருக்கவில்லை. கை நாடி பார்த்தே நோய் அறிந்து வைத்தியம் செய்வார்கள். பிரசவம்கூட வீட்டிலேயே இடம் பெற்றது. பிரசவித்த தாய்மார்களது படுக்கை அறையில் வேப்பம் எண்ணெய் விளக்கு எரித்து நோய்க்கிருமிகளிலிருந்து குழந்தையைப் பாதுகாத்தனர். தூதுவளை, கற்பூரவள்ளி,

கறுத்தப் பூக்கொடி போன்றவற்றின் பாவணை அதிகமாக இருந்தது. இன்று இவையெல்லாம் புறம்தள்ளப்பட்டு எதிர்காலம் ஒரு கேள்விக்குறியாகிவிட்டது. மருத்து வத்தை சேவை என்பதை தாண்டி வியாபாரமாக்கிவிட்டனர்.

**பாரம்பரியமான தொழில்கள்**

நம் மூதாதையேர் அன்றாட வாழ்வாதாரமாக மட்பாண்டம், கிடுகு பின்னல், பெட்டி, பாய் இழைத்தல், நெசவு, சாணை பிடித்தல், பால் விற்பனை, நெல் குற்றல், கள் இறக்கல், சலவை போன்ற பல தொழில்களிலும் ஈடுட்டனர். குருவுக்கு சேவை செய்து குருகுலக் கல்வி பயின்றனர். இன்று இவையெல்லாம் அருகி, ஆடை கசங்காமல் கதிரையில் இருந்து வெள்ளைக்காரன் உத்தியோகத்தை நாடுகின்றனர். இது அறிவு வளர்ச்சியை ஏற்படுத்தி னாலும் பாரம்பரியமாகப் பேணி வந்த தொழில்களை மழுங்கடித்துவிட்டமை ஒரு வேதனையான விடயம் தானே.





**கருவிலிருந்து கல்லறை வரையான சம்பிரதாயங்கள்**

அன்றைய மக்கள் ஒரு பெண் கருவுற்றதுமே சடங்குகளை ஆரம்பித்து விடுவர். நலங்கு வைத்தல், மஞ்சள் பூசுதல், சீமந்தம், வளைகாப்பு எனத் தொடங்கி குழந்தை பிறந்த பின் முப்பத்தொன்று நாற்பத்தொன்று சோறூட்டல், காது குத்தல், வித்யாரம்பம் வரை தொடரும். குழந்தைக்கு திருஸ்டிப்பொட்டு வைப்பது, பொழுது சாயும்போது வெளியில் கொண்டு செல்வதைத் தடுத்தல் என ஒவ்வொன்றிற்கும் விஞ்ஞான ரீதியான காரணங்களும் காணப்பட்டன. பூப்பெய்திய பெண்களைப் பார்க்கச் செல்லும்போது நல்லெண்ணெய், முட்டை, உழுந்து, ஊர் அரிசி, கத்தரிப் பிஞ்சு, எள்ளு, மஞ்சள், வேப்பிலை போன்ற வலுச்சேர்க்கும் உணவுகளையே கொண்டு சென்றனர். திருமணங்கள் உறவுக் குள்ளேயே இடம்பெற்றது. ஆனால் இன்று சோதிடர்கள் பணம் கறப்பதற்காக கிரகபாவம், சூரியன், செவ்வாய் என பல காரணங்கள் கூறிப் பல திருமணங்கள் நடைபெறாமலே போய்விட்டன. திருமணச்சடங்குகள்கூட புகைப்படக்காரரின் வசதிக்கேற்ப மாற்றப்பட்டு விட்டது. பெண் தலைகுனிந்த வரலாறு மறக்கப்பட்டுவிட்டது. இதனால் பல விவாகரத்துக்கள் சவாலாக அமைந்துவிட்டன. உறவினர் மரணமடைந்தால் அவரது சிறப்புக்களைக் கூறி ஒப்பாரியிடுவர். இன்று அழுவதுகூட இல்லை என்றாகிவிட்டது. அழுவது நாகரீக குறைவு ஆனால் மரணச்சடங்கில் சோடா கொடுப்பது நாகரீகம் என்றாகிவிட்டது. விரல் விட்டு எண்ணக்கூடியளவு மிகச் சில கிராமங்களில்தான் பழைய மரபுகள் நிலவி வருகின்றன.





### அழிவுக்கான காரணங்கள்

இவ்வாறு நம் முன்னோர் கட்டிக் காப்பாற்றி வந்த பாரம்பரியங்கள் இன்றைய எம் உள்நாட்டுப் போர், அதனாலேற்பட்ட புலம்பெயர்வுகள், மேலைத்தேய நாகரீக மோகம், வேற்று மொழிப்பற்று, தொடர்பாடல் சாதனங்களது வளர்ச்சி, பொழுதுபோக்குகள், களியாட்டங்கள் என்பன மலிந்துவிட்ட நிலையில் நாம் கடைப்பிடித்த மரபுகள் அத்தனையும் தொலைந்துபோய் மனிதன் தெளிவான சிந்தனையோ, விழிப்புணர்வோ இன்றி வாழப் பழகி விட்டான். நாகரீகப் பாதை நோக்கி தூண்டப்பட்டுக்கொண்டிருக்கின்றான்.

### தடுக்கும் வழி

மரபு என்பது விலை மதிக்க முடியாத சொத்து. இதனை நாம் தான் எதிர்கால சந்ததியினருக்கு கடத்த வேண்டும். போதிய விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி மனதின் ஆழம் வரை பதியவைக்க வேண்டும். மரபுவழிக் கதைகள் பலவற்றைக் கூற வேண்டும். தற்போது இயக்கச்சியில் அமைந்தள்ள "றீச்சா" எனும் சுற்றுலா மையத்தில் பல மரபுவழிக் காட்சிகள் சிற்பங்களாக வடிவமைக்கப்பட்டு பல ஆண்டுகளுக்கு முற்பட்ட நம் கலாசாரத்தை மனதில் பதித்து நீங்கா இடம்பிடித்துவிட்டது ஒரு வரவேற்கத்தக்க செயற்பாடாகும். இத்தகைய காட்சிப்படுத்தல்கள் தொலைக்கப்பட்ட பண்பாடுகளை மீள்உருவாக்கம் செய்பவை. இலங்கை தொல்பொருள் திணைக்களமும் பல மரபுச் சின்னங்களை ஆவணப்படுத்தியுள்ளன. நம் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் நிகழ்வுகளை அதிகளவில் நடாத்த வேண்டும். இப்போதுள்ள வாழ்க்கை முறையின் பாதகங்களைச் சுட்டிக்காட்ட வேண்டும். சிறுவயது முதலே பாரம்பரியத்துக்கும் சம்பிரதாயத்துக்கும் கட்டுப்பட்டவர்களால் குழந்தைகளை வளர்க்க வேண்டும். இவற்றின் வாயிலாகத் தொலைந்து போய்க்கொண்டிருக்கும் பண்புகளைப் பாதுகாக்க முயற்சிக்க வேண்டும்.

### முடிவுரை

எனவே மேற்குறிப்பிட்ட விடயங்களைத் தொகுத்து நோக்குகின்றபோது அழிந்து கொண்டிருக்கும் நம் பண்பாடுகள் சிதைந்து போகாமல் அதனைப் பாதுகாத்து நம் எதிர்காலச் சந்ததியினருக்கு கையளிக்கும் மிகப் பெரிய பொறுப்பு எமக்குள்ளது என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்தித்துச் செயற்பட வேண்டும். பாதுகாப்பு மட்டுமன்றி அதனை மேன்மேலும் கட்டியெழுப்ப வேண்டும். நாகரீக போதையிலிருந்து பிள்ளைகளை மீட்டெடுக்க வேண்டும். பழமையின் உன்னதத்தை உணரச்செய்ய வேண்டும். நோய் நொடிகளற்ற ஆரோக்கியமான சிறந்த சமுதாய உருவாக்கதிற்கு கரம் கோர்த்து ஒன்றுபட்டுழைப்போம்.

# நூலகவியல்

## கரவெட்டி பிரதேச சபைப் பிரிவின்

# சனசமூக நிலையங்கள்

## ஒரு பார்வை

**திரு. வே. சுப்பிரமணியம்,**
ஓய்வுநிலை வடக்கு மாகாண தலைமைப்பீடம்.
சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்.



கிராமங்களின் குட்டி பாராளுமன்றம் என அழைக்கப்படுகின்ற ஒரு பொது அமைப்பு சனசமூக நிலையங்களாகும். இரண்டாம் உலக மகாயுத்தம் நடைபெற்ற காலத்திலும் அதன் பின்னர் இங்கிலாந்து காலனித்துவ ஆட்சியின் கீழிருந்த பல நாடுகளுக்குச் சுதந்திரம் வழங்கப் பட்டன. இலங்கைக்கும் சுதந்திரம் வழங்கப்பட்டது. மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்து வதற்கும் செய்திகளைப் பரிமாறுவதற்கும் மற்றும் சுதந்திரம் பெற்ற பல நாடுகளின் சமூகத்தினது பொருளாதார, சமூக கலாசார மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் பொருட்டு பல நாடுகளில் சமூக சபைகள் என்ற பெயரில் மக்கள் அமைப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. அந்த அமைப்புக்கள் பல நாடுகளின் வளர்ச்சிக்கு முக்கிய காரணிகளாக அமைந்தன. ஆனால் இன்று பல நாடுகளில் அந்த அமைப்புக்கள் காணாமல் போய்விட்டன. ஆனால் இலங்கையில் சமூக அமைப்புக்கள் சனசமூக நிலையமாக பெயர் மாற்றமடைந்து செயற்பாடுகள் வியாபித்து மாற்றமடைந்து இன்றுவரை செயற்பட்டு வருகின்றன.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் ஏற்படுத்தப்பட்ட பாராளுமன்ற முறையின் கீழ் உள்ளூராட்சி அமைச்சராகத் தெரிவு செய்யப்பட்ட திரு.எஸ். டபில்யு. ஆர்.டி.பண்டாரநாயக்க அவர்களினால் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் சமூக சபை என்ற அமைப்பின் கீழ் கொண்டுவரப்பட்டன. பின்னர் 1977 இல் உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சினால் சமூக சபைகள் சனசமூக நிலையமாகப் பெயர் மாற்றம் செய்யப்பட்டன. அத்தோடு சனசமூக நிலையங்களை ஆரம்பிப்பது எவ்வாறு, அதன் நோக்கங்கள் என்ன, கணக்கு வைப்பு முறைகள் மற்றும் மாதிரி துணைவிதிகள் அடங்கிய கைநூல் வெளியீடு செய்து வைக்கப்பட்டது. அத்தோடு சனசமூக நிலையங்களின் செயற்பாட்டினைப் பதிவு செய்து ஒழுங்குபடுத்தி செயற்படுத்துவதற்கு ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒவ்வொரு சனசமூக நிலைய மேற்பார்வை உத்தியோகத்தர் நியமிக்கப் பட்டனர். பின்னர் 1984 இல்

அவர்கள் ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கும் (தற்போது பிரதேச செயலகம்) ஒருவர் என்ற ரீதியில் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு நியமிக்கப்பட்டார்கள். அப்படி நியமிக்கப்பட்டாலும் அவர்களின் செயற்பாடுகள் மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தின் கீழேயே ஒன்றிணைக்கப்பட்டது. 13 ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் மாகாண சபைக்கு கையளிக்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக சனசமூக நிலையங் களுக்கான நியம பொது விதியோ மற்றும் அவற்றுக்கான உப விதிகளாக ஆக்கப்பட வில்லை. இதன் காரணமாக 1977ஆம் ஆண்டு மத்திய அரசாங்கத்தினால் கொண்டு வரப்பட்ட சனசமூகநிலைய கைநூலே இன்றும் பாவனையில் உள்ளது. இதனால் சனசமூக நிலையங்கள் சரி அதனை நெறிப்படுத்துகின்ற சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் சரி பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

சர்வதேச மட்டத்தில் சமூக சபைகளின் செயற்பாடுகள் குறைவடைந்து அல்லது அற்றுப் போயிருந்தாலும்கூட இலங்கையைப் பொறுத்தமட்டில் சனசமூக நிலையங்கள் மிகச் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றன. அதற்கு பல்வேறு காரணங்கள் இருந்தாலும் கூட மிகப் பெரிய காரணம் இலங்கை அரசாங்கத்தின் ஊக்குவிப்பும் மற்றும் சனசமூக நிலையங்களினூடாகக் கிராமங்களை வளர்ச்சியடையச் செய்யலாம் என்ற மக்களின் நம்பிக்கையாகும். இலங்கையின் வடமாகாணத்தில் சனசமூக நிலையங்கள் அபரிமிதமான வளர்ச்சியைக் கண்டுள்ளன. வடமாகாணத்தில் 1250 சனசமூக நிலையங்கள் பதிவு செய்யப்பட்டு இயங்கி வருகின்றன. அதிலும் யாழ்ப்பாண மாவட்டத்தில் 930 சனசமூக நிலையங்கள். வருடாந்த மானியங்களைப் பெற்று இயங்கி வருகின்றன. யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் சனசமூக நிலையங்கள் பொறாமை இன்றிப் போட்டியாக இயங்கி வருகின்றன. அதிலும் ஒரு சனசமூக நிலையத்தில் தெரிவு செய்யப்படும் புதிய நிர்வாகம் முன்னைய நிர்வாகத்தின் செயற்பாடுகளுடன் போட்டிப் போட்டு செயற்படு வதையும் காணக்கூடியதாக உள்ளது. இலங்கையிலே சனசமூக நிலையங்கள் செயற்பட்டு வந்தாலும்கூட யாழ்ப்பாண மாவட்டத்திலேயே அதிக எண்ணிக்கையான சனசமூக நிலையங்கள் வளமாகவும் சிறப்பான முறையிலும் செயற்பட்டு வருகின்றன.

யாழ் மாவட்டத்தில் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை பிரிவும், பிரதேச செயலக பிரிவும் ஒரே அளவுடையதாக இருக்கின்றது. இதனைக் கரவெட்டி பிரதேசம் எனவும் அழைப்பர். கரவெட்டி பிரதேசம் 88 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்டது. 15946 குடும்பங்களைச் சேர்ந்த 46386 மக்கள் வாழ்கின்றனர். இங்கு காணப்படும் 187 கிராமங்கள் 35 கிராம சேவகர் பிரிவுக்குள் உள்ளடக்கப்படுகின்றது. இங்கு பல்வேறுபட்ட தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் இயங்கி வந்தாலும்கூட அவற்றுள் முதன்மையானது சனசமூக நிலையங்களாகும். இங்கு 90 சனசமூக நிலையங்கள் பதிவு செய்யப்பட்டு இயங்கி வருகின்றன. இவற்றுள் 22 சனசமூக நிலையங்கள் தற்போது செயற்பாடு குன்றிய நிலையில் காணப்படுகின்றன. இங்கு சில கிராம சேவகர் பிரிவில் ஒன்றுக்கு மேற்பட்ட சனசமூக நிலையங்கள் இயங்குகின்றன. அதே நேரம் சில கிராம சேவகர் பிரிவில் 05இற்கு மேற்பட்ட சனசமூக நிலையங்களும் இயங்குகின்றன. அதே நேரம் சகல கிராம சேவகர் பிரிவிலும் சனசமூக நிலையங்கள் இயங்கி வருகின்றன என்பதும் மிகவும் முக்கியமான விடயம். பல கிராமங்களில் சனசமூக நிலையங்களின் செயற்பாட்டின் பின்னர்தான் வளர்ச்சியடைந்தன என்ற கருத்துக்கு மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. சில கிராமங்களின் தபால் முகவரி அந்த சனசமூக நிலையங்களின் பெயரால் அழைக்கப்படுகின்றன. கலைமதி,

வளர்மதி, மனோகரா, அறிவாலயம், கலைமகள், இப்படி இன்னும் சில இடங்கள் இந்த பெயர்களால் சனசமூக நிலையம் வந்தபின் உருவான பெயர்கள். கரவெட்டி பிரதேச சபையில் 03 உபஅலுவலங்கள் இருக்கின்றன. உபஅலுவலக ரீதியாக சனசமூக நிலையங்களின் விபரங்கள் கட்டைவேலி உபஅலுவலகப் பிரிவில் 24, உடுப்பிட்டி உபஅலுவலகப் பிரிவில் 55, நெல்லியடி உபஅலுவலகப் பிரிவில் 11 சனசமூக நிலையங்களும் பதிவு செய்து இயங்கி வருகின்றன.

❖ **நெல்லியடி உப அலுவலகப் பிரிவில்**

- நெல்லியடி சனசமூக நிலையம் - நெல்லியடி
- வதிரி சனசமூக நிலையம் - வதிரி
- கலட்டி சனசமூக நிலையம் - கரணவாய் கிழக்கு
- கோயிற்கடவை சனசமூக நிலையம் - துன்னாலை மத்தி
- ஸ்ரீ முருகன் சனசமூக நிலையம் - நெல்லியடி
- தச்சை ஐங்கரன் சனசமூக நிலையம் - கரவெட்டி மத்தி
- சுடரொளி சனசமூக நிலையம் - நெல்லியடி கிழக்கு
- திருஇருதய சனசமூக நிலையம் - நெல்லியடி
- இராசகிராமம் சனசமூக நிலையம் - கரவெட்டி வடக்கு

❖ **கட்டைவேலி உபஅலுவலகப் பிரிவில்**

- ஸ்ரீமுருகன் சனசமூக நிலையம் - துன்னாலை
- கட்டைவேலி சனசமூக நிலையம் - கரவெட்டி
- நாமகள் சனசமூக நிலையம் - கரவெட்டி
- வதிரி கலாநிலையம் சனசமூகநிலையம் - நெல்லியடி வடக்கு
- பாரதிதாசன் சனசமூகநிலையம் - அல்வாய் கிழக்கு
- மனோகரா சனசமூகநிலையம் - அல்வாய் தெற்கு
- கலைவாணி சனசமூகநிலையம் - மத்தொனி
- சிந்தாமணி விநாயகர் சனசமூகநிலையம் - கரவெட்டி கிழக்கு
- கிழவிதோட்டம் சனசமூகநிலையம் - கரவெட்டி கிழக்கு
- அத்தாய் விநாயகர் சனசமூகநிலையம் - அத்தாய்
- கலைமகள் சனசமூகநிலையம் - ஓடை வதிரி
- ஞானவிநாயகர் சனசமூகநிலையம் - அல்வாய் கிழக்கு
- மத்தொணி அறிவகம் சனசமூகநிலையம் - கரவெட்டி மத்தி
- தல்லையம்பாள் சனசமூகநிலையம் - தல்லையப்புலம்
- செங்குந்தா சனசமூகநிலையம் - கரவெட்டி கிழக்கு
- வட்டுவத்தை சனசமூகநிலையம் - வதிரி
- தேவரையாளி சனசமூகநிலையம் - நெல்லியடி வடக்கு
- பாரதி சனசமூகநிலையம் - அல்வாய் கிழக்கு
- வளர்மதி சனசமூகநிலையம் - கரவெட்டிகிழக்கு
- இளைஞர் சனசமூகநிலையம் - கரவெட்டி கிழக்கு
- திருவள்ளுவர் சனசமூகநிலையம் - கரவெட்டி தெற்கு
- யார்கரு சனசமூகநிலையம் - கரவெட்டி கிழக்கு
- நவசக்தி சனசமூகநிலையம் - மத்தொணி
- கலிகைகந்தன் சனசமூகநிலையம் - துன்னாலை தெற்கு
- கவுந்தில் சனசமூகநிலையம் - கரவெட்டி கிழக்கு

- வெள்ளெருவை ஞானவைரவர் சனசமூகநிலையம் - அல்வாய் கிழக்கு

**உடுப்பிட்டி உப அலுவலகப் பிரிவில் :-**

- நவிண்டில் நாவலன் சனசமூகநிலையம் - கரணவாய் மத்தி
- வீரகத்தி விநாயகர் சனசமூகநிலையம் - இமையாளன் மேற்கு
- தர்மகுலசிங்கம் சனசமூகநிலையம் - வல்வெட்டி
- சிவனடி சனசமூகநிலையம் - உடுப்பிட்டி
- அறிவாலயம் சனசமூகநிலையம் - இமையாணன்
- ஜோதி சனசமூகநிலையம் - இமையாணன்
- கலாவாணி சனசமூகநிலையம் - கம்பர்மலை
- பாரதி சனசமூகநிலையம் - கம்பர்மலை
- கொற்றாவத்தை மத்திய சனசமூகநிலையம் - கரணவாய் வடக்கு, கொற்றாவத்தை
- நாவலர் சனசமூகநிலையம் - உடுப்பிட்டி
- ஜனசக்தி சனசமூகநிலையம் - மணற்பகுதி
- கப்புது சனசமூகநிலையம் - கப்புது
- முத்தவிநாயகர் சனசமூகநிலையம் - கரணவாய்
- கலைமகள் சனசமூகநிலையம் - இமையாணன்
- இளங்கோ சனசமூகநிலையம் - கரணவாய்
- கலைநேசன் சனசமூகநிலையம் - கல்லுவம்
- வள்ளுவர் சனசமூகநிலையம் - கரணவாய்
- கலைமதி சனசமூகநிலையம் - கரணவாய் வடக்கு
- விபுலானந்தர் சனசமூகநிலையம் - கரணவாய் தெற்கு
- சோளங்கன் சனசமூகநிலையம் - கரணவாய் மேற்கு
- மண்டான் மாவலி சனசமூகநிலையம் - கரணவாய் மேற்கு
- காந்தி சனசமூகநிலையம் - வல்வெட்டி
- பொன் கந்தையா சனசமூகநிலையம் - கம்பர்மலை
- வேதர்தரணியேஸ்வரா சனசமூகநிலையம் - கரணவாய் கிழக்கு
- இராசலிங்கம் சனசமூகநிலையம் - உடுப்பிட்டி
- கொற்றாவத்தை கலைவாணி சனசமூகநிலையம் - கொற்றாவத்தை
- அறிவகம் - இலக்கணாவத்தை
- அன்பாலயம் - கொற்றாவத்தை
- நியூட்டன் - சமரபாகு
- வடகருணை வளர்மதி சனசமூகநிலையம் - கரணவாய் வடக்கு
- ஜீவகன் சனசமூகநிலையம் - தூப்புலம்
- திருமகள் சனசமூகநிலையம் - கரணவாய் மேற்கு
- உடுநகர் சனசமூகநிலையம் - உடுப்பிட்டி
- பராசக்தி சனசமூகநிலையம் - மாவடி
- விநாயகர் சனசமூகநிலையம் - உடுப்பிட்டி
- நீதிதேவி சனசமூகநிலையம் - உடுப்பிட்டி
- வேவில் விக்னேஸ்வராாாா சனசமூகநிலையம் - வல்வெட்டி
- கண்ணகி சனசமூகநிலையம் - உடுப்பிட்டி
- கம்பன் சனசமூகநிலையம் - கரணவாய் வடக்கு
- இராஜாஜி சனசமூகநிலையம் - இமையாணன்

- சித்திராலயா சனசமூகநிலையம் - கரணவாய்வடமேற்கு
- வல்வெட்டி சனசமூகநிலையம் - வல்வெட்டி
- அம்பிகை சனசமூகநிலையம் - கரணவாய்
- கொம்மாந்துறை சனசமூகநிலையம் - கொம்மாந்துறை
- உடுப்பிட்டி சனசமூகநிலையம் - உடுப்பிட்டி
- கரணவாய் மத்தி சனசமூகநிலையம் - கரணவாய் மத்தி
- கிருஷ்ணா சனசமூகநிலையம் - முதலைக்குழி, கரணவாய், தெற்கு
- கருணையம்பதி சனசமூகநிலையம் - கரணவாய் மத்தி
- அந்திரான் சனசமூகநிலையம் - கரணவாய் மேற்கு
- உதயசூரியன் சனசமூகநிலையம் - ஆதியாமலை
- ஸ்ரீ அம்பாள் சனசமூகநிலையம் - கரணவாய் வடக்கு
- அபிமன்யு சனசமூகநிலையம் - மாவடி
- வேலவன் சனசமூகநிலையம் - கரணவாய் மேற்கு
- சக்தி சனசமூகநிலையம் - உடுப்பிட்டி

சனசமூக நிலையங்களின் பெயர்களை பார்க்கின்ற போது 29 சனசமூக நிலையங்கள் தாங்கள் வழிபடுகின்ற தெய்வங்களின் பெயரால் அமையப் பெற்றுள்ளதை அவதானிக்கலாம். அதே போன்று கிராமத்தின் பெயரால் 19 சனசமூக நிலையங்கள் அமையப் பெற்றுள்ளன. தங்களுக்கு பிடித்த தலைவர்கள் மற்றும் தங்களுக்கு உதவி புரிந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் வழிகாட்டிகள் பெயரில் 19 சனசமூகநிலையங்களும், மிகுதி 23 சனசமூக நிலையங்கள் பொதுவான பெயர்களைக் கொண்டும் அமைந்திருக்கின்றன.

இங்குள்ள மக்கள் சனசமூகநிலையங்களை தங்கள் பகுதியில் உள்ள மக்களின் பொழுதுபோக்குக்காகவும், தங்கள் கிராமத்தின் பொருளாதாரம், நல்வாழ்வு, கல்வி, சமயம், கலாசாரம், மற்றும் பண்பாட்டு விழுமியங்களை பாதுகாப்பதற்காகவும், வளர்ச்சி யடைய செய்வதற்காகவும் தோற்றுவித்தார்கள். இங்குள்ள சனசமூகநிலையங்கள் பல 1949 ஆம் ஆண்டுக்கு பின்னரே ஆரம்பித்ததனை அவதானிக்கலாம். சனசமூகநிலயங்கள் தங்கள் நோக்கங்களை அடைவதற்காக பல்வேறு செயற்பாடுகளை செயற்படுத்தி வருகின்றன. கரவெட்டி பிரதேசத்தில் உள்ள சகல சனசமூக நிலையங்களுக்கும் சொந்தமான காணி இருக்கும். அதிலே ஒரு மண்டபம் அமைக்கப்பட்டிருக்கும். அதில் வாங்கு, மேசை போடப்பட்டு தினசரி பத்திரிகைகள் காணப்படும். சில சனசமூக நிலையங்களில் 10 இற்கு மேற்பட்ட பத்திரிகைகள் (தமிழ், ஆங்கிலம், சிங்களம்) காணப்படும். இன்னும் சிலவற்றில் மாதாந்த, வாராந்த சஞ்சிகைகளும் காணப்படுகின்றன. இது ஒவ்வொரு சனசமூக நிலயத்திற்கும் மிக முக்கியமான செயற்பாடாகக் காணப்படுகின்றது. சில சமயங்களில் நிர்வாகச் செயற்பாடுகள் மந்தமாக இருந்தாலும் பத்திரிகைகள் மண்டபங் களில் இருப்பதை அவதானிக்கலாம். பல சனசமூகநிலையங்களில் பத்திரிகைகள் ஊர் மக்களால் அல்லது வெளிநாட்டில் உள்ள உறவுகளால் அன்பளிப்பாக வழங்கப்படுவதனை அவதானிக்கலாம். இதற்கு மேலதிகமாக சில சனசமூக நிலையங்கள் அங்கத்தவர்களிடம் நிதியைத் திரட்டி பத்திரிகைகள் போடுவதனையும் அவதானிக்கலாம்.

இதேபோல் முன்பள்ளி கல்வி முதல் கா.பொ.த (உயர்தரம்) வரை வகுப்புக்களைத் தங்கள் பகுதி மாணவர்களுக்காக இலவசமாகவோ அல்லது சிறுதொகை நிதியைப் பெற்றோ நடாத்தி வருவதை காணக்கூடியதாக உள்ளது. ஆரம்பத்தில் இப் பாலர் பாடசாலைகளை ஆரம்பித்து செயற்படுத்திய நிறுவனங்களில் முதன்மையானவை சனசமூக நிலையங்களே

கரவெட்டி பிரதேசத்தில் தற்போது 50 பாடசாலைகள் இயங்கி வருகின்றன. இதில் பிரதேச சபை இரண்டு பாடசாலைகளை மட்டுமே நடாத்துகின்றது. ஆனால் சனசமூக நிலையங்கள் 35 பாலர் பாடசாலைக்கு மேல் நடாத்தி வருகின்றன. இதற்கு சனசமூக நிலையங்கள் தரமான கட்டடங்கள், தேவையான தளபாடங்கள், விளையாட்டு முற்றம், சத்துணவு போன்றவற்றை வழங்குவதுடன் சில பாடசாலைகளின் ஆசிரியர்களின் சம்பளத்தையும் வழங்கி வருகின்றன. இதுவும் சனசமூகநிலையங்கள் வழங்குகின்ற சேவையிலே மிக முக்கியமானது எனலாம். அதுமட்டுமல்லாமல் சில சனசமூக நிலையங்கள் கா.பொ.த உயர்தரம் வரை மாலை நேர வகுப்புக்களைத் தங்கள் பகுதி மாணவர்களின் கல்வி வளர்ச்சி கருதி செயற்படுத்தி வருகின்றன. பல சனசமூக நிலையங்கள் கல்வி நடவடிக்கை களை ஊக்குவிக்க, போட்டி பரீட்சைகளிலே வெற்றி பெற்றவர்களை, (5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த சாதாரணம், கா.பொ.த உயர்தரம், பல்கலைக்கழகங்களுக்கு தெரிவானவர்களை) பரிசில் வழங்கி மாலையிட்டு கௌரவித்து வருகின்றார்கள். அதேபோல தங்கள் கிராமத்தில் உயர்பதவிக்கு தெரிவு செய்யப்படுபவர்களையும் விழா எடுத்து கௌரவித்து வருகின்றனர். இதேபோன்று சனசமூக நிலையங்களின் இன்னுமொரு முக்கிய செயற்பாடாக அதன் அங்கமாகச் செயற்படுகின்ற விளையாட்டுக் கழகங்களைக் குறிப்பிடலாம். இப் பிரதேசத்தைப் பொறுத்தமட்டில் 40 இற்கு மேற்பட்ட விளையாட்டுக் கழகங்கள் சனசமூக நிலையங்களின் கட்டுப்பாட்டிலேயே இயங்கி வருகின்றன. இவற்றின் நிர்வாகங்களுக்குப் பொறுப்பாகின்றன. வருடாந்தம் தமது பகுதியில் உள்ள சிறுவர், சிறுமிகள், இளைஞர், யுவதிகள், முதியோர்களிடையே போட்டிகள் நடாத்துதல், வெளிக் கழகங்களிடையே போட்டிகள் நடாத்துதல், உள்ளக விளையாட்டுக்களை நடாத்துதல், சிறந்த விளையாட்டு வீரர்களை நெறிப்படுத்தி தேசிய மட்ட விளையாட்டு வீரர்களை உருவாக்குவதற்கு முயற்சிகளை மேற்கொள்ளுதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை சனசமூக நிலையங்கள் தங்கள் விளையாட்டுக் கழகங்களினூடாக ஈடுபடுகின்றன. பல சனசமூக நிலையங்களுக்கு ஒரு ஏக்கர் நிலப்பரப்புக்கு மேலான விளையாட்டு திடல் சொந்தமாக இருக்கின்றன.

மேலும் சில சனசமூக நிலையங்களில் நூலக வசதிகளை ஏற்படுத்தி தம் மக்களை வாசிக்கத் தூண்டுகின்றனர். 10 இற்கு மேற்பட்ட சனசமூக நிலையங்களில் நூலக வசதிகள் உள்ளன. உடனுதவும் பகுதி, இரவல் கொடுக்கும் பகுதியும் இருக்கின்றன. சில சனசமூக நிலையங்களில் நடாத்தப்படுகின்ற நூலகங்கள் பிரதேசசபையால் நடாத்தப்படுகின்ற நூலகங்களைவிட அதிக எண்ணிக்கையான புத்தகங்களையும் மிகவும் சிறப்பானதாகவும் இயக்கப்படுவதனையும் அவதானிக்கலாம். அந்தவகையில் அல்வாய் பாரதிதாசன் சனசமூக நிலையத்தைக் குறிப்பிடலாம். சில சனசமூக நிலையங்கள் ஐக்கிய நாணய சங்கங் களுடன் இணைந்து சேமிப்புக்கடன் திட்டங்களை மிகச் சிறப்பாக நெறிப்படுத்தி செயற் படுத்தி வருகின்றன. சில சனசமூக நிலையங்கள் கலாச்சார குழுக்களை உருவாக்கி கலை கலாச்சாரத்தை வளர்த்து வருகின்றனர். சில சனசமூக நிலையங்கள் மாதாந்த கலை விழாக்களை அல்லது வருடாந்த கலை விழாக்களை சமய நிகழ்வுகளை நடாத்தி வருகின்றன. சில சனசமூக நிலையங்கள் சமயக்குழுக்களை உருவாக்கி சமயத்தை வளர்ப்பதோடு சமயப் பண்பாடு, கலாச்சாரம், பண்ணிசை, நிகழ்வுகள், சமய அறிவுப் போட்டிகள், நடாத்தி மக்களை சமயப் பண்பாடுகளை பின்பற்ற வைக்கின்றனர். அதனூடாக தங்கள் பகுதியிலேயே ஆளுமையுள்ள தலைவர்களை உருவாக்குவதுடன் அப்பகுதியில் உள்ள மக்களிடம் மறைந்திருக்கும் திறன்களை வெளிக்கொணர்கின்றார்கள். அந்த

வகையில் கரணவாய் கிழக்கு கலட்டி ஐக்கிய சனசமூக நிலையம் முதன்மையானது. அண்மையில் கம்பர்மலை கலாவாணி சனசமூக நிலையம் ஒரு இலவச வைத்திய பரிசோதனை நிலையத்தை நடாத்தி வருவது பற்றி சமூக வலைத்தளங்களிலே பதிவிட்டுள்ளமையை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

இன்று பல சனசமூக நிலையங்களுக்கு வெளிநாடுகளில் கிளைகள் இருப்பதனை அவதானிக்கலாம்.

அதனூடாகப் பல்வேறு சேவைகளைத் தங்கள் பகுதி மக்களுக்கு ஆற்றி வருகின்றன.

1. மிக வறுமையான குடும்பங்களுக்கு மாதாந்த பண உதவி, வாழ்வாதார செயற்திட்டங் களுக்கு முதலீடு வழங்குதல்.
2. பெரும் நோயால் பாதிக்கப்பட்டவருக்கு நிதி உதவி செய்தல்.
3. வசதியற்ற குடும்பங்களுக்கு திருமணத்திற்கு நிதி உதவி செய்தல்.
4. வீடு அற்றவர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தல்.
5. மரண வீடுகளுக்கு நிதி உதவி அளித்தல்.
6. இன்று சில சனசமூக நிலையங்களுக்கு அவர்களின் வங்கிக் கணக்கில் கோடிக் கணக்கான ரூபாக்கள் சேமிப்பு கணக்கில் அல்லது அடுத்த வைப்புக் கணக்கில் இருப்பதனை அவதானிக்கலாம்.
7. சனசமூக நிலையங்கள் அரச நிறுவனங்களுக்கும், அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், மாகாணசபை உறுப்பினர்களுக்கும், உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கும், தேவையான தகல்களையும், புள்ளி விபரங்களையும் வழங்கி தங்களினதும், பிரதேசத்தினதும், நாட்டினதும், வளர்ச்சிக்கு உதவுதல், சிரமதான நிகழ்வுகளை ஏற்பாடுசெய்தல், வசதி குறைந்த மாணவர்களின் கல்விச் செயற்பாட்டிற்கு உதவுதல், மரம் நடுகை திட்டங்களை செயற்படுத்துதல்,
8. முதியவர்களைக் கௌரவித்தல், உள்ளூர் ஆக்க எழுத்தளர்களின் உதவியுடன் ஆண்டு மலர், கையெழுத்துப் பிரதிகள், வெளியீடு செய்தல். போன்ற பல்வேறு சேவைகளை வழங்கி வருகின்றன. மக்களுக்கு என்ன என்ன தேவைகள் இருக்கின்றதோ அவற்றையெல்லாம் இனங்கண்டு சேவை வழங்க சனசமூக நிலையங்களால் முடியும்.

சனசமூக நிலையங்கள் தங்கள் செயற்பாடுகளுக்காக பல்வேறு வகைகளில் நிதிகளைத் திரட்டிக்கொள்ள முடியும். இதில் முக்கியமானது அங்கத்தவர்களிடமிருந்து கிடைக்கும் சந்தா, நன்கொடை, அன்பளிப்புக்கள், மற்றும் உள்ளூராட்சி மன்றத்தால் வழங்கப்படும் வருடாந்த நன்கொடைகள், பராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் நிதி ஒதுக்கீடுகள், ஒப்பந்த வேலை செய்வதனால் கிடைக்கும் இலாபங்கள், முதலீடுகள் மூலம் கிடைக்கும் இலாபங்கள், சொத்துக்களை வாடகைக்கு, குத்தகைக்கு விடுவதன் மூலம் கிடைக்கும் வருமானங்கள், அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் மூலம் கிடைக்கும் நிதிகள் வெளிநாட்டு உறவுகள் மூலம் கிடைக்கும் நிதிகள், நன்கொடைகள், அன்பளிப்புக்கள், தனிநபர்களிடமிருந்து கிடைக்கும் நிதிகள் போன்றவற்றைப் பயன்படுத்திச் சேவைகளை வழங்க முடியும்.

ஆற்றல் மிக்க, மாற்றம் மிக்க சமூகத்தை, தனிமனிதனை உருவாக்க சனசமூக நிலையங்கள் அர்ப்பணிப்புடன் சேவையாற்ற வேண்டும்.

# வடமராட்சி
## தெற்கு மேற்கு
## *பிரதேச சபை நூலகங்கள்*
## ஒரு மீள் பார்வை



**யாழ் முத்து, கவிஞர்,**
**வதிரி கண எதிர்வீரசிங்கம்**

**நூலகங்கள் அறிமுகம்**

நூலகங்கள் என்பது பொது அமைப்புக்குள் நிறுவனங்கள் தனி நபர்களினால் உருவாக்கப்பட்டு பேணப்படுகின்றது. தகவல் மூலகங்களின் அல்லது சேவைகளின் ஒரு சேமிப்பாகும். மரபுவழியான நோக்கில் இது நூல்களின் சேமிப்பாகும். இந்த நூல்களையும் வேறு மூலகங்களையும் சேவைகளையும் தாங்களே சொந்தமாக வாங்க விரும்பாத அல்லது வாங்க முடியாத அல்லது ஆய்வுகளிற்காக தொழில்முறை உதவி தேவைப்படுகின்ற மக்கள் பயன்படுத்துகின்றார்கள்.

ஒரு நூலகம் திறக்கப்படுவது ஆயிரம் சிறைச்சாலைகள் மூடப்படுவதற்கு சமமாகும். ஆரம்ப காலங்களில் நூலகங்கள் வெறும் கூடங்களாக நூல்களின் பாதுகாப்பு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. அந்த நிலை மாற்றம் பெற்று படிப்படியாக நூலகங்கள் வாசகர்களுக்கான பயன் பாட்டிற்காக மாறி நவீன நூலகங்கள் தகவல் மையங்களாகவும் நூலகங்கள் தகவல் வழங்குனர் களாகவும் மாறிவிட்டனர். நூல்களைத் தன்னதக்தே கொண்ட காரணத்தால் நூலகம் எனப்பட்டது. இந்த நூலக வரலாறு பாபிலோனியா நூலகம் ஆரம்பிக்கப்பட்டவுடன் தொடங்குகின்றது.

**நூலக வரலாறு**

சில ஆயிரம் ஆண்டுகளிற்கு முன் மொசபத்தேமமியாவில் வாழ்ந்த மக்கள் களிமண் தகடுகளில் எழுதினர். அதனை சூளைகளில் சுட்டுக் கோயில் மற்றும் அரண்மனைகளில் பாதுகாத்தனர். இவை தனித்தனி ஏடுகளாகத் துறைவாரியாகப் பேணப்பட்டு வந்தன. இதுவே நூலகத் தோற்றத்தின் முன்னோடி எனக் கூறக்கூடியதாகும். எகிப்தியர்கள் பாப்பிரசுத் தாளில் எழுதத் தொடங்கிய பின்னர் கி.மு 300 ஆம் ஆண்டளவில் அலெக்ஸ்ஸாண்டியாவில் ஏழு இலட்சம் பாப்பிரசு உருளைகளைக் கொண்ட கருவூலம் ஒன்று அமைக்கப்பட்டது.

உரோமானியர்களின் காலத்தில் யூலியஸ் சீசர் வசதி படைத்தவர்களின் உதவியைப் பெற்று பொது நூலகங்கள் அமைத்ததாகவும் கி.மு நான்காம் நூற்றாண்டளவில் 28 பொது நூலகங்கள் நிறுவப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

பொது நூலகங்கள் நிறுவுவதற்கான சட்டமூலம் பாராளுமன்றத்தில் 1850 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. இதிலிருந்தே பல்கலைக்கழகங்கள் வளர்ச்சி பெறத் தொடங்கின.

**பொது நூலகங்களின் வகைகள் பின்வருமாறு**

1. தேசிய நூலகங்கள்
2. பிரதேச நூலகங்கள்
3. மாநகர சபை நூலகற்கள்

பிரதேச சபை நூலகங்களில் எமது வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட நான்கு (04) நூலகங்கள் காணப்படுகின்றன.

1. வதிரி பொது நூலகம்
2. கட்டைவேலி பொது நூலகம்
3. கரவெட்டி பொது நூலகம்
4. உடுப்பிட்டி பொது நூலகம்

இவைகள் அனைத்தும் சபையின் உப அலுவலகங்களின் கீழ் இயங்குகின்றன. வதிரி பொது நூலகமும் கரவெட்டி பொது நூலகமும் நெல்லியடி உப அலுவலகத்தின் கீழும், கட்டைவேலி பொது நூலகம் கட்டைவேலி உப அலுவலகத்தின் கீழும், உடுப்பிட்டி பொது நூலகம் உடுப்பிட்டி உப அலுவலகத்தின் கீழும் இயங்கிவருகின்றது. இந்த நான்கு நூலகங்களும் சமூகத்தில் வாழுகின்ற சகல மக்களையும் இன, மத பேதமின்றி தன்னகத்தே ஈர்த்து வாழ்நாள் முழுவதும் கல்வி மற்றும் கலாச்சார விழுமியங்களினைப் பாதுகாப்பதற்குத் தேவையான வசதிகளினை ஏற்படுத்திக் கொடுக்கின்றது.

1. நூலகத்தின் பெயர் - வதிரி பொது நூலகம் தரம் - III
2. மாகாணம் - வடமாகாணம்
3. மாவட்டம் - யாழ்ப்பாணம்
4. உள்ளூராட்சி மன்றம் - வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபை, கரவெட்டி.
5. உப அலுவலகம் - நெல்லியடி

6. பிரதேச செயலர் பிரிவு - கரவெட்டி
7. நூலகம் அமைந்துள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவு - அல்வாய் தெற்கு J/379
8. நூலகத்தினை அண்மித்த கிராம அலுவலர் பிரிவுகள் எண்ணிக்கை - 04
9. நூலகம் அமைந்துள்ள வட்டாரம் - 05
10. சபையின் மொத்த வட்டாரங்கள் - 19
11. நூலகத்தினை அண்மித்த வட்டாரங்கள் எண்ணிக்கை - 04
12. அமைவிடம் - வதிரி
13. கட்டட விஸ்தீரணம் - 2000 சதுர அடி
14. நூலகம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு - 1969
15. நூலகத்தின் தொலைபேசி இலக்கம் - 0212263938
16. நூலக மின்னஞ்சல் முகவரி - vathiripubliclibrary@gmail.com
17. பிரதேச சனத்தொகை - 6223
18. நூலகத்தில் காணப்படும் நூல்களின் எண்ணிக்கை - 9758
19. நூலக அங்கத்தவர்களின் எண்ணிக்கை - 705
20. நூலகத்தின் பிரிவுகள் - 07
21. நூலக எல்லையில் காணப்படும் முன்பள்ளிகளின் எண்ணிக்கை - 09
22. நூலக எல்லையில் காணப்படும் பாடசாலைகளின் எண்ணிக்கை - 07
23. நூலக எல்லையில் காணப்படும் சன சமூக நிலையங்களின் எண்ணிக்கை - 06

**பணிக்கூற்று**

இக்கால நவீன தொழில்நுட்ப சாதனங்களை பயன்படுத்தி மிகவும் துல்லியமான இலக்குகளை அடைவதன் மூலம் வாசிப்பை மேம்படுத்தவும் வாசிப்பின் ஊடாக ஆழமான அறிவுக்கு வழிதேடல்.

**தூரநோக்கு**

சிறந்த மனப்பாங்குடன் அனைத்து வாசகர் சமூகத்திற்கும் பல்துறை சார்ந்த தகவல் சாதனங்களை வழங்கி அறிவு பசிக்கு வித்திட்டு இப்பிரதேசத்தின் சிறந்த வினைத்திறன் மிக்கவர்கள் உருவாக்கி இக் கிராமங்கள் வளர்ச்சியடைய உதவும்.

வதிரி பொது நூலகம் வழங்கும் சேவைகள்.

1. பத்திரிகைகள் சேவை
2. உசாத்துணை சேவை
3. நூல் இரவல் வழங்கும் சேவை
4. சிறுவர் பகுதி
5. சஞ்சிகைப் பகுதி
6. கணனி சேவை
7. போட்டோ பிரதியக்கம்
8. முதியோருக்கான நடமாடும் நூலக சேவை
9. சன சமூக நிலையங்களுக்கிடையேயான இரவல் சேவை கட்டை வேலி நூலகம்

**வழங்கும் சேவைகள்**

1. நூல் இரவல் வழங்கும் சேவை
2. உசாத்துணை சேவை
3. பருவ இதழ் சேவை
4. சிறுவர் சேவை

**நூலகவியலின் பஞ்சசீலக் கொள்கையின் படி :-**

- ❖ நூல்கள் அனைத்தும் பாவைனைக்கே
- ❖ வாசகர்களுக்கு ஏற்ற நூல்
- ❖ நூல்களுக்கு ஏற்ற வாசகன்
- ❖ வாசகன் நேரம் பேணுக
- ❖ நூலகம் ஒரு வளரும் உயிரி

**சபையின் நான்கு நூலகங்களிலும் நூல் இரவல் வழங்கலின்போது கடைப்பிடிக்கப்படுகின்ற செயற்பாடுகள்.**

ஒரு அங்கத்தவர் புதிதாகச் சேர்கின்றபோது

- ❖ நூலக அங்கத்துவப் படிவம் - 20 ரூபா
- ❖ நூலக அங்கத்தவர் வைப்புக் கட்டணம் - 100 ரூபா
- ❖ நூலக அங்கத்தவர் புதுப்பித்தல் கட்டணம் - 50 ரூபா
- ❖ நூலக அங்கத்தவர் கட்டணம் - 50 ரூபா

**இரவல் வழங்கும் பகுதி**

ஒரு அங்கத்தவருக்கு இரண்டு அங்கத்துவ அட்டைகள் வழங்கப்படும். ஒவ்வொரு அங்கத்துவ அட்டைகளுக்கும் தலா ஒரு புத்தக வீதம் ஒருவருக்கு இரண்டு புத்தகங்கள் வழங்கப்படும். நூல்களை இரவல் பெற்ற ஒருவர் நூலை இரவல் பெற்ற தினத்திலிருந்து 14 நாட்களுக்குள் மீள ஒப்படைக்க வேண்டும். தாமதமான நாட்கள் ஒவ்வொன்றிற்கும் தலா 2 ரூபா வீதம் தண்டப்பணம் அறவிடப்படும். நூல்கள் ஆங்கிலோ அமெரிக்கப் பட்டியலாக்க முறையில் பட்டியலாக்கம் செய்யப்படுவதுடன் தூயி தசாம்ச பகுப்பாக்க முறையில் பகுப்பாக்கம் செய்யப்பட்டுள்ளன. நூல் இரவல் வழங்கும் சேவையில் பிறவுணி முறை பின்பற்றப்படுகின்றன.

**உசாத்துணைப் பகுதி**

பல்வேறு தேவையின் அடிப்படையில் தகவலைத் தேடுகின்ற ஒரு வாசகனுக்கு அல்லது நூலான பாவனையாளனுக்கு தனிப்பட்ட ரீதியாக நேரடியாக உதவி செய்தல் இவை சரியான நேரத்தில் சரியான இடத்தில் பொருத்தமான முறையில் வாசகனையும் சாதனத்தினையும் இணைத்து விடுதல்.

இப்பகுதியிலிருந்து நூல்களினை இரவலாகப் பெற்றுக்கொள்ள முடியாது. வாசகர்கள் தமக்குத் தேவையான நூல்களிலிருந்து குறிப்பெடுத்துக் கொள்வதுடன் ஆராய்ச்சித் தேவைக்காக மாணவர்கள் இப் பிரிவினைப் பயன்படுத்திக்கொள்ள முடியும். இங்கு 2500 தமிழ் நூல்கள் 2000 ஆங்கில நூல்கள் காணப்படுகின்றன. கலைக்

களஞ்சியங்கள், அகராதிகள் போன்றன இப்பகுதியில் காணப்படுகின்ற. 000 - பொது, 100 - தத்துவங்கள், 200 - சமயம், 300 - சமூக விஞ்ஞானம், 400 - மொழி, 500 - அறிவியல், 600 - தொழில்நுட்பம், 700 - கலை, 800 - இலக்கியம், 900 - வரலாறு எனப் பகுப்பாக்கம் செய்யப்பட்டுள்ளன.

**சிறுவர் பகுதி**

இப் பிரிவில் 1000 தமிழ் நூல்களும் 500 ஆங்கில நூல்களும் 25 சிங்கள நூல்களும் காணப்படுகின்றன. இப்பிரிவில் 06 வயது தொடக்கம் 14 வயது வரையான சிறுவர்கள் அங்கத்தவர்களாக இணைந்து கொள்ள முடியும். பாடவிதான நூல்கள், சிறுவர்களுக்கான கதை நூல்களினைக் கொண்டதாக இப்பகுதி காணப்படுகின்றன.

**கணினிப் பகுதி**

இப்பகுதி பிரத்தியேகமாக இயங்கி வருகின்றது. சமகால தகவல் தொழில்நுட்ப யுகத்திற்கேற்ப மாணவர்கள் மற்றும் வாசகர்களின் தேவைகளினை நிறைவேற்ற இப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.

**பத்திரிகைப் பகுதி**

இப் பகுதியில் தினசரி வெளிவரும் பத்திரிகைகள் மற்றும் வாரப் பத்திரிகைகள் வாசகர்களின் தேவைகளினை நிறைவேற்றும் நோக்காக அமைக்கப்பட்டுள்ளது.

**சஞ்சிகைப் பகுதி**

இப்பகுதி வாசகர்களின் தேவையினை நிறைவேற்றுவதற்காக வடிவமைக்கப்பட்டதாகக் காணப்படுகின்றது. உள்நாட்டுச் சஞ்சிகைகளுடன் இந்திய சஞ்சிகைகளான ஆனந்த விகடன் , அவள் விகடன், குமுதம், குங்குமம் போன்ற சஞ்சிகைகள் காணப்படுகின்றன.

**இலங்கை எழுத்தாளர் பகுதி**

இப் பகுதி இலங்கை எழுத்தாளர்களின் படைப்புக்கள் பிரத்தியேகமாக காணப்படுகின்றன. இங்கு இலக்கியம், கவிதை, கட்டுரை, சிறுகதை, நாடகம், இலக்கியம் போன்ற துறைகளினை உள்ளடக்கிய நூல்கள் காணப்படுகின்றன.




அமர்ந்திருப்போர்(இ.வ): ரா.சற்குணதேவி(அ.உ), க.கம்ஸநாதன்(செயலாளர்), ர.கோமதி(பி.மு.சே.உ), செ.சுதர்சன்(அ.உ)

நிற்போர்(இ.வ): சு.சுகந்தினி, த.சர்மிளா, ஜெ.அபிராமி, பி.அனுராதா, சி.யனனி, இ.சுவேந்திரா, தி.சுகன்யா, சி.நர்மதா

# வாசிப்பு திறன், அறிவு வளர்ச்சி, சமூக முன்னேற்றம்:

# நூலகங்களின் நிலைபேறான பாரம்பரியம்



**கலாநிதி. எஸ். கேதீஸ்வரன்,**
துணை நூலகர்.
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

வாசிப்புத்திறன் என்பது சாதாரணமாக சொற்களைப் புரிந்து கொள்வதற்கு அப்பால் உள்ள புலமையை குறிக்கின்றது. அவை வாழ்வியலில் பற்பல செல்வாக்குகளைச் செலுத்துவதுடன் சமூக முன்னேற்றத்திற்கான அடித்தள மாகத் திகழ்கின்றது .

ஒருவர் தனது சமூகத்தில் சிறந்து விளங்கவும், கற்றல் மற்றும் விமர்சன சிந்தனை மூலம் சமூகத்திற்குப் பங்களிக்கவும் வாசிப்புத்திறன் அடிப்படையானதாகக் காணப்படுகின்றது. அத்துடன் ஒருவரது வாசிப்பு தராதரமானது, தகவல்களைப் பகுப்பாய்வு செய்யவும், கேள்விகளை எழுப்பவும், சுயாதீனமான கருத்துக்களை உருவாக்குவதற்குத் தேவையான சிந்தனைகளைக் கொடுக்கின்றது. இவ்வாறான புலமைகள், தொடர்ந்து மாறிவரும் உலகில் தங்களைத் தயார்படுத்திக்கொள்ளவும், தங்கள் சமூகத்தையும் சுற்றுப்புறங்களையும் மேம்படுத்தவும் அதிகாரம் அளிக்கிறது. இவற்றிற்கெல்லாம் மேலாக, வாசிப்பு என்பது ஓய்வெடுக்கவும் மனஅழுத்தத்தைக் குறைக்கவும் ஒரு சிறந்ததொரு கருவியாகவும் திகழ்கின்றது என ஆய்வுகள் கூறுகின்றன.

இலங்கையில் வயதானவர்களின் எழுத்தறிவு வீதம் 92% என மதிப்பிடப் பட்டிருந்தாலும், ஒருவரின் வாசிப்புத்திறனை அளவிடக்கூடிய முறையான சுட்டிகள் இன்னும் பயன்பாட்டில் இல்லை. ஆனால், ஒரு வளர்ந்து வரும் நாடானது, தன்னிறைவு பெற்ற, விமர்சன சிந்தனை கொண்ட குடிமக்களை

உருவாக்கவும் அவர்களது வாசிப்பு மற்றும் சிந்தனா திறன்களைப் பொருத்தமாக அளவிடவேண்டிய நிலையிலும் அவற்றை விருத்தி செய்வதற்கு ஏதுவான சேவைகளையும் வழங்க வேண்டிய சூழ்நிலையிலும் காணப்படுகின்றது. இவற்றின் பின்னணியில் நூலகங்கள் சிறந்த சிந்தனைத்திறன் கொண்ட குடிமக்களை உருவாக்குவதற்கு வேண்டிய சேவைகளை வழங்கவுள்ள ஒரு பொருத்தமான உடமை என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. இவற்றிற்கெல்லாம் ஏதுவாக, இலங்கையில் நூலகங்கள் பல்வேறு கோணங்களில் தமது சேவைகளைத் தொடர்ந்து வழங்கி வருகின்றன .

1845 ஆம் ஆண்டு கொழும்பு பொதுநூலகம் நிறுவப்பட்டதில் இருந்து, இலங்கையில் நூலக சேவைகள் விரிவடைந்து வந்திருக்கின்றன. இராக்கைகளில் நூல்களை அடுக்கி வைத்து சேவைகளை வழங்கிய பாரம்பரிய நூலக முறையிலிருந்து, தற்போதைய நூலகங்கள் தங்கள் சமூகத்தை மகிழ்ச்சியானதாகவும் மற்றும் இஷ்டமாக ஊடாடும் வகையிலும் வைத்துக் கொள்வதற்கு பல்வேறு செயல்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றன.

நூலகங்கள் என்பது வெறும் புத்தகக் களஞ்சியங்கள் அல்ல; அவை வாசிப்பு மீதான ஆர்வத்தைத் தூண்டி, வலுவான வாசிப்புத் திறனை மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கும் துடிப்பான சமூக மையங்கள் ஆகும். பாரம்பரிய நூல்கள் மற்றும் பத்திரிகைகள் முதல் ஒலிபுத்தகங்கள், மின்புத்தகங்கள் மற்றும் டிஜிட்டல் ஆவணங்கள் வரை, சமகால வாசகர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பல்வேறு வகையான நூல்களை நூலகங்கள் வழங்கி வாசிப்புத்திறனை வளர்க்க உதவுகின்றன. பள்ளிகள், சமூக மையங்கள் மற்றும் பிற நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றுவதன் மூலம், நூலகங்கள் சமூகத்தில் வாசிப்பு கலாச்சாரத்தை வளர்ப்பதற்கு பாலம் அமைத்துக் கொடுக்கின்றன. நூலக சேவையை க் கால மாற்றங்களுடன் பொருத்தமாக வழங்குவதற்கு காலத்துக்கு காலம் மாறுபடுகின்ற வாசகர் மற்றும் தகவல் பின்னணிகளைக் கருத்தில் கொண்டு, நூலகர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கான திட்டங்களில் சமகால நூலகங்கள் பொருத்தமாக ஈடுபட வேண்டியதும் இங்கு அவசியமாகின்றது.

குழந்தைகள் மத்தியில் புத்தகங்களைப் படிக்கும் ஆர்வத்தை வளர்க்க கதை சொல்லும் நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. வாசகர் கழகங்கள், புத்தக விவாதங்களுக் கான தளங்களை வழங்கி, விமர்சன சிந்தனை மற்றும் புரிந்துணர்வு திறன்களை வளர்க்க உதவுகின்றன. இத்தகைய செயல்பாடுகள் ஒரு சமூகத்தின் வாசிப்புத் திறனை மேம்படுத்து வதில் குறிப்பிடத்தக்க பங்காற்றுகின்றன.

எனினும், சமகால வாசகர்களின் விருப்பங்களைப் பூர்த்தி செய்ய, பாரம்பரிய நூலக முறைகள் பொருத்தமான வகையில் பரிணமித்து வளர வேண்டிய அவசியம் உள்ளது. டிஜிட்டல் தொழில்நுட்பத்தைத் திறம்படப் பயன்படுத்துதல், இணைய வசதிகளை விரிவு படுத்துதல், மற்றும் மின்புத்தகங்கள் மற்றும் ஆடியோ புத்தகங்கள் போன்ற புதிய வடிவமைப்புகளை உள்ளடக்குதல் போன்ற நடவடிக்கைகள் மூலம் நூலகங்கள் தங்களை மேம்படுத்திக்கொள்ள வேண்டும்.

மேலும், ஒரு சமூகத்தின் பல்வேறு தரப்பினரையும் கவரும் வகையில், பன்முக கலாச்சார நிகழ்ச்சிகள், திறமைகளை வெளிப்படுத்தும் தளங்கள் மற்றும் சமூக விழிப்புணர்வு கருத்தரங்குகளை நூலகங்கள் நடத்துவது மிகவும் முக்கியமானதொரு அம்சமாகும். இவ்வாறு பல்வேறு முறைகளில் ஈடுபாடுகளை வெளிப்படுத்துவதன் மூலம், நூலகங்கள்

தகவல் மற்றும் அறிவுக்கான அணுகலை வழங்குவதோடு மட்டும்மல்லாது, சமூகங்களை ஒன்றிணைத்து, ஊக்குவிக்கும் சக்தி வாய்ந்த மையங்களாகவும் விளங்க முடியும்.

நூலகங்கள் சமகால வாசகர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், அவர்களின் தொடர்ச்சியான கற்றல் கலாச்சாரத்தை ஊக்குவிக்கவும் அவற்றின் சேவைகளை மற்றும் வளங்களைத் தொடர்ந்து புதுப்பிக்க வேண்டும். தகவல்களை விரைவாக பரப்பவும், குறுகிய செய்திகளைப் படிக்கவும் மின்னணு சாதனங்கள் பயனுள்ளதாக இருந்தாலும், அவை ஆழமான மற்றும் தொடர்ச்சியான வாசிப்புக்கு உகந்தவை அல்ல. ஆனால், பாரம் பரிய நூல்கள் ஆழமான மற்றும் தொடர்ச்சியான வாசிப்புக்கு ஏற்றதாகக் கருதப்படு கின்றன. இதன் பின்னணியில், வாசகர்களின் பல்வேறு ஆர்வங்கள், வயது வேறுபாடுகள் மற்றும் கற்றல் பாணிகளைக் கருத்தில் கொண்டு, நூலகங்கள் பரந்த அளவிலான புத்தகங்கள், பத்திரிகைகள், மற்றும் பிற வளங்களை வழங்க வேண்டும். சில வகை தகவல் காலத்துக்கு காலம் விரைவாக மாற்றம் அடைகின்றன. இதன் பின்னணியில், புதிய மற்றும் பொருத்தமான தகவல்களை வழங்குவதற்காக, புதிய வெளியீடுகளை நூலக சேகரிப்பில் தொடர்ந்து சேர்க்க வேண்டும். அதுமட்டுமல்லால், தகவல்கள் காலமாற்றங்களின்போது செல்லுபடியாற்றதாகவும், தேவையற்ற பல பிரதிகளைக் கொண்டதாகவும் காணப்படலாம். அச்சந்தர்ப்பத்தில், அவற்றைச் சேகரிப்பில் இருந்து நீக்கி, நூலக சேகரிப்பைப் புதுப்பித்து துடிப்பான நிலையில் வைத்திருக்க வேண்டியது மிகவும் அவசியமானது.

யாழ்ப்பாணப் பிரதேசங்களை எடுத்துக் கொண்டால், சில பின் தங்கிய பகுதிகளில் வாசிப்பு ஆர்வம் குறைவாக இருப்பதை நாம் கண்டுகொள்ளலாம். நூலகங்கள் தங்கள் சேவைகளை அந்த பகுதிகளுக்கு விஸ்தரிப்பது வாசிப்புத்திறன் தொடர்பான சமூக முழுமையைப் பெறுவதற்கு அவசியமானது. மேலும் அப்பிரதேசங்களில் காணப்படும், உள்ளூர் சமூக நிலையங்களுடன் இணைந்து செயல்படுவதன் மூலம் நடமாடும் நூலக சேவைகளை மேற்கொள்ளுவதன் மூலம், பின்தங்கிய பகுதிகளில் வாசிப்புத்திறன் விருத்தியைப் பொருத்தமாக ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

பாடசாலைகள் மற்றும் பிற தகவல் சேவையில் தங்கியிருக்கும் நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றுவதன் மூலம், நூலகங்கள் தங்கள் வளங்களைப் பகிர்ந்து கொள்ளவும், தகவல்களை அணுகுவதற்கான வாய்ப்புகளை விரிவுபடுத்தவும் முடியும். குறித்த அந்த நிறுவனங்களுடன் கூட்டு திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளை வகுப்பதன் மூலம், நூலகங்கள் சமூகத்தில் உள்ள அனைவருக்கும் கற்றல் மற்றும் வளர்ச்சிக்கான வாய்ப்புகளை வழங்க முடியும்.

தொழில்நுட்பம் வேகமாக வளர்ந்து வரும் இன்றைய சூழலில், நூலகங்களும் அவற்றின் சேவைகளையும் அந்த மாற்றங்களுடன் ஒத்துப்போகும் வகையில் மாற்றியமைக்க வேண்டியது அவசியம். வாசகர்கள் வீட்டிலிருந்தபடியே இணையவழியாக நூலகத்தின் புத்தகக் களஞ்சியத்தைத் தேடவும், புத்தகங்களை முன்பதிவு செய்யவும் இணையவழி சேவைகள் உதவுகின்றன. இணைய வழியாகக் கிடைக்கும் மெய்நிகர் இராக்கை வசதிகள் ஒரு வாசகர் தொலைவில் இருந்து நூலக இருப்புகளை இராக்கை ஒழுங்குமுறையில் கண்டுகொள்ள வசதி வழங்குகின்றது. மேலும், தனிப்பயனாக்கப்பட்ட மெய்நிகர் இராக்கை ஒழுங்கமைப்புகள் வாசகர்களின் விருப்பங்களுக்கு ஏற்ப புத்தகங்களை ஒழுங்குபடுத்து வதன் மூலம், அவர்களுக்குத் தேவையான புத்தகங்களை எளிதில் கண்டறிய உதவும்.

மேலும், புத்தகங்களை இணையம் வழியாக முன்பதிவு செய்து, வீட்டிலிருந்தபடியே பெறக் கூடிய சேவைகள் வாசகர்களுக்கு வசதியை அளிக்கும். இவ்வகையான தொழில்நுட்ப ரீதியான நூலக வளர்ச்சி ஆனது, தனது சமூகத்தின் அறிவு விருத்தியில் பிரதான பங்கு வகிக்கின்றது. இவ்வகையான மாற்றங்களுக்கு ஏற்ற வகையில்இ நூலகர்களின் திறன்களை புதுப்பித்து, புதிய தொழில்நுட்பங்களை கற்றுக்கொடுப்பதன் மூலமே ஒரு நூலகம் இவ்வாறான நவீன சேவைகளை வழங்குவது சாத்தியமாகின்றது.

இவற்றிற்கு அடுத்தபடியாக, பிரதேச மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், நூலகங்கள் வசதியான இருக்கைகள், வைபை வசதிகள், மல்டி மீடியா உபகரணங்கள் போன்ற நவீன வசதிகளுடன் கூடியதாக இருக்க வேண்டும். நன்கு பராமரிக்கப்பட்ட கட்டிடங்கள் மூலம் வாசகர்களுக்குச் சுத்தமான மற்றும் வசதியான சூழலை வழங்குவது, அவர்கள் நூலகத்தில் நேரத்தைச் செலவிட ஊக்குவிக்கும்.

நூலக சேவை மாற்றங்களுக்கும் நவீனமயமாக்கல் முயற்சிகளுக்குத் தேவையான நிதியைப் பெறுவதற்கு தாய் நிறுவனங்கள் நடவடிக்கை எடுப்பது மிகவும் இன்றியமையாத தொன்றாகும். இவற்றுடன், நூலகங்களைத் தொழில்நுட்ப ரீதியாக மேம்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியதும் அவற்றை ஆதரிப்பதும் அவற்றின் பொதுவான கடமையாகும்.

நூலகங்கள் தங்கள் அடுத்தகட்ட பரிமாண வளர்ச்சியில் வாசிப்புத்திறனை ஊக்கு விக்க பல்வேறு மாற்றங்களை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளன. செயற்கை நுண்ணறிவு மற்றும் பொருட்களின் இணையம் (IoT) போன்ற தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, நூலகங்கள் வாசகர்களுக்குப் புதிய மற்றும் மேம்பட்ட அனுபவங்களை வழங்கத் திட்டமிடு கின்றன.

வாசகர்களின் தேடல் வரலாறு மற்றும் வாசிப்பு விருப்பங்களைப் பகுப்பாய்வு செய்து, அவர்களுக்குப் பொருத்தமான புத்தகங்கள் மற்றும் பிறதகவல்களைப் பரிந்துரைக்க செயற்கை நுண்ணறிவு பயன்படுத்தப்படும். பிறமொழி ஆவணங்களை வாசகர்கள் தமது தாய்மொழியில் மொழி பெயர்க்க IoT சாதனங்கள் உதவி புரியும். செழுமைப்படுத்தப்பட்ட விளக்கங்கள், Augmented Reality, (AR) போன்ற தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, வாசகர்கள் புத்தகங்கள் மற்றும் பிறஆவணங்களில் இருந்து இலகுவானதும் வினைத்திறன் மிக்கதுமான விளக்கங்களையும் புரிந்துணர்வுகளையும் பெற்றுக்கொள்ள முடியும். இவ்வகையான வசதிகள் வாசிப்புத்திறனை வேறொரு பரிமாணத்தில் உயர்த்துவதற்கு காத்திருக்கின்றது. இதற்கு அடுத்தபடியாக, பொருட்களின் இணையம் (Internet of Things) என்ற முறைமையில் உள்வாங்கப்படும் IoT சாதனங்களைப் பயன்படுத்தி, நூலகங்களில் வெளிச்சம், வெப்பநிலை மற்றும் காற்றோட்டம் போன்றவற்றைக் கட்டுப்படுத்தி, வாசகர் களுக்கு வசதியான மற்றும் புலமை ஊட்டும் சூழலை உறுதி செய்யக்கூடிய வசதி கிடைக்க விருக்கின்றது.

இவ்வகை மாற்றங்கள் எதிர்கால நூலகங்களைத் தகவல் தேவைகளுக்காக ஈர்க்கப் படக்கூடிய மற்றும் அணுகக்கூடிய இடங்களாக மாற்றும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வாசகர்கள் தங்கள் வாசிப்புத்திறனை மேம்படுத்தவும், புதிய தகவல்களைக் கற்றுக் கொள்ளவும், எல்லைகளற்று உலகங்களை மெய்நிகர் முறையில் இருந்த இடத்தில் அனுபவிக்கவும் ஆராயவும் இவ்வகையான மாற்றங்கள் உதவி புரியும்.

இவ்வாறாக நூலகங்களின் சேவைகளால் கிடைக்கப்பெறும் வாசிப்புத்திறனின் வளர்ச்சியானது வாழ்நாள் கற்றல்கள், விமர்சன சிந்தனைகள் மற்றும் சமூக ஈடுபாடுகள் ஆகியவற்றிற்கான அடித்தளத்தை செம்மையாக்கும். இந்த திறன் வளர்ச்சியில் நூலகங்கள் அவற்றின் வரலாறு மற்றும் பரிமாணங்கள் என்பவற்றைப் பொருத்தமாகப் பேணி பங்காற்றுவது முக்கியமானதாகக் கண்டுகொள்ளப்பட்டுள்ளது. இவற்றில் சமகால மக்களால் சகித்துக்கொள்ளக்கூடிய நூலகக் கட்டிடம் மற்றும் உள்ளக அமைப்புகள், மற்றும் காலத்திற்கேற்ற முறையில் நவீனமயமாக்கப்பட்ட நூலக சேவைகள் என்பவற்றை நூலகங்கள் உள்வாங்குவது மிகவும் அத்தியாவசியமானது. இந்த மாற்றங்களை மேற்கொள்வதன் மூலம், நூலகங்கள் அறிவு மற்றும் எழுத்தறிவு வளர்ச்சிக்கான துடிப்பான மையங்களாக மாறி, சமூகத்திற்கு மதிப்புமிக்க சேவைகளை வழங்க முடியும்.



ஆசிரியர்கள் மாணவர்களிடையே என்றும் இணக்க சூழலை உருவாக்குபவர்கள் ஆசிரியர்கள் தான் . ஒரு ஆசிரியர் தனது மாணவர்களின் மீது காட்டும் உன்னதமான கண்காணிப்பே அந்த மாணவனை பின்னாளில் சிறந்து விளங்க செய்கிறது. களிமண்ணாய் கிடந்த மாணவனை இணைத்து அவனுக்கு உரு கொடுத்து அவனை பக்குவப்படுத்தி இந்த உலகிற்கு நல்லதொரு குடிமகனாய் வழங்கும் பெருமை ஆசியருக்கே பொருந்தும் .



**திருமதி. பு. பிறிஷானி,**
நூலகர்.

## நூலகத்தினை வினைத்திறனுடன் செயற்படு…
# கணினியின் பயன்பாடு…
## அதன் அனுகூலங்கள், பிரதிகூலங்க…

நூலகங்களிலுள்ள சகலவிதமான ஆவணங்களிலும் அடங்கியுள்ள தகவல்களை குறுகிய நேரத்தில் குறிப்பிட்ட வாசகர்களிற்கு எடுத்துக்காட்டுவதற்கு நூலகங்களில் மரபுரீதியாகப் பயன்பட்டுவந்த பராமரிப்பு முறைகள் எதிர்பார்க்கும் பயன்பாட்டினை வழங்குவதில்லை என்பதனை நூலகரும், தகவல் விஞ்ஞானிகளும் நன்குணர்ந்துள்ளனர். எனவேதான் மரபு ரீதியான இச் செயற்பாடுகளுக்கு மாற்றீடாக நவீன முறையினை அறிமுகம் செய்ய வேண்டி நின்ற காலகட்டத்திலேயே ஏனைய அனைத்துத் துறைகளிலும் கணினியின் தாக்கமானது மேலோங்கி நின்றதனை அவர்கள் உணர்ந்தனர். இதன் காரணமாக நூலகச் செயற்பாடுகளை செவ்வனே கொண்டு நடாத்துவதற்கு கணினியைப் பயன்படுத்த விளைந்தனர்.

கணினி என்பது சிக்கலான மின்னணு உபகரணமாகும். சரியான தரவுகளை (Data) கொடுப்பதுடன் அவைகளை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள தகவல்களை துல்லியமான விடைகளை வழங்கக்கூடிய ஞாபகசக்தியுடன் இயங்கும் இயந்திரமே கணினி ஆகும். கணினியின் பயன்பாடானது பல்வேறு துறைகளிலும் பல புதிய மாற்றங்களை உள்வாங்கியுள்ளது. கணினியில்லையேல் தொழிற்துறையிலும் பொருளாதார துறையிலும் பின்னடைவு ஏற்படுத்தும் அளவிற்கு இது முக்கியத்துவம் பெற்றுள்ளது.

நூலகத்தின் செயற்பாடுகள் இன்று தகவல் தொழில்நுட்பத்திற்குள் வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்றது. அதாவது நூலகங்களைத் தகவல் மையங்களாக மாற்றியமைத்த பெருமை தகவல் தொழில்நுட்பத்திற்கே உரியது. நூலகத்தினை ஏன் கணினிமயப்படுத்த வேண்டுமென சிந்திப்போமாயின்,

- நூலகத்தின் அன்றாட பணிகளை நிறைவு செய்தல்.
- அதிகளவு தகவல்களை சேகரித்தலும் பாதுகாத்தலும்.
- பெருகி வரும் தகவல்கள்.
- கணினி மூலம் மட்டுமே படிக்கக்கூடிய தகவல் சாதனங்களின் பெருக்கம்.
- தரமான நூலக சேவை
- வாசகர்களின் எதிர்பார்ப்புக்கள்

போன்ற செயற்பாடுகளை இச் சேவையின் மூலம் விரைவாகச் செயற்படுத்தலாம்.

நூலகம் ஒன்று பல்வேறு பிரிவுகளைக் கொண்டிருக்கும். நூற்சேர்க்கைப் பிரிவு, தொழில்நுட்பப்பிரிவு, பருவ இதழ் பிரிவு, வாசகர் சேவை மற்றும் நூற்சுழற்சிப் பிரிவு என்று காணப்படுகின்றன. இத்தகைய பிரிவுகளின் வேலைகளை தனித்தனியாகவே கணினி மயப்படுத்தல் மூலம் தனது சேவையினை இலகுவாகவும் விரைவாகவும் வாசகர் தேவைகளை ஆற்றமுடிகின்றது. அதுமட்டுமன்றி நூலகத்தின் அனைத்துப் பிரிவுகளையும் ஒரே கணினி மென்பொருளின் கீழ் ஏற்றி ஒருங்கிணைத்துச் செயற்படுத்த முடிகின்றது.

நூலகத்தைக் கணினிமயப்படுத்தல் என்பது நூலகத்தின் செயற்பாடுகள் அனைத்தையும் கணினி உதவியுடன் செய்தலாகும். வளர்ந்து வரும் தகவல் யுகத்தில் வாசகர்களுக்கு வேண்டிய தகவல்களை உண்மையான முறையில் உரிய நேரத்தில் தகுந்த வடிவில் வழங்குவதற்குக் கணினியின் பங்கு நூலகத்திற்கு இன்றியமையாதது. வாசகரின் நேரத்தைச் சேமிப்பதோடு மட்டுமன்றி நூலக ஊழியர்களின் வேலைத் தரத்தை உயர்த்துவதிலும் கணினி முக்கிய பங்காற்றுகின்றது.

கணனிமயமான நூலக நடவடிக்கையில் தகவற் சேவை மிகவும் இன்றியமையாத தாகும். நூலகத்திலுள்ள சகலவிதமான ஆவணங்களுக்குமான பதிவுகளைச் சேமித்து வைப்பதன் மூலம் வாசகர்களது தேவைக்கேற்ப, வேண்டிய தகவல்களை மீளப்பெறவும், கணினி இடமளிக்கின்றது. கணனியில் உள்ளீடு செய்து சேமித்து வைத்துள்ள தகவல்களை, வேண்டிய அறிவுறுத்தல்களை வழங்குமிடத்து வாசகர்களுக்கு குறுகிய நேரத்தில் பெறக் கூடியதாக இருக்கும். மேலும் தயாரிக்கப்பட்ட சேவைகளைக் கொண்டு நூலகத்தில் புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்ட நூல்களின் பட்டியலை அச்சிடப்பட்ட பிரதியாகக் பெற்றுக் கொள்ளவும் கணினி உதவுகின்றது.

நூலக ஆவணங்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் பெருகி வருகின்றன. வாசகர் தமக்கு வேண்டிய எல்லா விடயங்களையும் நூலகத்தில் இருந்தே வாசித்து கிரகிக்க முடியாத நிலையில் நூல்களை தமது வீட்டிற்கு எடுத்துச்சென்று வாசித்துப் பயனடைய எடுக்கப் பட்டுள்ள நடவடிக்கையே நூல் இரவல் வழங்கலாகும். இந் நடவடிக்கைகளை கணினிமயப் படுத்துவதனால் வாசகர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கி, குறிப்பிட்ட ஒரு வாசகரால் பெற்றுக்கொள்ளப்பட்ட நூல்கள், உரிய காலத்தில் நூலகத்திற்கு கையளிக்கப்படாத விடத்து, நினைவுறுத்தற் கடிதம் தயாரித்தல், புள்ளி விபரம் தயாரித்தல் போன்ற சகல நடவடிக்கைகளையும் செய்து கொள்ளலாம்.

நூலகங்களின் சேகரிப்பில் பருவ இதழ்கள் முக்கியமானதொன்றாக விளங்குகின்றன. ஆராய்ச்சியாளர்களின் முடிவுகள் நூல் வடிவில் வெளிவருவதற்கு முன்னர், பருவ இதழ்களில் இடம்பெற்று வாசகர்களுக்கு கிடைத்து விடுகின்றன. அண்மித்த தகவல்களை வாசகர்களுக்கு வழங்கும் சாதனமாக பருவஇதழ்கள் விளங்குகின்றன. பருவ இதழ்களுக்கான தகவல்களை கணினிக்கு உள்ளீடு செய்யுமிடத்து குறுகிய நேரத்தில் வேண்டிய தகவல்களை விரைவாக பெற்றுக் கொள்ளக்கூடியதாக அமைகின்றது.

கணினி செயற்பாட்டின் மூலம் தனது நூலகச் சேவைகளை இலகுபடுத்திய நூலகங்கள் தங்கள் நூலகச் சேவைகளை மேலும் விரிவுபடுத்த கணினிகளில் தகவல்களைச் சேகரித்து முறைப்படுத்தியும், பரிமாற்றம் செய்தும் வருகின்றன. தரவுத்தளத்தில் உள்ளீடு செய்யப்பட்ட தகவல்ளை ஒரு வலையமைப்பினூடாக பிறிதொரு இடத்தில் அத்தகவலைப் பெறக் கூடியதாக இருக்கும். நூலக நடவடிக்கைகளை ஒரு பொதுவான தரவுத் தளத்தின் மூலம் நேரடியாகவும், இலகுவாகவும் தகவல்களை பரிமாற்றக்கூடியதாக காணப்படுகின்றது.

**நூலக நடவடிக்கைளில் கணினியின் சிறப்பியல்புகள்**

- களஞ்சியப்படுத்தக்கூடிய தன்மை:
  நூலக ஆவணங்கள் பற்றிய பல்லாயிரக்கணக்கான தகவல்களை சேகரித்துக் களஞ்சியப்படுத்தக்கூடிய வசதியை கணினி கொண்டுள்ளது.

- மீள்வழங்கல்:
  இவ்வாறு களஞ்சியப்படுத்திய தகவல்களை தேவையான போது விரைவாக பெற்றுக் கொள்ளக்கூடிய வசதி

- நெகிழ்ச்சித்தன்மை:
  களஞ்சியப்பத்திய தரவுகளைத் தேவையான வடிவில் பெற்றுக்கொள்ளக்கூடிய வசதி

- திருத்தங்கள்:
  களஞ்சியப்டுத்தியுள்ள தரவுகளில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமாயின் அதனை இலகுவாக மேற்கொள்ள முடியும்.

நூலகங்களிலுள்ள சகலவிதமான ஆவணங்களிலிருந்தும் தகவல்களை மிகக் குறுகிய நேரத்தில் பெற்று வாசகர்களின் தேவையைப் பூர்த்தி செய்வது நூலகங்களில் மரபு ரீதியாக மேற்கொள்ளப்பட்டு வந்த செயற்பாடுகள் சிரமாக இருந்தது. இச் செயற்பாட்டிற்கு மாற்றீடாகக் கணனியைப் பயன்படுத்தி நூலகச் செயற்பாடுகள் செம்மைப்படுத்தப்பட்டன எனலாம்.

**அனுகூலங்கள்**

- அதிகளவு தரவுகளைக் களஞ்சியப்படுத்தும் தன்மை
- விரைவானது
- தகவல்களை இறுக்கமான முறையில் களஞ்சியப்படுத்தி வைத்திருக்கும் தன்மை
- மீள் வழங்களுக்கு இலகுவாக ஒழுங்குபடுத்தி வைத்திருக்கும் தன்மை
- தகவல்களை தெளிவான முறையில் வழங்கக் கூடிய தன்மை
- இலகுவாக பயன்படுத்தும் தன்மை

- தகவல்களை பரிமாற்றக்கூடிய தன்மை
- நம்பகத்தன்மை
- ஒரே செயற்பாட்டை மீண்டும் மீண்டும் செய்யக்கூடிய வசதி

**பிரதிகூலங்கள்**

- மனிதனைப் போல சுயமாக சிந்திக்கும் ஆற்றலின்மை.
- கணினியின் பயன்பாடு அதிகரிக்கும் போது வேலையில்லாப் பிரச்சனை ஏற்படும்.
- தொழில்நுட்பக் கோளாறு ஏற்படின் முழு ஸ்தாபன செயற்பாடுகளும் ஸ்தம்பித மடையும் நிலை ஏற்படலாம்.
- மின்சாரமில்லாவிட்டால் தகவல்களை வழங்குவது கடினம்.
- செலவு அதிகம்.
- வாசகர்களின் பாவனையின் கவனயீனத்தினால் கணினிகள் விரைவில் பழுதடைதல்.
- வைரஸ் தாக்கத்தினால் கணினிகளை பாதுகாப்பது கடினம்.

நூலகங்களின் தரவுகளைத் தரவுத்தளங்களில் உள்ளீடு செய்து இணையத்தளத்தில் வெளியிட முடியும். இதன் காரணமாக ஒரு நூலகத்தினைப் பயன்படுத்தும் வாசகர்கள் நூல் இரவல் பெறும்போது தமக்குத் தேவையான விடயங்களினைப் பற்றிய தகவல் களினைப் பெறவும் முடிகின்றது. அதுமட்டுமன்றி ஒரு வாசகருக்கு குறிப்பிட்ட நூலக மொன்றில் காணப்படும் சேகரிப்பு பற்றி அறியவும் நேரடியாக தகவல்களினைப் பெற்று பயன்படுத்தவும் முடிகின்றது. நேடியாக தமது நூலகத்தில் கிடைக்கப்பெறாத தகவல் களினைக் குறிப்பிட்ட நேரத்தில் பெற்றுப் பயன்படுத்த முடிகின்றது.

எனவே நூலக அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு கணினியின் செயற்பாடு மிகவும் இன்றியமையாததாகும்.



"கற்பித்தல் என்பது மிகவும் உன்னதமான பணியாகும், கற்பித்தலில் ஒருவரின் பாத்திரம், திறமை மற்றும் ஒரு தனிநபரின் எதிர்காலம் வடிவமைக்கப்படுகிறது. மக்கள் என்னை ஒரு நல்ல ஆசிரியராக நினைத்தால், அது எனக்கு மிகப்பெரிய கவுரவமாக இருக்கும்."

**அப்துல் கலாம்**



# செய்தித்தாள்கள்

**திரு. கே. ஈஸ்வரன்,**
நூலகர்.

நாளிதழ் என்பது ஒவ்வொரு நாளும் அச்சிட்டு வெளியிடப்படும் செய்தி இதழாகும். உலகிலேயே 17 ஆம் நூற்றாண்டில் தான் அச்சிடப்பட்ட செய்தித் தாள் வெளியாகத் தொடங்கியது. அதற்கு முன்பு உலோகத்தகடு மற்றும் களிமண் தகடு துண்டுத்துணி காகிதம் என்ற பல விதங்களில் செய்திகள் மக்களிடம் கொண்டு சேர்க்கப்பட்டன. அவை பெரும்பாலும் அரசு அறிவிப்புக்கள் மற்றும் நீதிமன்ற ஆணைகளாகவே இருந்தன.

இந்தியாவில் 1780 ஆம் ஆண்டு முதல் செய்தி இதழ் வெளிவந்தது. அந்த இதழ் "பெங்கால் கெஜட்" எனப்படுகின்றது. காலப்போக்கில் செய்தி இதழ்கள், "செய்தித்தாள்" என்றும் நாள்தோறும் வெளியிடப்படுவதால் "தினசரி", "நாளிதழ்" என்றும் அழைக்கப்படலாயின.

பொதுவாக ஒரு பத்திரிகையானது 04 அடிப்படை அம்சங்களைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

1. செய்தித் தாள்களின் உள்ளடக்கங்கள் வாசகர்கள் ஏற்கும் வகையில் உண்மையாக அமைந்திருக்க வேண்டும்.
2. குறித்த காலத்திற்குள் வெளிவருதல் வேண்டும்.
3. உள்ளடக்கப்பட்டிருக்கும் தகவல்கள் அனைத்தும் புதுப்பிக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.
4. பல்வேறு புதிய புதிய தலைப்புக்களை உள்ளடக்கியதாகவும் இருக்க வேண்டும்.

அன்றாட செய்திகளை அறிந்து கொள்வதற்காகவும், பயனுள்ள விடயங்களைத் தெரிந்து கொள்ளவும் பொதுமக்கள் செய்தித்தாளை விரும்பி வாங்குகிறார்கள். செய்தித் தாள்கள் மூலம் உள்ளூர் செய்தி முதல் உலக செய்தி வரை எல்லாவற்றையும் அறியலாம். தாய்மொழி மட்டுமல்லாது உலகமொழி, தேசிய மொழி எனப் பல மொழிகளில் செய்தித் தாள்கள் வெளியாகின்றன. வாசகர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க நாளேடுகள் புதுப்புது அம்சங்களை உள்ளடக்கி வெளியிடுகின்றன. உதாரணமாக: பெண்களுக்கான பகுதி, மாணவர்களுக்கான பகுதி, சினிமாப் பகுதி, கலை, விளையாட்டு அறிவுத்திறன் பகுதி போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

தலைவர்களின் அறிவிப்புக்கள், அரசியல் நீதிமன்றச் செய்திகள், விபத்துக்கள், அண்டைநாட்டு நிகழ்வுகள், வியாபாரச் செய்திகள், வானிலை அறிக்கை போன்றவையும் செய்தித்தாள்களில் இடம்பெற்று வாசகர்களைக் கவர்கின்றன.

செய்தித்தாள்கள் காலையிலும், மாலையிலும் வெளிவருகின்றன. வார இதழ்களும், மாத இதழ்களும்கூட செய்திகளைத் தருகின்றன. இது தவிர செய்தித்தாள் இணைப்பாக பல்வேறு புத்தகங்களும் வெளிவருகின்றன. அதில் பல நல்ல கதை நாவல்கள், தகவல்கள் புதைந்துள்ளன.

நவீன தொழினுட்பம் வளர்ச்சியடைந்து கொண்டு வரும் காலப்பகுதியில் நாம் இன்று வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இத்தகையதொரு சூழலில் பத்திரிகையானது வெளியிடப் பட்டிருந்தாலும் பத்திரிகை வாசிப்பானது அரிதாகிக் கொண்டே வருகின்றது.

இன்றைய கால கட்டத்தில் கையடக்கத் தொலைபேசி மற்றும் இணையத்தளம் என பல்வேறு ஊடகங்களின் பாவனையின் காரணமாக பத்திரிகை வாசிப்பானது பலமிழந்தே காணப்படுகின்றது. சிறுவர்கள் தொடக்கம் இளைஞர்கள் வரை அனைவரும் நவீன தொழிநுட்ப ஊடகங்களுக்கே அடிமையாகி வருகின்றன. இதன் காரணமாக பத்திரிகை வாசிப்பானது படிப்படியாக குறைவடைந்து கொண்டே வருகின்றது.

ஒரு பக்கம் காணப்படினும் அன்று முதல் இன்று வரை பத்திரிகையின் முக்கியத்து வத்தை அறிந்து அதன் உண்மைத் தன்மைகளை உணர்ந்தவர்கள் இன்றும் பத்திரிகை வாசிப்பதற்கு முன்னுரிமை அளித்தே வருகின்றன.

**இதழியல் சட்டங்கள்**

செய்திகளை வெளியிடும் உரிமை இதழ்களுக்கு உண்டு. எனினும் அயல் நாட்டு உறவு, பொது அமைதி, ஒழுங்கு, நீதிமன்ற அவமதிப்பு, நாட்டின் பாதுகாப்பு முதலியவற்றுக்காக அரசாங்கங்கள் இதழியல் தொடர்பான சட்டங்களை இயற்றியுள்ளன. அவை வருமாறு:

**வெல்லெஸ்லி பிரபுவின் திட்டம்**

விடுதலைக்கு முந்தைய இந்தியாவில் 1799 ஆம் ஆண்டு தலைமை ஆளுநர் வெல்லெஸ்லி பிரபு இதழாளர்களைக் கட்டுப்படுத்த ஐந்து திட்டத்தைக் கொண்டு வந்தார்.

1. செய்தித்தாளின் கடைசிப் பக்கத்தில் அச்சிடுவோரின் பெயரைக் குறிப்பிட வேண்டும்.
2. இதழ் உரிமையாளர் தலைமைச் செயலருக்கு முகவரியைத் தெரிவிக்க வேண்டும்.

3. ஞாயிற்றுக்கிழமைகளில் இதழ்களை வெளியிடக்கூடாது. அரசின் தலைமைச் செயலகம் அனுமதி தந்த பிறகு இதழ்களை வெளியிட வேண்டும்.
4. மேற்கண்டவற்றை நிறைவேற்றாதவர்கள் நாடு கடத்தப்படுவர்

- செய்தித்தாள் சட்டங்கள்
- செய்தித்தாள் அவசரச் சட்டம் (1823)
- பதிவுச் சட்டம் (1835)
- வாய்ப்பூட்டுச்சட்டம் (1857)
- பத்திரிகை பதிவுச்சட்டம் (1867)

ஆகிய பல சட்டங்கள் இருந்தன.

### ❖ செய்தித்தாள் அவசரச் சட்டங்கள்:

1823 ஆம் ஆண்டு ஆடம்ஸ் அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்தார். இச் சட்டத்தின் படி அச்சடித்த இதழின் ஒரு பிரதி உள்ளூர் நீதிமன்ற நடுவருக்கு அனுப்பிட வேண்டும். அனுமதி மறுக்கும் அதிகாரம் கவர்னருக்கு உண்டு. அனுமதி இன்றி செய்தி வெளியிட்டால் நான்கு மாத சிறைத்தண்டனையோ நானூறு ரூபாய் அபராதமோ உண்டு.

### ❖ செய்தித்தாள் பதிவுச் சட்டம்:

இச்சட்டம்படி செய்தித்தாள் வெளியிடுபவர் அச்சக உரிமையாளர், வெளியிடும் இடம் முதலியவற்றைப் பதிவு செய்ய வேண்டும். மீறினால் அபராதமும் தண்டனையும் உண்டு. இரண்டு முறை இச்சட்டம் திருத்தப்பட்டது. அரசுக்கு எதிரான செய்திகள் வெளியிட்டால் நாடு கடத்தப்படுவார்.

### ❖ வாய்ப்பூட்டுச் சட்டம் (1857)

1857 ஆம் ஆண்டு இதழ்களின் சட்டம் எண் 15 கொண்டு வரப்பட்டது. சிப்பாய்க் கலகத்தை ஆதரித்த இதழ்களை ஒடுக்க வேண்டும் என்பதற்காக கொண்டு வரப்பட்டது. இச் சட்டத்தின்படி அச்சகம் நிறுவமுன் அனுமதி பெற வேண்டும். மேலும் அரசுக்கு எதிரான செய்திகளைத் தடை செய்யும் அதிகாரம் அரசுக்கு உண்டு.

### ❖ பத்திரிகை பதிவுச்சட்டம் (1867)

பத்திரிகை புத்தக பதிவுச்சட்டம் 1867 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. பத்திரிகை வெளியிடுபவர் ஒரு நீதிபதியின் முன் உறுதிமொழி எடுக்க வேண்டும். ஆசிரியர் அச்சிடுபவர் அச்சகப் பெயர் முதலியவற்றை இதழ்களில் குறிப்பிட வேண்டும். அச்சிட்ட இதழ்களை அரசுக்கு அனுப்ப வேண்டும். மீறினால் அபராதமும் சிறையும் உண்டு. 1872 ஆம் ஆண்டு Evidance Act எனும் சான்றாதார சட்டம் நிறைவேற்றப்பட்டது.

# நூலகங்களால் சிறுவர்கள் பெறும் பயன்கள்



**செல்வன். ஜெ.அபிவர்சன்**
தரம் - 09
யா / ஹாட்லி கல்லூரி,
கட்டைவேலி நூலகம்.

"இளமையில் கல்வி சிலையில் எழுத்து" என்பது எமது முன்னோர்களின் முதுமொழி. சிறுவயதில் கற்றகல்வி எப்பொழுதும் எமது நினைவில் ஆழமாகப் பதிந்துவிடும். வாசிப்பதனாலேயே மனிதன் பூரணமடைகிறான். அதனால் அறிவு வளருகின்றது. ஒரு நூலகம் திறக்கப்பட்டால் ஒரு சிறைச்சாலை மூடப் படும் என்பது அறிஞர்களின் கருத்தாகும். வாசிப்பிற்கும் கல்விக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. ஏனென்றால், மனிதன் எல்லா விடயத்தையும் நேரில் கற்பதில்லை வாசிப்பின் மூலமே கற்கின்றான். முற்காலத்தில் இலங்கையில் யாழ்ப்பாணமே கல்வியறிவில் சிறந்து விளங்கியது. இதற்கு காரணம் முற்காலத்தில் வாசிப்பு பழக்கம் சிறுவர்களிடத்தில் அதிகமாகக் காணப்பட்டது. பின்பு யுத்தம் மற்றும் போதைப்பொருள் பாவனை காரணமாக யாழ்ப்பாணம் கல்வியறிவில் சற்று பின்தங்கிவிட்டது. புகழ்பூத்த யாழ்ப்பாண நூலகம் யுத்தத்தில் எரிக்கப்பட்டது. இது யாழ்ப்பாணத்திற்கு மட்டுமன்றி இலங்கைக்கே பெரும் இழப்பாகும். அதிகமாக சிறுவர்கள் தொலைபேசியைப் பயன்படுத்த ஆரம்பித்துவிட்டதால் அவர்களிடத்தில் நூலகத்திற்குச் சென்று நூலகங்களை வாசிப்பதில் ஆர்வம் குறைந்து வருகின்றது.

அறிவும் அனுபவமும் திறமையை வளர்க்கும் நல்ல நூல்களை வாசிப்பதன் மூலம் அன்பு, கருணை இரக்கம் உழைப்பு அனைத்தையும் ஊக்குவிக்கும் நூல்களை வாசிக்கும் சிறுவர்கள் அறிவை வளர்க்க முடியும், நல்ல ஞாபக சக்தியைப் பெறமுடிகின்றது. எனவேதான் பல அறிஞர்கள் சிறுவர்களுக்கான பல பாடல்கள், கவிதைகள், கதைகள், கட்டுரைகள் எனப் பல நூல்களை எழுதியுள்ளார்கள். ஆதலால் நூல்களை வாசிப்பதன்

மூலம் ஒரு சிறந்த சமூகத்தை உருவாக்குவதே சிறுவர்களாகிய எமது கடமையாகும். நூல் நிலையங்களிற்குச் சென்று நூல்களை வாசிப்பதன் மூலம் எமது கலாச்சாரம்1, பழக்கவழக்கம், பண்பாடு போன்ற வற்றை விருத்தி செய்யமுடியும். பல்வேறு துறைகளில் பல்வேறு மொழிகளில் நூல்கள் அச்சிட்டு வெளியிடப்படுகின்றன. அவற்றில் எமக்கு விருப்பமான பயனுள்ள புத்தகங்களைத் தேர்ந்தெடுத்து. வாசிப்பதனால் அதன் கருத்துக்கள் தெளிவாக எமக்கு விளங்குவதைக் காணக்கூடியதாக இருக்கும்.

பள்ளியும் நூலகமும் இணைபிரியாதவை அதனால்தான் அனைத்துப் பள்ளிகளிலும் பள்ளி நூலகங்கள் இடம்பெற்றுள்ளது. பாட அறிவோடு உலக அறிவையும் வளர்த்துக் கொள்ளலாம். உலகில் உள்ள பல்வேறு கலாச்சாரங்கள் பற்றி அறிந்து கொள்ளவும் நூலகங்கள் உதவுகின்றன. அறியாமை என்னும் இருள் அகல நூலகங்களை நாம் தவறாமல் பயன்படுத்துதல் வேண்டும். ஒரு நாட்டில் ஆலயம், பள்ளிக்கூடம், கல்வி நிறுவனங்கள் அமைப்பது எவ்வளவு அவசியமோ அதேபோன்று நூலகங்கள் அமைப்பது மிகவும் முக்கியமானது ஆகும். ஒரு மனிதன் எந்தளவிற்கு அதிகமாக கற்கின்றானோ அந்தளவிற்கு அவனால் அறிவினை விருத்தி செய்ய முடியும். அத்தகைய அறிவை வளர்க்கக்கூடிய இடத்தையே நூலகம் என்கின்றோம். அறிவை வளர்க்கும் நூல்கள் நிறைந் திருக்கும் இடமும் நூலகங்களே ஆகும். நூலகங்கள் எமக்கு கற்க, ஆராய்ச்சி செய்ய தகவல்களைச் சேமிக்க அறிவை வளர்த்துக்கொள்ள உதவுகின்றன. நூலகங்களில் சிறுவர் களுக்குரிய நூல்கள் தனியாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். மற்றும் கவிதை, சிறுத்தை, நாவல், நாடகம், கல்வி, பொருளியல், மருத்துவம், வரலாறு, ஆன்மீகம், உளவியல், பொறியியல் போன்ற பல துறை சார்ந்த நூல்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும்.

மேலும் நாளேடுகள், வார இதழ்கள் போன்றவற்றை வாசித்து நாம் உலகில் இடம் பெறும் விடயங்களை அறிந்து கொள்ளலாம். "நூலகம் அறிவின் ஊற்று", "வீட்டிற்கு ஒரு நூலகம் அமைப்போம்" என்கின்றார் பேரறிஞர் அண்ணா. உலகின் மிகப் பெரிய நூலகம் எனக் கூறப்படுவது லைப்ரரி ஆப் காங்கிரஸ் அமெரிக்கா ஆகும். பல ஆசிரியர்களையும், மருத்துவர்களையும், பொறியலாளர்களையும், எழுத்தாளர்களையும், அறிஞர்களையும் உருவாக்கியதற்கு நூலகங்களே பெரும் பங்கு வகிக்கின்றது. 'நூல் பல கல்' என்பது ஔவையாரின் அமுதமொழி. ஒருவன் நுண்ணறிவு பெற பல நூல்களைக் கற்க வேண்டும். நூல்களை தொகுத்து வைத்திருக்கும் ஆலயம் அறிவுக்களஞ்சியம் நூலகம் என்றால் அது மிகையல்ல. நூலகத்தில் இருந்து படிக்கவும், நூல்களை வீட்டிற்கு எடுத்துச்சென்று படிக்கவும் வசதிகள் உள்ளன. வீட்டிற்கு எடுத்துச்சென்ற புத்தகங்களைப் படித்து பயன் அடைந்த பின்பு உரிய நேரத்தில் நூலகரிடம் கையளித்தல் வேண்டும். எல்லா நூல்களையும் விலை கொடுத்து வாங்குவது எளிதான செயல் அல்ல. நூலகங்களிற்குச் சென்று நூல்களை வாசித்துப் பயன் அடைவோம். "நாளும் கற்று நல்லறிவு பெறுவோம்".




அமர்ந்திருப்போர்(இ.வ): பி.நித்யா(அ.உ), சொ.குமுதினி(அ.உ), சி.வசீகரன்(அ.உ), க.கம்ஸநாதன்(செயலாளர்),
ர.கோமதி(பி.மு.சே.உ), கே.நந்தினி(உள்ளூராட்சி உதவியாளர்),
க.அரவிந்தன்(தொழில்நுட்ப உத்தியோகத்தர்), சோ.முகுந்தன்(தொழில்நுட்ப உத்தியோகத்தர்)

# நாமும் நூலகமும்



**த. தர்மிதன்,**
ஹாட்லிக் கல்லூரி.
தரம் - 13,
கட்டைவேலி நூலகம்.

இன்றைய உலகிலே வாழ்கின்ற ஒவ்வொரு மனிதனும் தன் முன்னேற்றத்தை நோக்கி பயணித்துக்கொண்டு இருக்கின்றான். முன்னேற்றம் என்பது ஒரு தனிப்பட்ட மனிதனுடைய வளர்ச்சி ஆகும். மனிதனுடைய வளர்ச்சியைத் தீர்மானிப்பதில் உடலும், மனமும் முக்கிய பங்காற்றுகின்றது. உடல் ரீதியான வளர்ச்சி என்பது அனைவருக்கும் பொதுவான ஒன்று. ஆனால், மனரீதியான வளர்ச்சி என்பது ஆளுக்காள் வேறுபட்டது. உடல் வளர்ச்சிக்கு உணர்வு எவ்வாறு முக்கியம் பெறுகின்றதோ அதுபோலவே ஒரு மனிதனின் மனிதனது வளர்ச்சிக்கு நூலகம் பெரிது முக்கியம் பெறுகிறது.

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது பழமொழி. நூலகம் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம். இன்று நாம் நமது நாட்டிலே எத்தனையோ நூல் நிலையங்களினைக் காண்கின்றோம். ஆனால், அவை எல்லாம் எமது பிரதேசத்திலே காணப்படுகின்ற நூல் நிலையத்திற்கு ஈடு இணை ஆகிவிடாது. நூலகங்கள் பொதுவாக அரச நூலகங்கள், தனியார் நூலகங்கள், சிறுவர் நூலகங்கள், நடமாடும் நூலகங்கள் எனப் பிரிக்கப் பட்டுள்ளன. ஆனால் அவை அனைத்தும் ஒருங்கே காணப்படும் நூலகமாக எமது பிரதேச நூலகம் காணப்படுகிறது.

நூலகம் இன்று தொடங்கினது அன்று. பண்டைய காலத்தில் கல்வியறிவு இல்லாதவர்களின் எண்ணிக்கை குறைவாகவே இருந்தது. அரண்மனையிலும்

கோயிலும் படிக்கும் நோக்கமின்றி பொம்மையாக இருந்தது. ஆனால், இக்காலத்திலோ படிப்பதற்கு என்றே ஓர் தனித்துவமான இடமாக நூலகம் காணப்படு கின்றது. எமது பிரதேச நூலகத்திலே கவிதை, சிறுகதை, நாவல், நாடகம், கல்வி, பொறியியல் போன்ற துறை சார்ந்த நூல்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். மேலும் நாளேடுகள், பருவ இதழ்கள் போன்றன படிக்கக்கூடிய வசதிகளும் உள்ளன.

எமது பிரதேசத்தில் உள்ள நூலகத்திலிருந்து நூல்களை இரவல் எடுத்து வாசித்து இரண்டு வாரத்தின் பின் மீளப் புதிப்பித்துக்கொண்டு செல்லலாம். குறிப்பிட்ட நாளிற்கு பின் புத்தகங்களைக் கொடுக்க மறந்தால் நாளுக்கு 2 ரூபாய்படி தண்டப்பணம் வழங்கப்படும். நாம் படிக்க வேண்டுமென்றால் அதற்கேற்ற வசதி இருக்க வேண்டும். அதற்கேற்ப இங்கு நல்ல காற்றோட்ட வசதியுடன் சௌகரியமான முறையில் இருந்து வாசிக்கக்கூடியவாறு கதிரை மேசைகள் காணப்படுகின்றன. இங்கு மின்விசிறிகள், மின்குமிழ் வசதிகளும் காணப்படுகின்றன. வீட்டில் கணினி பயன்படுத்தும் வசதிகள் இல்லாதவர்கள் கணினி பயன்படுத்திச் செல்லும் வாய்ப்பு உண்டு. இணைய வசதிகள் உண்டு. மாலை வேளையில் சிறுவர்களுக்கு கணினி வகுப்புக்கள் இலவசமாக நடைபெறு கிறது. இனி வரும் காலத்தில் ஆங்கிலம் மற்றும் சிங்கள வகுப்புக்கள் நடைபெறுவதற்கான வசதிகளை ஏற்படுத்த வேண்டும். எமது நூலகம் ஒரு குறிப்பிட்ட ஏழு பாடசாலைகளைப் பொறுப்பேடுத்து கல்வி சார்ந்த போட்டிகள் மற்றும் விளையாட்டுகள் நடாத்தி மாணவர்கள் மத்தியில் கல்வி சார்ந்த ஊக்கத்தை ஏற்படுத்துகின்றது.

இப்படியான வசதிகளைத் தரும் நூலகத்தின் நூல்களைச் சேதம் விளைவிக்காமல் நாம் நூல் நிலையங்களின் நடைமுறைகளைப் பேணிப் பாதுகாப்பது கட்டாயமாகும். நாம் வேறு வாசகர்களுக்கு இடையூறு விளைவிக்காத வகையில் அமைதியான முறையில் பேண வேண்டும். நாம் நூலகத்திற்குச் சென்று படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். ஒரு சமூகம் நல்லா இருக்க வேண்டும் என்றால் ஒரு நூலகம் அப்பிரதேசத்தில் இருக்க வேண்டும். அப்படி இருந்தால் ஒரு நாடே முன்னேறும். ஒரு நாட்டில் ஆலயம், கல்வி நிறுவனம் அமைப்பது எவ்வளவு முக்கியமோ அதேபோல் நூலகம் அமைப்பது முக்கியமானது. இப்போது கையடக்கத் தொலைபேசியிலேயே நூலகம் வந்துவிட்டது. நாம் வீட்டிலும் ஒரு நூலகம் அமைத்திடுதல் வேண்டும்.



*தனிமனிதர் வாழ்வை*
*இன்பமுடையதாகவும்*
*நன்மையுடையதாகவும்*
*மாற்றி அமைப்பதும்*
*வாழ்வாங்கு வாழ வழி*
*வகுப்பதுமே கல்வி!*

**-பெஸ்டலசி**

# நூலகம்

**சிவானந்தம் விஷ்ணுகா**
கட்டைவேலி நூலகம்.

**து**ள்ளிக் குதித்தோடி சிட்டுக்களாய்த் திரியும்
குழந்தைகளைத் தூர நின்று ரசிக்கின்றேன் - ஓர் மலடி போல்
கண்களில் ஏக்கத்தோடு, மனதில் வாஞ்சையோடு
என்னிடம் வரமாட்டீர்களா எனப் பரிதவிக்கின்றேன்.

ஓடி வா என் மகனே மடி மீது அமர்ந்து
உன் காலத்தின் சில நிமிடங்களை செலவிடு - என்னுள் வந்து
எனக்கும் இருக்கும் பொக்கிசங்களையும் திறந்து பார்
உடல் ஆரோக்கியமாக ஆனந்தமாய் விளையாடு

சமூக வலைத்தளங்களைத் தூரமாக்கிடு
என் புத்தகங்களை நண்பனாக்கிடு
உன் அறிவுப் பசியை தீர்த்திடு
நாளை நீ சான்றோனாகிடு

என்னுள் உள்ள உபதேசங்களைக் கண்டா அஞ்சுகிறாய்?
என்னுள் காணும் நிசப்தத்தைக் கண்டா பின்வாங்குகிறாய்?
இல்லையடா என் மகனே
உன்னை உருவாக்கும் சிற்பி தான் நான்.

என்னைப் பழக்கப்படுத்திக் கொள்
உன்னைப் பலப்படுத்திக் கொள்
உன் புகழ் உலககெங்கும் பரவுவதனைக் கண்டு
நான் பரவசமடைந்து கொள்வேன்!





# கல்வியியல்



# யா / நெல்லியடி மத்திய கல்லூரி

**செல்வி தயாளினி ஏப்ரகாம் ,**
பிரதி அதிபர்.
யா / நெல்லியடி மத்திய கல்லூரி.

யா/நெல்லியடி மத்திய கல்லூரி, யாழ்ப்பாணத்தின் வடமராட்சிப் பகுதியின் மையமான நெல்லியடியில் அமைந்துள்ள பிரபல்யமான பாடசாலை ஆகும். 1921ஆம் ஆண்டு சுயமொழி மூலமான மாதிரிப் பாடசாலை ஒன்றாகத் ஸ்தாபிக்கப்பட்டு, 1954 இல் அன்றைய கல்வி அமைச்சராக இருந்த இலவசக் கல்வியின் தந்தை C.W.W கன்னங்கரா அவர்களின் செயற்றிட்டத்தின் மூலம் மத்திய மகா வித்தியாலயமாகத் தரமுயர்த்தப்பட்டு, பின்னர் 2011ஆம் ஆண்டு தேசிய பாடசாலையாக ஒன்றாகத் தரமுயர்த்தப்பட்டது. இந்தக் கல்லூரி, ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக, ஏராளமான சவால்களை எதிர்கொண்டு முன்னேறிக் கொண்டிருக்கிறது. தமிழ்க் கலாச்சாரத்தையும், கல்வியையும் பேணும் சிறப்பான சேவையால் பிரசித்தி பெற்ற இக்கல்லூரி கடந்து வந்துள்ள நூற்றாண்டு காலத்தில் பல்வேறு சமூக மாற்றங்களுக்கும், போரினால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கும் மத்தியிலும் தன் நிலைத்திருப்பையும் கல்விப் பணியையும் தொடர்ந்துள்ளது. கல்லூரியின் அதிபர் திரு.க.கிருஸ்ணகுமார் அவர்களின் தலைமையில் இன்றும் இக்கல்லூரி, மாணவ, மாணவிகளுக்கு உயர்ந்த கல்வியையும், பண்பும் நன்னடத்தையும் சேர்ந்த வாழ்க்கை முறையையும் வழங்கி வருவதால், வடமராட்சியில் முக்கியத்துவம் வாய்ந்த கல்லூரியாகத் திகழ்கிறது.

யா / நெல்லியடி மத்திய கல்லூரி பல்வேறு சிறப்பம்சங்களைக் கொண்டுள்ளது. அவற்றுள் சில குறிப்பிடத்தக்க விடயங்கள் இங்கு முன்வைக் கப்பட்டுள்ளன.

- **இருமொழிமூலக் கல்வி**

தரம் 6 முதல் 11 வரையிலான மாணவர்களுக்கு தமிழ்மொழி மற்றும் ஆங்கில மொழிகளில் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. கணிதம், விஞ்ஞானம், சுகாதாரம், குடியியல், புவியியல், வணிகம் போன்ற பாடங்கள் இக்கல்லூரியில் ஆங்கில மொழி மூலமும் கற்பிக்கப்படுகின்றன. மேலும், உயர் தரத்தில் (தரம் 12,13) விஞ்ஞானம், கணிதம், வணிகம் போன்ற துறைகளில் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் கல்வி வழங்கப்படுகிறது.

- **க.பொ.த உயர் தரத்தில் தொழினுட்பத்துறை**

க.பொ.த உயர் தரத்தில் தொழினுட்பத்துறையைக் கொண்டுள்ளமை இப்பாடசாலையின் சிறப்பம்சங்களுள் முக்கியத்துவம் வாய்ந்தது. க.பொ.த உயர்தரத்தில் கணித, விஞ்ஞான, வர்த்தக, கலைப் பிரிவுகளுக்கு மேலதிகமாக 2013 ஆம் ஆண்டி லிருந்து தொழினுட்பத்துறை ஆரம்பிக்கப்பட்டதுடன் 2017 ஆம் ஆண்டு இத்துறைசார் மாணவர்களின் பயன்பாட்டுக்காக சிவில், பொறியியல், உயிர் முறையியல் ஆய்வு கூடங்களை உள்ளடக்கிய தொழினுட்பபீடம் இயங்கிவருகின்றது. பொறியியல் தொழினுட்பம், உயிர் முறையியல் தொழினுட்பம் ஆகிய பாடத்துறைகளை மாணவர்கள் கற்பதுடன் ஒவ்வொரு வருடமும் குறித்தளவிலான மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்படுவதுடன் ஏனைய மாணவர்கள் தமது எதிர்காலத் தொழில்களுக்கான அடிப்படை அம்சங்களைப் பெற்று சமுகத்தில் இணைந்து கொள்கின்றனர்.

- **13 வருட உத்தரவாத கல்வி நிகழ்ச்சித் திட்டம்**

2019 ஆம் ஆண்டு முதல் 13 வருட உத்தரவாத கல்விப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டு க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடையத் தவறிய வடமராட்சிப் பிரதேச மாணவர் களுக்கு கல்வி அமைச்சினால் விதந்துரைக்கப்பட்ட பாடத்திட்டத்துக்கேற்ப தொழிற்றுறைப் பாடங்கள் கற்பிக்கப்படுவதுடன் தொழிற்பயிற்சி நிறுவனங்களுடன் இணைந்து அவர் களுக்கான பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

- **உயர் தொழினுட்ப வசதிகள்**

ஒப்பீட்டளவில் அதிக தொழினுட்ப வசதிகளைக் கொண்டுள்ளதால், மாணவர் களுக்குப் பயிற்சி மற்றும் பயன்பாட்டு அறிவை வழங்குவதில் இக்கல்லூரி முதன்மை யானது. போதிய உபகரண வசதிகளைக் கொண்ட பொது விஞ்ஞான, இரசாயன, பௌதிகவியல், உயிரியல் ஆய்வுகூடங்கள், கணனி ஆய்வுகூடங்கள், திறன் வகுப்பறைகள், 95 Tab கணனிகள், இணைய வசதிகள் போன்ற கற்றலின் தரத்தை மேம்படுத்துவதற்கான தொழினுட்ப வசதிகளை அதிகளவில் கொண்டுள்ளது.

- **பாடத்துக்குப் புறம்பான செயற்பாடுகளின் வாய்ப்புக்கள்**

சாரணியம், தேசிய மாணவர் படையணி, கராத்தே கழகம், புகைப்படக் கழகம் போன்ற பல பாடப்புறச் செயற்பாடுகளில் மாணவர்கள் பங்குபற்றுவதற்கான வாய்ப்புக்களை மாணவர்களுக்கு இக் கல்லூரி வழங்கி வருகின்றது. தொழினுட்பப் பிரிவு மாணவர்களால் வருடாந்தம் வெளியிடப்படும் நுட்பம் சஞ்சிகை மாணவர்களின் ஆக்கத்திறனை வெளிப் படுத்துவதற்கான களமாக அமைகின்றது.

**பாட, இணைப்பாட செயற்பாடுகளில் கல்லூரியின் செயலாற்றுகை (2019-2023)**

கல்வி அடைவுகளின் செயலாற்றுகை பொதுப்பரீட்சைகளான க.பொ.த சா/தர மற்றும் உ/தரப் பரீட்சைகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் முன்வைக்கப்படுகின்றது. கடந்த ஐந்து வருடங்களின் கல்லூரியின் க.பொ.த சா.:.தர பரீட்சைப் பெறுபேறுகள் மற்றும் உ/தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் சித்தி வீதங்கள் வரைபுகளில் காட்டப்பட்டுள்ளன.

இணைப்பாடச் செயற்பாடுகளின் செயலாற்றுகைகள் விளையாட்டுத்துறை, பிற துறைகள் எனும் இரு பிரிவுகளின் கீழ் அட்டவணையாக முன்வைக்கப்பட்டுள்ளன. கடந்த ஐந்து வருடங்களில் கல்லூரி விளையாட்டுத்துறையிலும் ஏனைய இணைப்பாடச் செயற்பாடுகளிலும் பெற்றுக்கொண்ட வெற்றிகள் அட்டவணைகளாக முன்வைக்கப்படுகின்றன.

- **க.பொ.த சா/தர பரீட்சைப் பெறுபேறுகள் (2019 - 2023)**




க.பொ.த சா/தர சித்தி வீதம் 2019 இல் 80% ஆகவும் 2020 இல் 82% ஆகவும் 2021 இல் 78% ஆகவும் 2022 இல் 77% ஆகவும் காணப்படுகின்றது. 2023 க்கான பெறுபேறுகள் இதுவரை வெளியாகவில்லை. கடந்த ஐந்து வருடங்களிலும் 75% இலும் உயர்வான சித்தி வீதத்தைக் கொண்டிருக்கின்றமை இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

- **க.பொ.த உ/தர பரீட்சைப் பெறுபேறுகள் (2019 - 2023)**




க.பொ.த உயர்தர சித்தி வீதம் 2019 இல் 41% ஆகவும் 2020 இல் 60% ஆகவும் 2021 இல் 52% ஆகவும் 2022 இல் 50% ஆகவும், 2023 இல் 52% வீதமாகவும் காணப்படுகின்றது. கடந்த ஐந்து வருடங்களிலும் சித்தி வீதம் படிப்படியாக உயர்ந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

- **இணைப்பாடவிதான வெற்றிகள். (விளையாட்டுத்துறை)**

**விளையாட்டுத்துறையின் வெற்றிகள் (2019 - 2023)**

| ஆண்டு | பிரிவு | நிகழ்வு | மட்டம் | நிலை |
|---|---|---|---|---|
| 2019 | 20 வயதின் கீழ் ஆண் | எறிபந்து | தேசிய மட்டம் | 3 |
| | 20 வயதின் கீழ் பெண் | எறிபந்து | | 4 |
| | 20 வயதின் கீழ் ஆண் | காற்பந்து | | 1 |
| | 18 வயதின் கீழ் ஆண் | காற்பந்து | | 4 |
| | 20 வயதின் கீழ் பெண் | கபடி | | 2 |
| | 20 வயதின் கீழ் ஆண் | கபடி | | 3 |
| | 18 வயதின் கீழ் ஆண் | காற்பந்து | | 4 |
| | 20 வயதின் கீழ் ஆண் | கபடி | மாகாண மட்டம் | 1 |
| | 20 வயதின் கீழ் பெண் | கபடி | | 2 |
| | 20 வயதின் கீழ் ஆண் | எல்லே | | 1 |
| | 16 வயதின் கீழ் பெண் | தட்டெறிதல் | | 1 |
| 2020 | கொவிட் பெருந்தொற்றுக் காரணமாக போட்டிகள் நடைபெறவில்லை | | | |
| 2021 | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 2022 | 17 வயதின் கீழ பெண்கள் | எறிபந்து | மாகாண மட்டம் | 3 |
| | 20 வயதின் கீழ் ஆண்கள் | கிறிக்கற் | | 2 |
| | 16 வயதின் கீழ் ஆண்கள் | பூப்பந்து | | 3 |
| | 20 வயதின் கீழ் ஆண்கள் | எல்லே | | 1 |
| | 20 வயதின் கீழ் ஆண்கள் | கபடி | | 2 |
| | 12 வயதின் கீழ் ஆண்கள் | 60 m ஓட்டம் | | 3 |
| | 18 வயதின் கீழ ஆண்கள் | தட்டு | | 3 |
| | 18 வயதின் கீழ் பெண்கள் | தடடெறிதல் | | 1 |
| | 20 வயதின் கீழ் ஆண்கள் | நீளம் பாய்தல் | | 4 |
| | 20 வயதின் கீழ் ஆண்கள் | கபடி | தேசிய மட்டம் | 2 |
| | 18 வயதின் கீழ் ஆண்கள் | தட்டெறிதல் | | 8 |
| | 18 வயதின் கீழ் பெண்கள் | தடடெறிதல் | | 2 |
| 2023 | 16 வயதின் கீழ் ஆண்கள் | பூப்பந்து | மாகாண மட்டம் | 3 |
| | 20 வயதின் கீழ பெண்கள் | எறிபந்து | | 2 |
| | 20 வயதின் கீழ் பெண்கள் | தட்டெறிதல் | | 1 |
| | 14 வயதின் கீழ் ஆண்கள் | தட்டெறிதல் | | 4 |
| | 20 வயதின் கீழ் ஆண்கள் | தட்டெறிதல் | | 1 |
| | 20 வயதின் கீழ் ஆண்கள் | தட்டெறிதல் | | 2 |
| | 20 வயதின் கீழ் ஆண்கள் | உயரம் | | 2 |
| | 20 வயதின் கீழ் ஆண்கள் | அஞ்சல் | | 3 |
| | 20 வயதின் கீழ் பெண்கள் | தட்டெறிதல் | தேசிய மட்டம் | 6 |

யா/ நெல்லியடி மத்திய கல்லூரி விளையாட்டுத்துறையில் பல சாதனைகளை மாகாண மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் நிலைநாட்டியுள்ளமையை மேற்படி அட்டவணை சான்று பகர்கின்றது. புலமை வாய்ந்த பயிற்றுவிப்பாளர்களினதும் விளையாட்டுத்துறை ஆசிரியர்களினதும் அர்ப்பணிப்பும் கிரமமான பயிற்சியும் மாணவர்களின் ஊக்கமும் இவ் வெற்றிகளைச் சாத்தியமாக்கிய முக்கிய அம்சங்களாகும்.

- **இணைப்பாடவிதான வெற்றிகள். (அழகியல் மற்றும் பிற துறைகள்)**

பிற இணைப்பாட செயற்பாடுகள் மற்றும் போட்டிகளின் வெற்றிகள் (2019-2023)

| ஆண்டு | பிரிவு | நிகழ்வு | மட்டம் | நிலை |
|---|---|---|---|---|
| 2019 | தரம் 6 | கணித ஒலிம்பியாட் | மாகாணம் | 1 |
| | தரம் 11 | கணித ஒலிம்பியாட் | | 1 |
| | தரம் 12 | கணித ஒலிம்பியாட் | | 1 |
| | பிரிவு 4 | கட்டுரை | தேசியம் | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2020<br>2021 | கொவிட் பெருந்தொற்றுக் காரணமாக போட்டிகள் நடைபெறவில்லை | | | |
| 2022 | மத்திய பிரிவு | தனிஇசை | மாகாணம் | 3 |
| 2023 | மத்திய பிரிவு | திரையிசைப்பாடல் அகில இலங்கை கர்நாட சங்கீத போட்டி | தேசியம் | 1 |
| | கீழ்ப்பிரிவு | குழு நடனம் அகில இலங்கைப் பரத நாட்டியப் போட்டி | மாகாணம் | 3 |
| | மேற்பிரிவு | தனி இசை அகில இலங்கை கர்நாட சங்கீத போட்டி | மாகாணம் | 2 |

அகில இலங்கை கர்நாடக சங்கீதப்போட்டி, பரத நாட்டியப் போட்டி போன்ற அழகியல் போட்டிகளிலும், கணிதம், கட்டுரை வரைதல் போட்டிகளிலும் தேசிய. மாகாண நிலைகளில் இடங்களைப் பெற்று யா/ நெல்லியடி மத்திய கல்லூரி தனது தடத்தைப் பதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கல்லூரி அதிபர்களின் வரிசை

1. திரு.V.சிதம்பரப்பிள்ளை
2. திரு.T.சிதம்பரப்பிள்ளை
3. திரு.S.காசிநதார்
4. திரு.S.துரையப்பா
5. திரு.V.சின்னையா
6. திரு.R.இராசயினார்
7. திரு.S.துரையப்பா
8. ஜனாப்.S.சிவப்பிரகாசம்
9. திரு.A.T.சபாரத்தினம்
10. திரு.S.இரத்தினசபாபதி
11. திரு.K.சிவசிதம்பரம் - (1967-1972)
12. திரு.V.K.நல்லையா - (1973-1975)
13. திரு.K.குணரட்ணம் - (1975.05.08 - 1982.07.21)
14. திரு.S.றோய்காந்தராசா - (1982.07.21 - 1991.01.24)
15. திரு.K.நடராஜா (பதில் அதிபர்) - (1991.01.24 - 1991.03.20)
16. திரு.V.அருளானந்தம் - (1991.03.20 - 1992.02.05)
17. திரு.S.சிற்றம்பலம் - (1992.02.05 - 2001.12.02)
18. திரு.ஞ.சேதுராஜா - (2001.12.02 - 2014.11.05)
19. திரு.பு.கிருஸ்ணகுமார் - (2014.11.06 -

கல்லூரியின் வளர்சிக்காக கல்லூரியின் ஆரம்ப காலத்திலிருந்து இதுவரை காலமும் அரும்பணியாற்றிய அதிபர்களினை நினைவு கூர்வதும் அவர்களின் அர்ப்பணிப்பான சேவையை மதித்துப் பாராட்டுவதும் இன்றியமையாததாகும்.

யா / நெல்லியடி மத்திய கல்லாரி அதன் அமைவிடத்தாலும், இயற்கையுடன் அமைந்த சூழலாலும் முக்கியத்துவம் பெறுவதுடன் இருமொழிக்கல்வி, தொழினுட்பப் பாடத்துறை, 13 வருட கல்வி வாய்ப்பு, பல துறைசார் பாடப்பறச் செயற்பாடுகளுக்கான வாய்ப்புக்கள், உயர் தொழினுட்ப வசதிகள் போன்றவற்றால் வடமராட்சியின் தனித்துவமான கல்லூரியாகத் திகழ்கின்றது. தொடர்ந்து பொதுப்பரீட்சைகளின் பெறுபேறுகளைச் சிறப்பாகப் பேணுவதன் மூலம் வடமராட்சியின் கல்வி அபிவிருத்தியில் கணிசமானளவு பங்காற்றி வருகின்றது. விளையாட்டுத்துறையிலும் ஏனைய இணைப்பாடச் செயற்பாடுகளிலும் மாணவர்களைத் தேர்ச்சி பெறச் செய்வதிலும் முன்னிற்கின்றது. எதிர்காலத்தில் மேலும் வளர்ச்சி கண்டு அதன் கல்விப் பணியைச் சிறப்பாகத் தொடர்வதற்கான முயற்சிகளில் கல்லூரியின் ஆளணியினர் சிரத்தையுடன் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



சிறந்த ஆசிரியர்கள்
குழந்தைகளுடன்
பச்சாதாபம்
கொள்கிறார்கள்,
அவர்களை
மதிக்கிறார்கள், மேலும்
ஒவ்வொருவரிடமும்
ஏதாவது சிறப்பு இருக்க
முடியும் என்று
நம்புகிறார்கள்.
- **ஆன் லிபர்மேன்**

கரவெட்டி மண்ணின் கல்வியலாளர்

# அமரர் கனகசபை பாஸ்கரன்

**திரு. வேலும்மயிலும் வேல்நந்தன்,**
விரிவுரையாளர்.

கரவெட்டிப் பிரதேசசம் கல்வியலாளர்கள் பலரைத் தந்த தந்து கொண்டிருக்கும் மண்ணாக பெருமை பெற்றது. அவ் வகையில் அம் மண்ணின் கணிதக் கல்விக் குறிகாட்டியாக விளங்கிச் சிறப்புப் பெற்றவரே அமரர் கனகசபை பாஸ்கரன் ஆவார். விபத்து ஒன்றில் அகப்பட்டு நிகழ்ந்தது அவரது மரணம். அப்போது அவர் யாழ்ப்பாணம் தேசிய கல்வியல் கல்லூாயீன் உபபீடாதியாக விளங்கினார், அங்கு கடமையாற்றிய ஆசிரிய கல்வியியலாளர்களின் மனங்களிலும் மாணவ ஆசிரியர்களது மனதிலும் எந்தளவு உயர்ந்த இடத்தில் வைத்துப் போற்றப்பட்டிருந்தார். என்பதற்கு அவரது மரணச் சடங்கே சாட்சியாக அமைந்தது.

கற்றவரால் சிறந்து விளங்கும் கரவெட்டி மண்ணில் கனகசபை சரஸ்வதி தம்பதியினரின் இல்லறப் பயனாக மூன்று ஆண் சகோதரர்களுடனும் ஒரு பெண் சகோதரியுடனும் 24.01.1964 இல் இவ்வுலகில் பிறந்தார். சிறுவயது முதலே நற்குணங்கள் பலவற்றின் இருப்பிடமாக இவர் விளங்கினார். தனது ஆரம்பக் கல்வியைக் கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் பயின்ற இவர் 1970 இல் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து யா/ ஹாடலிக் கல்லூரியில் தனது இடைநிலை உயர்கல்வியைப் பயின்று அங்கிருந்து விஞ்ஞான பீடத்திற்குத் தெரிவாகி பௌதீக விஞ்ஞானப் பட்டதாரியாக வெளியேறி 1990இல் ஆசிரியராக நியமனம் கிடைத்து மல்லாவி மகா வித்தியாலயத்தில் கணித ஆசிரியராகக் கடமையாற்றினார். பின்னர் சிலகாலம் தான் கற்ற ஹாட்லிக் கல்லூரியில் மற்றும் வடஇந்து மகளிர் கல்லூரி என்பவற்றில் ஆசிரியராகக் கடமை யாற்றினார். இதனிடையே 1994இல் கதிரவேலு இராசம்மா தம்பதியினரின் புதல்வி யாகிய மதிவதனியை கரம்பிடித்து தனது இல்லறப் பயனாக இலக்ஷனா, விதுர்ஷனா எனும் இரண்டு புதல்வியரைப் பெற்றார். மூத்த மகளான இலக்ஷனா கொழும்பு பல்கலைக்கழகத்தில் பயின்று வருகிறார். மற்ற மகளும் க.பொ.த உயர்தரத்தில் சிறந்த பெறுபேறு பெற்று பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுள்ளார்.

பின்னர் இவர் கல்வித்துறையில் பட்டப்பின் டிப்ளோமா, முதுவிஞ்ஞானமாணி, கல்வியில் முதுதத்துவமாணி போன்ற பட்டங்களை நிறைவு செய்ததுடன் கல்வியியலாளர் சேவையுள் உள்ளீர்க்கப்பட்டு யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியில் விரிவுரையாளராகி பின் தனது திறமையாலும் முயற்சியாலும் அங்கு தொடருறு கல்விக்கான இணைப்பாளராகக் கடமையாற்றியவர். கணிதம் அவரது பாடம் அத்துறையில் அளவீடும் மதிப்பீடும் உட்பட ஏனைய பாடங்களையும் சிறப்பாக கற்பிக்கும் வல்லமை கொண்டவராக விளங்கினார். இவரால் வெளியிடப்பட்ட கல்வியியல் செயல்நிலை ஆய்வு, கற்றல் கற்பித்தல் செயன் முறையில் கணிப்பீடு ஆகிய இரண்டு நூல்களும் இத்துறைகளில் மாணவ ஆசிரியர் களுக்கு நல்வழிகாட்டிகளாய் அமைந்தன. அவரது வேகமாக நடை, வேகமாக செயற்பாடுகள் மறக்க முடியாதவை. ஊரில் உறவுகளை நண்பர்களை பேணியவர் நண்பர்களால் "கொசி" என அன்பாக அழைக்கப்பட்டவர். ஆன்மீக, சமூக நாட்டமும் கொண்டவர். கல்வியில் தனது கலாநிதிப்பட்ட ஆய்வை நிறைவு செய்யும் தறுவாயில் யாரும் எதிர்பாராமல் நடந்தது அவரது இழப்பு. நோய்கள் தாண்டிவந்தும் நம்பிக்கையோடு வாழ்ந்தார். அவ மறைந்தாலும் கல்வி உலகிற்காய் நூல்களுடன் ஆசிரியம், அகவழி, கடல் போன்ற கல்விச் சஞ்சிகைகளில் அவர் தந்துவிட்டுப் போன ஆக்கங்கள் மூலமும் அவரால் நேசிக்கும் கல்வியற் கல்லூரி விரிவுரையாளர்கள், மாணவ ஆசிரியர்கள் மூலம் அவர் எம் கல்வி உலகில் என்றும் வாழ்வார் என்பதில் ஐயமில்லை.

## பல்துறை வல்லோன்
# கலாநிதி தம்பிஐயா கலாமணி

எமது மண் தந்த சிறந்த கலைஞர், கல்வியியலாளர், அண்ணாவியார், படைப்பாளர், ஆன்மிகவாதி, உளவியலளர், ஆய்வாளர் எனப் பன்முகங்களுக்கு சொந்தக்காரராக விளங்கியவர். என்னுடைய மதிப்பு மிகு ஆசான் திரு த.கலாமணிசேர் அவர்கள். அவர் எம்மோடு இல்லை என்பதை இந்தக் கணம் வரை நம்ப மறுக்கிறது உள்ளம். பேடகம் என்ற இவ் இதழில் அவர் குறித்த வரலாற்றை பணிகளை படைப்புக்களை ஒன்றாக்கி அதனுள் எனது மனக்கருத்துக்களையும் ஒன்றிணைத்து இப் பதிவை தருகின்றேன்.குறுகிய பக்க வரையறைக்குள் முழுமைத் தரிசனமாக இதைத் தரமுடியுமா என்று தெரியவில்லை. அடுத்த தலைமுறை அவரை அறிவதற்கான ஒரு வெட்டுமுகதானமாகவே இதனை தரமுயல்கின்றேன்.

கலையும் கல்வியும் சிறந்து விளங்கும் அல்வாய்ப்பதியில் புகழ் பூத்த நாடகக் கலைஞரான தம்பிஐயா பர்வதம் தம்பதியினரின் மகனாக 1951.11.12 அன்று பிறந்தவர் அமரர் கலாமணி அவர்கள். இவர் தனது ஆரம்பக் கல்வியை தேவரையாளி இந்துக் கல்லூரியில் கற்று அக் கல்லூரியில் முதல்முதலாகப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி யடைந்தவர் என்ற பெருமையைப் பெற்றவர். பின்னர் இடைநிலை உயர்கல்வியை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் கற்று பேராதனைப் பல்கலைக்கழகத்துக் தெரிவாகி விஞ்ஞானமாணிப் பட்டத்தை பெற்றார். பின்னர் யாழ் பல்கலைக்கழகத்தில் தற்காலிக பௌதீகவியல் துறை விரிவுரையாளராகக் கடமையாற்றி பின்னர் சென்பற்றிக்ஸ் கல்லூரியில் ஆசிரியராகக் கற்பித்ததுடன் பல தனியார் கல்வி நிலையங்களில் முதல் தர பௌதீகவியல் ஆசானாகவும் கற்பித்தார். பின்னர் 1991இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக

கல்வியல்துறை விரிவுரையாளராக உள்வாங்கப்பட்டார். இவர் உடுவிலைச் சேர்ந்த குயீன்ஜெசிலி ஆசிரியையைக் காதலித்து திருமணம் செய்தார். இல்லறப் பயனாய் முரளிதரன், பரணிதரன், மதனாகரன் என மூன்று ஆண் பிள்ளைகளைப் பெற்றெடுத்தார். அவர்கள் மூவரும் கல்வித்துறையிலும், கலை இலக்கியத்துறையிலும் சிறந்து விளங்கு கின்றனர். பர்வதாமணி, கீதாமணி ஆகிய பெண் சகோதரங்களுடன் பிறந்தவர் இவர். இனி இவரது முத்துநைசார் பங்களிப்புக்களைக் குறிப்பிட்டு இக் கட்டுரையை நிறைவு செய்யலாம் என எண்ணுகிறேன்.

முதலில் இவரது குடும்ப ஊற்றாக விளங்கும் கலைப்பணியை நோக்கின் தந்தை வழியாக தன்னையும் ஒரு பாரம்பரிய இசை நாடகக் கலைஞராக உருவாக்கிக்கொண்ட இவர் இயல்பாகவே பாடும்திறன் கொண்டவர். இவ்வகையில் பூதத்தம்பி, சத்தியவான், சாவித்திரி, அருச்சுனன், விதுரன், மார்க்கண்டேயன், கோவலன், பாண்டியன், விருத்தன், லோகிதாசன், நந்தன், காத்தான், நாரதர், வாலி, எனப் பல பாத்திரங்கள் ஏற்று நடித்த பெருமை இவருக்குரியது. நடிக்கும்போது அதன் பாவனையாலும் இசைப்பாடலாலும் அந்தப் பாத்திரமாகவே மாறிவிடும் சிறப்பு இவருக்குரியது. குறிப்பாக பூதத்தம்பி என்றால் கலாமணிதான் எனச் சொல்லும் அளவிற்கு அவரது பூதத்தம்பி பாத்திரம் அமைந்ததை மறக்க முடியாது. 300க்கும் மேற்பட்ட மேடைகளில் இசை நாடக நடிகராக வலம் வந்த இவர் பிற்காலத்தில் தன் தந்தையைப் போல அண்ணாவியராகி பல பாரம்பரிய நாடகங்களை நெறியாள்கை செய்துமுள்ளார். குறிப்பாக நாட்டார்வழக்கியற்கழகம் சார்ந்து இவரது பணி முக்கியமானது. இன்று தந்தைவழியில் இந் நாடகப் பணிகளை அவரது மகன் பரணிதரன் அவர்கள் முன்னெடுத்து வருவது சிறப்புக்குரியதாகும்.

அடுத்து இவரது படைப்பிலக்கியம்சார் பங்களிப்புக்களை நோக்கின் கற்கும் காலத்திலேயே இத்தகைய நாட்டம் மிக்கவராகவும் இவர் விளங்கினார். 1974ஆம் ஆண்டு முதல் சிறுகதை எழுத ஆரம்பித்து 35 ஆண்டுகளில் 30க்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுப்பியுள்ளார். இவரது முதலாவது சிறுகதைத் தொகுப்பு "நாட்கள் கணங்கள் நமது வாழ்க்கை" என்பதாகும். "பாட்டுத் திறத்தாலே" என்பது ஜீவநதி வெளியீடாக வெளிவந்த மற்றொரு சிறுகதைத் தொகுப்பாகும். இதில் இடம்பெற்ற சிறுகதையொன்று தமிழ்ப்பாட நூலிலும் இடம்பெற்ற சிறப்புக்குரியது. ஏனிந்த தேவாசுர யுத்தம் என்பது இவரது கவிதைத் தொகுதி. இவற்றைவிட திறனாய்வுசார் பக்தி எழுத்துத் தொகுதிகளாக தரிசனப் பார்வைகள், இலக்கியமும் உளவியலும் போன்ற நூல்கள் முக்கியமானவை. இதனைவிட இவரது மகனாகிய பரணிதரனை பிரதம ஆசிரியராக மாதாந்த கலை இலக்கிய சஞ்சிகையின் பதிப்பாசிரியராகவும் இவர் விளங்கியுள்ளார். பல நூல் வெளியீடுகளில் இவர் ஆற்றிய உரைகள் காத்திரமானவை. ஒப்பிலாமணியே என்ற குறும்படத்திலும் நடித்துள்ளார். பூதத்தம்பி என்ற இசை நாடக நூலையும் ஆக்கியுள்ளார்.

அடுத்து இவரது கல்வித்துறைசார் பங்களிப்புக்களை நோக்கின் தனது இறுதி மூச்சு வரை இதற்காக தன் வாழ்வை அர்ப்பணித்த ஒருவராகவே இவரைக் காண்கின்றோம். ஆரம்பத்தில் பௌதீகவியல் ஆசிரியப்பணி. பின்னர் யாழ் பல்கலைக்கழக கல்வித் துறையில் இணைந்து விரிவுரையாளரான பின்பு பல்லாயிரக்கனக்கான தமிழ் ஆசிரியர்களைக் கல்வி டிப்ளோமா முதுகல்விமாணி வழி அளவீடும் மதிப்பீடும், கல்வி உளவியல் போன்ற பாடங்களைச் சிறப்புறக் கற்பித்து வாண்மைப்படுத்திய பணி, கல்வி முதுதத்துவமாணி, கலாநிதிப்பட்ட ஆய்வு வழிகாட்டியாக நெறிப்படுத்திய பணி

போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவர் தனது கல்விக் கலாநிதிப் பட்டத்தை அவுஸ்ரேலியா சென்று நிறைவு செய்தார். அங்கிருந்த காலத்தில் அங்கும் இசைநாடக, கூத்து மரபுகளை பழக்கி புலம்பெயர் தலைமுறை மத்தியிலும் எம் கலை வரை பாடுபட்டார். கல்வித்துறை சார்ந்து இவரது பர கட்டுரைகள் ஆசிரியம், அகவழி, கடல் ஆகிய கல்விச் சஞ்சிகைகளில் வெளிவந்துள்ளன.

மாற்றம் காணும் கல்வி உலகுடன் இணைதல், புதிய கண்ணோட்டங்களும் புதிய அர்த்தங்களும் போன்றன. அவரது கல்வித்துறைசார் நூல்களாகும். நோய்வாய்ப் பட்டிருந்த போதும் அதையும் தாண்டி வாழ்ந்தவர். அவர் அவரது பரம்பரைத் தெய்வமாகிய காத்தவராயர் மீது மிகுந்த பக்தி கொண்டவர். 09.02.2024 அன்று தனது 72ஆவது வயதில் இவ்வுலக வாழ்வை நீத்து காத்தராயர் கழலடி சேர்ந்தார். அவர் உடலால் மறைந்தாலும் அவர் ஆற்றிவிட்டுப் போன பணிகளாலும், எழுதிவிட்டுப் போன படைப்புக்களாலும் அவரது பிள்ளைகளாலும் உருவாக்கிவிட்டுப்போன ஆயிரம் ஆயிரம் மாணவர்களாலும் ஒப்பிலா மணியாக இவ்வுலகில் என்றும் வாழ்வார் என்பது திண்ணம்.



## “ஒடுக்கப்பட்டவர்களுக்காய்

# ஓயாது குரல் எழுப்பிய தெணியான்”



**திரு. த. அஜந்தகுமார்**
விரிவுரையாளர்,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

ஈழத்துத் தமிழ் இலக்கியத்திற்கு முற்போக்கு அணியினரின் பங்களிப்பு அளப்பரியது. முற்போக்கு அணியில் இருந்து முகிழ்த்தெழுந்த எழுத்தாளர்களில் ஒருவராக கந்தையா நடேசு என்ற இயற்பெயரை உடைய தெணியான் அவர்கள் விளங்கினார். (06.01.1942-22.05.2022) பொலிகண்டியில் பிறந்தவர். விவேகி என்ற இதழில் எழுதிய பிணைப்பு என்ற சிறுகதையுடன் ஈழத்து இலக்கியத்துடன் பிணைக்கப்பட்ட தெணியான் நூற்றுக்கணக்கான சிறுகதைகளையும் பதினான்கு நாவல்களையும் குறுநாவல்களையும் எழுதியுள்ளார். விமர்சனக் கட்டுரைகளையும் சர்ச்சைக்குரிய கட்டுரைகளையும் எழுதியுள்ளார். கேட்டார் பிணிக்கும் தகையவாய் உரையாற்றுபவராகவும் மிளிர்ந்தார். இவருடைய நூல்கள் மாகாண, சாகித்திய விருதுகளைப் பெற்றிருப்பதுடன், இலங்கையின் அதிஉயர்விருதான சாகித்திய ரத்னா விருதையும் பெற்ற பெருமைக்குரியவர்.

சாதிய எழுத்தாளராகவே தெணியானைப் பலரும் அறிந்திருக்கின்றார்கள். அல்லது தெணியான் அடையாளப்படுத்தப்படுகின்றார். உண்மையில் அவரது படைப்புகள் ஒடுக்கப்படுபவர்களிற்கு ஆதரவாக எழும் குரல்கள் என்றே கூறவேண்டும். ஒரே சாதிக்குள் வர்க்கத்தின் பெயரால் ஒடுக்கப்படுபவர்களையும் உயர்ந்த சாதி என்ற புனிதப் போர்வைக்குள் வைத்து அடக்கப்படும் மக்களையும் கூட அவரது படைப்புகள் கவனத்தில் கொண்டிருக்கின்றன என்பதைப் பலரும் எடுத்துரைப்பதில்லை. ஒடுக்கப்பட்டவர்கள் என்ற (2010) சிறுகதைத்தொகுதியில் உள்ள 25 கதைகளும் அதற்கான வகைமைகளாக விளங்குகின்றன. மனித உறவுகளையும் புதிய வாழ்வியல் அனுபவங்களையும் நுணுக்கச் சித்திரிப்பாக வழங்குவதில் தெணியான் வல்லபம் உடையவராக விளங்கினார் என்பதற்கு `இன்னொரு புதிய கோணம்` சிறுகதைத்தொகுதியில் உள்ள 25 கதைகளும் சான்றாகின்றன.

தெணியான் நாவலாசிரியராகவே பெரிதும் போற்றப்படுகின்றார். அநீதிக்கு எதிரான குரலாகவும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கான ஆதரவாகவும் ஒரு காலத்தின் பதிவாகவும் இவரது நாவல்கள் அமைகின்றன. பாலியல் விடயங்களை கத்திமுனையில் எழுதும் இவரது எழுத்தாளுமைக்கு 'காத்திருப்பு' நாவலும் 'பனையின் நிழல்' குறுநாவலையும் சான்றாகக் குறிப்பிடலாம். தாழ்த்தப்பட்ட மக்களைப் பற்றி மட்டுமல்லாது பிராமணர்கள் யாழ்ப்பாணத்தில் ஒடுக்கப்படும் அவலத்தை 'பொற்சிறையில் வாடும் புனிதர்கள்' நாவலில் பதிவு செய்துள்ளார். குடிமைகள், ஏதனம் போன்ற நாவல்கள் இனவரைவியல் ஆவணங்க ளாக விளங்குகின்றன.

நாட்குறிப்பு எழுதும் வழக்கமுள்ள தெணியான் இன்னும் சொல்லாதவை, பூச்சியம் பூச்சியமல்ல போன்ற தன்னனுபவ நூல்கள் வழியாக ஆச்சரியத்தை ஊட்டியவர். டொமினிக் ஜீவா, சிவத்தம்பி ஆகியோரைப் பற்றிய மனப்பதிவு நூல்களும் குறிப்பிடத் தகுந்தவை. இவரின் நுண் வாசிப்புகளுக்கு சான்றாக பார்க்கப்படாத பக்கங்கள் என்ற இலக்கியக் கட்டுரைத் தொகுதி அமைகின்றது.

ஆறு தசாப்தங்களுக்கு மேலாக எழுதிக்கொண்டிருந்த தெணியான் மக்களுக்கான எழுத்தாளராகவே வாழ்ந்து விடைபெற்றிருக்கின்றார். மக்களின் வாழ்வும் காலமும் சுருதி பிசகாமல் அவரது நேரிய நடையில் என்றும் வாழவே போகின்றன. ஜீவநதி இவரது பவளவிழாவை முன்னிட்டு சிறப்பிதழ் ஒன்றை வெளியிட்டு மதிப்பளித்தது. (யூலை 2017)

## அழகியல் படைப்புகளின் அலைவரிசை:

# குப்பிழான் ஐ.சண்முகன்

**(01.08.1946 - 24.04.2023)**

எழுத்தாளர், கவிஞன், விமர்சகர், ஆசிரியர், ஆன்மிகவாதி என்ற பன்முகங்களைக் கொண்ட குப்பிழான் ஐ.சண்முகன் அவற்றையெல்லாம் மீறிய எளிமையான மக்களையும் கவர்கின்ற மிகச்சிறந்த மனிதன். குப்பிழானில் ஐயாத்துரை இரத்தினம்மா தம்பதியினரின் மூத்த மகனாக 1.8.1946 இல் பிறந்தவர்தான் சண்முகலிங்கம் அவர்கள். தனது ஊர்ப் பற்றின் விளைவால் குப்பிழான் ஐ.சண்முகன் என்று எழுதிவந்தவர். 1976 ஆம் ஆண்டு மயில்வாகனம் தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் மகளான புனிதவதி அவர்களைத் தனது வாழ்க்கைத்துணை ஆக்கிக்கொண்டதன் மூலம் கரணவாயைத் தனது வதிவிட மாகக் கொண்டார்.

அழகியலும் சமூகப்பார்வையும் இணைந்து கைகோர்க்கும் பல தனித்துவமான படைப்புகளின் சொந்தக்காரர். கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் இயங்கிய கலை இலக்கிய அமைப்புகளின் செயற்பாட்டாளர். சிறுகதை, கவிதை, விமர்சனம், பத்தி என்ற பல்வேறு வடிவங்களில் இயங்கியவர். பத்திரிகைகள், சஞ்சிகைகள், வானொலி, தொலைக் காட்சி, இணையம் எனத் தனது ஊடகங்களை விரித்துக்கொண்டவர். நல்லதொரு பேச்சாளர் என்பதையும் சமய, இலக்கிய நிகழ்வுகளில் நிரூபித்து வருபவர். நூற்றுக்கணக் கான மாணவர்களை உருவாக்கியவர். ஆளுமையும் இலக்கிய ஆர்வமும் மிக்க இளைஞர் அணியொன்றின் உருவாக்கத்தின் பின்புலமாக ஆர்ப்பாட்டமின்றி இயங்கியவர்.

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி இதழிலே (1965) 'இலக்கியத் திறனாய்வு' என்ற தனது முதலாவது கட்டுரையை எழுதியதன் மூலம் இலக்கிய உலகிற்குள் நுழைந்து

கொண்டார். 1966 ஆம் ஆண்டு ராதா என்ற இதழில் பசி என்ற தனது முதலாவது சிறுகதையை எழுதினார். தொடர்ந்து சுதந்திரன், விவேகி, வீரகேசரி, கற்பகம், மல்லிகை, மங்கை, அலை, ஏகலைவன், கலைமுகம், திருவுடையாள், ஈழநாடு, நுட்பம், இளம்பிறை, எழில், ஆகவே, ஜீவநதி, சிறுகதை மஞ்சரி ஆகியவற்றில் எழுதியவர்,

இவருடைய படைப்புகள் கோடுகளும் கோலங்களும் (சிறுகதை -1976) சாதாரணங் களும் அசாதாரணங்களும் (சிறுகதை - 1982), அறிமுகங்கள் விமர்சனங்கள் குறிப்புகள் (பத்தி எழுத்துகள் - 2003), உதிரிகளும் (சிறுகதை - 2006), ஒரு பாதையின் கதை (சிறுகதை - 2012), பிரபஞ்ச சுருதி(கவிதை -2014), ஒரு தோட்டத்தின் கதை(2018) என்கின்ற ஏழு தொகுதிகளாக வெளிவந்துள்ளன. கோடுகளும் கோலங்களும் தொகுதிக்கு சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்த போதிலும் அக்காலத்தில் எழுந்த கோரிக்கையை ஏற்று பரிசை நிராகரித்தவர்.

கிராமம், நகரம் என்ற இரு முரண்களிலும் வாழக்கிடைத்த சண்முகன் வாழ்வின் கொண்டாட்டத்தையும் வலியையும் தன் படைப்புகளால் மனதில் பரவவிடுவதில் வல்லவர். அழகான பேச்சுமொழிப்பதிவும் இவரின் பலமாக உள்ளது. கடிதமாய், பேச்சாய், உரையாடலாய், ஒரு கவிதையின் தெறிப்பாய் இவரின் சிறுகதைகள் தமது களங்களை விரித்துக்கொள்கின்றன. இயற்கை ஈடுபாடும், காட்சி விவரிப்பும், பெண்ணின் அழகு மீதான ஈர்ப்பும், வாழ்வின் மீதான வசியமும் இவரை ஒரு குழந்தை போல கதைவெளி யெங்கும் ஆசையொடு நடத்திச் செல்வதை இரசிக்க முடியும். கோபமும், தவிப்பும், வலியும், இரசிப்பும், புரட்சியும் மௌனமாயும் இறுக்கமாயும் மறைமுகமாயும் வெளிப்படை யாகவும் தேவைக்கேற்றவாறு கலந்து பயணிக்கின்றன. மொழியின் கவித்துவம், அதைப் பின்னிச் செல்லும் இலாவகம், கதையின் முடிவில் தெறிக்கும் புதுக்கதைத் தொடக்கம் இவரின் பலங்கள் என்று துணிந்து சொல்லலாம்.

விமர்சனத்துறையிலும் இவருடைய பங்களிப்பு முக்கியமானது. அறிமுகங்கள், விமர்சனங்கள், குறிப்புகள் என்ற நூல் இதற்குச் சாட்சியாக விளங்குகின்றது. ஈழத்தின் மிக முக்கியமான இதழாக விளங்கிய 'அலை' இதழின் முதல் பன்னிரண்டு இதழ்களுக்கும் ஆசிரியர் குழுவில் ஒருவராக இவர் செயற்பட்டு இருக்கின்றார். 2014 இல் சித்தம் அழகியார் வெளியீடாக 'பிரபஞ்ச சுருதி' என்ற கவிதைத்தொகுதி வெளிவந்தது. கூத்து போன்ற தத்துவம் பொதிந்த அரிய கவிதைகளும் மனஎழுச்சிக் கவிதைகளும் இத்தொகுதி முழுவதும் நிறைந்து கிடக்கின்றன. மரபும் நவீனமும் சேர்ந்து பின்னப்பட்ட படைப்பாளி என்பதற்கு கவிதைத்தொகுதி சான்றாக அமைகின்றது,

இவரின் படைப்பாற்றலைக் கௌரவித்து கலாபூசணம், வடக்கு மாகாண ஆளுநர் விருது, வடமராட்சி வலயக் கல்வித்திணைக்களத்தின் கலைவாரிதி விருது, கரவெட்டிப் பிரதேச செயலகத்தின் கலைஞான வாரிதி விருது, குப்பிழான் விக்னேஸ்வரா மன்றத்தி னரின் செம்மண் சுடர், பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்கத்தின் சங்கச் சான்றோன் முதலிய விருதுகள் வழங்கப்பட்டுள்ளமை கவனத்திற்குரியது. இறப்பதற்கு முதல்நாளும் எழுத்தாளர் கோகிலா மகேந்திரன் அவர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற சோலைக்குயில் அவைக்காற்றுக்களத்தின் 35 ஆவது ஆண்டுவிழாவில் 'விழிசைச்சிவம்' என்ற விருது இவருக்கு வழங்கப்பட்டிருந்தது. அவ்விழாவில் நேரடியாகக் கலந்துகொண்டு விருதினை யும் பெற்றிருந்தார். தன் இறுதி மூச்சுவரை கலை, இலக்கியம் பற்றிய சிந்தனைகளை மனதெங்கும் சுமந்து திரிந்தவர்.

எழுத்தாளன் மரணம் என்ற சூத்திரத்திற்குள் அகப்படுவதில்லை. எழுத்தாளன் இன்மைக்கு உரியவன் அல்லன். அவனது எழுத்துகள் வழி எம்மோடு உரையாடிக் கொண்டே இருப்பான்.

குப்பிழான் ஐ.சண்முகன் என்ற மகத்தான படைப்பாளியைக் காலம் இன்னும் வரிசைப்படுத்தும். நினைவுபடுத்தும். ஜீவநதி இவருக்கு வாழும் காலத்திலேயே சிறப்பிதழ் ஒன்றை ஆனி 2022 வெளியிட்டு மதிப்பளித்தமை குறிப்பிடத்தக்கது.

## தேடலும் ஆய்வுமாய் வாழ்ந்த
# பேராசிரியர் செல்லையா யோகராசா

**(17.12.1949 - 07.12.2023)**

கரவெட்டி மண்ணிற்குப் பெருமை சேர்த்த தமிழ்ப்பேராசிரியர்கள் வரிசையில் குறிப்பிடத்தக்கவர் செல்லையா இலட்சுமி தம்பதியினரின் மகனாக கரணவாயில் பிறந்தவர். அஞ்சல் அதிபராகவும், ஆசிரியராகவும் பணியாற்றிய இவர், 1991 ஆம் ஆண்டு முதல் கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை விரிவுரையாளராகப் பணியாற்றியவர் பேராசிரியர் கலாநிதி செல்லையா யோகராசா அவர்கள். ஈழத்தில் புதிய தலைமுறை ஆய்வாளர்களையும் விமர்சகர்களையும் உருவாக்குவதில் தொடர்ந்து முயன்றுழைத்தவர். பல்கலைக் கழகத்திற்கு உள்ளேயும் வெளியேயும் இலக்கிய ஆர்வத்தை சுடர்விட்டெரியச் செய்தவர். சங்க இலக்கியம் முதல் இன்றைய இலக்கியம் வரை அவரது வாசிப்பு ஆச்சரியம் ஊட்டுவதாக இருந்தது.

வாய்மொழி இலக்கியம், முச்சந்தி இலக்கியம், பழந்தமிழ் இலக்கியம், நவீன இலக்கியம் என்று அனைத்து வகைமைகளிலும் புதிய சிந்தனைகளை- கண்டு பிடிப்புகளை நிகழ்த்திக்கொண்டே இருந்தவர். ஒரு இளைஞனைப் போல வடக்குக்கிற்கும் கிழக்கிற்கும் தெற்கிற்கும் பயணங்களால் - உரையாடல்களால் பாலம் அமைத்துக் கொண்டிருந்தவர். அனைத்துப் பிரதேசங்களையும் அனைத்து ஆளுமைகளையும் அவரைப்போல இனங்காட்டியவர் இருக்கமுடியாது.

கருணையோகன் என்ற பெயரில் சிறுகதைகளையும் கவிதைகளையும் எழுதியவர். இவரது மறைவின் பின்னர் அவரது மகள் சுவஸ்திகாவினால் 'கருணையோகன் கவிதைகள்' வெளியிடப்பட்டுள்ளது. ஈழத்துத் தமிழ்நாவல் வளமும் வளர்ச்சியும், இன்றைய இலக்கியங்களில் இதிகாசப் பெண் பாத்திரங்கள், ஈழத்து நவீன கவிதை: புதிய உள்ளடக் கங்கள், புதியதரவுகள், புதிய போக்குகள், ஈழத்து இதழியலும் இலக்கியமும், ஈழத்து முச்சந்தி இலக்கியம், பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை ஆகிய நூல்கள் இவரைச் சிறந்த ஆய்வாளர் என்பதை இனங்காட்டுகின்றன. அதற்கு மதிப்பளிக்குமுகமாக சாகித்திய விருது, மாகாண விருது போன்றவற்றைப் பெற்றவர். இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், சுவிஸ், இங்கிலாந்து ஆகிய நாடுகளில் இடம்பெற்ற பன்னாட்டுக்கருத்தரங்குகளில் பங்குபற்றியவர். இலங்கைப் பல்கலைக்கழக பன்னாட்டுக்கருத்தரங்குகளில் ஓயாது பங்குபற்றி தனது ஆய்வுமுடிவுகளை வெளியிட்டவர். புலம் பெயர் இலக்கியம், சிறுவர் இலக்கியம், பெண்கள் இலக்கியம் ஆகிய துறைகளில் தனித்துவமான முத்திரைகளைப் பொறித்தவர். பல தொகுப்புநூல்களை வெளிக்கொணர்ந்தவர். ஜீவநதி இதழ் இவருக்கான சிறப்பிதழை ஆனி 2023 இல் வெளியிட்டு வாழும் காலத்திலேயே மதிப்பளித்திருந்தது.

# கலையியல்

**செல்வி தேனுஜா பொன்னம்பலம்,**
அபிவிருத்தி உத்தியோகத்தர்
கரவெட்டி பிரதேசசெயலகம்
கட்டைவேலி பொதுநூலக
அங்கத்துவ இலக்கம் - 08

# மிருதங்க இசைக் கலைஞர் திரு. சரவணமுத்து நாராயணசாமி

## அவர்களுடனான நேர்காணல்

மனித நாகரிகத்தின் வளர்ச்சியே கலைகளின் வெளிப்பாடுகளாகும். மனிதர்களின் உள்ளத்து உணர்வுகளை வெளிக்காட்டும் கருவிகளாக அமைகின்றன. கலைஞன் தன்னுடைய எண்ண அலைகளை, தன்னுடைய மனக் கண்ணில் காணும் காட்சிகளை மற்றவரும் கண்டுகளிக்கச் செய்யும் மார்க்கமாக கலைகள் விளங்குகின்றன. பண்பாடு கடந்த பொதுமொழியாக விளங்குவதே கலையின் மிகப்பெரிய வெற்றியாகும். அதோடு கலை கலைஞனின் உணர்வு ரீதியான திறமையைக் குறித்து நிற்கின்றது.

அந்த வகையில் மிருதங்கம் மற்றும் தபேலா வாத்ய இசைக்கலைஞரும் வாய்ப்பாட்டுக் கலைஞருமான ஆண்டிச்சியாவளவு, அல்வாயைச் சேர்ந்த திரு.சரவணமுத்து நாராயணசாமி அவர்களுடனான நேர்காணலின் பதிவுகளை நோக்குவோம்.

**உங்களுடைய பிறப்பு மற்றும் கல்வி நிலை குறித்து கூறுங்கள்**

நான் 1945.03.08 ஆம் திகதி பிறந்தேன். எனக்கு பிறவியிலே பார்வைக் குறைபாடு இருந்தமையால் எனது ஆரம்பக் கல்வியை கைதடியில் அமைந்துள்ள நவீல்ட் செவிப்புலன் விழிப்புலனிழந்தோர் பாடசாலையில் (Nuffield School for the deaf & Blind, Kaithady) பிரெயில் எழுத்து முறையில் இரண்டாம் வகுப்பு வரையில் கல்வி கற்றேன்.

**உங்களுடைய பரம்பரை வழியானவர்கள் யாரேனும் கலைத்துறையில் இருந்திருக்கிறார்களா?**

ஆம், என்னுடைய தந்தையார் சரவணமுத்து மேடை நாடகக் கலைஞரும் பாடகருமாவார்

உங்களுக்கு இசைத்துறையில் எவ்வாறு ஆர்வம் ஏற்பட்டது என்பது பற்றிக் கூறுங்கள். நான் என்னுடைய சிறுவயதிலே சின்ன மேளம் என்று சொல்லப்படுகின்ற ஆடலுடன் இணைந்த இசைக்கச்சேரியைக் கண்டுகளிப்பதற்குச் செல்வதுண்டு. சின்ன மேளம் என்பது கோவில் திருவிழாக்களில் திரைப்படப் பாடலுக்கு ஆடப்படுகின்ற நடனத்தைக் குறிக்கின்றது. இந்நடனத்திற்கு இசை வழங்குவதற்கு சுருதிப்பெட்டி, மிருதங்கம், தாளம் போன்ற இசைக்கருவிகள் இசைக்கப்படுகின்றன.

இவ்வாறாக இச் சின்ன மேள இசைக்குழுவில் வாசிக்கப்படும் மிருதங்கத்தின் மேல் எனக்குத் தீராத ஆர்வம் ஏற்பட்டது. மிருதங்க இசைக்கலைஞர் மிருதங்கத்தை எவ்வாறு வாசிக்கின்றார் என்பதை உற்றுக் கவனிக்கத் தொடங்கினேன். இதன் விளைவாக மிருதங்கம் வாசிக்கும் இசைக்கலைஞர் ஓய்வெடுக்கின்ற இடைவேளைப் பொழுதுகளில் நான் மிருதங்கம் வாசிக்கப் பழகிக் கொண்டேன்.

மேலும் எனக்கு சிறுவயதிலேயே நல்ல கணீரென்ற குரல் வளம் இருந்தது. இதனால் என்னை என்னுடைய தந்தை அதனை வளர்க்க முற்பட்டார்.

**உங்களுடைய குரு யார்?**

நான் குறுகிய காலம் மாத்திரமே குரு ஒருவரிடம் பயிற்சி எடுத்துக்கொண்டேன். அதன் பின்னர் கேள்வி ஞானத்தாலும் என்னுடைய முயற்சியினாலுமே இக்கலையைக் கற்றுக்கொண்டேன் .

**மிருதங்கம் தவிர்த்து வேறு எந்த இசைக்கருவிகளை வாசிப்பதில் நீங்கள் தேர்ச்சி பெற்றிருக்கிறீர்கள்**

தபேலா, டோலக் (Dolak), ஆர்மோனியம் ஆகிய இசைக்கருவிகளை வாசிப்பேன்.

**மேலே சொல்லப்பட்ட இசைக் கருவிகளை நீங்கள் சொந்தமாக வைத்திருக்கிறீர்களா?**

என்னிடம் தபேலா, ஆர்மோனியம், சுருதிப்பெட்டி ஆகிய இசைக்கருவிகள் மாத்திமே உள்ளன.

தேவையேற்படின் இசைக்கருவிகளை வாடகைக்கு பெற்றுக்கொள்வேன்.

**இதுவரையில் எத்தகைய நிகழ்வுகளில் கலந்து கொண்டிருக்கிறீர்கள்**

கோவில்கள், பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் இடம் பெறுகின்ற இசை நிகழ்வுகளில் பங்கேற்றிருக்கின்னே

யாழ் மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் இடம்பெற்ற இசை நிகழ்வுகளில் பங்கேற்றதுண்டா?

ஆம், மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஏறாவூர் காளி கோயில், சம்மாந்துறை காளி கோயில் ஆகிவற்றில் இசைக்கச்சேரிகள் நடாத்தியுள்ளேன்.

**உங்களிடம் இசை பயில்வதற்காக யாராவது வந்திருக்கிறார்களா?**

ஆம் வந்திருக்கிறார்கள். ஆனால் ஒருவரேனும் தொடர்ச்சியாக வகுப்புக்கு வந்து முழுமையாகக் கற்கவில்லை.

மிருதங்கம் வாசிக்க உங்களுடைய பிள்ளைகளில் யாராவது இசைத்துறையில்

**இதுவரையில் உங்களுக்கு கிடைத்த விருதுகள், அங்கீகாரங்கள் பற்றிக் பகிர்ந்து கொள்ளுங்கள்**

- 14.01.2002 அன்று நெல்லியடி சனசமுக நிலைய வருடாந்த பொங்கல் விழாவில் இடம் பெற்ற கலை நிகழ்வில் பங்கேற்று கிராமியப் பாடல்களையும், பக்திப் பாடல்களையும் கருத்தாழம்மிக்க திரையிசைப்பாடல்களையும் பாடி அவ்விழாவை சிறப்பித்தமைக்காக நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய பரிபாலனசபைத் தலைவர் திரு.பொ.கதிரமலை அவர்களால் "இசை திலகம்" எனும் பட்டம் வழங்கப்பட்டு, பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டேன்.

- 12.12.2017 இல் கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் இப் புனித தேசத்தின் கலை மற்றும் கலாசாரத்தை மிளிரச் செய்யும் பொருட்டு ஆற்றிய அரும்பெருஞ் சேவைக்காக வாழ்துச் சான்றிதழையும் பெற்றுக்கொண்டேன்.

- 23.03.2019இல் யாழ் மாவட்ட இசைக்குழு கலைஞர் சங்கம் நடாத்திய யாழ் மெல்லிசை வாசம் எனும் நிகழ்விலே "மேன்மைக் குரலோன்" எனும் விருதும் விருதுச் சான்றிதழும் பதக்கமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டேன்.

- யாழ்ப்பாணம் ஆரியகுளச்சந்திக்கு அருகாமையில் அமைந்துள்ள யாழ்ப்பாண உயர் கல்வி கல்லூரிப் பட்டமளிப்பு விழாவில் இசைக்கச்சேரி நடாத்திப் பாராட்டுக்களையும் வாழ்த்துச் சான்றையும் பெற்றுக்கொண்டேன்.

- 21.10.2022 இல் யாழ் மாவட்டச் செயலகமும் பண்பாட்டுப் பேரவையும் இணைந்து நடாத்திய மாவட்டப் பண்பாட்டு விழாவில் "யாழ் முத்து" எனும் விருதும் விருதுச் சான்றிதழும் பதக்கமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டேன்.



கடவுளுக்குத் தரும்
காணிக்கையை விட
ஒரு ஏழைக்குத் தரும்
கல்வி மேலானது.

*அம்பேத்கர்*

# இலங்கையில் பரத நாட்டியம்: ஒரு பண்பாட்டு பயணம்

**திருமதி. தி. மகாசாந்தி,**
ஓய்வுநிலை.
நடன ஆசிரியர்.

## 1. வரலாற்று வேர்கள் மற்றும் தழுவல்

பரத நாட்டியம் இந்தியாவில் தமிழ்நாட்டில் தோன்றியது, மேலும் அதன் அடித்தளத்தை பண்டைய நூலான *நாட்டிய சாஸ்திரத்தில் காணலாம். இருப்பினும், இலங்கைக்கான அதன் பயணம் சமமாக கவர்ச்சிகரமானது. பூர்வீக நடன வடிவமாக இல்லாமல், பரத நாட்டியம் இந்தியாவில் இருந்து ஏற்றுக்கொள்ளப்பட்டு, இலங்கையில் உள்ள தமிழர்களிடையே அவர்களின் கலாச்சாரம் மற்றும் அடையாளத்தின் பிரதிநிதித்துவமாக பரப்பப்பட்டது.

## 2. கோவில் கலை மற்றும் சத்திர நடன கலைஞர்கள்

இலங்கையில் பரதநாட்டியம் கோயில் கலையுடன் வலுவான தொடர்புகளைக் கொண்டுள்ளது. இது *சதிர்* எனப்படும் பழங்கால கோவில் நடன வடிவத்தி லிருந்து உருவானது. *சதிர்காரிஸ்* என்றழைக்கப்படும் பெண் கோயில் நடனக் கலைஞர்கள் தென்னிந்தியாவிலும் வடஇலங்கை யிலும் இக்கலையை நிகழ்த்தினர். இந்த நடனக் கலைஞர்கள் அவர்களின் கருணை, பக்தி மற்றும் இயக்கம் மற்றும் வெளிப்பாடு மூலம் சிக்கலான கதைகளை வெளிப்படுத்தும் திறனுக்காக மதிக்கப்பட்டனர்.



### 3. கலாச்சார பாதுகாப்பு மற்றும் மறுமலர்ச்சி

காலப்போக்கில், பரத நாட்டியம் வீழ்ச்சியடைந்த காலங்கள் உட்பட சவால்களை எதிர்கொண்டது. இருப்பினும், அர்ப்பணிப்புள்ள கலைஞர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆர்வலர்கள் இந்தக் கலை வடிவத்தைப் பாதுகாக்கவும் புதுப்பிக்கவும் அயராது உழைத்தனர். நடனப் பள்ளிகள், நிகழ்ச்சிகள் மற்றும் திருவிழாக்கள் திறமைகளை வளர்ப்பதற்கும் இலங்கையில் பரத நாட்டியத்தின் வளமான பாரம்பரியத்தைக் கொண்டாடுவதற்கும் தளங்களாக அமைந்தன.

### 4. சமகால வெளிப்பாடு

இன்று பரத நாட்டியம் செழித்து வருகிறது. நடனக் கலைஞர்கள் பாரம்பரியத்தை புதுமையுடன் கலக்கிறார்கள், உணர்ச்சி ஆழம், சிக்கலான கால் வேலைப்பாடு, வெளிப்படையான சைகைகள் (*முத்ராக்கள்*) மற்றும் துடிப்பான உடைகள் ஆகியவற்றுடன் தங்கள் நிகழ்ச்சிகளை உட்புகுத்துகிறார்கள். மேடையில் இருந்தாலும் சரி, கலாச்சார நிகழ்வுகளிலும் சரி, கல்வி நிறுவனங்களிலும் சரி, பரத நாட்டியம் கதை சொல்லல் மற்றும் கலை வெளிப்பாட்டிற்கான சக்திவாய்ந்த ஊடகமாக உள்ளது.

### 5. தேசிய பெருமை மற்றும் அடையாளம்

சிங்களத் திரைப்படங்கள் மற்றும் பிற ஊடகங்களில், பரத நாட்டியம் பெரும்பாலும் தேசியப் பெருமையின் அடையாளமாகச் சித்தரிக்கப்படுகிறது. இலங்கைத் தீவு மற்றும் தேசியக் கொடிகளின் பின்னணியில் நடனக் கலைஞர்கள் நடனமாடுகின்றனர், அதன் கலாச்சார முக்கியத்துவம் மற்றும் நாட்டின் அடையாளத்துடன் தொடர்பை வலியுறுத்து கின்றனர்.

### முடிவு

பரத நாட்டியம் எல்லைகளைத் தாண்டி, கலை, வரலாறு மற்றும் உணர்ச்சிகளைக் கொண்டாட்டத்தில் கலைஞர்களையும் பார்வையாளர்களையும் ஒன்றிணைக்கிறது. இலங்கை யானது அதன் பன்முகப் பண்பாட்டுப் பாரம்பரியத்தைத் தொடர்ந்து தழுவி வருவதால், பரத நாட்டியம் பாரம்பரியம் மற்றும் நவீனத்துவத்தின் இழைகளை ஒன்றிணைத்து, காலத்தால் அழியாத பொக்கிஷமாக உள்ளது.

எனவே அடுத்த முறை பரத நாட்டிய நிகழ்ச்சியின் அழகிய அசைவுகள் மற்றும் வெளிப்படையான கதை சொல்லல் ஆகியவற்றைக் காணும்போது, பல நூற்றாண்டுகளின் கலாச்சார பரிணாமத்தையும் கலை ஆர்வத்தையும் நீங்கள் காண்கிறீர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்!

"இலங்கையில் நடனம் : பாரம்பரியம் மற்றும் வெளிப்பாட்டின் ஒரு சித்திரம்"

### 1. பரத நாட்டியம்: அழகான பாரம்பரியம்

****பரத நாட்டியம்****, அதன் நுணுக்கமான காலடி வேலைப்பாடு, வெளிப்பாட்டு சைகைகள் மற்றும் துடிப்பான உடைகள், இந்தியாவின் தமிழ்நாட்டில் தோன்றிய ஒரு பாரம்பரிய நடன வடிவமாகும். எவ்வாறாயினும், இலங்கைக்கான அதன் பயணம் அதை தீவின் கலாச்சார கட்டமைப்பில் பிணைத்துள்ளது. நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியது இங்கே:

- **வரலாற்று வேர்கள் மற்றும் தழுவல்**:

- பரத நாட்டியம் தமிழ் சமூகம் மூலம் இலங்கைக்கு வழி கண்டது. இது அவர்களின் கலாச்சார அடையாளத்தின் பிரதிநிதித்துவமாக மாறியது, பாரம்பரியத்தை புதுமையுடன் கலக்கிறது.

- நடன வடிவம் *நாட்டிய சாஸ்திரம்* போன்ற பழங்கால நூல்களிலிருந்து பெறப்பட்டது மற்றும் தென்னிந்தியா மற்றும் வட இலங்கையில் பெண் நடனக் கலைஞர்கள் (*சதிர்காரிஸ்*) ஆடும் கோயில் நடனங்களில் இருந்து உருவானது.

- **கோயில் கலை மற்றும் பக்தி**:

- இலங்கையில் பரத நாட்டியம் கோயில் கலையுடன் வலுவான தொடர்புகளைக் கொண்டுள்ளது. இது பெரும்பாலும் மத விழாக்கள் மற்றும் பண்டிகைகளின்போது நிகழ்த்தப்படுகிறது.

- நடனக் கலைஞர்கள் புராணங்கள், ஆன்மீகம் மற்றும் அன்றாட வாழ்க்கையிலிருந்து அழகான அசைவுகள் மற்றும் உணர்ச்சி வெளிப்பாடுகள் மூலம் கதைகளை வெளிப் படுத்துகிறார்கள்.

- **தற்கால வெளிப்பாடு**:

- இன்று பரத நாட்டியம் தொடர்ந்து வளர்ந்து வருகிறது. நடனக் கலைஞர்கள் பாரம் பரியத்தை நவீன உணர்வுகளுடன் கலந்து, உணர்ச்சி மற்றும் நம்பகத்தன்மையுடன் தங்கள் நிகழ்ச்சிகளை உட்செலுத்துகிறார்கள்.

- மேடையில், கலாச்சார நிகழ்வுகள் அல்லது கல்வி நிறுவனங்களில் பரத நாட்டியம் கதை சொல்லும் ஒரு சக்திவாய்ந்த ஊடகமாக உள்ளது.

## 2. பிற பாரம்பரிய நடன வடிவங்கள்

பரத நாட்டியத்திற்கு அப்பால், இலங்கை பல வசீகரிக்கும் நடன வடிவங்களைக் கொண்டுள்ளது:

- **கண்டிய நடனம் (உட ரத நாடு)**:

- மலைநாட்டில் தோன்றிய கண்டிய நடனம்இ விரிவான உடைகள், தாளக் காலடி அசைவுகள் மற்றும் அக்ரோபாட்டிக் அசைவுகளால் வகைப்படுத்தப்படுகிறது.

- இலங்கையின் செழுமையான பாரம்பரியத்தைக் கொண்டாடும் வகையில், நடனக் கலைஞர்கள் பாரம்பரிய டிரம் தாளங்களை நிகழ்த்துகின்றனர்.

- **கீழ்நாட்டு நடனம் (பஹாத ரத நாடும்)**:

- தெற்கு சமவெளியில் இருந்து வந்த, லோ-கன்ட்ரி நடனம் அழகான கை சைகைகள் மற்றும் திரவ அசைவுகளைக் கொண்டுள்ளது.

- இது பெரும்பாலும் சடங்குகள், சடங்குகள் மற்றும் சமூகக் கூட்டங்களுடன் வருகிறது.

- **சப்ரகமுவ நடனம்**:

- சப்ரகமுவ பகுதிக்கு தனித்துவமான இந்த நடன வடிவம் கண்டி மற்றும் கீழ்நாட்டு மரபுகளின் கூறுகளை ஒருங்கிணைக்கிறது.

- நடனக் கலைஞர்கள் காதல், இயற்கை மற்றும் அன்றாட வாழ்க்கையின் கருப் பொருள்களை வெளிப்படுத்துகிறார்கள்.

- **நாட்டுப்புற நடனங்கள்**:

- இலங்கையின் நாட்டுப்புற நடனங்கள் பிராந்தியம் மற்றும் சமூகத்தின் அடிப்படையில் மாறுபடும். அவர்கள் அறுவடைகள், பருவங்கள் மற்றும் கலாச்சார பன்முகத்தன்மையைக் கொண்டாடுகிறார்கள்.

- *வெஸ் நாடும்*, *தெல்மே*, மற்றும் *உதேக்கி* நடனங்கள் சில உதாரணங்கள்.

### 3. முடிவு: ஒரு இணக்கமான கலவை

இலங்கையில், நடனம் எல்லைகளைக் கடந்து, கலைத்திறன், வரலாறு மற்றும் உணர்ச்சி களின் கொண்டாட்டத்தில் கலைஞர்கள் மற்றும் பார்வையாளர்களை ஒன்றிணைக்கிறது. அது பரத நாட்டியத்தின் சிக்கலான முத்திரைகளாக இருந்தாலும் சரி அல்லது கண்டிய நடனத்தின் தாள தாளங்களாக இருந்தாலும் சரி, ஒவ்வொரு வடிவமும் இலங்கை கலாச்சாரத்தின் துடிப்பான நாடாவுக்கு பங்களிக்கிறது.

எனவே அடுத்த முறை இந்த மயக்கும் தீவில் நடன நிகழ்ச்சியை நீங்கள் காணும்போது, பல நூற்றாண்டுகளின் பாரம்பரியம் மற்றும் கலை ஆர்வத்தை நீங்கள் காண்கிறீர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்!

One attachment • Scanned by Gmail





# வடம் பிடிக்க புறப்பட்டாள் வரலட்சுமி

யாழ் முத்து, கவிஞர்,
வதிரி கணா எதிர்வீரசிங்கம்

வருடாந்த சந்நிதியான் தேருக்கு
வெளிக்கிட்டாள் வரலட்சுமி
கணவன் கந்தசாமி
கடைக்குட்டி கண்ணனோடு வாடகைக்கு
கார் பிடித்து புறப்பட்டாள்!
சுற்றி வந்து
சந்தணப் பொட்டு வைத்து
பத்தினியாள் நடந்தாள்
பலகாரக் கடைநோக்கி!
இட்டலி சாம்பாரோடு
இடியப்பம் புரியாணி
இஸ்டமாய் வெட்டினாள்!
சக்கரை வியாதிக்காரன் என்பதால்
கந்தசாமிக்கு
இட்டலியுமில்லை
இனிப்பான தேநீருமில்லை!
விட்ட ஏப்பம் விண்ணைத் தொட
வட்டக் கயல்விழியாள்
எட்டி நடைபயின்றாள்
தட்டுமுட்டு சாமான் கடைப்பக்கம்!
இட்டலியச்சு இடியப்பத்தட்டு, புட்டுக்குழல்

தட்டகைப்பையோடு தரமான தோசைக்கல்லு
புட்டவிச்சுக் கொட்ட ஒருசோடி தட்டுப்பெட்டி
சுளகோடு நீத்துப்பெட்டி
கத்தியிரண்டோடு அலுமினிய தேயிலைவடி
அத்தனையும் வாங்கினாள்! விலையோ
ஐயாயிரம் சொச்சமாச்சு
ஐந்து ஐஸ்கிறீம்கள்
அடுத்த ருசிபார்த்து
ஆயத்தமாளாள் வீட்டிற்கு திரும்பிடவே!
கடைகடையாய் அவள் பின்னால்
நடை நடந்து
களைத்துப் போனான் கந்தசாமி
கடைக்குட்டி கண்ணனோ
கண்சோர்ந்து உறங்கலானான்!
கடைச் சாப்பாடு வீட்டில் இனிமேல்
களைகட்டப் போகுது
கனவு கண்டார் கந்தசாமி!
வாடகைக் காரில் மூவரும்
வீடு வந்து சேர்ந்தனர்!
அன்று முதல் காலையிலே
அவளோ ஒரு நாளும்
அடுப்படிக்குள் நுழையவில்லை!
ஆண்டுகள் முன்னூற்று அறுபத்தைந்து நாட்களுமே
ஆறுமுகம் பேக்கரியில் பாண்வாங்கி - அந்த
ஆண்டு முழுவதுமே
அடுப்படியின் மூலைக்குள்
அரைக் 'கோமா' நிலையில்
இட்டலியவிச்சு துருப்பிடித்துப் போய்
இடியப்ப தட்டெலாம் எலிவெட்டி
புட்டுக்குழல் புழுப்பிடித்து தூசிபட
நீத்துப்பெட்டி இருந்த இடமெல்லாம்
கறையான் புற்றெடுக்க
வருடமொன்று உருண்டோடியதே!
வந்தது மீண்டும் சந்நிதியான் தேர்!
வாருங்கள் மீண்டும் வடம் பிடிப்போம்
என்று மறுபடியும்
கார்பிடித்து வரலட்சுமி
கணவனுடன் புறப்பட்டாள்!

# வாசித்து அழகுறு



**வா**சி
உன்னில் ஒரு
வசீகரம் தோன்றும்

உன்னைச்சுற்றி
ஒரு வட்டம் பிறக்கும்
உன் பேச்சு இனிக்கும்
எழுத்து நிமிரும்

இருந்த இடத்தில்
இருந்து கொண்டே
உலகம் பார்க்கலாம்

காணாத மனிதர்கள்
அறியாத தகவல்கள்
அனைத்தும் உன் வசம்

புரட்சி வாசி
நரம்புகள் முறுக்கேறும்
புதினம் வாசி
உள்ளம் தூய்மையாகும்

எத்தனை எத்தனை
இன்பங்கள் வாசிப்பில்
காதல், கூடல்
இன்னும் பல...

வாசி
உன் அறிவுச்சுடரின்
எரிபொருள் அது
உன் சிந்தனைப்பரப்பின்
சிறகு அது

**சிவகரன் விநோஜிதன்,**
"செல்லம் பூங்கா"
அல்வாய் வடமேற்கு,
அல்வாய்.

நிதானமும் நீதியும்
அமைதியும் ஆற்றலும் பெற்று
ஞானியாவாய்

அலட்சியம் வேண்டாம்
வா மனிதா
இதுவும் போதைதான்
எவ்வளவு வேண்டுமோ
அவ்வளவு அருந்து
கூர்மையால் ஏற்று
ஆழமாய் முகர்ந்து கொள்
இன்பத்தின் உச்சிக்கு செல்வாய்
உன்னை மறப்பாய்
மீண்டும் மீண்டும்
தீண்டத்தூண்டும் - ஆனால்
கெட்டுப்போகமாட்டாய்
பண்படுவாய்

கட்டுள்ளத்திற்கும்
புத்திக்கூர்மைக்கும் தானே
விழி மூடித்தியானம்

இதோ
விழி திறந்து தியானிக்க
வழி ஒன்று உண்டு
வாசி

வாசித்து அழகுறு



# எழுந்திரு விழித்திரு
# ஜெயித்திடு

**திருமதி ரமணன் மெரினா**
அபிவிருத்தி உத்தியோகத்தர்
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை
கரவெட்டி.

எழுந்திரு விழித்திரு ஜெயித்திடு
உனக்கான காலம் உன் கையில்
துணிந்து நின்று போராடி வெற்றி பெறு
காலம் உனக்காக காத்திருக்காது
காலத்தை நோக்கி நீ ஓடு.
தலைக்கனத்துடன் வாழ்பவன்
தனது இலட்சியத்தை இழந்து
விடுகின்றான்.
முயற்சியை கை விடாதே
அதற்கான பயனை உன் வெற்றியில்
காண்பாய்.
தனிமை உன்னை வாட்டும்.
துன்பம் உன்னை தொடரும்
உடல் தளர்ந்து போகும். மயக்கம்
உண்டாகும்.
உறக்கம் மறக்கும். வயிறு பசிக்கும்.
உள்ளம் உடைந்து போகும்
மனம் சோர்வுறும்
எது வரினும் உன் வெற்றியை நோக்கி
நீ ஓடு. ஏளனம் செய்பவர்களை
தூரப்போடு.
உன் செயலை திறன் பட செய்.
மற்றவர்களின் இகழ்வான பேச்சு
உனது வெற்றியின் படிக்கல் என்பதை
மறந்து விடாதே.




அமர்ந்திருப்போர்(இ.வ): இ.மயூரன்(வேலை மேற்பார்வையாளர்), க.ஈஸ்வரன்(நூலகர்),ச.கிருபாகரன்(பொறுப்பதிகாரி), க.கம்ஸநாதன்(செயலாளர்), ர.கோமதி(பி.மு.சே.உத்தியோகத்தர்), அ.குமுதவல்லி(அ.உ), சு.நளினி(நூலகர்), இயூஜின்வலன்ரைன்(வருமான பரிசோதகர்), ச.சுமதி

நிற்போர்(இ.வ): த.துஷாந்தன், கு.சபேசன், சி.ஜெயநாதன், தெ.மகேஸ்வரன், கு.குணசேகரம், ம.லிங்கேஸ்வரன், ச.கஜன், உ.விவிதா, கு.மதுமதி, ப.சுகீர்த்தனா, உ.சுகந்தினி, கு.சவீதா, வி.அனோயா, ர.மெரினா, ஞா.றெஜிக்கா நிறஞ்லா, இ.சின்னம்மா, கி.அன்பரசி



# *என் பார்வையில்*
# கரவெட்டி பிரதேச சபை

**திருமதி ஆஷா ரஜீகன்**
அபிவிருத்தி உத்தியோகத்தர்

மண்வெட்டியோடு புலரும்பொழுதும்
நிமிர் நடையோடு தொடரும் பயணம்
பண்பட்ட நிலத்தோடு
பண்பாட்டு கதைபேசும்
கமக்காரன் ஊராம் கரவெட்டி.

முள்ளியும் வல்லையும் எல்லையாய்
சேவையே நோக்கமாய்
கட்டடம் முதல்
கழிவகற்றல் வரை
கடிகாரமாய் ஓடும்
கம்பீரமான சபை இன்றைய
கம்சனின் கரவெட்டி பிரதேசசபை

அதிகாலை தொடங்கி
அந்திசாயும் வரை
ஆர்ப்பரிக்கும் கடல்போல்
அயராத கடமையில்
தளராத ஊழியர்கள்

பிரிவுகளின் நிர்வாகம்
பிரித்துக்காட்டும் வட்டாரம் - இவை
எண்ணில் பத்தொன்பதாய்
அனைத்தும் மகளிராய்
சிறப்பானசேவையோடு
சிங்கப்பெண்களாய் - எம்
அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்

முக்கோண வலயமாய்
மூன்று உபஅலுவலகங்கள்
நெல்லியடியில் ஒன்றும்
உடுப்பிட்டியில் மற்றொன்றும்
கட்டைவேலியில் பிறிதொன்றுமாய்
பிரகாசமாய் மிளிரும் சேவை

பாலர்க்கு முன்பள்ளியும்
வாசகருக்கு நூலகமும்
வீதிக்கு மின்விளக்கும்
வியாபாரிக்கு சந்தையும்
வறியவர்க்கு வாழ்வாதாரமும்
கர்ப்பிணிக்குப் போசாக்கு பொதியும்
பொதுவான பாவனைக்கு
பொதுக்கிணறும் மலசலகூடமும்
ஆருயிர் காக்கும் மருத்துவமும்
ஆயுள்வேத வைத்தியசாலையும்
டெங்கு ஒழிப்போடு
தொடர் களத்தரிசிப்பும்
சேதனைப்பசளையும் உண்டு
Solar அல்லது சூரிய
மின்சேமிப்பும் உண்டு
மக்கள் வசதிக்காய்
வாடகை சேவையுமுண்டு
மண்டப வாடகையும்
இயந்திர வாடகையும்
நீர்த்தாங்கி வாடகையுமென
எண்ணிலடங்கா சேவையோடு
தொடரும் எம் பயணம்

ஆதனவரியோடு வாடகையும்
குத்தகையும் மூலவருமானங்களாய்
நவீன தொழில்நுட்பத்தில்
எம் செயல் பகிரும்
நமக்கான வலைதளமும்
செயலியில் ஒழு குழுமமும்
தகவல் பகிரும் தபால்காரனாய்
தேவைக்காய் சேவைபெற
சபைநாடி வாரீர்
மன நிறைவோடு செல்வீர்
அறியாமை போக்கி
அனுமதிக்காய் வாரீர்
அனுகூலமாய் இயல்வீர்.

# மாணவரியல்

# முதியோரைப் போற்றுவோம்

நரேந்திரன் அபிஷா
யா / கரணவய் மகா வித்தியாலயம்.



முதியோர் நமது மதிப்பிற்குரியவர்கள். அவர்களை மதித்துப் பேணிப் போற்றுதல் எமது தலையாய கடமையாகும். முதியோரைப் பேணாத சமுதாயம் உருப்படமாட்டாது.

பணிவு என்ற பண்புக்கு அடையாளம் நாம் முதியவர்களுக்கு அடங்கி அவர்களை மதித்துப்பேணிப் போற்றுதல் என்பதேயாகும். இதனை வள்ளுவர் "பணியுமாம் என்றும் பெருமை சிறுமை அணியுமாம் தன்னை வியந்து" என அழகாகக் குறிப்பிட்டுள்ளார். எவரெவர் பணிவான குணத்தைக் கடைப்பிக்கிறார்களோ அவர்கள் வாழ்வில் பெருமையுடன் வாழத் தகுதி பெறுகிறார்கள். "ஆண்டொன்று போனால் வயதொன்று போகும்" என்ற முதுமொழிக்கிணங்க நாம் முதியவர்களை அவமானப்படுத்தக் கூடாது. எனவே, நாமும் என்றோ ஓர் நாள் முதியோராவோம்.

"தாயிற் சிந்ததொரு கோயிலுமில்லை" "தந்தை சொல்மிக்க மந்திரமில்லை" தாய், தந்தை பேண்" போன்ற வாசகங்கள் எமக்குச் சொல்லும் செய்தி நாம் பெற்றோரைப் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்பதேயாகும்.

முதியோர் தங்களது பழைய ஆளுமை இயல்புகளைப் படிப்படியாக இழக்கின்றார்கள். உடல் நலக்குறைவு, தளர்வு, நடமாட முடியாமை என்பன அவர்களது முக்கியப் பிரச்சினைகளாம். முதியோர்களின் நல்லாசி மொழிகளே எம்மை வாழ்விற்கும் என்ற உண்மையை நாம் அனைவரும் மனதிற் கொள்ள வேண்டும். எனவே, பிள்ளைகள் முதியவர்களை அனுசரித்து நடக்க தம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும். "காவோலை விழக் குருத்தோலை சிரிக்கும்" என்பதற்கமைய நாம் முதியவர்களை அவமானப்படுத்தக்கூடாது. எனவே நாமும் என்றோ ஓர் நாள் முதியாராவோம்.

நாம் இப்போது முதியவர்களை மதித்தால்தான் வருங்கால சந்ததியினர் எம்மை மதித்து நடப்பர் என்ற உண்மையை அனைத்து இளைஞர், யுவதிகளும் மனதிற் கொண்டு வாழ வேண்டும். "பெரியோரைக் கனம் பண்ணுதல்" என்ற ஆன்றோர் வாக்கினைக் கடைப் பிடித்து ஒழுகுதல் எமது தலையாய கடமையாகும். சுருங்கக் கூறின,

**பெற்றோர் தம்மை பேணிடுவோம்**
**பெரியோர் தம்மை மதித்திடுவோம்**
**உற்றார் தமக்கு உதவிடுவோம்.**

என்பதற்கமைய நாம் முதியவர்களைப் போற்றி அவர்களின் நல்லாசிகளைப் பெற்று வாழ்வில் உயர்நிலை அடைவோமாக.

"உதவி செய்து உத்தமனாய் வாழ்வோம்."

உலகில் தேடித் தேடி
அலைந்தாலும் மீண்டும்
அமர முடியாத
சிம்மாசனம் தாயின்
கருவறை.






அமர்ந்திருப்போர்(இ.வ): வி.யோகராணி(பொறுப்பதிகாரி), க.கம்ஸநாதன்(செயலாளர்), ர.கோமதி(பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்)

நிற்போர்(இ.வ): சி.ஜெயகாந்தன், ர.ஆஷா, அ.கார்த்திகா, உ.ஜீவதேவி, இ.கார்த்திகா, தே.தர்சனா, ம.சிவாஜினி, ர.ஜானகி, சீ.தேவதாஸ்



# பசுமைச் சூழலைப் பாதுகாப்போம்

**முருகரூபன் டினேஸ்**
கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்.

- இறைவன் எமக்குத் தந்த இயற்கைக் கொடை சூழல் ஆகும்.
- எமது சூழலில் அதிகளவு தாவரங்கள் காணப்படுகின்றன.
- இதனால் எமது சூழல் பசுமையானதாகவே காணப்படும்.
- ஆனால் இன்று மனிதர்களின் செயற்பாடுகளினால் சூழல் அழிவடைந்து வருகிறது.
- எனவே பசுமைச் சூழலைப் பாதுகாப்பது எமது தலையாய கடமையாகும்.
- எமது சூழலைப் பாதுகாக்க நிலம், நீர், வளி போன்றவற்றையும் பாதுகாக்க வேண்டும்.
- எமது சுற்றுச்சூழலில் உள்ள மரங்களை அழிப்பதை நாம் நிறுத்த வேண்டும்.
- நாம் ஒரு மரம் வெட்டும்போது அதற்குப் பதிலாக இன்னொரு மரத்தை நட வேண்டும்.
- மரங்கள் நிறைந்து காணப்படும்போது சுத்தமான காற்று எமக்குக் கிடைக்கும்.
- சூழலைப் பாதுகாப்பதால் எமக்கு அதிகளவு மழைவீழ்ச்சி கிடைக்கப்பெறும்.
- இதனால் என்றும் எமது சூழல் பசுமையானதாகவும் குளிர்மையாகவும் காணப்படும்.
- நாம் காடுகளை அழிக்காது மண் வளத்தைப் பாதுகாக்க வேண்டும்.
- நாம் அதிகளவு மரங்களை வளர்ப்பதனால் காற்று மாசடைவது குறையும்.
- நாம் எமது சூழலைப் பாதுகாக்க சூழல் பாதுகாப்புச் சட்டங்களைப் பின்பற்ற வேண்டும்.
- நாம் எமது சூழலைப் பாதுகாப்பதன் மூலம் நோயற்ற வாழ்வு வாழ முடியும்.



D. குலரத்தினம் சுசித்திரா
தரம் - 10
யா /விக்னேஸ்வரா கல்லூரி

# இயற்கை வளங்களைப் பாதுகாப்போம்

வளங்களானது மனிதன் புவியில் நிலைத்திருப்பதற்கு அவசியமான ஒன்றாக உள்ளது. இயற்கையில் பல்வேறுபட்ட வளங்கள் காணப்படுகின்றன. அவற்றினுடைய பெறுமதியைப் பலரும் அறியாது, வளங்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தி வருகின்றனர். வளங்களின் முக்கியத்துவத்தை அறியாது செயற்படுவதன் காரண மாகவே இன்றைய பொருளாதாரம் சீரற்ற நிலைக்குத் திரும்பியுள்ளது. இயற்கையில் எமக்கு கிடைக்கப்பெற்ற வளங்களைப் பிரயோசனமாகப் பயன்படுத்த வேண்டியது எம் ஒவ்வொருவரினதும் கடப்பாடாகும்.

"எவற்றை இயற்கையால் கிடைக்கப்பெறுகின்ற வளங்கள் எனக் குறிப்பிடலாம்?" என்ற வினாவை ஆழமாகச் சிந்திப்போமானால் பலவாறு விடையளிக்க முடியும். எமக்கு இயற்கையாகக் கிடைக்கப்பெறுகின்ற வளங்களாக நீர், மண், வளி, மரம், செடி, கொடிகள், விலங்குகள் என்றவாறு கூறிக்கொண்டே செல்ல முடியும். இவை யாவற்றையும் மனிதன் முறையின்றிப் பயன்படுத்து வதனாலேயே இன்றைய சூழல் சீரற்றுக் காணப்படுகின்றது. வளங்களைப் பாதுகாக்க நாம் அனைவரும் கடினமான முயற்சி எடுக்க வேண்டும்.

முதலில் நீர் வளத்தைப் பற்றி நோக்குவோம். நீரானது இயற்கையாலேயே எமக்கு கிடைக்கப் பெறுகின்றது. "நீரின்றி அமையாது உலகு" என்பது முன்னோர் வாக்கு. நீர் இல்லாவிட்டால் மனிதர்களாகிய எம்மால் புவியில் நிலைத்திருக்க முடியாது. மனிதர்களால் மட்டுமன்றி விலங்குகளாலும் கூட நீர் அருந்தாமல் புவியில் வாழ முடிவதில்லை. ஆகவே தான் நாம் நீரைச் சிக்கனமாகவும் முறையுள்ள வகையிலும் பயன்படுத்த வேண்டியது அவசியமாகின்றது. "நீர் ஒரு வளம்" என்பதை விளங்கிக் கொள்வதுடன் அதனைத் தேவைக்குரிய வகையிலும் பயன்படுத்தல் அவசியமாகும்.

இன்றைய சமுதாயத்தில் நீரின்றி வாழும் பலரையும் அவர்கள் நீரைப் பெற்றுக் கொள்வதற்காக அடைகின்ற சிரமங்களையும் நோக்க முடியும். இதற்கான ஒரே தீர்வாக நீரை முறையாகப் பயன்படுத்துகின்றமையே ஆகும். நீர் நிலைகளினைச் சுத்தமாகப் பேணிக்காத்தல் வேண்டும். தொழிற்சாலைக் கழிவுகளை நீருடன் கலக்க விடுதல், நீர்நிலைகளில் விலங்குகளைக் குளிப்பாட்டல் போன்ற செயற்பாடுகளைத் தவிர்த்தல் வேண்டும். மற்றும் நீர்த்திருகு குழாய்களைத் திறந்து விட்டு வேறு வேலைகளில் ஈடுபடுதல் மூலமாக நீரானது வீணாக விரயப்படுத்தப்படுகின்றது. ஆகவே, நீரைச் சிக்கனப்படுத்து வதில் பெரும் கவனத்தைச் செலுத்த வேண்டியது எம் அனைவரினதும் கடமையாகும்.

அடுத்ததாக மண் வளத்தைப் பற்றிச் சிந்திப்போம். மண்ணில் மனிதன் வாழ மண்ணை முறையாகப் பயன்படுத்துவது அவசியமாகின்றது. கிருமிநாசினிப் பாவனை, மண்ணை முறையற்ற விதத்தில் கொத்துதல் போன்றவற்றின் மூலமாக மண்ணின் தன்மை பாதிக்கப்பட்டு மண்வளம் குன்றுகின்றது. இதன் விளைவாக மணிசரிவு போன்ற இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட்டு வருகின்றது. மண்ணின் விளைச்சலை அதிகரிப்பதற்காகப் பயன் படுத்தப்படுகின்ற கிருமிநாசினிகளின் பாவனையைக் குறைத்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு குறைத்துக் கொள்வதன் வழியாக மண்ணின் நிலைத்திருப்பை அதிகரித்துக் கொள்ள முடியும்.

வளி மாசடைதல் என்பது யாதென நோக்கினால் அதற்கான வரைவிலக்கணத்தை எளிதாகக் குறிப்பிட முடியும். அதாவது வளிமண்டலத்தில் தேவையற்ற, அசுத்த வாயுக்கள் சேர்க்கையடைவதனாலே வளி மாசடைகின்றது. இதற்கான காரணங்களாக அணுகுண்டுப் பாவனையின்போது வெளிவருகின்ற புகைகள் வளிமண்டலத்தில் சேருதல், வாகனப் புகைகள் வளியுடன் சேர்க்கை அடைதல், தொழிற்சாலைகள் போன்றவற்றிலிருந்து வெளியேறக்கூடிய கழிவு வாயுக்கள் வளியில் சேருதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். வாயுக்களை முறையற்ற விதத்தில் வெளியேற்றுவதன் மூலம் ஓசோன் படையில் பாதிப்பு ஏற்பட்டு விடுகின்றது. ஆகவே, இவற்றை நாம் கவனத்திற் கொண்டு செயற்படுதல் மிகவும் அவசியமான ஒன்றாக உள்ளது.

எம்மைச் சூழவுள்ள மரம், செடி, கொடிகள் கூடி இயற்கையான வளங்களாகக் கருதப் படுகின்றது. தாவரங்களின் நிலைத்திருப்பினாலேயே மனிதன் புவியில் வாழ்வதற்குரிய சூழலியல் சமநிலை கிடைக்கப் பெறுகின்றது. தாவரங்களை அழித்தல் காரணமாக பூகோள வெப்பம் அதிகமடைந்து புவியில் மனிதன் வாழ முடியாத நிலைமை ஏற்பட்டு விடும். இவற்றின் காரணமாக இயற்கை அனர்த்தங்களும்கூட ஏற்படுவதற்கான சாத்தியம் உள்ளது. தாவரங்களை அழிக்கும் நடவடிக்கைகளை குறைத்துக்கொள்ள வேண்டிய நிலை தற்போது எமக்கு ஏற்பட்டுள்ளது. தாவரங்கள் இல்லையேல் எம்மால் புவியில் வாழ முடியாது என்பதைத் தெளிவாக விளங்கிக் கொள்வோமானால் இவ்வாறான செயற்பாடு களில் இருந்து விலகியிருக்க முடியும்.

விலங்குகளானது மனிதன் உயிர் வாழ்வதற்கு உரிய சமநிலையை எமக்கு வழங்கு கின்றது. காட்டு விலங்குகளை அழிப்பதையும் அவற்றின் வாழ்க்கை முறையைப் பாதிப்படையச் செய்வதையும் தவிர்த்தால் நாமும் உலகில் நீண்டகாலம் உயிர் வாழ முடியும். மனிதனும் விலங்கிலிருந்து கூர்ப்படைந்து உருவாக்கப் பெற்றவனேயாவான். ஆதலால் மனித, விலங்குகளைப் பாதுகாத்து அவற்றின் தேவைகளை முறையாக

நிறைவேற்ற வேண்டியது எமக்கான பொறுப்புக்களாக உள்ளது. இயற்கையில் எமக்குக் கிடைக்கப்பெறும் வளங்களில் மனிதன்கூட ஒரு வளமாகக் கருதப்பட்டு வருகின்றான் என்பதைத் தெளிவாக விளங்கிக்கொள்வோமானால் இவ்வாறான செயற்பாடுகளில் இருந்து விலகியிருக்க முடியும்.

விலங்குகளானது மனிதன் உயிர் வாழ்வதற்கு உரிய சமநிலையை எமக்கு வழங்கு கின்றது. காட்டு விலங்குகளை அழிப்பதையும் அவற்றின் வாழ்க்கை முறையைப் பாதிப்படையச் செய்வதையும் தவிர்த்தால் நாமும் உலகில் நீண்டகாலம் உயிர் வாழ முடியும். மனிதனும் விலங்கிலிருந்த கூர்ப்படைந்து உருவாக்கப் பெற்றவனேயாவான். ஆதலால் மனித, விலங்குகளைப் பாதுகாத்து அவற்றின் தேவைகளை முறையாக நிறைவேற்ற வேண்டியது எமக்கான பொறுப்புக்களாக உள்ளது. இயற்கையில் எமக்கு கிடைக்கப்பெறும் வளங்களில் மனிதன்கூடிய ஒரு வளமாகக் கருதப்பட்டு வருகின்றான் என்பதை விளங்கிச் செயற்பட வேண்டும்.

மனிதாபிமான உணர்வுகளை எம்முன் வளர்த்துக்கொண்டால் வன்முறைச் செயற்பாடுகளில் இருந்து விடுபட்டு வாழ முடியும். "மனிதனும் ஓர் வளமே!" என்ற சொல்லிற்கு பொருள் புரியும் சமுதாயத்தை உருவாக்கிக்கொண்டால் வாழ்வில் சிறக்க முடியும். ஆகவே, இயற்கையாக எமக்கு கிடைக்கப்பெறுகின்ற வளங்களை முறையான விதத்தில் பாதுகாக்க வேண்டும். வளங்கள் இல்லையேல் எம்மால் வாழ முடியாது என்ற கருத்தை எல்லோர் மனதிலும் புலப்படுத்திக்கொள்ள வேண்டியது எம் கடமை.






அமர்ந்திருப்போர்(இ.வ): க.தவரூபன்(நூலகபரிசாரகர்), ஆ.கிருபாகரன்(பொறுப்பதிகாரி), கம்ஸநாதன்(செயலாளர்), ர.கோமதி(பி.மு.சே.உ), அ.கமலரஞ்சினி(ஆயுள்வேத வைத்திய உத்தியோகத்தர்), ந.பவகீர்த்தனன்(வருமானப்பரிசோதகர்)

நிற்போர்(இ.வ): பு.பிறிஷானி, கி.துர்க்கா, ந.கௌரிஷா, ஹ.தபாசினி, கி.கார்த்திகா, கு.வசந்தகுமாரி, ஸி.சிவகௌரி, க.விஜயமனோகரி

# மனித வாழ்வில் சமயம்

**சிவபாலசேகரன் நிரே**
தரம் - 10
யா /விக்னேஸ்வரா கல்லூரி

இந்தப் பரந்துபட்ட உலகிலே ஒவ்வொரு மனிதனும் பிறப்பு முதல் இறப்பு வரை அவனது சமயம் பின்னிப்பிணைந்து காணப்படுவதை நாம் அனைவரும் அறிவோம். சமயங்கள் தோற்றம் பெறக் காரணம். "மனித சமூகத்தினது வளர்ச்சிக்காக மட்டுமே தவிர இப் பாரிய உலகினைப் பிளவு களாகப் பிரித்து சமத்துவத் தன்மையினை இல்லாதொழிக்க அல்ல.", என்பதை எல்லோரும் எப்போது உணர்ந்த கொள்கின்றனரோ, அப்போதுதான் இவ்வுலகிற்குத் "தீராத தொடர் விடியல் கிட்டும்", என்பதில் சிறிதேனும் ஐயமில்லை. இந்தப் பாரினிலே பல்வேறுபட்ட சமயங்களை மக்கள் பின்பற்றி வருகின்றனர். அப்படிப்பட்ட சில சமயங்களாக இந்து, இஸ்லாம், பௌத்தம், கிறிஸ்தவம் என்பன கருதப்படுகின்றன. இதில் இந்து சமயத்தில் பல்வேறுபட்ட தெய்வங்களினை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு பிரிவுகள் காணப்படுதல் குறிப்பிடத்தக்க விடயமாகும். உதாரணமாக விநாயகரைப் பின்பற்றி நடப்போர் காணாபத்தியம், விஸ்ணுவைப் பின்பற்றி நடப்போர் வைணவ சமயம் என்பன காணப்படுவதை அறிய முடியும். இவ்வுலகிலே, "மானிடராகப் பிறந்த அனைவரும் சமமாகப் போற்றப்பட வேண்டியவர்கள்," எனும் எண்ணத்தை உடையவர்களே நாட்டின் சிறந்த பிரஜைகள் என்பது ஆணித்தரமான உண்மை.

விந்தும், சூழலும் சேர்ந்து கருக்கட்டிய நொடியில் இருந்து சேயாகப் பிறந்து, கிழட்டுப் பருவம் எய்தி இறக்கும் தறுவாய் மட்டிலும் சமயம் பல்வேறு வகையில் நமது செய்கைகளில் கலபட்டுக் காணப்படுகிறது. வீட்டிலே நற்காரியங்கள், துக்க நிகழ்வுகள் நடைபெறுகையில் வீட்டில் "மஞ்சள் நீர்" தெளிப்பதை நமது முன்னோர்கள் பின்பற்றி நமது சந்ததியினருக்கும் அறிவித்துள்ளனர். இந்த நடவடிக்கைக்கு ஆன்மீகம் பல்வேறு காரண

காரியங்களைப் கூறினாலும், அறிவியலின்படி நோக்குவோமாக இருந்தால் மனித நடமாட்டம் அதிகமாக இருக்கையில் நோய் தொற்றுள்ள ஒருவரின் சுவாசம் மூலம் அங்கு நடமாடும் பலருக்கு தொற்றுகள் ஏற்பட வாய்ப்புண்டு. அப்படிப்பட்ட தொற்றுக்களை நீக்கும் பீடைகொல்லியாக "மஞ்சள் நீர்" பயன்பட்டு வந்தமையே உண்மையான சாராம்ச மாகக் காணப்படுகின்றது. சமயத்தில் பின்பற்றப்படும் ஆன்மீகம் சார்ந்த பல்வேறு செயற்பாடுகளுக்கு அறிவியலானது தகுந்த காரணத்துடனான விளக்கங்களைக் கொண்டுள்ளது. "இங்கு, நான் நாத்திகனாகவோ, ஆத்திகனாகவோ கருத்துக்களைத் தெரிவிக்க விரும்பவில்லை. நாத்திகம் பேசும் மனிதரென்றாலும், ஆத்திகம் பேசும் மனித ரென்றாலும் இருவருக்கும் சிவமாக விளங்குவது "அன்பு" ஒன்றே. சமய, மத, சாதி, நிற, மொழி எந்த வேறுபாடுமின்றி அனைவருக்கும் பொதுவாக விளங்கும் அன்பினை மேலோங்கச் செய்யவே சமயங்கள் போராடி வருகின்றன. குறுகிய காலப்பகுதியான வாழ்விலே அளவு கடந்த அன்பினைப் பரப்பி வாழும் வாழ்விற்கு அர்த்தம் அறிவதே எமது கடமையாகும்.

இந்துசமய மக்கள் ஆதிகாலத்திலிருந்தே கோயில்களை நிறுவி உயரமான கோபுரங்களை அமைத்து அதன் உச்சியில் கலசங்களை நிலைநிறுத்தி பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு முறை "கும்பாபிஷேகம்" நடாத்துவதனை வழக்கமாகக் கொண்டு வருகின்றனர். இங்கு கோபுர கலசங்களினுள்ளே நவதானியங்கள் சேமிக்கப்பட்டு இருக்கும். நமது சமூகத்திலே வெள்ளப்பெருக்கு உணவுத் தட்டுப்பாடு போன்ற காரணிகள் ஏற்பட்டு அடுத்தவேளை உணவுக்கு கேள்வி ஏற்படுகையில், மேலே கோபுர உச்சியிலுள்ள கலசத்தினுள் சேமிக்கப்பட்ட தானியங்களை விதைத்து அறுவடை செய்வதன் மூலம் உணவுப்பற்றாக்குறையினை இல்லாது செய்து நமது சந்ததியினரைப் பாதுகாக்கலாம். பன்னிரு வருடங்களுக்கு ஒரு முறை "கும்பாபிஷேகம்" நடைபெற்று கலசத்தினுள் உள்ள நவதானியங்கள் மாற்றப்பட்டு அவற்றின் தரம் பேணிப் பாதுகாக்கப்படும். ஒரு நாட்டினது பொருளாதாரத்தையே நிலைகுலைய வைக்கும் உணவுப் பற்றாக்குறையை இல்லாது செய்ய ஆன்மீகம் சார்ந்து எமது முன்னோர் பின்பற்றி வந்த இந்த விடயம் உடலைச் சிலிர்க்க வைப்பதோடு, நமது சமயத்தை நினைத்துப் பெருமை கொள்ள வைக்கின்றது. நமது முன்னோர்கள் "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்று கூறுவார்கள். இதற்குரிய காரணத்தை அறிவியலின்படி நோக்குவோமாக இருந்தால், இடிமின்னல் தாக்கங்கள் ஏற்படும்போது தரையை நாடி வரும் இவை உயரமான பொருட்களில் தாக்குவது வழமை. கோயிலுள்ள கோபுரம் மிக உயரமாக இருப்பதனால் அந்தப் பிரதேசத்தில் ஏதும் தாக்கங்கள் ஏற்படின் கோபுரத்தில் பட்டுச் செல்வதனால் அப் பிரதேச மக்களின் பாதுகாப்புப் பேணப்படும்.

மக்களின் நலனில் இவ்வளவு அக்கறையைக் கொண்ட சமயம் வரலாறு போற்ற வேண்டிய ஒன்றே.

சமயங்களானது இவ்வுலகிலே ஏற்படும் பல்வேறு நல்ல நல்ல செயற்பாடுகளுக்கு வித்திடுகின்றன. ஒருவன் தனது சமயத்தினைப் பின்பற்றி ஒழுகுவானாக இருப்பின் அவன் தனக்கான கடமைகளைச் சீராகச் செய்து நாட்டினது வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றுவான் என்பது நிதர்சனமான உண்மையாகும். இந்துசமயத்திலே இறந்தவர்களின் உடலை எரிப்பதனை வழக்கமாகக் கொண்டுள்ளனர். ஒருவர் இறந்து அவரின் உடலைச் சரியான முறையில் அகற்றாவிடின் பல்வேறு வகையான தீங்கு விளைவிக்கும் கிருமிகள் அவரின்

உடலிலிருந்து வெளிவிடப்படும். இதற்கு எந்தவொரு சதவீத வாய்ப்பினையும் கொடுக்கக் கூடாது என்பதற்கு இந்துக்கள் பூதஉடலைை எரித்துப் பஸ்பமாக்குவதனை வழக்கமாகக் கொண்டுள்ளனர். ஆன்மீகம் மீது ஒரு மிகப் பெரிய மரியாதையை ஏற்படுத்தி அறிவியலின் துணை கொண்டு அதனைச் செயற்படுத்தவதன் மூலம் மனிதனது அறிவு வளர்ச்சியினை மென்மேலும் மெருகூட்ட முடியும்.

சமயங்கள், மனிதனது விழுமியப் பண்புகளை மேலோங்கச் செய்வதனையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. பொய்யாமொழிப் புலவர் என அழைக்கப்படும் பெருந்தகை. "திருவள்ளுவர்" அவர்கள், விஞ்ஞானம் கண்டறிய முன்னே அணு, மறிகடல் போன்று பல்வேறு விடயங்களை திருக்குறளிலே தேன்படக் கூறியுள்ளார். இத்தனை நூற்றாண்டுகள் கடந்தும் திருக்குறள் ஒரு அழியா நூலாகப் போற்றப்படக் காரணம் "அதனது உண்மைத் தன்மையே" ஆகும். சமயம், அறிவியலுடன் பிணைந்து காணப்பட இதுபோன்ற பல்வேறு எடுத்துக்காட்டுகள் உண்டு. தமிழர்களின் பெருமைகளைப் பேசும். தஞ்சைப் பெருங்கோயில் அதற்குச் சிறந்த உதாரணமாகும். பிறந்த வாழ்வைப் பயனுள்ளதாகப் பேண நமது சமயம் கூறும் விடயங்களைப் பின்பற்றி வாழ்வில் நன்னிலையை அடைவோமாக!

"தாயைப் பேணும் அளவு
சமயத்தைப் பேணி வாழ்விற்கு
உரம் போடுவோமே!"

---

மாடு உண்டு கன்று
உண்டு மக்களுண்டு
என மகிழ்ந்திருந்த மனிதா
விம்மி அழுத உன் மனைவி
வீதியோரம் நின்றுவிட்டாள்
கூட வந்த சுற்றம்
சுடலையோடு திரும்பி
விட்டது.
உன் பேர் எங்கே
செல்வம் எங்கே
இதோ ஒரு பிடி சாம்பல்
இதுதான் வாழ்க்கை நியதி.

**பட்டினத்தடிகள்**



# வாசிப்பின் முக்கியத்துவம்

**திவியா முருகமூர்த்தி**
தரம் - 09
யா / உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

அறிவைப் பெருக்கி அறியாமையை அகற்றித் தெளிவு கூட்டித் தேனினும் இனிய அறிவைப்பெற அடித்தளமாக அமைவது வாசிப்பேயாகும். பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஸ்பில் பேர்ஜன் என்பவர் வாசிப்பதால் மட்டுமே மனிதன் பூரணமடைகிறான் எனக் கூறியுள்ளார்.

"கற்க கசடற கற்றவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்ற கூற்றானது பொய்யாமொழிப் புலவரான வள்ளுவரால் கூறப்பட்டது. இக் கூற்றின் மூலம் இவர் கல்வியின் முக்கியத் துவத்தை அழகாக எடுத்துரைக்கின்றார்.

"நூல் பல கல்" என்றார் எமது மூதாட்டி யான ஔவையார். நூல்களை வாசிப்பதன் மூலமே நாம் கல்வியில் சித்தியடைய முடியும். "நல்ல புத்தகங்களை வாசி அன்றேல் அவற்றை வாசிக்க உனக்குச் சந்தர்ப்பம் கிடையாது" என்றார் முனிதாஸ குமாரதுங்க. அவரின் கூற்றின் மூலமே வாசிப்பதால் மட்டுமே மனிதன் கல்வியில் சிறந்து விளங்குகிறான் என்பதை உணர முடிகிறது.



"கேடில் விழுச் செல்வம் கல்வி" என்றார் வள்ளுவப் பெருந்தகை. அவர் இதன்மூலம் கெடுதல் அல்லது அழிதல் இல்லாச் செல்வம் கல்வியே என்பதைக் கூறவிளைகிறார். கல்வியானது நீரினால் அழியாது; நெருப்பினால் வேகாது; கள்வர்களால் கூடக் கொள்ளையடிக்க முடியாது. அரசனால் கூட கவர முடியாதது; பிற பொருட்களைக் கொடுக்கக்

கொடுக்க குறைந்தே செல்லும், ஆனால் கல்வியானது கொடுக்கக் கொடுக்க கூடிக் கொண்டே போகக்கூடிய ஒரே ஒரு அழிக்கமுடியாத செல்வமாகும்.

கல்வியின் மகத்துவத்தைப் புரிந்தே, "சீனாவிற்குச் சென்றேனும் கற்றுக்கொள்" என்றார் முகம்மதுநபி அவர்கள். கல்வியின் சிறப்பை விளங்காத பலர் இன்று தம் வாழ்க்கையின் முடிவுநிலையை அடைந்து விட்டனர். "தொட்டனைத்து ஊறும் அறிவு" என்ற கூற்றுக்கமைய, மண்ணைத் தோண்டத் தோண்ட எவ்வாறு நீர் கிடைக்கிறதோ, அதைப்போலவே நாம் எத்தனை எத்தனை புத்தகங்களை வாசிக்கிறமோ அளப்பெரிய கல்வியானது எமக்குக் கிடைக்கிறது.

கிணற்றுத்தவளை போல முடங்கிக் கிடப்பவனுக்கு வெளியுலகத்தைக் காட்டுவன புத்தகங்களே. புத்தகங்களை வாசிக்காமல், வாசிப்பவர்களைக் கேலி செய்த ஒருவன், இன்று வாழ்க்கையில் அடுத்ததாக என்ன செய்யப்போகிறேன் எனத் தெரியாமல் நிற்கிறான். அதேவேளை புத்தகங்களை வாசித்து அறிவைப் பெருக்கி தன்னை வளர்த்த ஒருவன், இன்று வாழ்க்கையின் வெற்றிப்பட்டியலில் இடம்பிடித்து விட்டான்.

"ஆசிரியப்பணியே அறப்பணி அதற்கே உன்னை அர்ப்பணி" எனும் கூற்றிற்கமைய "பள்ளத்தை நாடி ஓடும் வெள்ளம் போல்" நாமும் நல்ல ஆசிரியர்களை நாடிச் சென்று அவர்களின் அறிவுரையைக் கேட்டு கற்றால் நாம் வாழ்வில் சித்தி பெறுவோம்.

"இளமையில் கல்வி சிலையில் எழுத்து" என்ற பழமொழிக்கமைய, நாம் எந்த வயதிலும் கல்வியைக் கற்கலாம். ஆனால் நாம் இளமையிற் கற்ற கல்வியே சிலையில் பொறிக்கப்பட்ட எழுத்தைப்போல ஆணித்தரமாக நம் நினைவில் நிற்கும். இதையே நாலடியார் "கல்வி கரையில கற்பவர் நாள் சில" என்று கூறுகிறார். அதாவது கல்விக்கு கரை யில்லை. அதை நாம் எப்போதும் கற்றுக்கொள்ளலாம். ஆனால் நாம் கற்பதற்கு, கற்ப வருக்கும் சிறிது காலமே உண்டு.

கல்வியின் சிறப்பையும் முக்கியத்துவத்தையும் அறிந்த சீ. டபிள்யூ. டபிள்யூ கன்னங்கரா அவர்கள் இலவசக் கல்வியை ஆரம்பித்தார். அதனாலேயே இலங்கையில் இன்று இலவசக்கல்வி நடைபெற்று வருகிறது.

புத்தகங்களே எமது நண்பர்கள். புத்தகம் வாசித்துப் பழக்கப்பட்ட ஒருவன் தனிமையில் இருக்கமாட்டான். தனது துயரைக்கூற நண்பன் இல்லையே என அழ மாட்டான். ஏனெனில் அவனுக்கு இன்பத்தைத் தரும் நல்லவனாகவும் துன்பத்தில் ஆறுதல்படுத்த வல்லவனாகவும் புத்தகங்கள் காணப்படுகின்றன. நல்ல புத்தகங்களே நல்ல நண்பர்கள்.

வேதம், ஆகமம், பைபிள், திருக்குர்ஆர், கட்டுரைப் புத்தகங்கள், புத்தகங்கள், சிந்தனையை வளர்க்கும் புத்தகங்கள், புத்திமதியூட்டும் புத்தகங்கள் போன்ற பலதரப்பட்ட புத்தகங்கள் இருக்கும்போதும் நாம் ஏன் எமக்குத் துன்பத்தைத் தரும் புத்தகங்களையும் பிழையான பாதைக்கு இழுத்துச் செல்கின்ற புத்தகங்களையும் நாடவேண்டும்.

புத்தகங்களை வாசிப்பதன் மூலம் எமக்கான சிந்தனையாற்றல் அதிகம் வளர்கிறது. சிந்தனையைத் தூண்டி அறிவை வளர்ப்பவராக புத்தகங்கள் காணப்படுகின்றன.

வரலாற்றுப் புத்தகங்களை வாசிப்பதன்மூலம் எமது மூளைக்கு பயிற்சி ஏற்படுகின்றது. மொழியாற்றல் வளர்வதற்கு புத்தகங்களை வாசிப்பது சிறந்த ஒரு வழிமுறையாகும்.

புத்தகங்களை வாசிப்பதால் எம்மால் விளம்பரங்கள், சஞ்சிகைகள் போன்றவற்றை உருவாக்கவும், கட்டுரை, கவிதை, பேச்சு போன்ற போட்டிகளில் திறமையாகச் செயற்பட எமக்கு வாய்ப்புக் கிட்டுகின்றது. பத்திரிகைகளை வாசிப்பதன் மூலம் நாம் தினசரி நடக்கும் பொது விடயங்களைக் கற்க இலகுவாக அமைகின்றது.

"மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையவன்
மன்னற்குத் தன்தேசமல்லாற் சிறப்பில்லை
கற்றோர்க்குச் செல்லும் இடமெல்லாம் சிறப்புண்டு."

என்ற முதுரைக்கு அமைய கல்வி கற்றவர்களே சிறந்து விளங்கி நிற்கின்றனர்.

ஆகவே, இவ்வுலகில் சிறந்து விளங்கி நிற்பது கல்வியே, அப்படிப்பட்ட கல்வியைப் பெற வழிகாட்டியாக நிற்பவை வாசிப்பும் புத்தகங்களும் மட்டுமேயாகும்.

"கண்ணுடையரென்பர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையோர் கல்லாதோர்" எனக் கூறி, கல்வியே இவ்வுலகில் சிறந்து விளங்குகிறது. கல்வியைப் பெற அடித்தளமாக அமைவது வாசிப்பேயாகும்.

*ஆசிரியர்கள் கதவைத்
திறக்கிறார்கள், ஆனால்
நீங்கள்தான் உள்ளே நுழைய
வேண்டும்.*

**- சீன பழமொழி**






அமர்ந்திருப்போர்(இ.வ): பி.விசாகினி(ஆசிரியர்), க.கம்ஸநாதன்(செயலாளர்), ர.கோமதி(பி.மு.சே.உ), வி.டொறின்லக்ஷா(ஆசிரியர்)

நிற்போர்(இ.வ): தி.அருந்தஷா, ச.ரமணி, பா.மாலதி, ஜெ.அபிரா

# கல்வியே உலகாளும்



**பிரகலாதன் ஆதிரை**
தரம் - 09
யா / வதிரி இருதயக் கல்லூரி

விலங்கு வாழ்வு விலகிப் போக
விரும்பும் வாழ்வு வந்து சேரும்
உலகில் மனிதம் உயர்வுகாண
மாந்தர் பண்பு மலர நாளும்
கல்வி அறிவே கால்கள் என்று
காலை மலரும் கவிதை சொல்லி
நாளும் கல்வி நாடிக் கற்று
நாமும் வாழ்வோம் நலங்கள் பெற்று

எழுதப் படிக்கத் தெரிதல் வேண்டி
எங்கும் கல்வி தருதல் தானே
ஏழை எளியவர் இரவலர் என்று
வாசல் தோறும் கல்விக்கோலம்
வரைவோம் நாளும் வானம் தொடவே
விரைந்து கற்று பகுத்து அறிவோம்
தரைதொடும் கால்களில் சில்லுகள் பூட்டி
வாசல்கள் எங்கும் கல்வியைத் தருவோம்.

பாடநூலும் பட்டறிவும் உயர்
ஆய்வினோடு அரசியலும்
தேடி நாம் திரட்டி வந்த
தாயவள் கல்வித் திரவியத்தை
ஆளும் அறிவியல் உச்சமென
கணணியை அரியணை ஏற்றிடுவோம்
கோள்கள் தோறும் தமிழ்மொழியை
கொலுவில் வைத்துப் போற்றிடுவோம்.

அறநெறிகள் தழைத்து ஓங்கி
கருணை மழை பொழியட்டும்
வேரெனவே ஆன்மீகம் எம்
நெஞ்சமெலாம் பரவட்டும்
ஆற்றலோடு திறன்கள் யாவும்
துறைகள் தோறும் இணையட்டும்
அறிவியலின் பரப்பில் நெஞ்சம்
சிறகு இரண்டும் விரிக்கட்டும்.

அனைவரும் கற்றவர் என்பதில் தானே
அறிவது பரந்து ஆனந்தம் பெருகும்
எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகுமாம்
ஏழ்மை வறுமை ஓடியே ஒளியும்
அறிவியல் பரப்பில் அதிசயம் நிகழும்
ஆறு அறிவு அறுகாய்ப் பெருகும்
நெறிமுறை தவறா நேசமோ மலரும்
நேரிய வாழ்வதை மானிடம் நுகரும்.



# பொதுவியல்

# சிறுவர் மருத்துவம்



இன்றைய அவசர உலகில் சிறுவர் மருத்துவ மானது அனைவரும் அறிந்திருக்க வேண்டிய விடயமாகும். கூட்டுக்குடும்ப வாழ்க்கை ஒடுங்கி தனிக் குடும்பமானதுடன் பிரசவிக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையும் குடும்பங்களில் குறைவடை கின்றமை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. அறிவு வளர்ச்சியுடன் அக்கறையும் சிறார்களைச் சுற்றி அதிகரிப்பதால் சிறுவர் மருத்துவம் பற்றி யாவரும் சற்று அறியும் வகையில் விளக்க முனைகின்றேன்.

**Dr. S. சூரிகா,**
மாவட்ட வைத்திய அதிகாரி.
பிரதேச வைத்தியசாலை.
கரவெட்டி.

சிறுவர்கள் என்று 12 வயதுக்கு குறைந்தவர்களை மருத்துவத்தில் கருதுவது உண்டு. பிள்ளை பிறந்த காலத்திலிருந்து வளரும் வரை பெரும்பாலும் சிறு சிறு நோய்களுக்கு உட்படுவது உண்டு. அந்த வகையில்,

**1) காய்ச்சல் :–**

இது பல நோய்களின் பிரதான அறிகுறியாகக் காணப்படுகின்றது. காய்ச்சல் என்பது உடல் வெப்பநிலை 98.4 F அல்லது 37 Cயை விட அதிகரிப்பதே ஆகும்.

காய்ச்சலான உடலினுள் உட்புகும் கிருமி மற்றும் பிறபொருட்களுக்கு எதிராக எமது உடலின் எதிர்ப்புசக்தி சண்டையிடுவதால் ஏற்படும் வெப்பத்தினால் உருவாகின்றது. காய்ச்சல் வருவது எமது உடலில் உள்ள எதிர்ப்புசக்தி நன்றாகத் தொழிற்படுவதை எடுத்துக்காட்டுகின்றது. இவ் வெப்ப நிலை சதாரணத்திலும் பார்க்க 10 கூடுதலாக இருப்பின் பிரச்சனை இல்லை. மாறாக 20 மேல் கூடும்பொழுது சில சிறார்களுக்கு நரம்பியல் தொகுதியின் தொழிற்பாடு வேறுபடுவதால் காய்ச்சல் வலிப்பு வருவதற்கான சாத்தியம் உள்ளது. எனவே சிறார்களின் உடல் எடைக்கேற்ப பரிந்துரைக்கப்படும் அளவிலான பனடோல் / பரசிற்றமோல் கொடுப்பது நன்று. காய்ச்சலை வெப்பமானி கொண்டு அளவிடுவதே சாலச் சிறந்தது.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஓரிரு தினங்களில் காய்ச்சல் குறைவடையும். காய்ச்சலற்ற நேரங்களில் குழந்தை சாதாரணமாக இருந்தால் பெரும்பாலும் மேலதிக மருந்துகள் தேவைப்படுவதில்லை.

காய்ச்சலானது சளிக்காக வயிற்றுளைவுடன் புண்களினால் தொண்டையரிப்புடன் சில வேளைகளில் தனியாக வைரஸ் கிருமியினால் ஏற்படுகின்றது. அதைத்தவிர ஒவ்வாமையின் அறிகுறியாகவும் காணப்படும்.

சிறார்கள் அசாதாரணமாகக் காணப்படும் பொழுது வைத்தியரை நாட வேண்டும்.

**2) தடிமன் தும்மல் :-**

நாசியூடாக ஒவ்வாமையான பொருட்கள் மற்றும் சிலவேளைகளில் கிருமிகள் செல்ல முனைவதனால் உடலானது தும்மல் முறையினால் அக்காரணியை அகற்ற முயலுதலாகும். ஒவ்வாமை அல்லது வீசிங் உள்ள குடும்பத்தில் இது ஒவ்வாமையின் முதல் வெளிப்பாடாகவும் வரும். தூசி நிறைந்த காலங்களிலும் முகக்கவசம் பாவிப்பதன் மூலம் இதன் தாக்கத்திலிருந்து தப்பிக்கலாம்.

**3) இருமல் சளி:-**

சுவாசக் குழாயில் ஏற்படும் தொற்றினூடாக ஏற்பட வாய்ப்பு அதிகமாக உள்ளது.

**4) வயிற்றுளைவு வயிற்றோட்டம் சத்தியும்:-**

உணவுக்கால்வாயில் ஏற்படும் அசாதாரண மாற்றத்தால் ஏற்படும். உணவுக் கால்வாயில் உட்சென்ற கிருமி அல்லது ஒவ்வாத உணவினை வெளியேற்றும் பொறிமுறையாகும். ஆனால் இவ்வெளியேற்றத்தின்போது உடலிலுள்ள பெருமளவு நீர் உப்பு மற்றும் சுரப்புக்கள் இழக்கப்படுவதனால் அதனை ஜீவனி மூலம் ஈடுசெய்வது நன்று. குழந்தை சோர்வாகவோ அல்லது சலம் வெளியேறுவது குறைவாகவோ இருந்தால் வைத்தியரை அணுக வேண்டும்.

**5) வீசிங் அஸ்மா முட்டு:**

எமது சுவாச வழியில் ஏற்படும் அசாதாரண சுருக்கத்தால் உடலுக்குள் உட்செல்லும் வெளிச்செல்லும் வளியானது ஏற்படுத்தும் ஒருவகையான ஒலி.

இது பிரதானமாக ஒவ்வாமையால் ஏற்பட்டாலும் சுவாச வழியில் ஏற்படும் கிருமித் தொற்று ஏற்பட வாய்ப்பு உள்ளது.

குழந்தை தொடர்ச்சியாக அல்லது இரவு வேளைகளில் கூடுதலாக இருமுவதுடன் வித்தியாசமான சுவாச சத்தம் மற்றும் நெஞ்சு அசைவு வேறுபட்டுக் காணப்படலாம். பிள்ளை சுவாசிக்க அவதியுறுவதை ஆரம்பத்திலேயே கண்டறியப் பழக வேண்டும். மருத்துவ ஆலோசனையைப் பெறுவதோடு ஒவ்வாமைக்கான காரணத்தை கண்டறிந்து தவிர்த்தல் நன்று. இக்குழந்தையும் முகக்கவசம் அணிவது நன்று.

### ஏ) உடலில் சிறு சிறு புண்கள்:

குழந்தைகள் விளையாடுவதனால் மற்றும் சிறு காயங்களால் உடலில் புண்கள் ஏற்படும். ஆரம்பத்திலேயே குழந்தை விளையாடினால் தூய்மையாக வைத்திருத்தல் அவசியமானது. தவறின் இப் புண்களுடாக கிருமி தோல் மற்றும் இரத்தத்தில் கலக்கும் சாத்தியம் காணப்படும். எந்நோயாக இருந்தாலும் சிறார்களின் செயற்பாட்டில் ஏற்படும் சிறு மாற்றத்தையும் பெற்றோர் கண்டறிந்து அருகிலுள்ள வைத்தியரிடமும் ஆலேசனை பெறுவது நன்று.

**நோய்கள் குணமடைதல்**

பெரும்பாலான நோய்கள் 03 - 05 நாட்களில் குணமடையும் மருத்துவ பாவனை இதனை சிறிது விரைபடுத்தும். ஆகவே பெற்றோர் பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளைப் பொறுமையாக வழங்க வேண்டும். பிள்ளையின் நிலை மோசமடையின் மீண்டும் வழங்க வேண்டும்.

பிள்ளையின் நிலை மோசமடையின் மீண்டும் மருத்துவரை உடன் சந்திக்கலாம். அல்லது இரு தினங்கள் மருந்து வழங்கிப் பார்க்க முடியும். மாறாவிட்டால் அதே வைத்தியரை அணுகுவதனூடாக வேறு நோய் நிலைகளை விரைவாகக் கண்டறிய வாய்ப்புக்கள் அதிகம். குறித்த வைத்தியர்கள் சிறார்களுக்குத் தேவையான மேலதிக சிகிச்சைக்கு வழி காட்டுவார்.

எமது எதிர்கால சமூகத்தின் நலனுக்காய் அனைவரும் இணைந்து பயணிப்போமாக.





**வல்லிபுரம் காந்திமதிநாதன்,**
வதிரி பொதுநூலக வாசகர்,
கரணவாய் வடக்கு.

# இதய நே[illegible] யோ[illegible]ற்சி[illegible] [illegible]லோச[illegible]



எமக்கு இதயநோய்கள் வராமலும், வந்த நோய் நீங்குவதற்கும் பயனுள்ள இயற்கைச் சிகிச்சையாக யோகாசனப் பயிற்சி அமைந்துள்ளதென இதயநோய் பற்றிய ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள். நினைவுக்கெட்டாத நெடுங்காலமாக யோகாசனப் பயிற்சி உடலுறுப்புக்களை ஒழுங்காகச் செயற்பட வைக்கும் சீரான சிறந்த ஓர் மருந்து என நோய் ஆராய்ச்சியாளரும், டாக்டருமாகிய இந்தியாவைச் சேர்ந்த எஸ்.என்.கோஸ்லா குறிப்பிடப்பட்ட மையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

வெகுகாலமாக மனிதன் தனக்குத் தேவையானவைகளை உடல் உழைப்பாலே பெற்று வந்தான். ஆனால் விஞ்ஞான தொழில் வளர்ச்சியின் விரைவான முன்னேற்றங்கள் காரணமாக தாராள ஓய்வு முறைகளையும், ஓடியாடி உழைக்காத மாற்று வாழ்க்கை வசதிகளையும் பெற முயற்சிக்கின்ற வேளைகளில் மாரடைப்பு என்றும் திடீர் நோய் ஏற்படுவதாகவும் கூறப்படுகிறது.





இதுவரை நடந்தேறிய நோய்கள் பற்றிய ஆய்வுகளில் யோகாசனப் பயிற்சி முறைகள் இதய ஆரோக்கியத்திற்கு பெருமளவு இன்றியமையாதலை எனக் காணப்படுகின்றன.

யோகாசனப் பயிற்சியின்போது உடலின் முக்கிய உறுப்புக்களான இதயம், நுரையீரல், மூளை, சிறுநீரகம், தசை நரம்புகள் ஆகியவற்றிற்கு இரத்த ஓட்டம் தங்கு தடையின்றிச் சீராக செல்லுகிறது. இவ்வுறுப்புக்கள் தேவையான பிராணவாயுவின் எண்பது முதல் தொண்ணூறு சதவீதம் வரை உபயோகத்துக்கு உட்படுத்தப்படுவதாகத் தெரியப்படுகிறது. யோகப்பயிற்சியானது உடலுறுப்புக்

களை ஒழுங்கான வேலைக்குச் சீர்படுத்துவது மட்டுமல்ல, எரிச்சல், கோபம், உணர்ச்சி வசப்படுதல், பதற்றம், ஆகிய குணங்களிலிருந்து விடுபடுவதாகவும், அறிய முடிகிறது. யோகப்பயிற்சியின் அளவில் கால அளவே முக்கியமானது. தினமும் தவறாமல் பயிற்சியினை மேற்கொள்வதால்தான் சிறந்த பயனைப் பெற முடியும்.



"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்ற முதுமொழிக்கிணங்க ஒரு மனிதன் நலமே வாழ தினமும் யோகாசனப் பயிற்சியை மேற்கொண்டு வாழ வேண்டி நிற்கும் இவ்வேளை யோகாசனப் பயிற்சிகள் (ஆசனங்கள்) பற்றிய நடைமுறை ஒழுங்குகளை அதற்குரிய நூல்கள் மூலம் (உதாரணம்: ஆஸ்மா, நீரிழிவு, இரத்த அழுத்தம், நிக்கும் யோகாசனங்கள்) படித்து அறிந்து செயற்பட வேண்டி நிற்கின்றேன்.





கல்வி என்பது
தெரியாததைத் தெரியச் செய்வதன்று.
ஒழுக்கத்தை ஒழுகச் செய்வதும் இன்பம் அளிப்பதுமாகும்.
**ரஸ்கின்**



**மகேஸ்வரன் மயூரன்,**
தலைவர்.
ஸ்ரீ முருகன் சனசமூக நிலையம்.
அல்லையம்பதி. துன்னாலை.

# மனித வளர்ச்சியில் ஆலயங்களின் வகிபங்கும் அதில் இன்று ஆலயங்களின் இருப்பும்

ஒரு மனிதனை முழுமையாக்குவதில் கல்விக்கு நிகராக அவனுடைய மதம் இடம்பிடித்துக் கொள்கின்றது. ஒருவன் சார்ந்த மதம் அவனுடைய வாழ்வியல் நெறிகளை வகைப்படுத்தி அவனை பூரண மனிதனாக முன்னிலைப் படுத்த இன்றி அமையாததாக விளங்குகிறது.

குறிப்பாக இந்து மதத்தை எடுத்து நோக்குவோமாக இருந்தால் அதன் ஒவ்வொரு செயற்பாடுகளும் வாழ்வியலோடு இணைத்து விஞ்ஞான விளக்கம் ஒன்றைத் தெளிவூட்டக்கூடிய வகையில் அமைந்து இருக்கும். உதாரணமாக அதிகாலையிலே எழுந்து ஆலயம் செல்லுதல், திரு அலகிடுதல், திரு மெழுக்கிடுதல் குட்டிக் கும்பிடுதல், தோப்புக்கரணம் போடுதல், ஆலயத்தை வலம் வருதல் ஆகிய செயற்பாடுகளை உற்று நோக்குவோமாக இருந்தால் மனிதனின் உடல் ஆரோக்கியத்திற்கான உடற்பயிற்சியாக அமைகின்றது. திருவிழாக்கள் மனித சமூகம் ஒன்றித்து ஒற்றுமையாக இணைந்து செயற்பட்டு சமூக ஒற்றுமையை வெளிப்படுத்த ஏதுவாகிறது. இவ்வாறே ஆகமம் சார்ந்த ஆலய கிரியைகளுக்கும். அபர கிரியைகளுக்கும் விளக்கங்கள் கூறிவிட முடியும். இது நிற்க.

கலை வளர்ச்சியின் இருப்பிடமாகவும் ஆலயங்கள் விளங்குகிறது நவராத்திரி காலப்பகுதியிலே ஆலயம் சார்ந்த அமைப்புகள் பண்ணிசை, பேச்சு, மாலை கட்டுதல், கோலம் போடுதல் ஆகிய போட்டிகளை நடாத்தியும் விழாக்காலங்களில் இசைக்கலை, நடனக்கலை, கூத்துகள், பேச்சுகள் பட்டி மன்றங்கள் என்பவற்றை நடாத்தியும் பங்கெடுத்துக் கொள்கின்றது.

இவ்வாறு செயற்பாடுகள் மூலம் நம்மை வழிப்படுத்தும் நமது மதம் பல இதிகாசங் களையும், புராணங்களையும் எமக்காகத் தந்திருக்கிறது. இவை ஒவ்வொன்றும் பல உதாரண வரலாறுகளோடு நம்மை வழிப்படுத்துகிறது. இவற்றில் ஆலயம் சார்ந்ததாக புராணபடன நிகழ்வுகள் அமைகின்றது. கந்தபுராணம், பெரியபுராணம், திருவாதவூரடிகள் புராணம், ஏகாதசி புராணம், திருவிளையாடற்புராணம் ஆகியன இக்காலத்திலே ஆலயங் களிலே படிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதிலும் யாழ்ப்பாணத்தின் கலாச்சாரம் என வர்ணிக்கப்படும் கந்தபுராணம் ஏனைய பிரதேசங்களோடு ஒப்பிடும்போது வடமராட்சியிலே பல ஆலயங்களில் படிக்கப்பட்டுவருகின்றமை கண்கூடு. பல ஆலயங் களில் பூரணமாகவும், சில ஆலயங்களிலே கந்தஷஷ்டி காலப்பகுதியில் சூரபத்மன் வதைப்படலம் மட்டும் படித்து வருகிறார்கள்.

புராணங்களின் நாயகமாக விளங்கும் கந்தபுராணத்தை ஆறுமுகநாவலர் யாழ்ப்பாண கலாச்சாரமாகக் கைக்கொள்ள காரணம் இதிலே மனிதன் பிறந்ததில் இருந்து அவனுடைய இறப்பு வரையில் அனைத்துப் பருவங்களுக்குமான வாழ்வியல் முறைகளான அறம், தர்மம், காதல், காமம், கல்வி, தவம், யுத்ததர்மம், இல்லறம், அடக்கம், வழிபாடு, தண்டனை, சிற்றின்பம், பேரின்பம் என்பன கூறப்பட்டிருக்கிறன. இப்புராணத்தை ஆழக் கற்றவர் பூரணமான மனிதராவார் என்பார்கள். இவ் உண்மையை பலர் வாழ்வியலிலே நமக்கு காட்டியும் இருக்கிறார்கள்.

இவ்வாறு ஆலயங்கள் பங்கெடுத்துவரும் நிலையில் எதிர்காலத்தில் இவை ஒவ்வொன்றும் நமது சமூகத்தை விட்டு அருகிச்செல்லும் நிலையும் எம்மருகில் உள்ளமையும் ஆரோக்கிய மானதல்ல. ஆலயத்திற்கு வரும் அடியார்களின் வரவு மிகக் குறைந்து செல்கிறது. ஏனைய மதங்களில் காணப்படுகின்ற வருகைக்கான கட்டுப்பாடு எமது மதத்திலே இல்லை, வெள்ளிக்கிழமைகளில்கூட ஆலயங்களிலே அடியார்களைக் காண முடிவதில்லை. ஆதிகாலங்களிலே இயந்திர வலுக்கள் அற்ற நிலையிலும் முழுமையான பங்கெடுத்தலை வழங்கினார்கள். இன்று இயந்திர உலகிலே மனித தேவைகள் இலகுவாக்கப்பட்டும் ஒரு குறித்த நேரத்தைக்கூட எமக்காக ஆலயங்களில் செலவழிக்க முடியாதவர்களாகச் சரியை தொண்டுகளைக்கூடப் பணம் கொடுத்து நிறைவேற்றிவிட்டு உடற்பயிற்சிக்காகப் பணம் செலவழித்து வருகின்றோம்.

பல ஆலயங்களிலே தேவாரம் இசைப்பதற்கு இன்றும் முதிர்ந்த ஓதுவார்களே காணப்படுகிறார்கள். சிலவேளை அவர்கள் சமூகம் தராதுவிடின் தேவாரம் படிக்காத நிலைகள்கூட ஏற்படுகின்றமை வேதனையே அதுமட்டுமல்ல பல இடங்களில் சிறுவர் களுக்கு இடம்கொடுக்காத நிலையும் காணப்படுகின்றமை கண்கூடு. இதனால் எதிர்வரும் காலங்களிலே வழிபாட்டு முறைகளின் தன்மை எவ்வாறு இருக்கப்போகின்றது என்பதும் சிந்திக்க வேண்டியதே.

புராணபடன நிகழ்வுகளை எடுத்துநோக்கும்போது இளையவர்களின் பங்கு பூச்சியம். பல இடங்களில் புராணபடன நிகழ்வுகள் நின்றுவிடக்கூடாது என்பதற்காகச் சம்பளம் கொடுத்து புராணபடன நிகழ்வுகளை நிறைவேற்றி வருகிறார்கள். இதில் ஆர்வமுள்ளவர் களின் செயற்பாடுகள் ஸ்தம்பிக்கும்போது அடுத்த கட்டத்தில் இவற்றை முன்னெடுத்துச் செல்வதற்கு எவருமில்லாத துர்ப்பாக்கிய நிலையே காணப்படுகின்றது.

மாணவர்களை அறநெறி சார்ந்த பிள்ளைகளாக மாற்றுவதற்கு அறநெறிப் பாடசாலைகள் நடாத்தப்பட்டும் அவற்றில் பங்குபெறும் மாணவர்களின் வீதம் அருகி வருகின்றமை எம் மத்தியிலே நிலவும் கலாச்சாரப் பிறழ்வுக்கு வலுச் சேர்த்துவிடுமோ என்ற ஐயப்பாடு எழுகின்றது.

ஆலயங்கள் ஆகம விதியின்பாலிருந்து ஒழுகுதல் என்பது ஒரு கட்டுப்பாடு இந்தக் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து ஒழுகுகின்றபொழுது தனிமனித விழுமியம், சுயகட்டுப்பாடு, அறம் என்பன முன்னொரு காலத்தில் நிலைபெற்றிருந்தது. ஆனால், இன்று இந்த நெறி முறைகள் தவறி இடம்பெறுகின்ற நிலை, வியாபாரத்தை மையமாகக்கொண்டு இயங்க முனைகின்ற ஆலயத்தின் போக்குகள், இளம் சமூதாய மத்தியில் நற்செய்தியை விளைவிப்பதான வழித்தடங்களைப் பதிவு செய்யவில்லை.

இவ்வாறு இருக்கின்ற நிலைமையைச் சீர்செய்து எமது சிறார்களை அறத்தின்பாற் படுத்தி ஆலய வழிபாடுகளில் பற்றுதலோடு பங்குபெறச்செய்து அவர்களை கலாச்சாரப் பிறழ்விலிருந்து காத்துப் பக்குவப்படுத்த வேண்டிய கடப்பாடு தற்போதைய ஆலய பரிபாலகர்களையே சாரும்.

எமது கரவெட்டிப் பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட துன்னாலைப் பகுதியில் பல ஆலயங்கள் காணப்படுகின்றது. ஆகமவிதியின்பாற்பட்டு ஒழுகும் ஆலயங்களும் கிராமிய வழிபாட்டுமுறையைப் பின்பற்றி ஒழுகும் ஆலயங்களும் உண்டு. ஆகமவிதிக்கு அப்பாற்பட்டு இயங்கும் ஆலயங்களும் உண்டு. ஆகமவிதிக்கு உட்பட்டு இயங்கும் ஆலயங்களாக அல்லையம்பதி ஸ்ரீ சிவசுப்பிரமணியர் தேவஸ்தானம், அல்லையம்பதி காலைக்கூடல் ஞானவைரவர் தேவஸ்தானம், துன்னாலை கோயிற்கடவை சித்தி விநாயகர் தேவஸ்தானம், துன்னாலை ஆயில்நின்றொல்லை விநாயகர் ஆலயம் (வல்லியானந்தப் பிள்ளையார் ஆலயம்) துன்னாலை புளியங்கியான் சிதம்பர விநாயகர் ஆலயம், துன்னாலை வெலிக்கந்தோட்டப் பிள்ளையார் ஆலயம் ஆகியன விளங்குகின்றன. இவ் ஆலயங்களில் எல்லாம் மகோற்சவப் பெருவிழாக்கள், நவராத்திரி உற்சவம், கந்தஷஷ்டி உற்சவம், பிள்ளையார் கதை உற்சவம், பெருங்கதை, திருவெம்பாவை உற்சவம், கந்தபுராணபடன நிகழ்வு என்பன நடைபெற்று வருகின்றமை சிறப்பு. இவ்வாலயங்களில் கோயிற்கடவை சித்தி விநாயகர் ஆலய மகோற்சவம் மகா சிவராத்திரியை சப்பைரத உற்சவ தினமாகக் கொண்டு சிவராத்திரி தினத்தன்று சாமப் பூசைகள் நிறைவடைந்தபின் சப்பைரத உற்சவமும் அன்றையதினம் மாலை ரதோற்சவமும் இடம்பெற்று வருகின்றமை சிறப்பாகும். துன்னாலை மிந்திரன் அம்மன் ஆலயத்திலே ஆலய அமைப்புவிதிக்கு மாறாக விநாயகர் தான்தோன்றி விநாயகராக ஆலய ஈசான மூலையில் எழுந்தருளி இருக்கின்றார், இங்கு அலங்கார உற்சவம் தேர், தீர்த்த உற்சவங்களோடு நடைபெற்று வருகின்றது. ஆகம விதிக்கு அப்பாற்பட்டு வீட்டுத்தெய்வங்களாக இருந்த வீட்டம்மன் கோயில், பத்தினி அம்மன் கோயில் ஆகிய ஆலயங்களும் புதுப்பொலிவு பெற்று வளர்ச்சி கண்டிருப்பது

குறிப்பிடத்தக்கது. துன்னாலைப் பகுதியில் கடந்த ஒரு வருடத்திற்கு முன்னர் துன்னாலை நவிட்டான்பதி காளிகாம்பாள் சமேத மனோன்மணி அம்மன் ஆலயம் புதிதாக அமைக்கப் பட்டு வருடாந்த அலங்கார உற்சவம் இடம்பெற்று வருகின்றமையும் குறிப்பிட்டாக வேண்டும். இங்கு எல்லாம் காலம் தவறாத பூசைகள், கலாச்சாரத்தைப் பேணிக்காக்கும் வகையில் அமைந்த அடியவர் நடைமுறைகள், ஆடம்பரம் இல்லாத திருவிழாக்கள், கலை வளர்ச்சியை மையமாகக்கொண்ட நிகழ்வுகள், மக்களின் பங்களிப்போடு இணைந்த செயற்பாடுகள், என்பன வலுவாகப் பின்பற்றப்பட்டு வருகின்றமை பலமானதொரு விடயம். இங்கு நாம் பின்வரும் விடயங்களை இன்னும் வலுப்படுத்தின் எமது மதத்தின் விதிமுறை களையும் வளர்ச்சியையும் தக்கவைத்துக் கொள்ளலாம்.

01. ஆலய பூசைகளில் பங்குபெறுதலைக் கட்டாயமாக்கி உறுதிப்படுத்தல்.
02. ஆன்மீக சொற்பொழிவுகளை நடாத்துதல்.
03. கலைவிழாக்களை நடாத்துதல்.
04. பாடசாலைகள் ஊடாக மாணவர்களுக்கு விழிப்புணர்வுகளை மேற்கொள்ளல்.
05. இளைஞர் பங்களிப்போடு கூட்டுப்பிரார்த்தனைகளை, புராண படனங்களை நடாத்தல்.
06. வழிபாட்டின் முக்கியத்துவத்தை சிறுவர்களுக்கு எடுத்துரைத்தல்.
07. சிறுவர்களுக்கு ஆலய செயற்பாடுகளில் முன்னுரிமை கொடுத்தல்.
08. முன்னுதாரணமாக ஆலய செயற்பாடுகளை நடாத்துதல்.

ஆக ஆலயம் ஒன்று மட்டுமே அனைவரையும் அணைக்கத்தக்க ஓர் இடமாகும், இவ் ஆலயங்களைப் பரிபாலனம் செய்கின்ற பரிபாலகர்கள், நிர்வாக சபையினர் தனியே வழிபாட்டு நிகழ்வுகள், திருவிழாக்களோடு நின்றுவிடாது மேற்போந்த விடயங்களிலும் கவனம் செலுத்தி எமது சமயத்தின் வளர்ச்சிக்கு பங்குதாரர்கள் ஆகவேண்டும் என்பதே பேரவா ஆகும்.

தருமம் என்று ஒருபொருள் உளது தாவிலா
இருமையின் இன்பமும் எளிதில் ஆக்குமால்
அருமையில் வரும் பொருள் ஆகும் அன்னதும்
ஒருமையினோர்க்கலால் உணர்தற்கு ஒண்ணுமோ

- கந்தபுராணம் காசிபனுபதேசப்படலம்

*அடுத்தவர் ஆயிரம் வழிகளில் வாழலாம்*
*ஆனால் உனக்கென சிறந்த வழியை நீ*
*தேர்ந்தெடுக்கும் வரையிலும்*
*வெற்றி என்பது உனக்கு ஒரு*
*கிடைக்காத பொக்கிஷமே.*

**அ. லக்ஷன்,**
தரம் - 09.
ஹாட்லிக் கல்லூரி.
கட்டைவேலி நூலகம்.

# இராவணன் முதல்
## *யூடியூப், டிக்டக் காலம் வரை*
### உலகின் முதற் சமயமான
# சைவத்தின் தொன்மையும் வளர்ச்சி

உலகிலுள்ள ஒவ்வொரு மதமும் ஒவ்வொரு காலத்தில் ஒரு மஹாபுருஷர் களால் அந்தந்த கால தேசத்துக்கேற்றவாறு தோற்றுவிக்கப்பட்டது. நமது இந்து மதம் ஒருவரால், காலத்திற்கேற்றவாறு தோற்றுவிக்கப்படாமல், உலகம் தோன்றின முதல், ஆண்டவராலேயே தோற்றுவிக்கப்பட்டு, எல்லாக் காலத்திற்கும் எல்லா மக்களுக்கும் ஏற்ற வகையில் அமைதியாக இருந்து கொண்டிருக்கிறது. நமது இந்து மதத்திற்கு ஒரு நாளும் முடிவு ஏற்படாது. ஆனால், குறைவு ஏற்படலாம். குறைவு அவ்வப்போது தோன்றும். இறைவனின் அவதாரங்களினாலும், ஞானி களாலும், சித்தர்களாலும் நிறைவுபெற்றுவிடும். இந்து மதத்தில் நடக்கக்கூடிய ஒவ்வொரு காரியத்திற்கும், சடங்கிற்கும் அர்த்த முண்டு.

- நாராண ஸ்மிருதி
  மற்றைய மதஸ்தவர்கள் பைபிளை, குரானை,

ஜெண்டவஸ்தாவை, திரிபீடகத்தை, க்ரந்த ஸாவேஹபைத் தங்கள் மூல நூல் என்கிற மாதிரி நம் மதத்துக்கு அது வேதம்தான் நான்கு வேதத்தை மையமாகக் கொண்டு மற்ற பத்து வித்யைகளுமே ஏற்படுகின்றன. இவை பதின்நான்கும் பிரமாண நூல்களாகும்.

- நான்கு வேதங்கள்
- வேதங்களின் ஆறு அங்கங்கள்



அத்தோடு மீமாம்ஸை, நியாயம், புராணம், தர்ம சாஸ்திரம் என்ற நான்கு. "வேதமோ டாங்க மாயினான்" என்று தேவாரம் சொல்லுகிறது. நான்கு வேதமும், ஆறு அங்கமுமான இந்தப் பத்தும் ஈஸ்வர ஸ்வரூபம் என்று அதில் சொல்லப்பட்டிருக்கின்றது. இவை போக மேலும் நான்கு மீமாம்சை, நியாயம், புராணம், தர்ம சாஸ்திரம் ஆகவே பதினான்கு தர்மப் பிரமாணங்களை "சதுர்வித்யா" என்பார்கள். இந்தச் சதுர்த்தச வித்யை களை நளன் கற்றுக்கொண்டான் என்று நள சரித்திரமாகிய நைடதத்தில் சொல்லப்படு கின்றது. (தெய்வத்தின் குரல்)

கிறிஸ்துவுக்கு முன் ஆறாயிரம் ஆண்டளவில் இலங்கையை இராவணன் ஆண்ட வரலாறு இராமாயண காவியத்தில் கூறப்பட்டுள்ளது. "இராவணன் மேலது நீறு" என்று ஞானசம்பந்தர் இராவணனைப் போற்றி பாடியுள்ளார். இராவணன் இருக்கு வேதத்தை நன்கு கற்றுணர்ந்தமையால் " புஸ்பக விமானம்" வைத்திருந்துள்ளான்.

சிவபெருமானின் அம்சமாக அவதரித்த ஸ்ரீசங்கரர் (கி.மு 788 - 820) காலடியில் ஸ்நயாரும் ஸ்வீகரித்துக்கொண்டு ஞானஉபதேசம் பெறக் குருவைத்தேடி நர்மதை நதிப் பக்கம் வந்தார். கோவிந்தபாதர் தன் தவ வலிமையால் அவரைப் புரிந்துகொண்டு வேதங்கள் அனைத்தையும் உபதேசித்தார். இப்படியாக த்வாபர யுகத்தில் தந்தை மகள் என்ற வழியில் வந்த பரம்பரை கலியுகத்தில் சிஸ்ய வழியில் வரும் குரு பரம்பரையாக மாறியது.

ஆதிசங்கரர் தான் பெற்ற உபதேசங்கள் யாவும் ஒரே இடத்தில் முடங்கிவிடாமல் எல்லாப் பகுதிகளுக்கும் பரந்து விரிந்து தழைத்து ஓங்க வேண்டுமென்று கருணை கொண்டார். இதற்காக அவர் நான்கு வேதங்களுக்கு நான்கு சிஷ்யர்களைத் தேர்ந்தெடுத்து பாரதத்தின் நான்கு திசைகளுக்கும், வடக்கே ஜோதிர்பீடம், கிழக்கே யாரி ஜெகன்னாதபீடம், தெற்கே சிரங்கேரிபீடம், மேற்கே த்வாரகாபீடம் என்று நான்கு பீடங்களை அமைத்து உலகம் உள்ளளவும் வேத சம்ஷணம் நிகழ்ந்து வேதநெறி தழைத்தோங்க வேண்டுமென்ற போக்கத்துடன் தன் நான்கு சிஸ்யர்களான ஸ்ரீ தோபகச்சாரியார், ஸ்ரீ பத்மமபாதர், ஸ்ரீ சுரேஸ்வரர், ஸ்ரீ ஹஸ்தாமலகர் ஆகியோரை முதல் பீடாதிபதிகளாக்கி வேதநெறி முறைகள் தழைத்தோங்க வித்திட்டார்.

தோடகச்சாரியார் மூலம் தோற்றுவிக்கப்பட்ட ஜோதிர்பீடத்தின் ஆறாவது பீடாதிபதியாக விளங்கியவர் ஸ்ரீ ஞானாந்த கிரி சுவாமி, 1959 ஆம் ஆண்டு வியாச பௌர்ணமியன்று "ஸ்ரீ ஞானனந்த நாம ஸங்கீர்த்தன மண்டலி", ஸ்ரீ ஞானானந்தகிரி சுவாமியின் திருவருளால் துவக்கப்பட்டு, உலகம் பூராகவும் நாம ஸங்கீர்த்தனத்திற்காக அர்ப்பணிக்கப்பட்டு ஒன்றாகவும் சேவை புரிந்து வருகின்றது. (ஞானானுபவம் - நாமாஜி)

வேதம், வேத விளக்கமான சிவாகமம் என்னும் இவ்விரண்டும் சைவசமய முதல் நூல்களாகக் கொள்ளப்படுகின்றன. இவை இரண்டும் இறைவனால் அருளப்பெற்றவை. இவை போன்றே சைவத்திருமுறையும் இறைவனால் அருளப்பெற்றதாகும். இறைவன் சம்பந்தப்பிள்ளையார் ஆகிய சற்குரவர்களை அதிட்டித்து நின்று சைவத் திருமுறையை அருளச் செய்தனர். இஃது என்துரை தனதுரையாக ஆகிய தேவார மொழிகளால் நன்கு தெளிவாகும். அன்றியும் "பித்தன்" எனவும் "தில்லை வாழ்ந்தனர்" எனவும், "உலகெலாம்" எனவும் இறைவன் அடியெடுத்துக் கொடுத்தமையும், திருவாசகம், திருக்கோவையார் என்பவற்றைத் தாமே தம் கைப்பட எழுதிக் காப்புச் செய்து கனகசபைக் கண்ணே

வைத்தமையும் ஆகிய இவையெல்லாம் சைவத்திருமுறை இறைவனது அருளிப்பாடு என்பதை உணர்த்தும் குறிப்புக்களேயாம். இறைவனது அருளிப்பாடான திருநெறியே தமிழ் ஆதலாலே சைவத்திருமுறை "தமிழ் வேதம்" என வழங்கப்பெறுகிறது. இன்னோரன்ன காரணங்களால் இருமொழி வேதங்களையும் ஓதியுணர்ந்த உவத்தல் காயந்தவற்ற உத்தமர் வேதத்துக்கு இணையான தமிழ் வேதமெனவே சைவத் திருமுறையினைக் கொள்வர்.

திருஞானசம்பந்தரின் தேவாரத் திருப்பதிகங்கள் தொடக்கம் சேக்கிழாரின் பெரிய புராணம் வரை உள்ள பன்னிரண்டு பாடல்களே திருமுறைகளாகும். சைவத்திருமுறையைத் தொகுத்தவர் நம்பியாண்டார்நம்பி. தொகுப்பித்தவர் முதலாம் இராஜஇராஜசோழன் ஆவார். இவருக்குத் திருமுறை கண்டசோழன் என்ற பெயரும் உண்டு. சங்கமருவிய காலப் பிற்பகுதியில் வாழ்ந்த சிவனடியார்களுள் காலத்தால் மூத்தவரான பெண்ணடியார் காரைக் காலம்மையாரின் காலத்துக்குப் பின்பே திருமுறைகள் வகுக்கப்பட்டன. (தரம் 07 சைவநெறி)

நம் முன்னோரது வரன் முறையை நோக்குமிடத்து நம்மவரது மலர்ச்சியான வாழ்வுக்கும், திருமுறை பயிற்சிக்கும் உள்ள இயைபு தெற்றெனத் தெரியும். சைவத் திருமுறைகளைத் தேடி தொகுத்துப் பேணிப்போற்றும் கைங்கரியங்களுடனே நம்மவரின் பொற்காலம் உதயமானது. சைவத்திருமுறையைப் பன்முறை தவறாது ஓதும் ஓதுவார் பலர் பெருஞ்சிறப்புப் பெற்றியிருந்த வளமறிந்த காலப்பகுதி ஒன்றும் இருந்தது. அக்காலப் பகுதியில் தஞ்சைப்பெருங் கோவிலில் நாற்பத்தெட்டு ஒதுவார் இருந்தமை கல்வெட்டில் குறிக்கப்பட்டிருக்கின்றது. திருஞானசம்பந்தரின் திருக்கடைம்மாப்பு ஒதுவதிலும் இன்னும் சிலர் நம்பியின் திருப்பாடல்களை ஓதுவதிலும் இன்னும் சிலர் திருநாவுக்கரசு சுவாமிகளின் தேவாரங்களை ஓதுவதிலும் பாண்டித்தியர் பெற்றிருந்தனர் என்பது தெரிகிறது. வேத மோதுதலில் இவற்றில் சிலர் இருக்கு வேதத்திலும் இன்னும் சிலர் யசூர் வேதத்திலும் பெயர் பெற்றிருந்தார்கள்.

இவ்வாறாக திருமுறைப் பயிற்சி உச்சநிலை பெற்றிருந்த காலத்தே எமது பொற்காலமும் உச்சநிலை பெற்றிருந்தது. உலகப்பெரும் புலவர் வரிசையிலே முன்னணியில் நிற்கத்தக்க செந்தமிழ்ப் புலவோர் தோன்றினர். திருமுறை வாசகங்களில் ஈடுபட்டு மன வாசகங்கடந்தார் எனவும் நிரம்பு அழகியர் எனவும் நீறணி பவளக்குன்றம் எனவும் பெயர் சூட்டிக்கொண்ட அக்காலத்தேதான் நம்மவோர் தேசு நானா தேசங்களிலும் பிரகாசித்தது.

தென்கிழக்காசிய நாடுகளிலும், தூர கிழக்கு நாடுகளிலும் அரசவைகளிலே நம்மவர் புரோகிதராய் அமர்ந்தனர். திருமுறை ஓதுதலில் பின்னடைவு ஏற்பட்ட இக்காலம், எமது பொற்காலத்தின் வீழ்ச்சிக்காலமாயிற்று. (சைவத்திருமுறைத்திரட்டு - சிவதொண்டர் சபை, யாழ்ப்பாணம்)

இவ்வீழ்ச்சியைத் தொடர்ந்து பரமகம்சர்கள், ஞானிகள், மகரிசிகள், சித்தர்கள் உதயமானார்கள். இரமண மகரிஷி, தமிழகத்தைச் சேர்ந்த (டிசெம்பர் 30, 1839 - ஏப்ரல் 14, 1950) ஆன்மீகவாதியாவார். அத்வைத வேதாந்த நெறியைப் போதித்த இவர் திருவண்ணாமலையில் வாழ்ந்தவர். திருவண்ணாமலையில் அமைந்துள்ள ஸ்ரீ ரமண ஆச்சிரமம் உலகப் புகழ் பெற்றதாகும். ரமணரின் முக்கிய உபதேசம் "நான் யார்" என்னும் ஆன்ம விசாரம், ஞான மார்க்கத்தில் தன்னை அறிதல் அல்லது முக்தி பெறுதலே

இவ்வழியின் நோக்கம். உபநிடதங்கள் மற்றும் அத்வைத வேதாந்த நெறிகள் ஆகிய வற்றின் சாரத்தினை இவரது உபதேசங்களில் காணலாம். ஆதிசங்கரின் ஆக்கமான "ஆத்ம போதம்" தனை தமிழில் வெண்பாக்களாக இரமணர் வழங்கியுள்ளார். அவரின் படைப்புக்களாவன உபதேச உந்தியார், உள்ளது நாற்பது, உள்ளது நாற்பது அனுபந்தம், ஏகான்ம பஞ்சகம், ஆன்ம வித்தை, ஸ்ரீ அருணாசல நவமணிமாலை, ஸ்ரீ அருணாச்சல பதிகம், நான் யார், விவேக சூடாமணி, அவதாரிகை, பகவத்கீதா சாராம், குருவாகக் கோவை, ஸ்ரீ ரமண நூற்றிரண்டு.

ஆதிசங்க பகவத் தஷ்ணாமூர்த்தி தோத்திரம், ஆன்மபோதம் போன்றவற்றைத் தமிழில் ஆக்கியுள்ளார். மகரிசியின் குரு அருணாசலம் அவர் சமாதி அடையும் வரை ஆச்சிரமத்தை விட்டு எங்கும் செல்லவில்லை. இவரின் இயற்பெயர் "வெங்கடராமன் அய்யா" என்பதாகும். இவரது சீடர்களில் ஒருவரான காவிய கண்ட கணபதி முனி என்றவர் சமஸ்கிருத பண்டிதராவார். இவரால் "இரமண மகரிசி" எனப் பெயர் பெற்றார்.

ஸ்ரீ ராம கிருஷ்ண பரமகம்சர் (பெப்பரி 18, 1839 - ஆகஸ்ட் 16, 1886) அவர்களின் இயற் பெயர் ஸ்ரீ க்ஹாதர சட்டோபாத்மாயர் என்பதாகும். இவர் 19 ஆம் நூற்றாண்டின் இந்தியாவின் தலைசிறந்த ஆன்மீகவாதிகளில் ஒருவராவார். சுவாமி விவேகானந்தரின் குரு ஆவார். அனைத்து மதங்களும் ஒரே இறைவனை அடையும் வெவ்வேறு வழிகள் என்பதை தன் அனுபவத்தின் மூலம் உணர்ந்து அதையே வலிறுத்தியவர். இவரின் சீடரான விவேகானந்தர் வேதாந்த மதத்தின் பாதைகளை இராஜமோகம், கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம் என நான்காகப் பிரித்து காலத்துக்கு ஏற்றவகையில் உலகுக்களித்த பெருமை இவரையே சாரும். அவர் உலக அரங்கில் இருந்தது ஏதோ பத்து ஆண்டுகள்தான் ஆனால், மனித குல ஈடேற்றத்திற்காக தத்துவம், மதம், மனஇயல், சமூகவியல், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், வானிலை, கலை, இசை, என்று பேசாத துறை எதுவுமே இல்லை. அவை ஒவ்வொன்றிலும் ஒரு புதிய ஒளியை பாய்ச்சியுள்ளார். அவை சொற்பொழிவு, கட்டுரை, கடிதம், கவிதை, உரையாடல், பேட்டி, பொன்மொழி என்று பல அம்சங்களைக் கொண்டது அவரது இலக்கியம்.

சுவாமி விவேகானந்தர் 19 ஆம் நூற்றாண்டில் இந்தியாவின் தலைசிறந்த சமய தலைவர்களுள் ஒருவராவார். இவரின் இயற்பெயர் நரேந்திரநாத் தத்தா என்பதாகும். இவர் இந்தியாவிலும் மேலை நாடுகளிலும் அத்வைத வேதாந்த தத்துவங்களை அடிப்படையாகக் கொண்ட பல சொற்பொழிவுகள் ஆற்றியுள்ளார். 1893 ஆம் ஆண்டு அவர் சிகாகோவில் உலக சமயங்களின் பாராளுமன்றத்தில் நிகழ்த்திய சொற்பொழிவுகள் ஞானதீபம்" என்ற பெயரில் பதினொரு சுடர்களாக வெளியிடப்பட்டன. கல்கத்தா பேளூரில் இராமகிருஷ்ண இயக்கம் மற்றும் மடத்தை நிறுவினார். இராம கிருஷ்ணமிஷன் மற்றும் மடம் உலகம் முழுவதும் கிளைகள் பரவி செயற்பட்டு வருகின்றது.

சத்திய சாய் பாபா ஒரு இந்திய ஆன்மீக குரு ஆவார்.

பதின்நான்கு வயதில் சீரடி பாபாவின் மறுஅவதாரம் என்று கூறி பக்தர்களை ஏற்றுக் கொள்வதற்காக வீட்டை விட்டு வெளியேறினார். 1972 ஆம் ஆண்டு ஸ்ரீ சத்யசாய் அறக் கட்டளையை நிறுவினார். அதன் குறிக்கோள் ஆன்மீக முன்னேற்றத்திற்கான ஒரு வழிமுறையாக அதன் உறுப்பினர்களுக்கு சேவை நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவுகிறது. இந்த அமைப்பின் மூலம் சத்யசாய்பாபா இலவச மருத்துவமனைகள், சிகிச்சை

நிலையங்கள், குடிநீர்த் திட்டங்கள், பல்கலைக்கழகம், அரங்குகள், ஆச்சிரமங்கள் மற்றும் பள்ளிகள் ஆகியவற்றை நிறுவினார். இவரின் தத்துவம் சுத்வேதமாகும்.

இலங்கையில் சிவயோக சுவாமிகள், நல்லை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் போன்ற ஞானிகள் அண்மைக்காலத்தில் தோன்றினார்கள். யோகசுவாமி "எங்களைப் பற்றி எழுதக் கூடியவர்கள் இன்றும் இல்லை, இனி என்றும் வரப்போவதில்லை" என்று அருளினார். சுவாமி தனது முன்னிலையில் இருக்கும்பொழுது அடியவர்கள் மெய்ஞ்ஞான விளக்கம் பெற வேண்டுமென்ற சுவாமிகளின் எல்லையற்ற கருணை ஞானச்சுடராக மலர்ந்தது. இம் மலரே சிவதொண்டன் நிறுவனமாகும். தமக்கு பின் ஆதரவாளர் தட்டுக்கெட்டுப்போகாமல் இருக்க சுவாமிகள் இதனைத் தெளிவுபடுத்தினர். முதலில் வடபால வண்ணார் பண்ணையில் மலர்ந்தது. அதே திங்களில் இலங்கையின் கீழ்திசையிலே சித்தாண்டி - செங்கலடியில் இன்னொரு சிவதொண்டன் நிலையம் உதித்தது. 1935 ஜனவரியில் சிவதொண்டன் ஏடு திருஅவதாரம் செய்தனன். "எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன்" மகுடவாசகமாக இருக்கின்றது. சுவாமிகள் சகல சமயத்துக்கும் சம்மதம் கொடுப்பவராக இருந்தார். சுவாமி களிடம் பட்டினத்தடியாரின் பூரணத்துறவும் கண்ணப்பன் ஒப்பதோர் அன்பும், சம்பந்தப் பெருமானின் ஞானவீறும், திருமூலரின் திறங்கோள் யோக சித்தியும் ஒருங்கே அமைந் திருந்தன. அவர் திருமுருகாற்றுப்படை சித்தரிக்கும் தமிழ் முனிவர் போன்றும், உபநிடதங் களைப் பொழிந்த ஈர நெஞ்சினரான இருடிகள் போன்றும் தோன்றினார்.

நல்லூரைப் பிறப்பிடமாகக்கொண்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் கந்தப்பிள்ளை என்பவருக்கும் அவருடைய பத்தினியாராகிய சிவகாமியாருக்கும் மகனாக டிசெம்பர் 1822 இல் திருவவதாரம் செய்தார். இவர் பத்தொன்பதாம் நூற்றாண்டில் சைவசமயத்தினை வீழ்ச்சியிலிருந்து காத்தவராவார். நாவலர் அருளிய முதல் நூல்கள் வேதசிவாகமங்கள் என்றும், அவைகளுள் வேதம் பொது நூலென்றும் ஆகமம் சிறப்பு நூலென்றும் கண்டறிந்தார். சிறப்பு நூலாகிய சிவாகமத்தைக் கற்பதற்கு சமஸ்கிருதம் அவசியமென்பதால் அவற்றைப் படித்துப் பொருளை, ஐயந்திரிபார விளங்கவும் கற்றுக்கொண்டார். சைவ வித்யாசாலைகள் அமைத்து தமிழ், வேதங்கள், புராணங்கள், கற்பித்தார். சைவவித்யா சாலைகள் இறுதிக் காலங்களிலே நன்னூல் விருத்தியுரை, நைடதவுரை திருவிளையாடற் புராணம், நன்னூர், இவரால் அச்சிற் பதிப்பித்து வெளியிடப்பட்ட புத்தகங்கள். சூடாமணி, நிகண்டுரை தொக்கம் சிதம்பரமான்மியம் வரை ஐம்பத்து நான்கு புத்தகங்களாகும். (ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுக நாவலர் சரித்திரம், பின்னிணைப்பு பக்கம் : 155) வே. கனகரத்தின் உபாத்தியாயர்.

இவர் தனது 56 வயதில் ஸ்ரீ சிதம்பர நடராஜப் பெருமானுடைய குஞ்சிதபாத நிகழலை யடைந்தார்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுநாவலர், சதாவதனி கதிரைவேற்பிள்ளையாகியோர் வாழ்ந்த காலத்தில் 05.08.1823இல் இப் பூவுலகை உய்விப்பதற்காக இறைவனால் வருவிக்கவுற்றார் இராமலிங்க வள்ளலார். இவர் சிவபொருமானுக்கே தன்னை அர்ப்பணித்து திருமுறைகளாலும் செந்தமிழாலும் சிவனுக்கு வழிபாடு செய்தார். ஒரு சமயம் பீடாதிபதி சங்கராச்சாரி யாருக்கு சமஸ்கிருதத்தில் செய்யுள் ஒன்றில் சந்தேகம் ஏற்பட்டபோது அதை அறிந்து கொள்ள வள்ளலாரைச் சந்திக்கும் வாய்ப்பை ஏற்படுத்தினார். அதே நேரத்தில் அனைத்து மொழிகளுக்கும் சமஸ்கிருதமே தாய்மொழி எனக்கேட்டபோது அதற்குப் பதிலளித்த

வள்ளலார் "உண்மைதான் ஆனால், அனைத்து மொழிகளுக்கும் தந்தைமொழி தமிழ்மொழி எனக் கூறி உண்மையை எடுத்துரைத்தார். 1874 ஆம் ஆண்டு ஜோதி வடிவாகி இரண்டரை நாளிகையில் அரும்பெரும் சோதியோடு இரண்டாகக் கலந்தார். வள்ளலார் அருட்சோதி மணிமன்றம் பிரான்ஸ் அவர் உருவாக்கிய சன்மார்க்க நெறியினை உலகெங்கும் கொண்டு செல்கின்றது.

யூடியூப், டிக்டாக் காலம் என சிறப்பாக அழைக்கக்கூடிய தற்காலத்தில் சமூக வலையத்தளங்களில் சமய விவசாரங்களைப் பரவ விடுகின்றனர். அண்மையில் முஸ்லீம் நாடான ஈராக்கில் "யாசிரி" எனும் பழங்குடியினரினால் சைவக்கடவுளான முருகன் வழிபடப்பட்டு வருகின்றார் என உலகமறியச் செய்ய அவை வழிவகுக்கின்றன. 2000 ஆம் ஆண்டில் பிரான்சில் ஆரம்பித்து, பின் 2005 இல் சென்னையில் நிறுவப்பட்ட "ஓம்ரிசி" என்ற இந்து ஆன்மீக தொலைக்காட்சியில் 24 மணிநேரமும் சமயம் சார்ந்த விடயங்கள் மாத்திரமே ஒலிபரப்புச் செய்யப்படுகின்றன. இதில் யாழ்ப்பாணத்திலுள்ள முக்கிய புண்ணியதலங்களின் வரலாறு, ஆலய நவராத்திரி, சிவராத்திரி பூசைகளை நேரடியாக ஒலிபரப்புச் செய்கின்றது. மேலும் சொற்பொழிவுகள், சங்கீதப்போட்டி, சமயப்போட்டி கதிர்காம பாத யாத்திரையை ஊக்குவிப்பது போன்ற நிகழ்சிகளும் நடைபெறுகின்றன. இராவண காலத்தில் இருந்து இற்றை வரை சீரும் சிறப்பாக சைவம் வளர்ச்சியடைந்துள்ளது.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"



*தனிமனிதர் வாழ்வை*
*இன்பமுடையதாகவும்*
*நன்மையுடையதாகவும்*
*மாற்றி அமைப்பதும்*
*வாழ்வாங்கு வாழ வழி*
*வகுப்பதுமே கல்வி!*

**-பெஸ்டலசி**



**திரு. சொர்ணலிங்கம் தருமதன்,**
சட்டத்தரணி.

# யாழ் விழிப்புலனற்றோர் சங்கத்தின் தோற்றமும் அதன் பணிகளும்

"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தலரிது. அதனிலும் அரிது கூன், குருடு, செவிடு நீங்கிப் பிறத்தலரிது" என ஔவைப்பிராட்டி பல நூற்றாண்டுகளுக்கு முன்பே மனிதப் பிறவியின் முக்கியத்துவத்தினைக் கூறிச் சென்றிருந்தார். எவ்வாறாயினும் இவ் உலகில் பிறவியெடுக்கும் மானுடர்கள் இயற்கை மற்றும் செயற்கைக் காரணிகளால் பல்வேறு குறைபாடுடையவர்களாகப் பிறந்தும் வாழ்ந்தும் வருகின்றார்கள்.

இவ்வாறாக பிறப்பின்போதோ அல்லது பிறப்பின் பின்னரோ, இயற்கை அல்லது செயற்கைக் காரணிகளால், உடல், உள ரீதியாகப் பல்வேறு குறைபாடுகளுடன் காணப்படுபவர்களை நாம் மாற்றுத் திறனாளிகள் என அழைக்கின்றோம். இவ்வாறான மாற்றுத்திறனாளிகளில் ஒரு சாராராக அமைபவர்களே பார்வைக் குறைபாடு உடையவர்கள் ஆவார்கள். இவ்வாறாக உலகின் அனைத்து நாடுகளிலும் பார்வைக் குறைபாடு உடைய மாற்றுத் திறனாளிகள் வாழ்ந்து வருகின்றார்கள். அதற்கு எமது விதிவிலக்கல்ல.

இவ்வாறாக பார்வைக் குறைபாடு உடையவர்கள் சமூகத்தில் ஏனைய மனிதர்களைப்போல சமமாக வாழ வேண்டும் என்ற நோக்குடனும், அவர்களின் குடியியல் மற்றும் பொருளாதார உரிமைகளை உறுதிப்படுத்த வேண்டும் என்ற நோக்குடனும் பல்வேறு அமைப்புக்களும் நிறுவனங்களும் தோற்றம் பெற்று உலகளாவிய ரீதியாகச் செயற்பட்டு வருவதனை அவதானிக்க முடிகின்றது. அவ்வாறான நிறுவனங்கள் எமது நாட்டிலும் தோற்றம் பெற்று செயற்பட்டு வருவதனை அவதானிக்காலம். அந்தவகையில் எமது இலங்கை நாட்டின் வடபகுதியில் யாழ்ப்பாணத்தில் உருவாக்கம் பெற்று செயற்பட்டு வரும் ஒரு நிறுவனமே "யாழ் விழிப்புலனற்றோர் சங்கம்" ஆகும்.

யாழ் விழிப்புலனற்றோர் சங்கமானது 1976 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 23 ஆம் திகதி 17 அங்கத்தவர்களுடன் தோற்றம் பெற்றது. யாழ் விழிப்புலனற்றோர் சங்கத்தின் தோற்றுதலுக்கு முதன்மையாக நின்று உழைத்தவர்களாக சீனித்தம்பி தர்மராசா, கார்த்திகேசு விஜயராஜசிங்கன் மற்றும் சிவகுமார் ஆகிய மூத்த உறுப்பினர்கள் விளங்கு கின்றனர். குறித்த மூன்று மூத்த உறுப்பினர்களின் சிந்தனையினை அடிப்படையாகக் கொண்டே இந்த நிறுவனம் உதயமானது. இலங்கை அரசாங்கத்தினால் மாற்றுத்திறனாளி களுக்காக வட பகுதியில் 1956 ஆம் ஆண்டு கைதடி நவீல்ட் பாடசாலை உருவாக்கப் பட்டது. குறித்த இந்தப் பாடசாலையில் கல்வி பெற்று வந்த பார்வையற்றவர்கள் தமது கல்வியினை முடித்துக்கொண்டு சமூகத்துடன் இணைந்து வாழ வேண்டிய தேவை காணப்பட்டது. குறித்த இந்தச் சூழ்நிலையில் பார்வையற்றவர்களால் சமூகத்துடன் இணைந்து வாழ முடியாத நிலைமை காணப்பட்டிருந்தது. இந் நிலைமையினை மாற்றும் நோக்குடனும், பார்வையற்ற மனிதர்களை ஒன்றுபடுத்தவும், சமூகத்தின் ஒரு பங்காளர் களாகவும் உருவாக்கும் நோக்குடன் இந்த நிறுவனம் தோற்றம் பெற்றது. இவ்வாறாக தோற்றம் பெற்ற யாழ் விழிப்புலனற்றோர் சங்கமானது ஆரம்பகாலத்தில் கைதடி நவீல்ட் பாடசாலையுடன் இணைந்தே தனது பணிகளை ஆற்றி வந்திருந்தது. இதன் பின்னர் 1996 ஆம் ஆண்டு இல. 228 பிரதான வீதி யாழ்ப்பாணத்தில் தனது முதல் காரியாலயத்தினைத் தொடங்கி அதன் பின்னர் பல இடமாற்றங்களின் பின்னர் தற்பொழுது இல. 28, 1 ஆம் ஒழுங்கை, கோயில் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் நிரந்தரமாக அலுவலகத்தினை அமைத்துச் செயற்பட்டு வருகின்றது. இந் நிறுவனமானது 1998 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 04ஆம் திகதி சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப் பட்டுள்ளதென்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாகத் தோற்றம் பெற்று பணியாற்றி வரும் யாழ் விழிப்புலனற்றோர் சங்கத்தில் தற்பொழுது இலங்கை முழுவதனையும் சேர்ந்த 330 உறுப்பினர்களை அங்கத்தவர்களாகக் கொண்டு ஒரு சிறந்த நிறுவனமாகச் சேவையாற்றி வருகின்றது. பார்வையற்றவர்களின் அடையாளமாக விளங்குவது வெண்பிரம்பாகும். இந்த வெண்பிரம்பின் உதவியுடன் பார்வையற்றவர்கள் பிறரின் உதவியின்றித் தனியாக நடமாட உதவுகின்றது. இவ்வாறாக வெண்பிரம்பின் முக்கியத்துவத்தினை உணர்ந்து சர்வதேச சமூகமானது அக்டோபர் 15 ஆம் நாளினை சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினமாகக் கொண்டாடி மதிப்பளித்து வருவதனை அவதானிக்கலாம். அந்த வகையில் பார்வையற்றவர்கள் சமூதாயத்தில் தமது தேவைகளைத் தாங்களாகவே பூர்த்தி செய்ய வேண்டும் என்ற நோக்குடன், பார்வையற்றவர்கள் சமூதாயத்தில் தாமாகவே நடமாட வேண்டும் என்ற உயரிய சிந்தனையுடன் பார்வையற்ற வர்களுக்கான வெள்ளைப்பிரம்பு நடைப் பயிற்சியினை இந் நிறுவனம் வழங்கி வருகின்றது. இவ்வாறாக வெள்ளைப்பிரம்பு நடைப் பயிற்சியினைப் பெற்றவர்கள் தாமாகவே அனைத்து இடங்களிற்கும் சென்று வர உதவியாகக் காணப்படுகின்றது.

பார்வையற்றவர்கள் சமூகத்தில் சுயகௌரவத்துடன் வாழ வேண்டும் என்ற நோக்குடன் கல்வியைத் தொடர்ந்து சுயதொழில் மேற்கொள்வதனை உறுதிப்படுத்தும் நோக்குடன் பார்வையற்றவர்களுக்கு சுயதொழில் கல்வியினைப் புகட்டி வருகின்றது. அந்த வகையில் கதிரை பின்னல், விளக்குமாறு செய்தல், துடைப்பான் செய்தல் போன்ற பயிற்சிகளை வழங்கி வருகின்றது. இவ்வாறாகப் பயிற்சி பெற்று வந்த இதன் உறுப்பினர்கள் சமூகத்தில் சுயதொழிலினை மேற்கொண்டு தமது குடும்பத்தினைப் பார்த்துப் பராமரித்து வருவதனை அவதானிக்கலாம். இவ்வாறாகப் பார்வையற்றவர்கள் சமுதாயத்தின் ஒரு வளமாக விளங்கு வதனை அவதானிக்கலாம்.

மேலும் பார்வையற்றவர்கள் இசைத்துறையில் மிளிரும் நோக்குடன் இசைக் கருவிகளைப் பயிற்றுவித்தல், சங்கீத வகுப்புக்களை ஒழுங்குபடுத்தி பார்வையற்றவர்களின் பாடும் திறனை மேம்படுத்தல் போன்ற விடயங்களினையும் மேற்கொண்டு வருகின்றது. இவ்வாறான பணிகளை மேற்கொண்டு வரும் யாழ் விழிப்புலனற்றோர் சங்கமானது இசைக்குழு ஒன்றினை உருவாக்கி கலை நிகழ்வுகளில் பார்வையற்றோரின் திறன்களை வெளிப்படுத்தி வருகின்றதென்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இந் நிறுவனமானது விவாதக் குழுவொன்றினை உருவாக்கி அதில் தமது அங்கத்தவர்களைப் பயன்படுத்திப் பல நிகழ்வுகளில் விவாத அரங்கினையும் மேற்கொண்டு வருகின்றது. இதன் மூலம் பார்வையற்றவர்கள் தமது விவாதத் திறனை வெளிப்படுத்த களமமைத்துக் கொடுத்துள்ளது.

இன்றைய அதிவேக விஞ்ஞான உலகில் தொழில்நுட்பம் வளர்ச்சி அடைந்துள்ளமையினைக் காணலாம். உலகம் பூகோளமயமாக்கலின் விளைவாக ஒவ்வொருவரினதும் உள்ளங்கைகளில் உலகமானது அடங்கிவிட்டது. இவ்வாறான நிலையில் கணினி அறிவு என்பது "நகமும் தசையும் போல" மனித வாழ்வுடன் பிரிக்க முடியாத நிலையினைப் பெற்றுள்ளது. குறித்த கணினியறிவானது பார்வையற்றவர்களுக்கும் இன்றியமையாத ஒன்றாக விளங்குகின்றது. இதனை உணர்ந்து யாழ் விழிப்புலனற்றோர் சங்கமானது தனது சங்க உறுப்பினர்களுக்கு கணினி அறிவினையும் புகட்டி வருகின்றதென்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இவற்றிற்கு மேலாக தொழிற்பூங்கா என்ற அமைப்பினை உருவாக்கி அதில் பார்வையற்ற வதிவிடம் தேவையானவர்களைத் தங்க வைத்து அவர்களினைப் பயன்படுத்தி சுயதொழில்களை மேற்கொண்டு வருகின்றது. இதற்கு மேலதிகமாக வருடத்தில் தைப்பொங்கல், சித்திரைப் புதுவருடப்பிறப்பு, தீபாவளி, நத்தார் பண்டிகை ஆகிய நிகழ்வுகளை முன்னிட்டு தனது அனைத்து உறுப்பினர்களிற்கும் இச் சங்கமானது பண்டிகைப் பொதிகளை வழங்கி பார்வையற்றவர்கள் தமது குடும்பத்துடன் மகிழ்ச்சியாகக் குறித்த பண்டிகைகளைக் கொண்டாடுவதற்கு உதவி புரிந்து வருகின்றது. மேலும் பல்கலைக் கழகங்களில் கல்வி பயிலும் தனது சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவுகளை வழங்கி அவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு உதவியினைப் புரிந்து வருகின்றது.

இவ்வாறாக மூன்று மூத்த உறுப்பினர்களின் சிந்தனையின் அடிப்படையில் தோற்றம் பெற்ற யாழ் விழிப்புலனற்றோர் சங்கமானது தற்பொழுது ஒரு நிறுவனமயப்படுத்தப்பட்டு தனது பணிகளை ஆற்றி வருகின்றது. யாழ் விழிப்புலனற்றோர் சங்கமானது உலகில் வாழும் நல் உள்ளங்களின் நிதிப்பங்களிப்பில் பார்வையற்றவர்களுக்குச் சேவையாற்றி வரும் ஒரு நிறுவனமாகும். பார்வையற்றவர்கள் தொடர்பில் சமுதாயத்தில் விழிப்புணர்வினை ஏற்படுத்தி அவர்கள் வீடுகளில் முடங்கி வாழ்வதனைத் தடுத்து அவர்களை சமூகத்தின் ஒரு பங்காளராக மாற்றும் உன்னத பணியினைக் கடந்த 48 ஆண்டுகளாக யாழ் விழிப்புலனற்றோர் சங்கம் ஆற்றி வருகின்றது. இவ்வாறாக பார்வையற்றவர்களின் வாழ்வில் ஒளியாக விளங்கும் இச் சங்கமானது தொடர்ந்தும் தனது சிறந்த பணியினை ஆற்றி பார்வையற்றவர்களின் வாழ்க்கையினை மேம்படுத்தக்கூடிய செயற்பாடுகளைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும்.




அமர்ந்திருப்போர்(இ.வ): து.சுஜேந்திரமோகன்(பொறுப்பதிகாரி), கம்ஸநாதன்(செயலாளர்), ர.கோமதி(பி.மு.சே.உ), த.ஜெகதீசன், சி.கிருபாகரன்

நிற்போர்(இ.வ): வே.விக்னேஸ், செ.கஜேந்திரன், அ.மகாதேவன், மு.செல்வக்குமார், க.ஜெகநாதன், ச.கஜன்

**திரு. எஸ். சரவணகுமணன்,**
நிறைவேற்று பொறியியளாளர்,
வீதி அபிவிருத்தி திணைக்களம்,
மன்னார்.



# கட்டிட நிர்மாண வரம்புகள்

வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படும் கட்டளையொன்றின் மூலம் "A வகுப்பு, அல்லது AB வகுப்பு அல்லது B வகுப்பு" வீதியென அமைச்சினால் பிரகடனப் படுத்தப்பட்ட வீதியொன்று தொடர்பிலாயின், கட்டிட நிர்மாண வரம்பானது வீதியின் மத்திய ரேகையிலிருந்து வீதியின் இரு பக்கத்துக்கும் தலா 15 (பதினைந்து) மீற்றராக அமைகின்றது.

வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படும் கட்டளையொன்றின் மூலம் "C" வகுப்பு வீதியென அமைச்சினால் பிரகடனப்படுத்தப்பட்ட வீதியொன்று தொடர்பி லாயின், கட்டிட நிர்மாண வரம்பானது வீதியின் மத்திய ரேகையிலிருந்து பொதுவாக வீதியின் இரு பக்கத்துக்கும் தலா 7.5 மீற்றராக அமைவதுடன், வீதிக்கு ஏற்றவாறு வேறுவேறாக பணிப்பாளரால் தீர்மானிக்கப்பட்டு மத்திய ரேகையிலிருந்து வீதியின் இரு பக்கத்துக்கும் தலா 10 அல்லது 15 மீற்றராகவும் அமையக்கூடும்.

கட்டிட நிர்மாண வரம்பினுள் யாரேனும் நபரொருவரால் ஏதேனும் காணி யொன்றில் ஏதேனும் கட்டிடமொன்று, எல்லை மதிலொன்று அல்லது நுழை வாயிலொன்று நிர்மாணித்தல் சட்டபூர்வமற்றது பாதிப்பிற்குள்ளான அல்லது துருப்பிடித்த, கூரைத்தகடுகளை மாற்றுதல், உடைந்த சுவர்களை திருத்தி யமைத்தல் மற்றும் வர்ணம் பூசுதல் அவ்வகையான வேறு பணி நடவடிக்கை களைத் தவிர தற்போதைய அமைவில் செய்யப்படும் மாற்றம் ஏதேனும் சட்ட பூர்வமற்றது.

கட்டிட வரம்பினுள் தற்காலிக அல்லது நிரந்தர கட்டிடமொன்று, மதிலொன்று, நுழை வாயிலொன்று, வேலியொன்று, அறிவித்தல் பலகையொன்று அல்லது வேறேதேனும் நிர்மாணிப்புக்காக நட்டயீடற்ற ஒப்பந்தமொன்றின் மூலம் யாரேனுமொருவருக்கு பணிப்பாளரால் அனுமதி வழங்கப்படலாம். அவ்வகையான நட்டயீடற்ற ஒப்பந்த மொன்றின் மூலம் நிர்மாணிக்கப்படுகின்ற ஏதேனும் நிர்மாணிப்பொன்று பணிப்பாளரால்

அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரொருவரால் எழுத்து மூலம் அறிவிக்கப்படும் சந்தர்ப்பத்தில் அதனை உடைத்து அகற்றிக் கொள்வதற்கு குறித்த நபர் நடவடிக்கை எடுத்தல் வேண்டுமென்பதுடன் அவ்வகையான சந்தர்ப்பங்களில் ஏற்படும் இழப்புகளுக்கு எவ்வித நட்டயீடும் கொடுக்கப்படலாகாது.

**நீர்ப்பாசனம் குடிநீர் வழங்கல் போன்ற சேவைகளுக்கான அகழ்வுகள்**

ஏதேனும் வீதியொன்றின் அடியில், மேல், அல்லது அருகாமையில், மேற்குறிப்பிட்ட வகையிலான மக்கள் சேவையொன்றினை ஏற்படுத்துவதற்கு கோரிக்கை விடுக்கும் பட்சத்தில் வீதியினைத் தோண்டும் ஆழம், அகலம், நிர்மாணிக்குமிடம், நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு உத்தேசித்துள்ள திகதி, நிர்மாணக்காலம், பயன்படுத்தப்படும் இயந்திரோபகரணங்கள் தொடர்பாக முழுவிபரம் என்பன குறித்த சேவை வழங்குநர் களால் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

சேவை வழங்குநர்களால் அந்நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்கையில் வீதியினை மீண்டும் நிர்மாணிப்பதற்காக, அல்லது வீதிக்கு ஏற்பட்ட நட்டத்தின் பழுது பார்ப்புக்கான செலவினை நிறைவேற்றுப் பொறியியலாளர் மதிப்பீட்டுக்கு அமைவாக பணிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பாக அம்மதிப்பீட்டுத் தொகையினை சேவை வழங்குநரால் செலுத்தப்பட வேண்டுமென்பதுடன், அத்தருணத்தில் நிறைவேற்றுப் பொறியிலாளர் ஒப்பந்தமொன்றுக்கு உட்பட்டு அந்நிர்மாணப்பணிகள் மேற்கொள்ளு வதற்கான எழுத்து மூல அனுமதியினை வழங்குவார்.

சேவை வழங்குநர்களால் வீதிக்குத்தடங்கல் மற்றும் இடையூறுகள் ஏற்படுத்தும் சந்தர்ப்பத்தில் நிறைவேற்றுப் பொறியியலாளர் திருப்தி கொள்ளும் வகையில் அத்தடைகளை அகற்றுமாறு, சேவை வழங்குநர்களுக்கு நிறைவேற்று பொறியியலாளரால் அறிவிப் பொன்று செய்யும் சந்தர்ப்பத்தில் சேவை வழங்குநர்களால் அக்கட்டளை தவிர்க்கப்படு மாயின் நிறைவேற்று பொறியியலாளரினால் அப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு அப்பணி களுக்குத் தாங்கப்பட்ட செலவினை சேவை வழங்குநரிடமிருந்து அறவிட்டுக் கொள்வது சட்டபூர்வமானதாகும்.

குறிப்பிடப்பட்டுள்ள ஆழம், அகலம், இடம் மற்றும் சூழல், தொடர்பான எல்லைகளை பிரயோசன சேவை வழங்குநர்கள் கடைப்பிடிக்கப்படுதல் வேண்டும். இதனின் போது ஏதேனும் மாற்றங்கள் தேவையெனக் கருதுமிடத்து இது தொடர்பில் சேவை வழங்குநர் களால் உடனடியாக நிறைவேற்றுப் பொறியியலாளருக்கு அறிவித்து, இது சம்பந்தமாக ஏற்ற தீர்மானமொன்றை மேற்கொள்வதோடு ஏதேனும் மேலதிக தொகையொன்றினைச் செலுத்த வேண்டுமாயின் அதனை எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும்.

நிறைவேற்றுப் பொறியியலாளரின் எழுத்து மூல அனுமதி இன்றி சேவை வழங்குநர் களால் ஆழம், அகலம், இடம் மற்றும் சூழல் தொடர்பில் மாற்றங்களை ஏற்படுத்தலாகாது.

சேவை வழங்குநர்கள் வீதியில் ஏதேனும் வேலையொன்றை மேற்கொள்கையில், மக்கள் பிரயோசன சேவை கட்டமைப்புக்கு ஏற்படுத்திய ஏதேனும் நட்டத்துக்காக நிறைவேற்று பொறியியலாளர்கள், அல்லது அவரது உத்தியோகத்தவர்கள் அல்லது தொழிலாளர்கள் பொறுப்புக் கூறத்தேவையில்லை.

# செல்லாக்காசு பெற்ற காதை

**திருமதி ஆஷா ரஜீகன்**
அபிவிருத்தி உத்தியோகத்தர்

**ப**ண்டிதர் பரமசிவத்தை இலகுவில் யாரும் விளங்கிக் கொள்ள முடியாது. " புத்தகப் பூச்சி; உலகியல் தெரியாதவர்" எனப் பலரும் கிண்டல் செய்வது வழக்கம். இந்தப் புத்தகப் பூச்சிக்குள்ளே உயர்ந்த நோக்கமுடைய உள்ளம் ஒன்று இயங்கு வதைப் பலர் அறிவதில்லை. ஒரு சிலரே அறிவர். ஊரிலே, கிராமத்திலே, நாட்டிலே நடப்பதை யாராவது சொல்லிக் கொடுத்தாலும் மறந்துவிடுவார். செய்தித் தாள்களை விரும்பிப் படிப்பதில்லை. கொலை, களவு, கற்பழிப்புப் போன்ற பாதகங் களுக்கே செய்தித் தாள்கள் கனத்த இடம் கொடுக்கின்றன எனக் கவலைப்படுவார். தப்பித் தவறிச் செய்தித் தாள்களைப் படித்தாலும் புதினங்களை அப்படியே மறந்துபோவார். சங்க இலக்கியம், திருமுறை எல்லாம் பண்டிதர் பரமசிவத்திற்குத் தண்ணீர்பட்ட பாடு.



"கேட்டியளே! ஊரிலே கள்ளக்காசு உலாவு கின்றதாம். நூறுரூபா தாள் வாங்கும் போது கவனம்; பார்த்து வாங்குங்கள்" என்றார். பண்டிதரின் மனைவி.

" நான் பாவம் செய்தால். யாராவது கள்ளக் காசைத் தந்து விடுவார்கள். அது விதியின் விளையாட்டு" என்றார்.

"இந்தச் சித்தாந்தம் பேசினது போதும்; கள்ளக் காசு கவனம்;" என்றார் மனைவி.

" கள்ளக் காசு வெள்ளக் காசு; எனக்கு எதுவும் தெரியாது" என்றார் பரமசிவம்.

"நல்லது; பாருங்கள். இது நல்ல காசு, இப்படித் தூக்கிப் பாருங்கள். இதற்குள் இரண்டு அடையாளங்கள் இருக்கின்றன. தாளுக்குள்ளே மிக மிக மெல்லிய செப்புக் கம்பி. அத்துடன் நீரடையாளமும் ஒன்று இருக்கும்" என்றார் மனைவி.

" அப்படியோ? நல்லது உண்மையைச் சொன்னால் நான் ஒரு போதும் இப்படி நுணுக்கமாகக் காசைப் பார்க்கவில்லை. ஏதோ சம்பளம் தருவார்கள். அப்படியே உன்னிடம் தந்து விடுவேன். என்னைப் பொறுத்தவரையில் நஞ்சிற்கும் காசிற்கும் வேற்றுமையில்லை. கடவுள் மனிதனைப் படைத்தார். மனிதன் காசைப் படைத்தான். அன்றுடன் தொடங்கியது உலகத்தில் தொல்லை. காசு ஆட்கொல்லி" எனப் பேருரை வழங்கினார் பண்டிதர் பரமசிவம்.

" நல்லது இந்த இரண்டு அடையாளங்களும் இல்லாதவை கள்ளக்காசு. கள்ளக் காசை வாங்கிவந்துவிடாதீர்கள்" என எச்சரித்தார் பண்டிதரின் மனைவி.

ஒருநாள் பேருந்து வண்டியில் பண்டிதர் பரமசிவம் பிரயாணம் செய்தார். பிரயாணத்துக்கு வேண்டிய சில்லறைக் காசு பண்டிதர் பரமசிவத்திடம் இல்லை. 500 ரூபா தாள் மட்டும் இருந்தது. வண்டியில் ஏறிவிட்டார். நடத்துநர் பிரயாணச் சீட்டைக் கேட்டுப் பண்டிதரிடம் எழுதிக் கொடுத்தார். அப்பொழுதுதான் பண்டிதருக்குத் தன் தவறு விளங்கியது. நடந்துநர் பண்டிதரின் மாணவர். "சரி, பெரிய கடையில் இறங்கி மாற்றித் தாருங்கள்" என்றார் நடத்துநர். பிரயாணம் முடிந்தது. பெரிய கடையில் இறங்கி 500 ரூபா தாளை மாற்றிக் கட்டணத்தைக் கொடுத்தார். பின்னர் அலுவல்கள் யாவற்றையும் முடித்துக் கொண்டு வீடு திரும்பினார். வீடு திரும்பி மிச்சக் காசை மனைவியிடம் கொடுத்தார். அதில் ஒன்று கள்ளக் காசு.

"படித்துப் படித்துச் சொன்னேன்; கேட்டீர்களோ? இப்போது இந்தக் கள்ளக்காசை என்ன செய்யலாம்?" என்றார் பண்டிதரின் மனைவி.

" எல்லாம் பிராப்தம். இது பழைய வினை. முற்பிறவியில் நான் யாரையோ ஏமாற்றிவிட்டேன். அதுதான் இந்தப் பிறவியில் என்னை யாரோ ஏமாற்றிவிட்டனர்." என்றார் பண்டிதர் பரமசிவம். அவரின் குரலில், முகத்தில் எந்தவிதமான பதட்டமும் இல்லை.

"பேசாமல் இருங்கள். இந்தக் காசை எங்கள் கடையிலே கொடுத்துப் பார்க்கலாம். காசோடு காசாகச் சேரத்து அடுக்கிக் கொடுத்தால் கடைக்காரன் எடுத்துப்போடுவான். இல்லா விட்டால் திருப்பித் தருவான். பொலிசில் சொல்ல மாட்டான்" என்றார் பண்டிதரின் மனைவி.

பசு போலச் சாந்தமாக இருக்கின்ற பண்டிதரின் முகம் புலிபோல மாறியது. எதுவும் பேசவில்லை. "முருகா சரணம், குருவே துணை" என்றார். உள்ளே போனார். படத்தின் முன் உள்ள குத்துவிளக்கை ஏற்றினார். பண்டிதர் ஐயா கும்பிடப் போகின்றார் என அவரின் மனைவி நினைத்தார்.

"இப்படித் தாரும் கள்ளக் காசை" என மனைவியிடம் கேட்டு வாங்கினார். அப்படியே அந்தக் கள்ளத் தாளை முருகன் முன்பாக எரிகின்ற குத்துவிளக்கில் எரித்தார்.

"முருகா! இன்று நான் என் உணர்ச்சிகளை வென்று விட்டேன். என்னை யாரோ ஏமாற்றினார்கள். பதிலுக்கு நான் யாரையும் ஏமாற்றவில்லை. வேல் உண்டு வினை தீரும்" எனக் கூறி அழுதார்." அம்மா எனக்குச் பசி, சோறுபோடும்" என்றார்.

பண்டிதரின் மனைவியின் கண்களில் இருந்து கண்ணீர் ஆறாக ஓடியது. "இப்படியும் ஒரு மனிதரோ? இப்படியும் வாழ்வாரோ யாரும்! அப்பாடி! இந்த மனிதர் இவரை நினைத்தால்.... இந்தக் காலத்தில் இப்படியொரு பிறவியோ? நம்பமுடியவில்லையே; இவர் விளங்கமுடியாத விந்தை மனிதர். ஒவ்வொரு நேரமும் ஒவ்வொரு போக்கு. எல்லாம் சிவன் செயல். திருவிளையாடல்" என்றார் பண்டிதரின் மனைவி.

# பதிவியல்

**வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் வதிரி முன்பள்ளி, கரவெட்டி முன்பள்ளி ஆகியவற்றில் இடம்பெற்ற தைப்பொங்கல் நிகழ்வுகளின் பதிவுகள்.**









2023ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் மாற்றுத்திறனாளிகளின் நலன்புரிக்காக ஒதுக்கீடுசெய்யப்பட்ட நிதியிலிருந்து மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும், வாழ்வாதார உதவிகளும் வழங்கப்பட்ட நிகழ்வின் பதிவுகள்.





வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபையின் உத்தியோகபூர்வ இணையத்தளம் அங்குரார்ப்பண நிகழ்வின் பதிவுகள்.





**வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபையின் வதிரி முன்பள்ளி, கரவெட்டி முன்பள்ளி ஆகியவற்றில் இடம்பெற்ற கால்கோள் விழாவின் பதிவுகள்.**








**2024ஆம் ஆண்டுக்கான அரச கடமைகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கும் நிகழ்வின் பதிவுகள்.**







**வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபையின் வதிரி முன்பள்ளி, கரவெட்டி முன்பள்ளிஆகியவற்றில் இடம்பெற்ற கால்கோள்விழாவின் பதிவுகள்.**









**தேசிய வாசிப்புமாத போட்டிகளின் பரிசளிப்பு விழா நிகழ்வின் பதிவுகள்.**








**2023ம் ஆண்டு வரவுசெலவுத்திட்டத்தில் பெண்தலைமைத்துவக் குடும்பங்களின் நலன்புரிக்காக ஒதுக்கீடுசெய்யப்பட்ட நிதியிலிருந்து வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வின் பதிவுகள்.**







2023ம் ஆண்டு வரவுசெலவுத்திட்டத்தில் வறுமைக்கோட்டுக்குட்பட்ட குடும்பங்களின் நலன்புரிக்காக ஒதுக்கீடுசெய்யப்பட்ட நிதியிலிருந்து முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்ட இருவருக்கான கட்டில்கள் வழங்கும் நிகழ்வின் பதிவுகள்.







## கோயிற்சந்தை புனரமைப்பிற்கான அடிக்கல் நாட்டும்விழா நிகழவின் பதிவுகள்.











# சுமைதாங்கி

பண்டைய காலத்தில் மக்கள் பொருட்களைத் தலைச்சுமையாகவே இடத்துக்கிடம் எடுத்துச் செல்ல வேண்டியிருந்தது. உற்பத்திப் பொருட்களைத் தொலைவிலுள்ள சந்தைகளுக்கு எடுத்துச் செல்வோரும், சந்தைகளில் வாங்கிய பொருட்களை வீடுகளுக்கு எடுத்துச் செல்வோரும் எனப் பல வகையானோர் நெடுந்தூரம் சுமைகளைச் சுமந்து செல்ல வேண்டிய நிலை இருந்தது. தொலைதூரப் பயணம், யாத்திரை செல்பவர்களும், வேண்டிய பொருட்களைக் கால்நடையாகவே சுமந்து செல்வதுண்டு. சிறிது இளைப்பாறுவதற்காகச் சுமைகளை இறக்கி வைக்கவும் பின்னர் திரும்பவும் தூக்கவும் பிறர் துணை தேவைப்படும். இத் துணை எல்லா நேரங்களிலும் கிடைக்கும் என்பதில்லை. இவ்வாறான பிரச்சனையின்றித் தனியாகவே சுமைகளை இறக்கவும், திரும்ப அதிக எத்தனம் இன்றித் தூக்கியேற்றவும் வசதியாக உயரமான மேடை போல் அமைக்கப்படும் அமைப்பே சுமைதாங்கியாகும். பிரசவ காலத்தில் இறக்கும் தாய்மாரின் நினைவாக மரபு வழியாகவும் அமைக்கப்பட்டது என்பர்.



நெல்லியடி வடக்கு சுமைதாங்கி

GPS : 9.8065, 80.2025



கரவெட்டி கிழக்கு சுமைதாங்கி

GPS : 9.7785, 80.2078

இப் புத்தகத்தின் மென்பிரதியைப் பெற்றுக்கொள்ள QR Code Scan செய்யவும்

வெ.கல் - இறுதி 02

9786246502810

New Evergreen Printers, (Pvt) Ltd. K.K.S.Road, Jaffna. 021 221 9893